பஞ்சதந்திரம் - செய்யுள்

(முதல்பதிப்பு)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

T. 22808

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 553

வீரமார்த்தாண்ட தேவரின்

பஞ்ச தந்திரம் - செய்யுள்

(விளக்கவுரையுடன்)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:

முனைவர் நா. செயப்பிரகாசு

எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)

மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி

தஞ்சாவூர் - 5

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும்

ஆய்வுமையம்

தஞ்சாவூர்

2014 விலை ரூ. 220-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: பஞ்சதந்திரம்-செய்யுள்
பதிப்பாசிரியர்	: முனைவர் நா. செயப்பிரகாசு
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	: 553
மொழி	: தமிழ்
பதிப்பு	: முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	: 2014
தாள்	: TNPL 18.6 கி. கி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 384
படிகள்	: 500
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	: செக்‌ஷன் பைண்டிங்
பொருள்	: பஞ்சதந்திர கதை
விலை	: ரூ. 220-00

வெளியீட்டாளர் முகவுரை

அயல்நாட்டு மக்கள் அனைவரும் வியந்து பாராட்டும் வண்ணம் ஆய கலைகள் அறுபத்துநான்கிலும் கைதேர்ந்த பாரததேச நம் முன்னோர்கள் மொழியின் வளத்தை தம் காலத்திற்குப் பிறகும் அனைவரும் அறிந்துகொள்ளும்வண்ணம் பனைஓலைச் சுவடிகளிலும், காகிதச் சுவடிகளிலும் எழுதிவைத்த இவை தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிகளில் காணக்கிடைக்கின்றன. இப்படிப்பட்ட அரிய சுவடிகளின் பாதுகாப்புப் பெட்டகமாகவும், அழியாப்புகழும்கொண்ட மிகப் பழமையான உலகப்புகழ்பெற்ற நூலகம் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் எனில் மிகையாகாது. இந்நூலகம் தன்னகத்தே உள்ள சுவடிகளில் அரிய தலைப்புகளை தேர்வு செய்து நூலக மொழிப்பண்டிதர்களையும் உரிய வல்லுநர்களையும் கொண்டு நூல்களாக வெளியிடும் உயரிய பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது. இவ்வரிசையில் 'பஞ்சதந்திர செய்யுள்' என்னும் இந்நூல் சரசுவதி மகால் நூலக வெளியீடாக வெளிவருகின்றது.

விஷ்ணுசர்மா என்பவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பெற்ற 'பஞ்சதந்த்ரம்' என்னும் நூல் இந்தியாவின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. மராத்தி மொழியிலிருந்து பஞ்சதந்திரக் கதைகளை வீரமார்த்தாண்டதேவர் செய்யுள் வடிவிலும், தாண்டவராய முதலியார் உரைநடை வடிவிலும் மொழிபெயர்த்துள்ளனர். மொழிபெயர்க்கும்பொழுது மூலநூலில் உள்ள கருத்துக்கள் அந்தந்த காலத்திற்கேற்ப சற்றுமாறுபடுவதோடு தத்தம் பகுதியில் வழங்கப்படும் சில கதைகளும் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அறிய

முடிகிறது. இவ்வரியசுவடி (நூல்) சரசுவதி மகால் நூலக தமிழ்ப்பிரிவில் 109 என்ற எண்ணில் பதிவாகி உள்ளது. இதனை மூல நூலாகக்கொண்டு நல்ல பொழிப்புரை, பதிப்புரையுடன் சரசுவதி மகால் நூலக சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர் முனைவர் நா. செயப்பிரகாசு அவர்கள் பதிப்பித்து அளித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், நூலகக் கணினிப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நூல் தொல்காப்பியத்தால் கூறப்படும் தொன்மை நூல் (அதாவது: உரையொடு கூடியப் பழங்கதைகளைச் சொல்லும் செய்யுள்) பற்றி ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும், தமிழிலக்கியத்தின்பால் ஆர்வமுடையவர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்
01-02-2014

டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

பதிப்புரை

உலக இலக்கிய வகைகளுள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள இலக்கிய வகை கதை சொல்லும் இலக்கியமாகும். மக்களிடையே கதை சொல்லும் தன்மையும், கதை கேட்கும் ஆர்வமும் காலந்தோறும் காணப்படும் ஒன்றாகும். கதை சொல்வது என்பது மிகப் பழங்காலந் தொட்டே இருந்து வருகிறது. இதற்கான தொடக்கக் காலத்தை வரையறுத்துக் கூறுவது இயலாது. மனிதன் கூட்டமாக வாழத் தலைப்பட்ட காலத்திலேயே அது தோன்றியிருக்க வேண்டும். ஒருவன் தன் எண்ணத்தை வெளிப்படுத்த முனையும் போது, அதைக் கேட்போர் மனங்கொள்ளும் வகையில் சொல்ல முற்படுகிறான். அப்பொழுதே கதை சொல்வதன் வித்து அங்கே முளைத்துவிடுகிறது எனலாம். மொழி தோன்றாக் காலத்திலேயே மனிதன் சில குறியீடுளை, சைகைகளை அல்லது வேறு ஏதாவது ஒரு முறையைக் கையாண்டு தன் எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பான். பின்னர் உருவங்களை வரையக் கற்றுக்கொண்ட போது ஓவியங்கள் மூலமாகவும் கருத்துப் புலப்பாடு நடைபெற்றது. இக்காலக் கட்டத்தில் கதை சொல்வது என்பது சற்று வளர்ச்சியுற்றது எனலாம்.

பிரான்ஸ் நாட்டிலுள்ள லாங்கஸ் என்னும் இடத்தில் காணப்படும் ஓவியம் ஒன்று உலகிலேயே முதன்முதலாகத் தோன்றிய கதை சொல்லும் ஓவியம் எனக் கருதப்படுகிறது என்பார் ஹாக்கிஸ். இந்த ஓவியக் காட்சியில் ஒரு மனிதன் இறந்து கிடக்கிறான். அருகே ஒரு காட்டெருமை எதிர்த்தவாறு கிளர்ச்சியுடன் கீழே விழும்

நிலையில் நிற்கிறது. அதன் வயிற்றில் ஓர் ஈட்டி பாய்ந்திருக்கிறது. இந்த ஓவியக்காட்சி ஒரு சிறிய நிகழ்ச்சியைக் கதையாகச் சொல்லும் பாங்கில் அமைந்துள்ளது எனக் கூறலாம். பழங்காலத்து இந்த ஓவியக் காட்சி மூலம் ஒரு நிகழ்ச்சியைக் கதை போல வெளிப்படுத்தும் மனநிலை மனித குலத்தின் தொடக்கக் காலம் முதலாக இருந்து வந்துள்ளது என்பது புலனாகிறது. பின்னர் மொழி வளர்ச்சியடைந்த நிலையில் இது உருவ ஓவியம் என்ற நிலையிலிருந்து சொல்லோவியம் என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்தது. சங்க இலக்கியங்களுள் அகப்பாடல்கள்அனைத்தும் இத்தகைய சொல்லோவியங்கள் எனலாம்.

இவ்வாறு கதை சொல்லும் பாங்கு இந்திய இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது. வடமொழிகளான சமஸ்கிருதம், பாலி போன்ற மொழிகளில் கதை சொல்லும் பாடல்கள் உள்ளன. வேதங்களிலும் திரிபிடகங்களிலும் இத்தகைய பாடல்களைக் காண முடிகிறது. வடமொழியில் ரிக்வேதத்தில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட கதைப் பாடல்கள் கதைப் பாங்குடனும் நாடகப் பாங்குடனும் உள்ளன. இவை உரையாடல் வடிவத்தில் உள்ளன. இத்தகைய கதைப் பாடல்கள் ஆக்யான **(Akhyana)** எனப்படுகின்றன.

பாலியில் திரிபிடகங்களில் கதைப் பாடல்கள் காணப்படுகின்றன. சுத்தப் பிடகத்திலுள்ள தேரகாதா **(Thera Gatha)** தேரிகாதா **(Theri Gatha)**ஆகியன இரண்டும், தேரர், தேரியர் ஆகியோர் பற்றிய செய்திகளைக் கதைப்பாடல்கள் வாயிலாகச் சொல்வதாக அமைகின்றன. புத்த ஜாதகமும் இவ்வாறே கதை சொல்லும் இலக்கியமாகவே அமைந்துள்ளது. ஜாதகம், தம்மபதம் போன்ற திரிபிடக நூல்களில் புத்தர் அறக்

கருத்துக்களைக் கூறிய சூழல்களைப் புத்தகோசர் போன்ற உரையாசிரியர்கள் கதை வடிவத்தில் சொல்லிச் செல்கின்றனர்.

தமிழில் கதை சொல்லும் இலக்கியம்

தமிழின் பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் கதை சொல்லும் இலக்கியமாக - கதை தழுவிய பாடல்களாக- இரண்டு முக்கிய வகைகளைக் குறிப்பிடுகின்றது. அவை, 1.தொன்மை, 2. தோல் என்பனவாகும். இவற்றுள் தொன்மை என்பது உரையொடு கூடிப் பழங்கதைகளைச் சொல்லும் செய்யுள் வடிவமாகும்.

> தொன்மை தானே சொல்லுங் காலை
> உரையொடு புணர்ந்த பழமை மேற்றே

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்குப் பேராசிரியர் உரை கூறும் பொழுது, "தொன்மை யெனப்படுவது உரை விராய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் சொல்லப்படுவது" என்பார்.

> இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
> பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்
> தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.

என்னும் தோல் பற்றிய நூற்பாவிற்கு "ஆசிரியப்பாட்டான் ஒரு கதைபோல் தொடுக்கப்பட்டனவான பொருள் தொடர்நிலைச் செய்யுள் தோல் என்று சொல்லும் புலவர்" என உரை விரிக்கிறார். எனவே தொன்மையும் தோலும் பழங்கதையைச் சொல்லும் தன்மையன என்பது புலனாகிறது.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் பெரும்பாலானவை கதை சொல்லும் தன்மையினைப்

பெற்றுள்ளன எனக் கூறலாம். எட்டுத்தொகை நூல்களுள் இவை நீண்ட கதைகளாக இல்லாவிடினும், ஒவ்வொன்றும் ஒரு சிறுகதையின் தன்மையைத் தன்னுள் உள்ளடக்கியிருக்கிறது என உறுதியாகக் கூறலாம். பத்துப்பாட்டு நூல்களுள் அகநூல்கள் இத்தகு கதையைச் சற்று விரிவாகக் கூறும் தன்மையனவாக உள்ளன. புறப்பாடல்களிலும் சில பாடல்களில் இத்தகைய கதை சொல்லும் பாங்கினைக் காணமுடிகிறது.

பின்னர்த் தோன்றிய காப்பிய இலக்கியங்கள் கதை சொல்லும் இலக்கியமாக அமைவதுடன் அவை நீண்ட மையக்கதையுள் பல சிறிய கிளைக் கதைகளையும் உள்ளடக்கியனவாகவே உள்ளன. தொடக்கக் காலத்தில் இத்தகைய கதைகள் யாரோ ஒருவரின் கற்பனையில் உதித்ததாகவோ, அல்லது நடந்த ஏதோ ஒரு நிகழ்ச்சியைச் சுவைபடக் கூறுவதாகவோ அமைகின்றன. எனினும் அவை காலந்தோறும் மக்கள் வழக்கில் பயிலப்பெற்று வந்தன. ஏட்டில் எழுதப்பெறாத இத்தகைய மக்கள் வழக்குக் கதைகள், பிற்காலத்தில் இலக்கியப் படைப்பாளிகளால் தம் தேவைக்கேற்ப எடுத்தாளப் பெறுவதன் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு பதிவு செய்யப்பட்டவை தவிர ஏனையவை காலத்தால் சிதைந்து உருமாற்றம் பெறுவதுடன் சில மறைந்தும் அழிந்தும் போவதுண்டு. இத்தகைய நிலைக்கு மாறாகச் சிலர் இக்கதைகளுள் சிலவற்றைத் தம் காலத்தில் வழங்கப்படும் நிலையிலேயே தொகுத்து வைப்பதும் உண்டு. அவ்வாறு தொகுத்துப் பதிவு செய்யப்பெற்ற நூலே "பஞ்சதந்திரம்" ஆகும்.

வடமொழியில் ஹிதோபதேசம் என்ற பெயரில் விஷ்ணு சர்மா ஒரு நூலை இயற்றினார். இந்நூல் முழுவதும் சிறு சிறு கதைகளின் தொகுப்பே. நீதிகளைப் போதிக்கும் வகையில் கூறப் பெற்ற இக்கதைகளைக் கொண்டு

அழகான ஓர் இணைப்புக் கதையுடன் கதைக்குள் கதையாக அமைத்து விஷ்ணு சர்மாவால் படைக்கப்பட்டது பஞ்சதந்திரம் என்னும் நூலாகும். இதனாலேயே ஹிதோபதேசத்தைப் பஞ்சதந்திரத்தின் சங்கிரகம் என்றும் கூறுவதுண்டு. ஹிதோபதேசத்திற்கு முன் பிரகிருத மொழியில் பஞ்சதந்திர நூல் இயற்றப் பெற்றது என்றும், பின்னர் இந்நூல் அழிந்து விட்டது என்றும், இதுவே பஞ்சதந்திரத்தின் மூலநூல் என்றும் கூறுவர். தற்போது, விஷ்ணு சர்மாவின் பஞ்சதந்திரமே வழக்கில் உள்ளது. இது ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்திய மொழிகளில் பெரும்பாலானவற்றில் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

தமிழில் பஞ்சதந்திரம்

தமிழில் பஞ்சதந்திரக் கதைகளை உரைநடை வடிவத்தில் வித்துவான் தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்நூல் 1826ஆம் ஆண்டு வெளியாயிற்று. இந்நூல் மராட்டிய மொழியில் வெளியான பஞ்சதந்திரக் கதைகள் என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும். இந்நூலுக்கு முன் பஞ்சதந்திர வசனம் என்னும் நூல் தமிழில் வழங்கி வந்ததாக அறியமுடிகிறது.

இவ்விரு நூல்களுக்கும் முன்னர் செய்யுள் வடிவில் பஞ்சதந்திரம் செய்யுள் என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியாயிற்று. இதன் காலத்தைச் சரியாக வரையறுத்துக் கூற இயலவில்லை. எனினும் தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரத்திற்குச் சற்று முன் வெளியானது என்பதால் இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வெளியானது எனக் கூறலாம். இதன் ஆசிரியர் வீரமார்த்தாண்டத் தேவர் ஆவார். இச்செய்தி

வயவீர ரோன்பான் வழியுற்ற மேலோன்
ஜயவீர மார்த்தாண்ட தேவன் - வயமாய்
பன்னூலின் நுண்ணூலாம் பஞ்சநற் றந்திரத்தை
மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து

என்னும் வெண்பாவால் அறிய முடிகிறது. இதுவும் தாண்டவராய முதலியாரின் உரைநடை நூலும் கதை அமைப்பு முறையில் ஒத்து விளங்குகின்றன.

வீரமார்த்தாண்டத் தேவரின் பஞ்சதந்திரம் செய்யுள்

வீரமார்த்தாண்டத்தேவர் தம் நூலின் ஒவ்வொரு தந்திரத்தின் தொடக்கத்திலும் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடிச் சேர்த்துள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் சிவபெருமானை வழிபடும் பாடல்களாகவே உள்ளன.

திருவளர் கமல வாவி திகழ்புலி யூரிற் செம்பொன்
மருவிய பொதுவி லாடும் வள்ளலைப் போற்றிச்
செய்தே
பெருகிய உபாய நீதி பேரறி வுடைய நீரார்
கருவிய பஞ்சதந்திரக் கதையையான் கூற லுற்றேன்.

காப்பு

பொன்னலந் திகழுந் தில்லைப் பொதுவில்நின்
றாடும் எந்தை
தன்னடி பணிந்து பஞ்ச தந்திர வுபாயந் தன்னில்
முன்னரே மித்திர பேத முறைபல உரைத்தோ
மிப்பால்
பன்னருஞ் சுகிரில் லாபப் பகுதியின் தகுதி
சொல்வாம். *(2 :1)*

இளம்பிறை அரவு கங்கை யிருநதி யாடி மண்ணில்
வளம்பெற வாடு மெந்தை மலரடி கருதி மேலோர்
உளம்புனை மித்ரபேதம் உபாயநற் சுகிரில் லாபம்
விளம்பின மிப்பாற் சந்தி விக்கிரங் கூறு வாமே. *(3 :1)*

இந்துசே கரராம் தில்லை இறைவர்தம் அருளி னாலே
முந்திய மித்திர பேதம் முழங்கிய சுகிரில் லாபம்
சந்திவிக் கிரக மூன்றும் சாற்றின மர்த்த நாசம்
செந்தமிழ்க் கவிதை யாலே சிறிதுநாம்
புகலலுற்றோம். *(4 : 1)*

சுருதியந் தத்துத் தில்லைத் தொல்லைமன் றத்து
மன்பர்
உருகுநெஞ் சத்து மாடல் உகந்தபே ரொளியைப்
போற்றி
மருவிய பஞ்சதந்திர வகையின்முன் னான்குஞ்
சொன்னேன்
கருதிய சம்பி ரேட்சிய காரித்து வஞ்சொல் வோமே.
(5 : 1)

இவ்வாழ்த்துப் பாடல்கள் அனைத்தும் தில்லைமன்றுள் ஆடும் சிவபெருமானைப் போற்றுவனவாக அமைந்து வீரமார்த்தாண்டத் தேவரின் சைவநெறிப் பற்றினை விளக்கி நிற்கின்றன.

இந்நூலின் தொடக்கத்திலும் இறுதியிலும் அவையடக்கப் பாடல்கள் இரண்டு காணப்பெறுகின்றன. இவ்விரு பாடல்களும் சுவடியில் காணப்படுகின்றன. ஆனால் அச்சுப் பிரதியில் இவை இல்லை.

தன்மமே யாதி நான்கு தகுதியின் பகுதி யெல்லாம்
பன்முறைத் தமிழ்நூ லாலே பார்மிசை வழங்கு
மேலோர்
சொன்முறை யான்றந் திரத்தைச் சொல்லன்முச்
சுடரின் முன்னே
மின்மினி தானுமங்கோர் விரிசுட ரென்னல் போலும். 2

ஐவகைத் தந்தி ரத்தின்
அடைவையான் தமிழி னாலே
இவ்வகை யறிந்த வாறிங்
கியம்பினன் புலமை மிக்கோர்
செவ்விதென் றுவப்பர் தங்கள்
சிறுவர்சொல் பழுதா னாலும்
அவ்வவர் இகழார் நித்தம்
அகமகிழ்ந் துவப்ப ரென்றே

நூலின் தொடக்கத்தில் அவையடக்கப் பாடல் அமைவதுடன் நூலின் இறுதியிலும் அவையடக்கப் பாடல் அமைவதை இந்நூலின் தனிச்சிறப்பாகக் கருதலாம்.

நூலமைப்பு

பஞ்சதந்திரம் என்னும் இந்நூல் மித்திரபேதம், சுகிரில்லாபம், சந்தி விக்கிரகம், லத்த நாசம், சம்பிரேட்சிய காரித்துவம் என்னும் ஐந்து தந்திரங்களாகப் பகுத்துக் கூறப்பட்டுள்ளது. மித்திரபேதத்திற்குமுன் கதை பிறந்த வரலாறு என்னும் சிறு பிரிவு காணப்படுகிறது. இப்பிரிவில் பஞ்சதந்திரக் கதைகள் யாருக்கு யாரால் எச்சூழலில் சொல்லப்பட்டன என்ற வரலாறு கூறப்பட்டுள்ளது. பாடலிபுரத்து மன்னன் சுதரிசனன் என்பவனது மக்கள் பொறுப்பற்ற மூடராய்த் திரிந்தனர். இதனால் வருந்திய மன்னன் தன் மக்களைத் திருத்தி நல்லறிவுடையோராக ஆக்கும் திறனுடையோர் யாரேனும் உளரோ எனத் தன் அவையினரிடம் கேட்டான். அப்பொழுது சோமசன்மா என்னும் அந்தணர் முன்வந்து அப்பொறுப்பினைத் தான் ஏற்றுக்கொண்டார். அரசகுமாரர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்று

அவர்களிடம் நயமுடன் பேசிப் பழகிப் பின் அவர்களுக்குக் இக்கதைகளைக் கூறி அறிவூட்டினார் என்றுள்ளது. இதனைத் தொடர்ந்து ஐந்து தந்திரங்களில் கதைகள் சொல்வதாகவும், அக்கதைகளைக் கேட்ட அரசகுமாரர்கள் மனம் தேறி நல்லறிவு விளங்கப் பெற்றனர் என்றும் கூறி நூல் முடிவுறுகிறது.

ஒவ்வொரு தந்திரத்திலும் மையக் கதையாக ஒரு கதை அமைகிறது. அந்த மையக்கதைக்குள் ஒரு கதை அதற்குள் ஒருகதை என்ற வகையில் பல கதைகள் கூறப்பட்டு இறுதியில் மையக் கதையுடன் தொடர்புற்று முடிவுறுகிறது. இவ்வகையில்

1. சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை
2. காகம், எலி, ஆமை, மான் இவை வேடனை வென்ற கதை
3. காகம் கோட்டானை வென்ற கதை
4. முதலையிடமிருந்து குரங்கு தப்பிய கதை
5. கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை

என ஐந்து மையக் கதைகள் இந்நூலில் உள்ளன. இக்கதைகளில் வரும் கதை மாந்தர்கள் தங்கள் சூழலுக்கேற்ற வகையில் நீதிகளைக் கூறி அதனை விளக்கக் கதைகள் கூறுவதாகவும் அக்கதைகளுக்குள் மற்றொரு கதை கூறப்படுவதாகவும் சங்கிலித் தொடர்போல் தொடர்ச்சியாகக் கதைகள் அமைகின்றன. இத்தொடரில் எவ்விதத் தடையுமின்றி இடையிடையே மையக் கதையைத் தொட்டுத் செல்லும் போக்குக் காணப்பட்டு இறுதியில் மையக் கதையின் முடிவுடன் தந்திரம் முடிவடைகிறது. இவ்வகையில் ஐந்து தந்திரங்களிலும் மொத்தம் அறுபத்தாறு கதைகள் கூறப்பட்டுள்ளன. இவை தவிரக் கதைகளின் இடையே

ஒவ்வொரு பாடலில் சில விளக்கக் கதைகளும் காணப்படுகின்றன. இக்கதைகள் யாவும் ஒவ்வொரு நீதியைச் சொல்வதாகவே அமைகின்றன.

பஞ்சதந்திரக்கதைகள்

கைதேர்ந்த கலைஞன் ஒருவன் பலவண்ண மலர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அழகியதோர் மாலையாகத் தொடுப்பதுபோன்று, விஷ்ணு சர்மா மக்கள் வழக்கிலிருந்து தன் நோக்கத்திற்குப் பொருத்தமான பல கதைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு நூலாக்கியுள்ளார். நூலில் காணப்படும் கதைகள் அனைத்தும் இவரது சொந்தப் படைப்பல்ல. ஆனால் மலர்களை மாலையாகத் தொடுக்கப் பயன்படும் நார் போன்று இக்கதைகளை இணைக்கப் பயன்படும் மன்னனின் மூடமக்கள் பற்றிய இணைப்புக்கதை மட்டும் விஷ்ணு சர்மாவின் படைப்பெனக் கொள்ளலாம். அந்த இணைப்புக் கதை பொருத்தமானதாகவும் சுவையானதாகவும் அமைந்துள்ளது.

விஷ்ணுசர்மா தன் நூலில் கூறப்போகும் நீதிக்கு ஏற்ற கதைகளை மக்கள் வழக்கிலிருந்து மட்டுமன்றிப் பிற நூல்களிலிருந்தும் எடுத்துக் கொண்டுள்ளார். அவ்வகையில் அவர் புத்த ஜாதகக் கதைகளிலிருந்தும் பொருத்தமான பல கதைகளை எடுத்தாண்டுள்ளார். இவற்றுள் சிலவற்றை நேரடியாக அப்படியே பயன் படுத்தியிருப்பதோடு, சில கதைகளில் சில மாற்றங்களைச் செய்தும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

புத்த ஜாதகக் கதைகள் என்பன புத்தர் தம் சீடர்களுக்குக் கூறிய முற்பிறவிக் கதைகளாகும். பௌத்த சமயம் பாரதத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் இக்கதைகள் மக்களால் பெரிதும் அறியப்பட்டனவாக இருந்தன. இப்படிப்பட்ட கதைகளிலிருந்துதான் விஷ்ணுசர்மா தேர்ந்தெடுத்துத் தம் நூலில் சேர்த்துள்ளார்.

பஞ்சதந்திரக் கதைகளுக்கு இணையான ஜாதகக் கதைகள்

1) முதலை குரங்கை விட்டு நாணமடைந்த கதை பஞ்சதந்திரத்தில் நான்காம் தந்திரத்தின் மையக் கதையாக உள்ளது. இக்கதை புத்த ஜாதகத்திலுள்ள வானரிந்த ஜாதகம், (57) வானர ஜாதகம், (342), சுங்சுமார ஜாதகம் (208) ஆகிய மூன்று தலைப்பில் காணப்படும் கதையாகும்.

2) நண்டு கொக்கைக் கொன்ற கதை புத்த ஜாதகத்தில் பகஜாதகம் (38) என்னும் தலைப்பில் உள்ள கதையாகும்.

3. காக்கைக்கு இடங் கொடுத்துப் புறா மாண்ட கதை புத்த ஜாதகத்தில் உள்ள கபோத ஜாதகம் (42) கதையாகும்.

4. துட்ட புத்தி கெட்ட கதையானது புத்த ஜாதகத்தில் உள்ள கூட வாணிஜ ஜாதகக் கதையாகும்.

5) மும்மீன் கதை புத்த ஜாதகத்தில் உள்ள மிதசிந்தி ஜாதகக் கதையாகும்.

6. புறாக்கள் வலையைத் தூக்கிச் சென்ற கதை புத்த ஜாதகத்தில் சம்மோதன ஜாதகம் (33) என்னும் தலைப்பில் உள்ளது.

7. காகம் எலி ஆமை மான் வேடனை வென்ற கதை என்னும் கதை புத்த ஜாதகத்தில் உள்ள குருங்க ஜாதகம் ஆகும். இதில் காகத்திற்குப் பதிலாக மரங்கொத்தி கூறப்பட்டுள்ளது.

8. சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை புத்த ஜாதகத்தில் சந்தி பேத ஜாதகம் (349) எனக் காணப்படுகிறது. கதையில் சில மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

9. குரங்கு பழிவாங்கிய கதையின் முதல் பகுதியான குதிரைக்கு மருத்துவம் பார்க்கக் குரங்கின் கொழுப்பை எடுத்தது என்னும் பகுதி காகஜாதகம் (140) என்னும் கதையிலும் பின்னால் குளத்தில் குரங்கு தந்திரமாக நீரருந்துய பகுதி நளபான ஜாதகத்திலும் (20) உள்ளன. இதில் குரங்கின் கொழுப்பிற்குப் பதிலாகக் காகங்களைக் கொன்று கொழுப்பு எடுத்ததாக உள்ளது.

10. கடலைச் சிட்டு வென்ற கதை புத்த ஜாதகத்தில் காக ஜாதகம் (146) என்னும் கதையை ஒத்துள்ளது. இதில் காகத்திற்குப் பதிலாகச் சிட்டு கூறப்பட்டுள்ளது. இதுபோன்று லதுகிக்க ஜாதகம் (357) என்னும் கதையில் குயில் தன் குஞ்சைக் கொன்ற யானையை வென்ற கதை என உள்ளதைப் போன்று சிட்டு கடலை வென்ற கதை எனச் சில மாற்றத்துடன் காணப்படுகிறது.

11. புலி பிராமணனை வஞ்சித்த கதையில் உள்ள புலிக்குப் பதிலாகப் புத்த ஜாதகக் கதையான சீகால ஜாதகத்தில் (113) நரி பிராமணனை வஞ்சித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு புத்த ஜாதகக் கதைகள் நேரடியாகவோ, சில மாற்றங்களுடனோ பஞ்சதந்திரக் கதைகளில் சேர்த்திணைக்கப் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. இதைத் தவிர இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாச நிகழ்ச்சிகளையும் நளன் சரிதத்தின் நிகழ்ச்சியையும் பொருத்தமான இடத்தில் பொருத்தமான வகையில் எடுத்தாண்டுள்ளமையைக் காணமுடிகிறது.

மூலநூலும் வழிநூலும்

விஷ்ணு சர்மாவால் சமஸ்கிருதத்தில் செய்யப்பெற்ற பஞ்சதந்திரம் என்னும் நூல் இந்தியாவின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்வாறு

மொழி பெயர்க்கும் பொழுது மூல நூலில் உள்ள சில கதைகள் விடப்பட்டுத் தத்தம் பகுதியில் வழங்கப்படும் சில கதைகள் சேர்க்கப்பட்டதாக அறியமுடிகிறது. மேலும் மூலநூல் கதைகளில் சில அந்தந்த வட்டாரத்தில் வழங்கப்படும் மரபிற்கேற்பச் சில மாற்றங்களும் செய்யப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

தமிழில் பஞ்சதந்திரக் கதைகளை வீரமார்த்தாண்டத் தேவர் செய்யுளிலும் தாண்டவராய முதலியார் உரைநடையிலும் மொழிபெயர்த்துள்ளனர். தாண்டவராய முதலியார் தம் நூலை மராட்டிய மொழியிலிருந்து மொழி பெயர்த்துள்ளார் எனக் கூறப்படுகிறது. தாண்டவராய முதலியாரின் உரைநடை நூலுக்கு இணையான அமைப்பினை வீரமார்த்தாண்டத் தேவரின் செய்யுள் நூலும் பெற்றிருப்பதால் இவரும் தாண்டவராய முதலியாரைப் போன்று மராட்டியிலிருந்து மொழிபெயர்த்துத் தந்தார் எனக் கருதலாம். இக் கருத்தை உறுதி செய்யும் வகையில் சமஸ்கிருத நூலில் உள்ள பல கதைகள் தமிழ் நூலில் விடுபட்டுள்ளன. மேலும் சமஸ்கிருதத்தில் இல்லாத இடைச்சி சோரபுருடரைக் காத்த கதை தமிழில் காணப் படுகிறது. மேலும், கதைகளிலும் சில மாற்றங்களைக் காண முடிகிறது. எடுத்துக் காட்டாகச் சமஸ்கிருதத்தில் கீரியைக் கொன்ற பார்ப்பனி கதை உள்ளது. இக்கதையில் பார்ப்பனியே கீரியைக் கொன்றாள் எனத் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால் வீர மார்த்தாண்டத் தேவர் கீரியைப் பார்ப்பனன் தண்டால் அடித்துக் கொன்றான் எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அதற்காகப் பார்ப்பனி அவனைத் தூற்றுவதாகவும் குறிப்பிடுகிறார்.

வருமுனே சேயைக் கிட்டி
    வந்ததோர் நாக மந்த
கரியநா கத்தைக் கீரி
    கடித்திரு துண்ட மாக்கிக்

குருதிவா யெங்கு மாகக்
கொண்டு சந்தோசங் காட்ட
அருமறை யோன்முன் சென்ற
தாகெடுத் தாயே வென்றே
தண்டினா லடித்துக் கொன்றான்
தளர்வொடு வீட்டில் வந்தான்
கண்டனன் பிள்ளை முன்பே
கரியபாம் போவி ரண்டு
துண்டமாக் கடிக்கப் பட்டுத்
தூரவே கிடக்கக் கண்டான்
மண்டிய துயரமாகி
வயிற்றினி லடித்துக் கொண்டான்

(பாடல் 632-633)

என்னும் பாடல்களில் இச்செய்தி தெளிவாகக் கூறப்பட்டிருக்கக் காணலாம். இது போன்ற மாற்றங்களால் வீரமார்த்தாண்டத் தேவர் விஷ்ணுசர்மாவின் சமஸ்கிருத நூலிலிருந்து தமது பஞ்சதந்திர நூலைச் செய்யவில்லை எனக் கருதலாம்.

தமிழில் பிற்காலத்தில் தோன்றிய பஞ்ச தந்திரக் கதைகள் பற்றிய உரைநடை நூலில் செய்யுள் நூலில் காணப்பெறாத பல கதைகளைக் காணமுடிகிறது. இவ்வாறு நூலுக்கு நூல் கதைகளின் எண்ணிக்கை மாறுபடுவதற்குக் காரணம் என்னவென்பதைச் சரியாகக் கூற இயலவில்லை. எனினும் அவ்வப் பகுதியில் வழங்கிய மக்கள் வழக்குக் கதைகளை அவ்வம் மொழிகளில் எடுத்தாண்டனர் எனலாம்.

சரசுவதி மகால் நூலகப் பதிப்பு

"பஞ்சதந்திரம் - செய்யுள்" என்னும் இந்தப் பதிப்பிற்குத் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடி எண் 109 அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இந்தச் சுவடியைத் தவிரச் சுவடி எண்கள் 107, 108, 705(a), 1372 ஆகிய சுவடிகளும் பஞ்சதந்தரம் செய்யுள் நூலைக் கொண்டனவே. எனினும் இவை

முழுமையாக இல்லாமலும், சிதைந்தும் காணப் படுகின்றன. இச்சுவடிகள் ஒப்பு நோக்கிற்குப் பயன்படுத்தப்பட்டன.

இவற்றைத் தவிர 1920இல் வெளியான அச்சுப்பிரதி ஒன்றும் உள்ளது. இந்த நூலும் ஒப்பீட்டிற்குப் பயன்படுத்தப்பட்டது. எனினும் சரசுவதி மகால் நூலகத்தின் 109ஆம் எண் சுவடியே அடிப்படையாகக் கொள்ளப் படுவதுடன், அச்சுப் பிரதியில் காணப்படும் பாட பேதங்களும் உரிய இடங்களில் சுட்டப்பட்டுள்ளன. மேலும் அச்சுப்பிரதியில் காணப்படும் பல பாடல்களும் கதைகளும் சுவடியில் காணப்படவில்லை. இவ்வகையில் சுவடியைவிட அச்சுப் பிரதியில் 183 பாடல்கள் கூடுதலாக உள்ளன. எனினும் இக்கூடுதல் பாடல்களும் அச்சுப்பிரதியில் காணப்பட்டபடி இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறு சேர்க்கப்பட்ட பாடல்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சில இடங்களில் ஒரு பாடலின் முதலிரு அடிகள் சுவடியிலும் அச்சுப்பிரதியிலும் ஒன்றாயிருக்கப் பிற அடிகள் வேறுபடுவதைக் காணமுடிகிறது. இத்தகைய வேறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பது விளங்கவில்லை. ஒரு வேளை அச்சுப் பிரதியின் பதிப்பாசிரியருக்கு வேறு சுவடிகளில் அப்பாடல்களும் பாடங்களும் கிடைத்திருக்கலாம். என்றாலும் ஒரு ஆசிரியரின் படைப்பில் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் இத்தகைய பெருத்த வேறுபாடு காணப்படுவதற்கான காரணம் என்னவென்பது சிந்தித்தற்குரியது.

இந்நூலின் செய்யுள் நடையும் எவரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் எளிமையாகவே உள்ளது. எனினும் கற்போர்க்கு எளிமையும் சுவையும் கருதி பாடல்களுக்கான பொழிப்புரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் ஆங்காங்கே காணப்படும்

சில கடின சொற்களுக்குப் பொருள் தந்து அச்சொற்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டுப் பின்னால் சேர்க்கப் பட்டுள்ளன. இறுதியில் பாட்டு முதற்குறிப்பு அகர வரிசையும் தரப்பட்டுள்ளது.

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கிப் பஞ்சதந்திரம் - செய்யுள் என்னும் இந்நூலைப் பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரும் சரசுவதி மகால் நூலக இயக்குநருமான உயர்திரு. சா. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் நல்ல முறையில் வெளிவரத் துணைநின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூலக முன்னாள் நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர்(பொ.)திரு. சாமி. சிவஞானம், M.A., அவர்களுக்கும், தற்போதைய மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் இந்நூலக நிருவாக அலுவலர் (பொறுப்பு) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.,Ph.D., அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் சிறப்பாக அமைய உதவிய அனைத்து நல்லுள்ளங்களையும் நன்றியுடன் நினைத்துக்கொள்கிறேன.

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலகக் கணினிப் பிரிவினருக்கும் அச்சகம் மற்றும் நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்.
24-01-2014.

முனைவர் **நா. செயப்பிரகாசு,**
சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்,

***

பொருளடக்கம்

1. வெளியீட்டாளர் முகவுரை

2. பதிப்புரை

3. நூல்

1. காப்பு

1-1 கதை பிறந்த வரலாறு

2.0 **முதல் தந்திரம் - மித்திரபேதம்**

2.1. சிங்கத்ததோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை

2.1.1. குரங்கு தன் குறி நசுங்கிய கதை

2.1.2. பேரொலி கேட்டு அஞ்சிப் பேரிகை கண்ட கதை

2.1.3. தமக்குத் தாமே கேடு செய்துகொண்ட கதை

2.1.3.1. காமத்தால் கெட்ட காரிகையர் கதை

2.1.4. காகம் நாகத்தைக் கொன்ற கதை

2.1.5. சிங்கத்தை முயல் கொன்ற கதை

2.1.6. நண்டு கொக்கைக் கொன்ற கதை

2.1.7. சீலைப்பேன் முகுட்டுப்பூச்சியால் அழிந்த கதை

2.1.8. காக்கை ஒட்டகத்தை அழித்த கதை

2.1.9. கடலைச் சிட்டு வென்ற கதை

2.1.9.1. ஆமை சொற்புத்தி கடந்து இறந்த கதை

2.1.9.2. மும்மீன் இறந்த கதை

2.1.9.2.1. இடைச்சி சோர புருடரைக் காத்த கதை

2.1.10. துட்ட புத்தி கெட்ட கதை

2.1.11. கொக்கு நாகத்தைக் கொன்ற கதை

2.1.12. இரும்பை எலி தின்றதென்ற கதை

3.0 **இரண்டாம் தந்திரம் - சுகிரில்லாபம்**

3.1.0. காகம், எலி, ஆமை, மான் இவை
வேடனை வென்ற கதை

3.1.1 புறாக்கூட்டம் வலையுடன் பறந்தகதை

3.1.1.1. புலியால் பிராமணன் மரணமடைந்த கதை

3.1.2 காகம் எலி நட்பு கொண்டது

3.1.2. 1. நரியால் மான் வலையில் பட்ட கதை

3.1.2.2. பூனைக்கு இடம் கொடுத்து கழுகு இறந்த கதை

3.1.2.3. எலி தன் வரலாறு சொன்ன கதை

3.1.2.3.1. திதி செய்த கதை

3.1.2.3.2. வேடனும் நரியும் இறந்த கதை

4.0 **மூன்றாம் தந்திரம் - சந்தி விக்கிரகம்**

4.1. காக்கை கோட்டானை வென்ற

4.1.1. வாய்க்குற்றத்தால் கழுதை இறந்த கதை

4.1.2. காகம் கோட்டான் பகை உண்டான கதை

4.1.2.1. முயல் யானையை வென்ற கதை

4.1.2.2. பூவையும் முயலும் மோசம் போன கதை

4.1.3. அந்தணனை வஞ்சித்த கதை

4.1.5. கோமுட்டிக்குக் கள்ளன் உதவிய கதை

4.1.6. பிரம ராக்கதனும் திருடனும் வந்த கதை

4.1.7. தச்சன் கதை

4.1.8. இரகசியம் விட்டுப் பாம்புகள் இறந்த கதை

4.1.9. வேடன் கதை

4.1.10. பொன்னெச்சமிடும் பறவை கதை

4.1.11. நரி சிங்கத்தின் மோசம் அறிந்த கதை

4.1.12. எலி கதை

4.1.13. பாம்பு தவளையைச் சுமந்த கதை

5.0 நான்காவது தந்திரம் - லத்த நாசம்

5.1. முதலை குரங்கை விட்டு நாணமடைந்த

5.1.1. தவளை பாம்பை வஞ்சித்த கதை

5.1.2. கழுதை இறந்த கதை

5.1.3. குயவன் கெட்ட கதை

5.1.4. நரிக்குட்டுக் கதை

5.1.5. முடவனை விரும்பி கணவனை வஞ்சித்த காரிகைக் கதை

5.1.6. மகளிர் சொல் கேட்டு மானமிழந்த கதை

5.1.7. நரி சிரித்த கதை

5.1.8. குரங்கு குருவிக் கூட்டைக் கலைத்த கதை

5.1.9. நரி நால்வர்க்கும் நான்குபாயம் சொன்ன கதை

5.1.10. வேற்றூர்ச் சென்று கடிபட்ட நாயின் கதை

6.0 ஐந்தாம் தந்திரம் - அசம்பிரேட்சிய காரித்துவம்

6.1. கீரிப்பிள்ளைக் கதை

6.1.1. பொரிமாத் தோண்டியை உடைத்த பிரமச்சாரி கதை

6.1.2. நாவிதன் இறந்த கதை

6.1.3. செட்டி கதை

6.1.4. பேராசைகொண்டு பேதுற்ற கதை

6.1.4.1. சிங்கத்தைப் பிழைப்பித்துச் செத்த கதை

6.1.4.2. அறிவின் மிக்க மீன்கள் இறந்த கதை

6.1.4.3. இசைப் பாடிக் கழுதை இடருற்ற கதை

6.1.4.4. தகாத வரம் பெற்றுச் சாலியன் இறந்த கதை

6.1.4.5. குரங்கு பழி வாங்கிய கதை

6.1.4.6. குரங்கு துன்புற்ற கதை

6.1.4.7. குருடன் முதல் மூவர் குணப்பட்ட கதை

6.1.4.7.1. அரக்கனிடமிருந்து தப்பிய அந்தணன் கதை

6.1.4.8. நண்டின் வழித்துணையிற் பிழைத்த கதை

7. அருஞ்சொற் பொருள் அகரவரிசை

8. பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

பஞ்சதந்திரம் செய்யுள்

காப்பு

1. திருவளர்கமல வாவி
திகழ்புலி யூரிற் செம்பொன்
மருவிய பொதுவி லாடும்
வள்ளலைப் போற்றிச் செய்தே
பெருகிய உபாய நீதி
பேரறி வுடைய நீரார்
கருதிய பஞ்ச தந்திரக்
கதையையான் கூற லுற்றேன்.

(இதன்பொருள்) அழகு நிலை பெற்றிருக்கும் தாமரைக்குளம் விளங்கியிருக்கும் புலியூரிலும், பொன்னால் அமைக்கப் பெற்ற பொன்னம்பலம் என்னும் தில்லையிலும் இருந்து திருநடம்புரியும் வள்ளலாகிய சிவபெருமானை வணங்கி பேரறிவுடைய அறிஞர்கள் கருதும் பஞ்சதந்திரம் என்னும் ஐந்து உபாயங்களைக் கூறும் கதையை நான் கூறலுற்றேன்.

அவையடக்கம்

2. தன்மமே யாதி நான்கு
தகுதியின் பகுதி யெல்லாம்
பன்முறைத் தமிழ்நூ லாலே
பார்மிசை வழக்கு மேலோர்

சொன்முறை யான்றந் திரத்தைச்
சொலல்முச் சுடரின் முன்னே
மின்மினி தானு மங்கோர்
விரிசுடர் என்னல் போலாம்

(இ.ள்) அறம் முதலாகக் கூறப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களின் தன்மையையெல்லாம் தமிழ் நூல்கள் பலமுறை கூறியுள்ளன. நானும் உலக வழக்கப்படி மேலோர் சொன்ன அவற்றோடு கூடிய பஞ்சதந்திரத்தைச் சொல்வதென்பது, சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடரின் முன்னால் மின்மினியும் தானும் அங்கு ஒரு பெரும் சுடர் என்பது போன்றதாகும்.

இவ்விரு பாடல்களும் அச்சுப்பிரதியில் இல்லை. சரசுவதி மகால் நூலகச் சுவடிகளில் மட்டுமே காணப்படுகின்றன.

3

கதை பிறந்த வரலாறு

(இது பஞ்சதந்திரக் கதைகளைச் சொல்வதற்கு ஆதாரமான சூழலை விளக்குகிறது.)

3 பாடலி புரத்து மன்னன்
[1]சுதரிச னன்றன் பாலர்
மூடராய்த் திரித லாலே
அவர்கள்மேல் கொள்கை நீங்கி[2]
வாடியிங் கிவர்க ளாலே
பலனென்ன மலட்டா வொப்பர்
பீடிலார் பிறந்தார் மன்னோ
பிள்ளையெண் ணிக்கைக் கென்றார். (1)

(இ.ள்) பாடலிபரத்து மன்னன் சுதரிசனனுடைய மக்கள், உலகியலறிவும் அரசியலறிவுமின்றி மூடராய்த் திரிந்த காரணத்தால், அரசன் அவர்கள் மேல் கொண்டிருந்த நம்பிக்கையிழந்து, உள்ளம் வாடி, இவர்களால் இங்கு ஆகக்கூடிய பலன்தான் என்ன? இவர்கள் பயனற்ற மலட்டுப் பசுவை போன்றவர்கள். பெருமையற்ற இவர்கள் பிள்ளை என்ற எண்ணிக்கைக்காக இந்த மண்ணில் பிறந்துள்ளார்கள்.

4. கல்வியும் குலத்தைக் காக்கும்
கருத்துமில் லாத மைந்தர்
செல்வமும் குணமும் மிக்க
செவ்விசேர் உருவும் பெற்றென்
நல்வினை யிலாரைப் பெற்ற
நங்கைதான் பூத்த காலை
யில்வரு கருவி லாமற்
கருவழிந் திடலும் நன்றே. (2)

பா. பே: 1. சுதெரிசனன்
2. அவர்கள் மேல் மோகம் நீங்கி

(இ.பொ.) கல்வியும், தாம் பிறந்த குலத்தைக் காக்கும் கருத்தும் இல்லாத பிள்ளைகள் பெருஞ் செல்வமும், குணமும், அழகுமிக்க தோற்றமும் பெற்று என்ன பயன்? கல்வியறிவெனும் நல்வினை இல்லா மக்களைப் பெற்றவள் தான் பூத்த நேரத்தில் தன் வயிற்றில் வந்து சேரும் கரு இல்லாமல் அழிந்து போயிருப்பினும் நன்றேயாகும்.

5. **ஆயிரம் மகவைப் பெற்றும்**
ஆவதென் னம்மா மிக்க
தூயநல் லறிவ னான
சுதனொரு வனையே பெற்ற
தாயொடு தந்தை யென்ன
தவமியற் றினரோ வென்ன
மாயிரு ஞாலம் போற்று
மரபெலாந் தழைக்கு மன்றே (3)

(இ.ள்) ஒருவன் ஆயிரம் மக்களைப் பெற்றிருப்பினும் அதனாலாவதென்ன? தூய நல்ல அறிவுடைய ஒரு மகனைப் பெற்றிருந்தால், அவனைப் பெற்ற தாயும் தந்தையும் என்ன தவமியற்றினரோ என பரந்துபட்ட இந்த உலகமே பாராட்டிப் பேசுமே. அவனால் அந்தக் குடும்பத்தின் மரபே தழைக்கும்.

6. **எவ்வனம் செல்வம் மிக்க**
வீராசத மணிவே சுத்துள்
ஒவ்வொன்றே கேட்டுக் கெல்லாம்
உறுதுணை யாகி நிற்கும்
இவ்வகை நான்கும் கூடி
யொருவன்பா லிருந்த தென்றால்
எவ்வகை யவர்க்கு[1] மாதோ
இகபரம் கிடைப்ப தென்றான். (4)

பா.பே: 1. எவ்வகையா லன்னோனுக்கு

(இ.ள்) இளமை, செல்வம், இரஜோ குணம், அவிவேகம் ஆகிய இந்நான்குள் ஒவ்வொன்றும் கேடுகளுக்கெல்லாம் உறுதுணையாக நிற்கும். அவ்வாறாக இந்த நான்கும் ஒருவரிடத்தில் சேர்ந்திருந்தால் அவர்களுக்கு இகபரம் கிட்டுவது எவ்வகையில் இயலும் என்று அரசன் சபையில் கேட்டான்.

7. **அங்கவன் சபையின் மிக்க**
அறிஞரை நோக்கி மைந்தர்
தங்களை மடமை நீக்கும்
தகைமைய ரிலரோ வென்னத்
துங்கமா மறையோ னான
சோமசன் மாவெ ழுந்தே
இங்கிவ ரறிவிற் கேற்பர் [1]
இலரெனச் செய்வே னென்றான். (5)

(இ.ள்) மன்னன் தன் அவையிலிருந்த அறிஞர்களைப் பார்த்து, தன் "மைந்தரின் மடமையை நீக்கும் ஆற்றலுடையவர் எவரும் இலரோ?" எனக் கேட்டான். அப்பொழுது உயர்ந்த மறைகளைக் கற்றுணர்ந்தவனான சோமசன்மா என்பவன் எழுந்து, "யான் இவர்களுடைய அறிவிற்கு இணையானவர்கள் எவரும் இல்லை என்னும்படியாகச் செய்வேன்" என்றான்.

8. **விஞ்சுமா மறையோன் மாற்றம்**
வினவியே அரசர் கோமான்
நெஞ்சகம் மகிழ்ந்து மிக்க
நிதியொடு மக்கள் தம்மைக்
கொஞ்சமில் களிப்பி னோடுங்
கொடுத்தனன் சோம சன்மா
பஞ்சதந் திரத்தி னாலே
பாலரை வணக்க [2] **வெண்ணி** (6)

பா. பே: 1. இங்கிவ ரறிவா லொப்பார் 2. பாலரைத் திருத்த வெண்ணி

(இ.ள்) அந்த மறையவன் கூறிய பதிலைக் கேட்டு அரசன் மனம் மகிழ்ந்து, ஏராளமான செல்வங்களோடு தன் மக்களையும் அவனிடத்தில் மிக்க மகிழ்ச்சி யோடு ஒப்படைத்தான். சோமசன்மாவும் பஞ்சதந்திரத்தாலே அப்பிள்ளைகளைத் திருத்தலாம் எனத் தீர்மானித்து,

9. மன்னவன் குமாரர் தங்கள்
மனங்களுக் கேற்ற வாறு
நன்னயம் பெறுசொல்
நண்புகொண் டிருக்கும் நாளில்
பொன்னணி மார்பீர் இன்பம்
பொழிகதை யொன்றுண் டென்ன
பன்னுமக் கதையே தென்றார்
பஞ்சதந் திரமென் றானே (7)

(இ.ள்) மன்னவனின் மக்கள் மனத்திற்கு ஏற்ற வகையில் இனிய சொற்களைப் பேசி, நட்புடன் பழகியிருந்தான். ஒருநாள் அவர்களைப் பார்த்துப் 'பொன்னாலான அணிகலன்களை அணிந்த மார்பினையுடையவர்களே மனமகிழ்ச்சி தரக் கூடிய கதை ஒன்றுண்டு' என்றான். மக்களும் 'அக்கதை என்ன?' என்று கேட்க, 'அது பஞ்சதந்திரம்' என்று கூறினான் சோமசன்மா.

10. பஞ்சதந் திரமென் றோதும்
மான்மையே துரைத்தி யென்ன
வஞ்சமா மித்ர பேதம்
மருவிய சுகிரில் லாபம்
விஞ்சுமா நிலத்தில் சந்தி
விக்கிரகம் லத்த நாசம்
அஞ்சலில் அசம்பி ரேக்ஷிய
[1]காரித் துவமென் றாகும். (8)

1.காரித்து மாம வற்றுள்,

(இ.ள்) 'பஞ்சதந்திரம் என்று சொல்லப்படும் தன்மை என்னவென்று கூறுக' என அவர்கள் கேட்க, வஞ்சம் நிறைந்த மித்திரபேதம், சுகிரில்லாபம், பரந்துபட்ட இந்த உலகத்தில் சந்திவிக்கிரகம், லத்தநாசம், அஞ்சுதல் இல்லாத அசம்பிரேட்சிய காரித்துவம் என்பனவாகும்.

11. **மித்திர பேதம் நட்பை**
விலக்கியே பகையுண் டாக்கல்
ஒத்தவர் நட்பைக் கூடல்
ஓதிய சுகிர்லா பந்தான்
மெத்தவும் இகலி னாரை[1]
விரும்பிநட் பாக்கிப் பின்னர்
சத்துரு நாசம் பண்ணல்
சந்திவிக் கிரக மாமே. (9)

(இ.ள்) மித்திரபேதம் என்பது நட்பை விலக்கிப் பகை உண்டாக்குவது. தம்மோடு ஒத்த மனத்தினரின் நட்பைச் சேர்த்துக்கொள்வது சுகிரில்லாபம். மிக்க பகையுடையாரை விரும்பி அவர்களுடன் நட்பை ஏற்படுத்திக்கொண்டு, பின் அவர்களை நாசம் செய்தல் சந்திவிக்கிரகமாகும்.

12. **கிடைத்ததை யழியப் பண்ணல்**
கெழுமிய லத்த நாசம்
திடப்பட விசாரி யாமற்
செய்யுங்கா ரியத்தி னாகும்[2]
கடைப்படு மசம்பி ரேக்ஷய
காரித்து வமென் றாமே
தடப்பெருந் தோளீ ரென்றான்
சதுர்மறைக் குரிய கோமான். (10)

பா.பே: 1. மெத்தவும் பகைத்துள் ளாரை,
2. செய்யுங் காரியத்தி னாமம்

(இ.ள்) பெரிய தோளினை உடைய இளைஞர்களே தனக்குக் கிடைத்ததை ஆராயாமல் அழியச்செய்வது லத்த நாசம் (அர்த்த நாசம்). எதையும் தீர விசாரித்தறியாமல் காரியங்களைச் செய்வது ஐந்தாவதான கடைப்பட்ட அசம்பிரேட்சியகாரித்துவம் என்பதாம் என்று கூறினான் நான்கு வேதங்களுக்கும் உரியவனான சோமசன்மா.

13. மாதவ னுரைக்குஞ் சூழ்ச்சி
மன்னவன் குமாரர் நெஞ்சில்
காதலை விளத்த தாலே
கமலமார் பகனை நோக்கி
ஈதியா மறிய வேண்டும்
எமக்கதை விரித்து நன்றாய்
ஒதுக பெரியோ யென்ன
உயர்மறை யவன்சொல் வானால். (11)

(இ.ள்) பெரிய தவத்தினையுடைய சோமசன்மா கூறிய இச்செய்திகள் மன்னர் குமாரர்கள் நெஞ்சில் ஆவலைத் தோற்றுவித்தன. அவர்கள் தாமரை சூடிய மார்பினனான சோமசன்மாவை நோக்கி இவற்றை யாம் அறிய வேண்டுமென்ற ஆவல் தோன்றியுள்ளது. எங்களுக்கு அக்கதையை விரிவாகச் சொல்லவேண்டும் பெரியவரே, என்று கேட்க, உயர் மறையவனான சோமசன்மா கூறத் தொடங்கினான்.

கதை பிறந்த வரலாறு முற்றும்.

முதல் தந்திரம்

மித்திர பேதம்

(நட்பைக் கெடுத்துப் பகை உண்டாக்குதல்)

சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை

14. சிங்கமொன் றிபட மொன்று
சேர்ந்துவாழ்ந் திருந்த நட்பை
அங்கொரு நரிய னார்வந்
தழித்தன ரென்று கூற
இங்கிது புதுமை தானே
இடபமே தரிமா வேது
வெங்குறு நரிய ழித்த
விவரமே தெனவு ரைப்பான் (1)

(இ.ள்) சிங்கம் ஒன்றும் இடபம் ஒன்றும் நட்பாகச் சேர்ந்து வாழ்ந்திருக்க, அவர்களுடைய நட்பினை நரி ஒன்று வந்து அழித்தது எனச் சோமசன்மா கூற, அதுகேட்ட மன்னனின் மக்கள் இது என்ன புதுமை, இடபம் சிங்கம் ஆகிய இவற்றை குறுநரி அழித்த விபரம் என்ன ? அதை உரைக்க வேண்டும் எனக் கேட்க சோமசன்மா உரைப்பான்.

15. நலந்திகழ் தெற்கு நாட்டின்
மகிழாரூப் பியத்தி னண்ணி
இலங்கிய வர்த்த மானன்
எனுமொரு வணிகன் றன்பால்
துலங்கிய நிதியைக் கொண்டு
தூரவா ணிபஞ்செய் திந்தத்
தலம்வரல் வேண்டு மென்று
தன்மனத் தெண்ணிக் கொண்டு. (2)

(இ.ள்) நலம்பல திகழ்ந்திருக்கும் தென்னாட்டில் மகிழாரூப்பியம் என்னும் நகரத்தில் வாழ்ந்துவந்த

வர்த்தமானன் என்னும் வணிகன், தன்னிடம் உள்ள பெருநிதியைக்கொண்டு தொலைவில் உள்ள நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்துவரவேண்டும் எனத் தன்மனத்தில் தீர்மானித்துக்கொண்டு..

16. பொருளிலார்க் கின்ப மில்லை
புண்ணிய மில்லை யென்றும்
மருவிய கீர்த்தி இல்லை
மாந்தருட் பெருமை இல்லைக்
கருதிய கரும மில்லை
கதிபெறு வழியு மில்லை
பெருநிலத் திடைந டக்கும்
பிரேதமாய்த் திரிவ ரன்றே. (3)

(இ.ள்) பொருள் இல்லாதவர்களுக்கு இன்பம் இல்லை. எந்தப் புண்ணிய செயல்களும் செய்யவியலாது, சேர்ந்த புகழ் இல்லை. மனிதர்களிடையே பெருமையும் இல்லை. நினைத்த காரியங்களைச் செய்யவியலாது. நற்கதி பெறுதற்குரிய வழியும் இல்லை. அத்தகையோர் இந்தப் பெரிய உலகத்தில் நடமாடும் பிணமாகத் திரிவார்கள்.

17. நற்பொரு ளறத்தை யின்பம்
நலத்தைஞா னத்தை மிக்க
சொற்பெறு புகழை யென்றுந்
துகளறு பெருமை தன்னை
பற்பல குறவை நட்பைப்
பகைதவிர்த் திடுந்தி றத்தைப்
பொற்புறு கதியை யெல்லாம்
பொருள்வர வுதவு மன்றே.[1] (4)

பா. பே.: பாடல் 17. 1. பொருளாற் றருவ தின்றே

(இ.ள்) நல்ல பொருள் ஒருவர்க்கு வந்து சேர்ந்தால், அவர்களுக்கு அது அறம், இன்பம், நலம், ஞானம், பிறரால் சொல்லப்பெறும் புகழ், என்றும் குற்றமற்ற பெருமை, பலருடைய உறவு, நட்பு, பகையைத் தவிர்த்தற்குரிய திறம், நற்கதி ஆகிய எல்லாவற்றையும் தந்துதவும்.

18. ஆதலால் தருமத் தோடே
அரும்பொருள் தேடி மேலும்
ஊதியங் கொண்ட றஞ்செய்
துரியவப் பொருளைக் காத்தல்
நீதியிவ் வாறு செய்யார்
நிதியமும் தேய்ந்து மற்றும்
ஓதுமெந் நலமு மின்றி
யுறுதுய ரடைகு வாரே. (5)

(இ.ள்) எனவே அறநெறியில் அரிய பொருளைத் தேடி, அவ்வாறு தேடிய பொருள் கொண்டு மேலும் அறங்களைச் செய்து, உரிய வழியில் அப்பொருளைக் காத்தலே நீதிநெறியாகும். அவ்வாறு செய்யாதவர் தம் செல்வமும் தேய்ந்து, சொல்லப்பட்ட எந்த நலமும் இன்றிப் பெரும் துயரினை அடைவர்..

19. இன்னன பலவும் நெஞ்சில்
எண்ணியே வணிகன் தன்பால்
மன்னிய சரக்கைச் சூல
வண்டியி லேற்றிக் கொண்டு
தென்னமர் நந்த கன்சஞ்
சீவக னெனும்பே ரான[1]
தன்னெரு திரண்டும் பூட்டிச்
சதிரொடு நடத்தி னானே. (6)

பா. பே.: பாடல் 19. 2. சஞ்சீவக னெனுபே ருற்ற

(இ.ள்) (என்று) இன்ன பலவும் எண்ணிப் பார்த்து அந்த வணிகன், நிறைந்துள்ள சரக்குகளை வண்டியில் ஏற்றிக்கொண்டு தன்னிடமுள்ள நந்தகன், சஞ்சீவகன் என்னும் பெயர்களையுடைய இரு எருதுகளையும் அந்த வண்டியில் பூட்டி வெளியூருக்கு நடத்திச் சென்றான்.

20. நடத்திய நாளி லோர்நாள்
நனிபெருங் காட்டி லோர்காட்
டிடத்தினி லெருதுசஞ்சீ
வகனுங்கா லொடிந்து வீழ[1]
எடுப்பருஞ் சரக்கை யாளால்
எடுப்பித்தவ் வெருதைக் காட்டில்
விடுத்தொராள் வைத்துப் போனான்
விளிந்ததென் றவனும் போனான். (7)

(இ.ள்) அவ்வாறு செல்லும் பொழுது அடர்ந்த பெருங்காடுகளைக் கடக்க வேண்டியிருந்தது. அப்படி ஒரு காட்டிடையே செல்லும் போது, சஞ்சீவகன் என்னும் எருதின் கால் ஒடிந்து கீழே விழுந்து விட்டது. எனவே அந்த வண்டியிலிருந்த சரக்குகளை ஆட்கள் கொண்டு எடுக்கச் செய்து வேறு வண்டியில் சேர்த்துவிட்டு அந்த எருதினை அந்தக் காட்டிலேயே விட்டுவிட்டு காவலுக்கு ஓராளையும் விட்டு வணிகன் போனான். காவலுக்கு நின்றவனும் பொறுமையின்றி இந்த எருது இறந்தது என்று கூறிக்கொண்டு சென்றுவிட்டான்.

21. போனபின் எருதுக் கின்னம்
பொன்றுநாள் வாராமை யாலும்
தீனிமிக் குடைப வாலும்
தெளிந்துமுன் ஒடிந்த காலில்

பா. பே.: பாடல் 20. 2. பாலரைத் திருத்த வெண்ணி

ஊனமும் மாறி வேறோர்
ஒப்பிலா விடப மாகிக்
கானக முழுதும் மேய்ந்து
களிப்புடன் திரியு நாளில் (8)

(இ.ள்) அவ்வாறு அவர்கள் போனபின்பு, எருதுக்கு இன்னும் இறந்ததற்குரிய காலம் வராததாலும் மிகுந்த தீனி காட்டில் கிடைத்ததாலும், தன் உடல் தேறி, ஒடிந்த காலும் குணமாகி, அந்தக் காட்டில் தனக்கு நிகர் எதுவும் இல்லை என்னும்படியாகக் காடு முழுவதும் மேய்ந்து மகிழ்ச்சியுடன் திரிந்து வந்தது.

வேறு

22. பொங்குகதிர் திங்களொளி புகவரிய தாகிக்
கங்குல்கடு தங்கிவளர் கானமதை யாளும்
பிங்கலக னென்பதொரு பேருடைய தாகும்
சிங்கவர சங்கொருநாள் செழுஞ்சுனை யடைந்தே[1] (9)

(இ.ள்) பொங்குகின்ற சூரிய ஒளியும் சந்திரன் ஒளியும் உள்ளே நுழைய இயலாத இருள் அடர்ந்த அந்தக் காட்டைப் பிங்கலகன் என்னும் பெயருடைய ஒரு சிங்கம் ஆண்டு வந்தது. அந்தச் சிங்கவரசன் ஒருநாள் காட்டிலுள்ள ஒரு சுனையைச் சென்றடைந்தது.

23. கோதில் சுனை யிற்புனல்கு[2] டித்திடந டக்கும்
போதிடப மப்புறமோர் பொற்புருக னைக்கண்
காதுபிர னையத்தெழு[3] கடற்பெரு முழக்காம்
ஈதெனந டுக்குறவோ ரிடிக்குரல் முழக்க (10)

பா. பே.:

பாடல் 22. 1. சிங்கவர சன்யமுனை சேர்கரை யடைந்தே
பாடல் 23. 2. கோதறு நதிப்புனல்
பாடல் 23. 3. காதுமுக வீற்றெழு

(இ.ள்) குற்றமற்ற அந்தச் சுனையில் தண்ணீர் குடிக்கச் செல்லும்போது, மற்றோர் புறத்திலுள்ள ஒரு சுனையின் பக்கமிருந்து சஞ்சீவகன் என்னும் இடபமானது பிரளய காலத்தில் எழக்கூடிய கடல் முழக்கத்தின் ஒலியோ என்று அஞ்சி நடுங்கும்படியாக இடிக்குரலில் முழங்கியது.

24. இங்கிதைய றிந்திலமீ தேதுபுதி தென்றே
சிங்கவர சங்கமொடு சிந்தையு நடுங்க
அங்கிருந ரிக்குருளை கண்டவை தம்பேர்
வெங்கரட கன்றமன கன்னெனவி ளங்கும். (11)

(இ.ள்) அதைக்கேட்ட சிங்கவரசன், ஏதேது புதிதாக இருக்கின்றதே, இத்தகையதொரு முழக்கத்தை இதுவரை கேட்டதில்லையே என்று உள்ளமும் உடலும் ஒரு சேர நடுங்கியது. அப்பொழுது அங்குக் கரடகன், தமனகன் என்னும் பெயருடைய இரண்டு நரிக்குட்டிகள் வந்து சேர்ந்தன.

25. அந்தவர சன்றனத மைச்சுநரி பெறவே[1]
வந்தவவை யாதலின்ம டங்கலெனு மன்னன்
சிந்தைதளர் வுற்றதென்ன செய்தியென வேயுன்
னுந்தமன கன்கரட கன்றனை யுசாவா[2] (12)

(இ.ள்) அவை இரண்டும் சிங்கவரசனின் அமைச்சனாக விளங்கும் நரியின் குட்டிகளாதலின், சிங்க அரசனின் மனமும் நடுங்கிச் சோர்ந்ததையறிந்து இதற்கு என்ன காரணம் எனத் தமனகன் கரடகனை வினவியது.

26. கரடகன மக்கிதென காரியமி தாலே
இரைபெறுது மோபெருமை யெய்துவது முண்டோ
கருமமல தானவொரு காரியமி யற்றின்
பெருமுளைபி டுங்கியகு ரங்குபெறு பேறே. (13)

பாடல் 25. 1. அமைச்ச நரி சேய்கள்
2. கரட னைவினவுறவே

(இ.ள்) கரடகனோ, நமக்கு இதனால் ஆவதென்ன, இரை கிடைக்குமா அல்லது பெருமைதான் வருமோ? கருமமல்லாத காரியத்தில் நாம் ஈடுபடுவோமானால் ஆப்பசைத்த குரங்கு அடைந்த துன்பத்தை அடைய வேண்டிவரும் என்றது.

குரங்கு தன் குறி நசுங்கிய கதை

27. பெரியமுளை யேதுகுரங் கேதுபெறு பேறே
துரையெனவோர் தொன்னகர முண்டதைய டுத்த
மருவுமொரு கோயிலதன் மன்னியப ணிக்கோர்
பரிய மர மிருபிளவு படமுளைக டாவ. (14)

(இ.ள்) தமனகன் உடனே, ஆப்பு எது, குரங்கு எது, அது அடைந்த துன்பம்தான் என்ன ? கூற வேண்டும் எனக் கேட்க, கரடகன் பழமையான நகரம் ஒன்றையடுத்த ஒரு கோயிலில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு திருப்பணிக்குப் பெரிய மரம் ஒன்றைப் பிளப்பதற்குப் பாதி பிளந்த நிலையில் ஆப்பு ஒன்றை அறைந்து வைத்திருந்தனர்.

28. பாதிபிள வாகியொரு பாதிபிள வாமல்
ஏதமறு சோலையினி டத்ததுகி டப்ப
மாதுளவ னத்திலுறை மந்திசில வந்தே
தாதவிழ் மலர்ப்பொழிலில் தாவிவிளை யாட[1] (15)

(இ.ள்) அந்த மரம் ஒரு பாதி பிளந்து ஒரு பாதி பிளவாமல் அந்தச் சோலையில் கிடக்க, அழகு மிக்க அந்த வனத்தில் வாழ்கின்ற சில குரங்குகள் வந்து அச்சோலையில் விளையாடிக் கொண்டிருந்தன.

பா. பே.:

பாடல் 28. 1. தாண்டி விளையாட

29. அங்கொருகு ரங்குபிள வாமரவி டர்க்குள்
தங்குறியை வைத்துமுளை தன்னைவரி தசைத்தே
செங்கைகொ டெடுப்பவிடர் சிக்கெனநெ ருக்க
வன்குறிந சுங்கவுயிர் மாய்ந்தததுவென்றே. (16)

(இ.ள்) அக்குரங்குகளுள் ஒரு குரங்கு, முழுதும் பிளவாத மரத்தின் இடைவெளியில் தன் குறி அமையும்படி அமர்ந்து அடித்து வைக்கப்பட்டுள்ள ஆப்பினைத் தன் சிவந்த கைகளால் அசைத்து எடுக்க, பிளவுபட்ட மரம் ஒன்று சேர்ந்து நெருக்க, குரங்கு குறி நசுங்கி இறந்தது.

சிங்கத்தோடு வாழ்ந்து இடபம் இறந்தகதை - தொடர்ச்சி

30. காரியமலாதவொரு காரியமி யற்றிப்
பேருயிரி ழப்பதவர் பேறெனவு ரைத்தே
தேருமிரை நென்னல்சில தின்றகுறை யைத்தின்
றார்வதுந மக்குறுதி வாவெனவ ழைக்கும் (17)

(இ.ள்) எனவே தமக்குத் தொடர்பில்லாத காரியத்தைச் செய்வதன் மூலம் அவர் உயிரை இழப்பதே அவர் அடையும் பேறாகும் என்று கூறிய கரடகன், நாம் நேற்றுத் தின்று மிச்சம் வைத்த இரையை இன்று தின்று பசியார்வதே நமக்கு உரியது எனக் கூறி அழைத்தது.

31. கரடகனை நோக்கியிரை கருதுவகை நமக்கேன்[1]
அரசர்கரு மம்பெருமை யாவதுனக் கேது
திரமுடைய வரசர்பணி செய்வரதனாலே
பெரியவர்கள் நல்லவர்கள் பெறுகுவர்ச காயம் (18)

பா. பே.:

பாடல் 31. 1. தங்குகுறி வைத்துமுளை

கரடகனை நோக்கியினா கருதுவகை நமக்கேன்
அரசர்க்கு மம்பெருமை யாவையும விக்கும்
திரமுடைய வரசர்பணி செய்துலகி லதனால்
பெரியவர்கள் நண்புகொடு பெறுகுவர்ச காலம்

(இ.ள்) அவ்வாறு கூறிய கரடகனைப் பார்த்துத் தமனகன் கூறும், "நமக்குரிய இரையைக் கருதிச்செல்லும் நிலை நமக்கேன். அரசர்க்குரிய காரியங்களைச் செய்யும் பெருமை பற்றி உனக்கென்ன தெரியும். அரச காரியங்களைச் செய்வதனாலே, பெரியவர்கள் மற்றும் நல்லவர்களுடைய சகாயத்தைப் பெறுவர்.

32. மிக்கவர்கள் சீவனமெ வர்க்குமுப காரம்
திக்குநிறை கீர்த்திபெறு சீவனம தல்லால்
கொக்குமுத லானபற வைக்குலம னைத்தும்
தக்கவிரை கொள்ளுமது தான்பெருமை யன்றே[3] (19)

(இ.ள்) அரசர் பணியில் மிக்கவர்களுடைய வாழ்க்கை பிறர்க்கு உபகாரமாகவும் அமையும். மேலும் திக்கெட்டும் புகழ்ச்சி பெறும் வாழ்க்கையாகும். அஃதன்றி வாழும் வாழ்க்கை, கொக்கு முதலிய பறவை குலமனைத்தும் வெறுமே இரைதேடி உண்டு வாழும் வாழ்க்கை போன்றதே. இதில் என்ன பெருமை உள்ளது.

33. வெம்பசிகொள் சிங்கமத வேழமலதி யாதும்[1]
தம்பசித னக்குநுக ராதுமட நாய்கள்
என்புசிறி தீரமில தேனுமதை நச்சி
அன்பி னொடு கவ்வியெயி றழியினும்விடாவே. (20)

(இ.ள்) சிங்கம் பெரும் பசியுடனிருந்தாலும் யானையைக் கொன்று உண்ணுமே யல்லாது பிற எளிய விலங்குகளை நுகராது. ஆனால், நாய்களோ கிடைத்த எலும்பு சிறிதாகவும் ஈரமின்றிக் காய்ந்ததாகவும் இருப்பினும் அதை விரும்பிக் கவ்விக் கடித்து தன் எயிறு கிழிந்தாலும் அதை விடா.

பா. பே.:

பாடல் 32. 1. தக்கவியல் கொள்ளுமது தான்பெருமை யன்றே
பாடல் 33. 2. வன்பசிகொள் சிங்கதை வினையில் தியாதும்

34. ஆனைபசி கொள்ளினு மதற்குரிய பாகன்
தான முடுகி[2] யேயிரை தரத்தரவ ருந்தும்
ஈனமொடு நாயுதர மெக்கிமுக நோக்கி
வானுனிகு ழைத்துமது வாங்கியுணு மிச்சில் (21)

(இ.ள்) யானை பசித்தாலும் அதற்குரிய பாகன் தந்தால்தான் இரையை அருந்தும். ஆனால் இழிந்த நாயோ தன் வயிற்றை எக்கி முகம் பார்த்தும் வால் நுனியை அசைத்தும் மிஞ்சினால் பிறரிடமிருந்து வாங்கி உண்ணும்."

35. இந்தவகை தமனகனி யம்புதலு நாமோ
மந்திரிக ளோவெனம றுப்பவொரு கருமத்
தந்திரமொடேபுரித லாற்றலைமை யெய்தும்
சிந்தையினி லூகமிலை யேற்சிறுமை சேரும் (22)

(இ.ள்) இவ்வாறு தமனகன் கூறியதும், கரடகன் மறுத்து, "நாமோ மந்திரிகளோ" என உரைத்தது. அதற்குத் தமனகன், ஒரு காரியத்தைத் உரிய தந்திரங்களுடன் செய்வதால் நமக்குத் தலைமைப் பொறுப்புக் கிடைக்கும். சிந்தையில் நல்ல யுக்தி இல்லையெனில் அதனால் சிறுமை வந்து சேரும்.

36. நல்வினைபு ரிந்துயர்ந லம்பெறுவ தரிதே
அல்வினைபு ரிந்திழிப டைதல் மிக வெளிதே
செல்வமுட னேரிபல செய்தல்மிக வரிதே
ஒல்தியிட வேயதையு டைத்தல்மிக வெளிதே. (23)

(இ.ள்) நல்ல செயல்களைச் செய்து நற்பலன்களைப் பெறுவது அரிதானது. ஆனால் தீவினை மூலம் இழிவடைவது எளிது. பயனுடைய ஏரிகள் பல செய்வது அரிது. ஆனால் அதனை உடைப்பது மிகமிக எளிது.

பா. பே.:

பாடல் 34. 2. தான் வலிய

37. ஈரில்வரை மேலொருகல்[1] ஏற்றல்மிக வரிதே
சாறிவீழ வேயொருகல் தள்ளிவிட லெளிதே
தேறியிது பெருமையிது சிறுமையென வெண்ணிக்
கூறுபெரி யோரிவைகு றித்திடுவ ரன்றே. (24)

(இ.ள்) எல்லையற்ற மலைமேல் ஒரு கல்லை ஏற்றுவது எளிது. ஆனால் அதை மேலிருந்து கீழே தள்ளுவது எளிது. எனவே சிந்தித்துத் தேறி, இது பெருமைக்குரியது, இது சிறுமையானது என எண்ணிக் கூறும் பெரியோர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

38. ஒருகணம தானபொழு தேனுமுர வோர்கள்
பெருமைபுகழ் ஞானமுயர் பேரொடுமி ருப்பர்
கருமுகில தானகொடி[2] கட்டமுட னெச்சில்
பருகிவெகு நாளளவும் பாரினிலி ருக்கும் (25)

(இ.ள்) ஆற்றலுடையவர்கள் ஒரு கணம் ஒரு பொழுதே வாழ்வாராகிலும் பெருமை, புகழ், ஞானம் உயர்ந்த பெயருடனேயே இருப்பர். ஆனால் கரிய மேகம் போன்ற காகமோ எச்சிலைப் பருகி வெகு நாளளவும் உலகில் வாழ்ந்திருக்கும்.

39. பெருமையொடு சிறுமைவரு பெற்றியவ ரவரால்
வருவதல தியாது மிலை மன்னுமிவை தன்னில்
அருமைமிகு பெருமைவர லரசில்வருஞ் சிறுமை[3]
கரடகவெ னத்தமன கனைவினவு மதுவே (26)

(இ.ள்) வாழ்வில் பெருமையும் சிறுமையும் அவரவர் செயல்களாலேயே வருமல்லது வேறில்லை.

பா. பே.:

பாடல் 37. 1. ஏரிகரை மேலொருகல்
பாடல் 38. 2. கருமையுறு வானகொடி
பாடல் 39. 3. அருமையுணர் வோர்பெறுவ ரரசில்வரு பெருமை

இவற்றில் அருமையான பெருமையும் சிறுமையும் அரசனின் சேவையில் வருவதாகும் எனக் கரடகனிடத்தில் தமனகன் கூற, தமனகனைக் கரடகன் வினவும்..

40. இன்னவும் நீதிகளி யம்புதம னகநீ
உன்னுவகை என்னசெய்வ தென்னவுரை யென்ன
மன்னவனும் வருந்தினதை என்னவென வறிந்தே
அன்னவன்ம னத்துயர கற்றிடுவ னென்ன (27)

(இ.ள்) இவ்வாறு பல நீதிகளைச் சொல்லும் தமனகா, முடிவாக நீ என்ன எண்ணுகிறாய்? என்ன செய்யப் போகிறாய்? சொல் எனக் கரடகன் சொல்ல, மன்னனின் வருத்தத்திற்குக் காரணம் என்ன வென்று அறிந்து அதை அகற்றிடுவேன் எனத் தமனகன் கூறினான்.

41. அந்தமொழி கேட்டகர டகனரச வேற்றின்
சிந்தைமெலி வெப்படிதெ ரிந்ததுனக் கென்ன
புந்தியில்வி சாரமொடு போயினன தைத்தான்
முந்துமர சன்றிருமு கஞ்சொலிய தன்றே. (28)

(இ.ள்) தமனகன் கூறியதைக் கேட்ட கரடகன், அரசனின் மனம் தளர்வுற்றதென உனக்கெப்படித் தெரிந்தது?' எனக் கேட்க, 'மனத்தில் கவலையுடன் போவதைத்தான் அவன் முகம் சொல்கிறதே' என்றது தமனகன்.

வேறு

42. சிங்க மன்னனை யடைந்தவன் சேதியை வினவி
அங்க வன்றன தகத்துய ரகற்றியே யவன்பால்
துங்க மந்திரத் தலைமைபூண் டிவ்வனஞ் சூழு
நங்கு லங்களுக் கினியவாழ் வளிப்பனா னென்றான்

(இ.ள்) நான் சிங்க மன்னனை அடைந்து, அவன் கலக்கத்திற்கான சேதியை அறிந்து அதனைப் போக்கி,

அவன்பால் உயர்ந்த அமைச்சுப் பொறுப்பேற்று, இவ்வனத்தில் சூழ்ந்திருக்கும் நம் குலங்களுக்கு இனிய வாழ்வினை அளிப்பேன் என்றது தமனகன்.

43. வேந்த ருங்கொடு தீயும்வெவ் விடம்பொழி பகுவாய்
பாந்த ளுஞ்சரி யாதலி னன்னவன் பக்கல்
போந்து நண்புகொண் டடவிநீ புரக்குமா றென்னாம்
மோந்தி டும்படி கடிப்பது மன்னர்தம் முறையே (30)

(இ.ள்) அரசன், கொடிய தீ, கொடிய நஞ்சினையுடைய பாம்பு, ஆகிய இம்மூன்றும் ஒன்றே. தம்மைச் சேர்ந்தாரைக் கொல்லும். எனவே அத்தகையவன் அருகில் போவதும் நட்புகொண்டு இக்காட்டைக் காத்தலும் எவ்வாறாகும். மோப்பதுபோல் காட்டிக் கடிப்பது மன்னர் செயலாம்.

44. மன்ன வன்குணம் கொடிதென வழுத்தலு மதற்குத்
துன்னு பைங்கொடி யடுத்தகொம் பதனையே சூழும்
கன்னி மாதரு மன்னருந் தங்களைக் காத்தே
பன்னு மிங்கிதஞ் சொலுமவர் தங்களைப் பாரிப்பர்[1] (31)

(இ.ள்) மன்னன் குணம் கொடியது எனக் கரடகன் கூறியதும், அதற்குத் தமனகன், 'பைங்கொடியானது. தன்னை அடுத்து நிற்கும் கொம்பிலேயே படர்ந்து வளரும். கன்னியரும் மன்னரும் தங்களைக் காத்துத் தம் மனத்திற்கு இதமாகப் பேசுவோர் தம்மையே நம்புவர்' என்றது.

45. என்ன வெப்படிப் பேசுவா யிறையிடத் தெனக்குப்
பன்னு கென்னவென் வாய்நின் மழைபொழி பாரில்
துன்னும் வித்திடை முளையென உத்தரந் தோன்றும்
மன்ன வன்வினா வினுக்கெதிர் எனைநன்கு மதிக்க* (32)

பா. பே.: பாடல் 44. 1. சொல்லுபவர் வால் செய்வர் பரிவு
பாடல் 45. * இப்பாடல் சுவடியில் இல்லை. ஆனால் அச்சுப் பிரதியில் உள்ளது.

(இ.ள்) 'நீ அரசனிடத்து எதை எப்படிப் பேசுவாய் தமனகா ? எனக்குச் சொல்' எனக் கரடகன் கேட்க, 'பாரில் மழை பொழிந்ததும் விதைத்த விதைகளிலிருந்து பயிர் முளைப்பது போல் மன்னவன் வினாவிற்கு விடை க்ஷணத்தில் எனக்குத் தோன்றும்' என்றது தமனகன்.

46. என்ற லுங்கர டகன்தம னுகனுரைக் கிசைந்து
நன்று நீயவன் பக்கல்போய் அவன்குணம் நாடி
வென்றி யெய்தென நரியரி வேந்தனைச் சேர்ந்து
நின்று கைதொழ நோக்கியே சிங்கமா நிருபன் (33)

(இ.ள்) தமனகன் இவ்வாறு கூறியதும் கரடகன் தமனகனது கருத்துக் கிசைந்தது. 'நல்லது நீ அவன் பக்கம் போய் அவனது குணத்தை நாடி முயற்சியில் வெற்றியடைவாய்' என்று கூற, தமனகன் என்னும் அந்த நரி மன்னனை அணுகி நின்று கைதொழுது வணங்கியது. அதைப் பார்த்த சிங்கவேந்தன்,

47. இற்றை நாள்வரைக் காண்கிலன் தமனகா வென்ன
உற்ற காரியம் கண்டபோ தெய்துவ னுன்பால்
கொற்ற வாவெனைச் சிறியனென் றுன்மனம் கொள்ளேல்
வெற்றி யும்பெரு மையுமனக் கெய்திட விளைப்பான் (34)

(இ.ள்) 'இதுநாள் உன்னைக் காண்கிலேனே தமனகா' என்றுகூற, 'உரிய காரியம் வந்தபோது உன்னிடத்தில் வருவேன். அரசே என்னைச் சிறியன் என்று எண்ண வேண்டாம். உனக்கு வெற்றியும் பெருமையும் எய்தச் செய்வேன்.

48. அங்கு ரத்தினி லறிகுவர் முளைபயி ரதுபோல்
இங்கு நீயறி குவையினி யென்குணம் செயலால்
துங்க வாளிசை யாழ்புவி தோகையர் சான்றோர்
தங்கு நூல்கள்காப் பாற்றுவோர் தங்களாற் றழைக்கும் (35)

(இ.ள்) 'முளைவிட்டு வரும்போதே பயிரின் தன்மையை அறிவர். அது போல் என் குணத்தையும் செயலையும் இங்கு நீ அறிவாய். வாள், இசை, உலகம், மகளிர், சான்றோர், நூல்கள் ஆகியவை தம்மைக் காப்பவராலேயே தழைக்கும்.

49. நலங்கொள் மன்னவர் அடைந்தவர் தங்களு ணாடிப்
புலன்கொள் பேரறி வாளரை நம்பியே பொருந்தில்
இலங்கு நீதிகள் இயற்றுவ ரவரர செங்குந்
துலங்கு மென்னலு மனமகிழ்ந் தரசனுஞ் சொல்வான் (36)

(இ.ள்) 'நலமிக்க மன்னர்கள் தம்மை யடைந்தவர் தங்களுள் நல்ல பலனறிவுடைய பேரறிவாளர்களை நாடி, அவரை நம்பி அவருடன் பொருந்தியிருந்தால் விளங்கித் தோன்றும் நீதியுடைய ஆட்சியை இயற்றுவர், அவர் தம் அரசு எங்கும் விளக்கம் பெறும்' என்று சொன்னதும் அரசன் மனமகிழ்ந்து சொல்வான்.

50. உரிமை மந்திரிக் குமரநீ யாகலி னுனக்குப்
பெருமை மந்திரிப் புத்திகள் வந்திடப் பெற்றாய்
வருக வென்றரு கழைத்துநம் பிக்கையும் வழங்கி
ஒருமை யாகநங் காரிய மியற்றென வுரைக்க (37)

(இ.ள்) 'நீ என்னுடைய அமைச்சனின் மகனாதலால் உனக்குப் பெருமையும் மந்திரிக்குரிய புத்தியும்

பா. பே.: பாடல் 50, 51, 52, 53, 55 ஆகிய பாடல்கள் சுவடியில் இல்லை. அச்சுப்பிரதியில் உள்ளது. 54ஆம் எண் பாடல் மட்டும் சுவடியில் உள்ளது. மாறாக இந்த இடத்தில் அமையும் வகையில் சுவடியில் சில அடிகள் உள்ளன.

நான் விளங்குவே னெவதன் விடைகொடு நடந்து
சஞ்சீவகன் றானே துங்க துங்க மந்திரி நமக்கென
யாவையும் துறக்க

என்ற பகுதி மட்டும் 50 என்ற எண்ணுடன் உள்ளது.

வரப்பெற்றாய். வருக !' என்று அதனை அருகில் அழைத்து நம்பிக்கையும் வழங்கி, 'நம் மனத்திற்கு இயைபாக வரும் செயல்களைச் செய்க' என்றது.

51. அந்த மன்னனை நோக்கிநின் னகத்தொரு துளக்கம்
வந்த போலுநீ யுரையென மன்னனிவ் வனத்தில்
எந்த நாளநா மறிகிலா முழக்கமொன் றெழுந்த
இந்த மாமுழக் கென்னெனத் துளங்கிய திதயம் (38)

(இ.ள்) அந்த சிங்கவரசனை நோக்கி, 'நின் மனத்தில் ஒரு கலக்கம் வந்தது போல் தோன்றுகிறது. அதனை சொல்வாயாக' எனக் கூற, சிங்கவரசன் கூறும். 'இவ்வனத்தில் என்றும் நாம் அறியாத முழக்கம் ஒன்று எழுந்தது. அது என்ன என்பதிலேயே என் மனம் கலங்கியது' என்றது.

52. முழக்கிற் கேற்பதா யிருக்குமன் றோமுழங் குயிரும்
வழுக்கி வீழ்கையில் ஊன்றுகோ லென்னநீ வந்தாய்
இழுக்கம் மாறநீ எனக்கதை யுணர்த்தென வியம்பத்
தழைக்கு மன்பொடு தமனக னொருகதை சாற்றும் (39)

(இ.ள்) 'முழக்க ஒலிக்கேற்பவே முழங்குகின்ற உயிரும் இருக்குமன்றோ, வழுக்கி வீழ்கையில் உதவும் ஊன்றுகோல் போல நீ வந்தாய். என்னுடைய இந்த கலக்கம் மாறும் வகையில் நீ அதை அறிந்து வந்து உணர்த்துவாய்' என்று சொல்ல, பெருகும் அன்போடு தமனகன் ஒரு கதை சொல்லும்.

பேரொலி கேட்டு அஞ்சிப் பேரிகை கண்ட கதை

53. நரியொன் றெய்திய பசியினா லிரைதனை நாடித்
திரியும் போதச தியிலொரு பேரொலி செவிகேட்
டுரிய நெஞ்சகந் துணுக்கென வச்சமுற் றோய்ந்து
தெரிவ மீதெனச் சென்றது திடங்கொடு பின்னர் (40)

(இ.ள்) 'நரி ஒன்று மிகுந்த பசியினால் இரை தேடித் திரியும் போது தற்செயலாக ஒரு பெரிய ஒலி கேட்டது. அதைக் கேட்டு நெஞ்சம் துணுக்குற்று அச்சம் கொண்டது, பின் அச்சம் தெளிந்து, மனம் திடம் கொண்டு இவ்வொலி ஏதெனச் சென்றறிவோம் எனக் கருதிச் சென்றது.

54. அன்ன வோரிதான் சிறிதுதூ ரத்தமர்க் களம்போய்ப்
பின்ன ரோர்மரத் தடியுறு பேரியை நோக்கி
முன்னர் மேவுமத் தோலையுங் கோலையு முறையால்
உன்னி யேதன துளத்தினி லுணர்ந்ததிவ் வாறு. (41)

(இ.ள்) அந்த நரி சிறிது தூரம் ஒலி கேட்ட இடம் நோக்கிப் போய்ப் பின்னர் ஒரு மரத்தடியில் ஒரு பேரிகையைப் பார்த்தது. அந்தப் பேரிகையில் கட்டப்பட்ட தோலையும் அதை அடிக்கும் கோலையும் கவனித்துப் பார்த்து இவ்வாறு உணர்ந்தது.

55. தங்கு மிம்மரச் சினையினிற் றாழ்தகோ டொன்று
பொங்கு காற்றினாற் றாக்கலாற் பொம்மெனு மொலிதான்
இங்கு மேவுமிப் பேரியி லெழுந்துள தென்று
சிங்க மன்னநீ யஞ்சுகை தகாதெனச் செப்பி (42)

(இ.ள்) இந்த மரத்தின் கிளை ஒன்று காற்றினால் அசைந்து பேரிகையில் தோலில் மோதுவதால் இப்பேரிகையிலிருந்து எழுந்ததுதான் பொம்மெனும் இவ்வொலி என்று உணர்ந்தது. எனவே சிங்கவரசே நீ அஞ்சுதல் தகாது' எனச் சொன்னது.

56. சென்று நானதை விரைவினிற் றெரிந்திவண் மீள்வே
னென்ற தன்விடை கொண்டுசஞ் சீவக வெருதை
நன்று கண்டுநண் புற்றுமீண் டரசனை நண்ணி
ஒன்று பேரொலிக் கேற்றதவ் வுயிரென வுணர்த்தி (43)

(இ.ள்) நான் சென்று தெரிந்து விரைந்து இங்கு வருவேன் என்று அதனிடம் விடைபெற்றுக் கொண்டு சென்று, சஞ்சீவகன் என்னும் எருதினைக் கண்டு, அதனுடன் நட்புகொண்டு, மீண்டும் வந்து அரசனை அணுகி, முன்சொன்ன பேரிகையைப் போன்றதே அவ்வுயிர் என்றது.

57. நினது நட்பினை விரும்பிய ததுவென நிருபன்
அனைய தேலதை யழைத்துவா வென்னலு மதுபோய்த்
தனைநி கர்த்திடு மெருதினைத் தலைவன்முன் விடுத்தே
இனிய தண்பொடு மிருந்திட விருத்திய தன்றே (44)

(இ.ள்) உன் நட்பினை அது விரும்பியது என்று தமனகன் கூற, அரசன் அதை அழைத்து வா, என்றது. உடன்அந்த நரி போய் அந்த எருதினைத் தலைவன் முன் கொண்டு வந்து நிறுத்தியது.

58. சிங்க மன்னனு மிடபமு முயிரெனச் சிறந்தே
அங்கி ருந்தர சாளுநாள் பழையதன் னமைச்சர்
தங்க ணண்பெலா மறந்துசஞ் சீவகன் றனையே
பொங்கு மந்திரி யெனக்கொளப் போயது நெடுநாள் (45)

(இ.ள்) சிங்க மன்னனும் இடபமும் உயிர் நட்பினராகி அந்தக் காட்டிலிருந்து அரசாளும் நாளில் பழைய தன்னுடைய அமைச்சர்களுடைய நட்புரிமையை யெல்லாம் மறந்து, சஞ்சீவகனை மட்டுமே தன் அமைச்சனாகச் சிங்கவரசன் கொள்ள, நாட்கள் பல சென்றன.

59. பரிச னங்களு மந்திரிக் கூட்டமும் பார்த்தே
அரச னுந்தனை அடைந்தநம் மிடத்திலன் பற்றான்
இரைய ருந்துவ தேதுநா மினியென விளங்கக்
கரட கன்றனை நோக்கியே தமனகன் கழறும் (46)

(இ.ள்) அரசனுடைய பரிசனங்களும் அமைச்சர் களும் இந்த நிலையைப் பார்த்து, அரசனும் தன்னைச்

சார்ந்தடைந்த நம்மிடத்தில் பற்றிலனானான். எனவே இனி நமக்கு அருந்துவதற்கு இரையும் கிடைப்பது அரிதாகிவிடும் என்று உணர்ந்திருந்தன. இதனை உணர்ந்த தமனகன் கரடகனை நோக்கி கூறியது..

60. காட்டி லேதனித் திருந்தசிங் கத்துடன் கலந்த
மாட்டை வங்கண மாகநாங் கூட்டிய மாண்பு
கோட்டு வெங்களிற் றானைதன் மத்தகங் கொத்த
தோட்டி பாகனுக் கீந்தவா றாமெனச் சொல்லி (47)

(இ.ள்) காட்டிலே தனித்திருந்த சிங்கத்துடன் மாட்டினை நாமே கொண்டுவந்து நட்பினதாக ஆக்கினோம் இச்செயல் பெருந்தந்தங்களையுடைய யானை தன் மத்தகத்தைக் குத்துவதற்குப் பாகனிடம் தானே அங்குசத்தைக் கொடுத்தது போன்றதாகும் எனச்சொல்லி..

தமக்குத் தாமே கேடு செய்துகொண்ட கதை

61. முன்பு தங்களாற் றாங்களே கெட்டனர் மூவர்
என்ப தோர்கதை உண்டெனத் தமனக னியம்ப
அன்பொ டக்கதை யாதெனக் கரடகன் வினவச்
சம்பு வோடுசந் யாசிதூ தியதெனச் சாற்றும் (48)

(இ.ள்) முன்பொரு காலத்தில் தங்களால் தாங்களே கெட்ட மூவர் பற்றியதோர் கதை உண்டு எனத் தமனகன் கூறியது. அது கேட்ட கரடகன் அன்போடு, அக்கதை என்னவென்று தமகனை கேட்டது. அது நரி, சந்நியாசி மற்றும் தூதி ஆகிய மூவர் பற்றியது எனக் கூறியது.

62. சன்னி யாசியோர் தேவசன் மாவவன் றானே
முன்னி யாசகத் தனேகநாள் தேடிய முதலைத்
துன்னு கந்தையுட் பொதிந்துகை விடாமல்வைத் திருக்கும்
அன்ன வாறொரு வீடனெனு மந்தண னறிந்தே[1] (49)

பா. பே.: பாடல் 62. 1. அன்ன செய்தியாஷாடபூதியுமுரைத் தறிந்து

(இ.ள்) தேவசன்மா என்றொரு சந்நியாசி, தான் பல காலமாகத் தேடிச் சேர்த்த பணத்தினைத் தன்னுடைய கந்தைத் துணியில் பொதித்து முடித்து வைத்திருந்தான். அப்பொதியை எப்பொழுதும் தன் கையிலிருந்து விலக்காமல் வைத்திருந்தான். அதை விடன் என்னும் ஓர் அந்தணன் அறிந்தான்.

63. சந்த நுந்திரு டாமல்நாம் சன்னிய சியின்மேற்
கந்தை யொன்றினை எவ்வகை யாகிலுங் கவர்ந்தால்
நந்தம் வேசியர்க் கனேகநாள் நடக்குமென் றெண்ணி
புந்தி கூர்ந்தொரு பிரமசா ரியனெனப் பொருந்தி (50)

(இ.ள்) அதை அறிந்துகொண்ட விடன், நான் வாழ்நாள் முழுவதும் முயன்று திருடிக்கொண்டிராமல் சந்நியாசியின் கந்தல் மூட்டை ஒன்றை மட்டும் எப்படியாவது கவர்ந்து கொண்டால், நம் வேசியருக்குக் கொடுக்கப் பல நாள் வரை போதுமானதாகும் என்றெண்ணிச் சிந்தித்து ஒரு பிரம்மச்சாரி போன்று வேடமணிந்து சந்நியாசியிடம் சென்றான்.

64. அன்ன வன்றனைப் பணிந்த டியனென் றனுக்கு
மன்னு நற்கதி பெறுவழி யருளென வழுத்திப்
பன்னு மிங்கிதத் தொடுபணி விடைபல வியற்றும்
அன்ன நாளிலோ ரந்தண னமுதிட வயின்றே (51)

(இ.ள்) அவன் அந்தச் சந்நியாசியைப் பணிந்து, அடியேன் நற்கதி பெறும் வழியை அருள வேண்டும் எனப் பணிவாகவும், இங்கிதமாகவும் பேசிப் பலவிதப் பணிவிடைகளையும் செய்தான். ஒருநாள் ஓரந்தணன் இவர்களுக்கு உணவிட அதை உண்டபின்...

65. இருவ ரும்பெரு பெருவழி நடந்தன ரிவன்றான்
ஒருது ரும்புதன் தலைமிசைக் கொண்டுநெஞ் சுருகி
அரிய வேதியன் மனைத்துரும் பொட்டிவந் ததற்குப்
புரியு மாறெனை எனத்துரும் பெடுத்தவன் போனான் (52)

(இ.ள்) இருவரும் நீண்ட தூரம் நடந்து சென்றனர். அப்பொழுது விடன் தன் தலையில் ஒரு துரும்பு இருக்கக் கண்டு, மனம் உருகி, அந்த நல்ல வேதியனின் வீட்டுத் துரும்பு தன் தலையுடன் ஒட்டி வந்ததே. இதற்கு நான் என்ன செய்யப் போகிறேன் என அத்துரும்பை எடுத்துக்கொண்டு உணவளித்த வேதியன் வீட்டிற்குச் சென்றான்.

66. அந்த வேதியன் மனைத்துரும் பவனகத் துய்த்தே[1]
வந்த சீடனை நம்பியே தேவசன் மாவும்
கந்தை யுமவன்[2] கைகொடுத் தொருகுளக் கரையில்
முந்து நீர்ச்சவு சாதிகள் முடித்தலு மயங்கும் (53)

(இ.ள்) அந்த வேதியன் வீட்டுத் துரும்பை அவன் வீட்டிலேயே திரும்ப விட்டுவந்த சீடனை முழுமையாக நம்பிய தேவசன்மா, தன் கையிலிருந்த கந்தையை அவன் கையில் கொடுத்துவிட்டு அருகிருந்த குளக்கரைக்குச் சென்று நீரில் மூழ்கிக் குளித்துத் தூய்மை செய்து திரும்பினான்.

67. பொருகி டாவிரண் டங்கனம் பாய்ந்திடப்பொழியுங்
குருதி பாரினில் வீழ்ந்தது பருகிடக் குறுகி
நரிய னார்நடுப் பட்டுயிர் இழந்தது நாடிப்
பரிவி னோடவன் பார்த்துநின் றேகின னதற்குள் (54)

(இ.ள்) வழியில் இரண்டு ஆடுகள் சண்டையிட்டுக் கொண்டிருக்க அதனால் வழியும் குருதி நிலத்தில் விழ

பா. பே.:

பாடல் 65 1. இப்பாடல் அச்சுப் பிரதியில் வேறு மாதிரி உள்ளது.
இருவ ரும்மொரு பெருவழி நடத்தன ரிவன்றன்
ஒருது ரும்புதன் தலைமிசைக் கொண்டுண வளித்தோற்
குரிய நன்மனைத் துரும்பிதோ ஒட்டிவந் ததுபார்
குரவ வாங்கதைச்செலுத்துவ னென்றுகொண் டோடி. (4)

என உள்ளது.

பாடல் 66. 1. அந்த வீட்டிலுய்த் தவனென மறைந்திருந் ததன்பின்
2. கந்தை யன்னவன்

அதனைப் பருகிட வந்த நரி இரு ஆடுகளுக்கும் இடையில் பட்டு உயிரிழந்தது. இதனைப் பரிவினோடு பார்த்து நின்றிருந்துவிட்டு தேவசன்மா திரும்பினான். அதற்குள்..

68. இந்த வேளைபோ லெய்தரி தென்னவச் சீடன்
கந்தை யைக்கொடு நடந்தொரு காட்டினிற் கரந்தான்
சிந்தை நைந்துசன் யாசியுந் தேடியோர் நகரில்
தந்து வாயன்வீட் டிடையிராத் தன்னில் வந்தடைந்தான் (55)

(இ.ள்) விடன், இதுவே நல்ல தருணம் இனி இதுபோலொரு நேரம் நமக்கு வாய்க்காது என்று கருதித் தன் கையிலிருக்கும் கந்தையோடு விரைந்து நடந்து ஒரு காட்டினுள் சென்று மறைந்தான். திரும்பிய சந்நியாசி மனம் நைந்து சீடனைப் பல இடங்களிலும் தேடிக்கொண்டு ஒரு நகரை அடைந்து தந்துவாயன் என்பவனுடைய வீட்டருகில் இரவு நேரத்தில் வந்து சேர்ந்தான்.

காமத்தால் கெட்ட காரிகையர் கதை

வேறு

69. தேடிய பொருளி ழந்த
தேவசன் மாதன் நெஞ்சம்
வாடியங் கிருப்பத் தந்து
வாயன்றன் மனைவி யோடே
கூடிய சோர னான
கொழுநன்றான் வந்தா னென்றே
நாடிய தூதி யான
நாவிதன் தேவி சொன்னாள். (56)

(இ.ள்) தான் தேடித்சென்ற பொருளை இழந்ததேவசன்மா மனம் வாடி அவ்வீட்டிடையில் தங்கியிருந்தான். அப்பொழுது தந்துவாயனுடைய மனைவியின் கள்ளக் காதலன் வந்துள்ளான் என்று அவளுடைய ரகசிய தாதியான நாவிதன் மனைவி-யானவள் வந்து அவளிடம் சொன்னாள்.

70. கேட்டலுந் தந்து வாய்ச்சி
கெழுமுதன் கொழுநன் றங்கள்
வீட்டிலில் லாதி ருக்கும்
வேளைபார்த் தவள்பின் செல்ல
கோட்டிகொள் தந்து வாயன்
குறுகிடக் கண்டு நெஞ்சில்
வாட்டமாய்த் திரும்பி வீட்டில்
வந்தன ளவனுங் கண்டான். (57)

(இ.பொ.) நாவிதன் மனைவி கூறியதைக் கேட்ட தந்துவாய்ச்சி தன் கணவன் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து அவளுடன் சென்றாள். அச்சமயம் அவளுடைய கணவன் திரும்பி வந்தான். அதைப் பார்த்த தந்துவாய்ச்சி ஏமாற்றத்துடன் வீட்டிற்குத் திரும்பினாள். எங்கோ சென்று வரும் தன் மனைவியைத் தந்துவாயன் பார்த்துவிட்டான்.

71. கண்டவன் கோப மெல்லாம்
கருத்தினி லடக்கிக் கொண்டே
உண்டவன் பின்பு சொல்லா
உதாசீனம் பலவுஞ் சொல்லி
கண்டவர் வெருவத் தூணிற்
கட்டிவைத் தடித்து றக்கங்
கொண்டனன் தூதி யாளுங்
குறுகின ளிதனைக் கண்டாள்[1] (58)

(இ.பொ.) தன் மனைவியின் செயலைப் பார்த்துத் தந்துவாயன் தன் கோபத்தையெல்லாம் மனத்தில் அடக்கிக்கொண்டு சாப்பிட்டபின் பலவகையாலும் அவளைப் பழித்துப் பேசி, கண்டார் அஞ்சும்படி அவளை

பா. பே.: 71. 1. இப்பாடல் அச்சுப் பிரதியில்
கண்டவன் கண்கள் சேப்பக் கடுஞ்சினங் கொடுசெந் தீயை
உண்டவன் போலச் சீறி யிதாசீனம் பலவும் வாயால்
விண்டவன் றன்னைத் தூணில் வெருவுறக் கட்டித் தூக்கங்
கொண்டனன் தூதி தானுங் குறுகிநின் றிதனைக் கண்டாள்.

ஒரு தூணில் கட்டிவைத்து அடித்தான். பின் களைத்து உறங்கிவிட்டான். அப்பொழுது தூதி மீண்டும் வந்தவள் தந்துவாய்ச்சி கட்டப்பட்டிருப்பதைக் கண்டாள்.

72. என்னைநீ கட்டி வைத்தே
யேகியங் கவனைக் கூடிப்
பின்னைவா வென்று தூதி
பேசினள் கட்டி வைத்து
மின்னனாள் தந்து வாய்ச்சி
விளக்கையு மவித்துப் போட்டே
அன்னவ னருகிற் சென்றே
அணைந்துபோ கித்தி ருந்தாள். (59)

(இ.ள்) தூதியான நாவிதன் மனைவி தந்துவாய்ச்சியைப் பார்த்து, "என்னை நீ கட்டி வைத்துவிட்டு, நீ சென்று உன் காதலனுடன் கூடியிருந்து பின் வா" என்று கூறினாள். அதன்படி மின்னலைப் போன்ற மேனியளான தந்துவாய்ச்சி தூதியைக் கட்டி வைத்து விளக்கையும் அணைத்துவிட்டு வீட்டை விட்டுச் சென்று தன் காதலனுடன் சேர்ந்து அவனை அணைத்து மகிழ்ந்திருந்தாள்.

73. விழித்தனன் தந்து வாயன்
வேண்டிய வாறு வைதே
பழித்தன னதற்குச் சற்றும்
பகர்ந்திடா திருத்த தாலே
கழித்தன னுறையைச் சூரிக்
கத்தியைக் கொண்டு கற்பை
அழித்தவள் மூக்கைப் பற்றி
யரிந்துபோட் டுறங்கும் போதில் (60)

(இ.ள்) இரவில் திடீரென விழித்தெழுந்தான் தந்துவாயன். மீண்டும் தன் மனைவியை வேண்டிய மட்டும் வைது, பழித்தான். அதற்கும் அவள் எந்த பதிலும்

கூறாதிருக்கவே, வெகுண்ட அவன் தன் சூரிக் கத்தியை உறையிருந்து எடுத்து கற்பிழந்த தன் மனைவியின் மூக்கை அறுப்பதாக நினைத்து தூதியின் மூக்கை அறுத்துப் போட்டுவிட்டு உறங்கினான்.

74. தந்துவா யன்ம டந்தை
தான்சுகம் கண்டு மெள்ள
வந்தனள் தூதிக் குற்ற
வண்ணங்கண் டவளை விட்டு
முந்துற வவன்வி சித்த
முறைமைதப் பாள்போல் நின்றாள்[1]
அந்தவே ளையில் விழித்தா
னவனையே பழிக்க லுற்றாள் (61)

(இ.ள்) தந்துவாயனின் மனைவி காதலனுடன் சுகித்திருந்துவிட்டு மெள்ள வீடு திரும்பினாள். வந்தவள் தூதிக்கு நேர்ந்ததைக் கண்டு அவளை விடுவித்தாள். பின் தன்னை அவன் முன்பு கட்டிவைத்தது போன்றே கட்டப்பட்டு அதிலிருந்து மீளாதாற்போல நின்றாள். அந்த நேரத்தில் தந்துவாயன் மீண்டும் கண் விழித்தான். இப்பொழுது தந்துவாய்ச்சி தன் கணவனைப் பழித்துப் பேசினாள்.

75. ஐயவோ பாத காநீ
யரிந்தமூக் கும்வ ளர்ந்து
துய்யவ ளானே னென்றன்
துகளறு கற்பி னாலே
வெய்யவுன் றன்னைப் போல
வேறொரு வரையான் தீண்டில்
வையகம் பழிக்கு மெங்கள்
மரபுக்கு மீன மாமே (62)

பா. பே.: பாடல் 74. 1. முந்தவன் கட்டிவைத்த முரைமைதப் பாள்போல் நின்றாள்

(இ.ள்) 'ஐயகோ பாதகனே, நீ அரிந்த இந்த மூக்கு என் கற்புத் திறத்தால் மீண்டும் வளர்ந்து நான் தூயவளானேன். கோபித்திருக்கும் உன்னைத் தீண்டுவது போல் வேறொருவனை நான் தீண்டினால் இந்த உலகம் பழிக்காதா. அது எங்கள் பெண்குல மரபிற்கே இழிவானதாகுமே' என்றாள்.

76. என்னலு மவன்ப யந்தே
எழுந்திருந் தவளை நோக்கித்
தன்னைத்தான் பழித்துக் கொண்டு
தாளிணை தன்னில் வீழ்ந்தே
அன்னவள் கட்டும் விட்டே
யாரவே புல்கி மோந்து
மின்னிழை பொறுப்பா யென்று
வேண்டிக்கொண் டவளைச் சேர்ந்தான்[1] (63)

(இ.ள்) என்று தந்துவாய்ச்சி கூறவும் அவன் பயந்து எழுந்து, அவளுடைய நிலையைப் பார்த்துத் தன் செயலுக்குத் தன்னைத்தானே பழித்துக்கொண்டு, அவளைக் கட்டியுள்ள கட்டுகளை அவிழ்த்து அவளை ஆரத் தழுவிக் கொண்டான். மின்னும் அணிகலன்களை அணிந்தவளே என் செயலுக்கு என்னை மன்னிப்பாய் என்று அவளை வேண்டி கேட்டுக்கொண்டு அவளோடு சேர்ந்திருந்தான்.

77. அரிந்துமுன் விழுந்த மூக்கை
யவள்கையி லெடுத்துக் கொண்டே
விரைந்துபோய்க் கணவன் தூங்கும்
வீட்டினிற் படுத்துக் கொண்டாள்
இருந்தனள் விசார மிட்டே
யிவனுக்கென் சொல்வே மென்று
பொருந்திய கங்குற் போது
புலர்ந்துபுள் ளெழுந்த தார்த்தே. (64)

பா. பே.: பாடல் 76. 1. மின்னிழை பொறுப்பா நீயென் பிழையென
வேண்டிக் கொண்டான்

(இ.ள்) அரிந்து விழுந்த மூக்கை எடுத்துக் கொண்டு சென்ற தூதி விரைவாகத் தன் கணவன் தூங்கிக் கொண்டிருக்கும் வீட்டிற்குச் சென்று படுத்துக்கொண்டள். மூக்கறுபட்ட தன் நிலைக்குத் தன் கணவனிடம் என்ன விளக்கம் சொல்வது எனக் கவலை கொண்டவளாக இருக்க, இரவு நீங்கிப் பொழுது புலர்ந்தது. பறவைகள் எழுந்து ஆரவாரம் செய்தன.

78. நாவிதன் எழுந்து முன்றில்
நண்ணியே கத்திக் கூட்டைத்
தாவெனக் கத்தி யொன்று
தன்னையே எடுத்துப் போட்டாள்
தேவிமேற் கோப மாகித்
திரும்பியங் கவனும் போட்டான்
பாவிநீ கெடுத்தாய் மூக்கைப்
பதைத்திடச் சிதைத்தா யென்றாள் (65)

(இ.ள்) காலை நேரத்தில் நாவிதன் எழுந்து வீட்டு முன்றிலிற்கு வந்து தன் கத்திக் கூட்டினை எடுத்துத் தாவென மனைவியைக் கேட்டான். அவள் ஏதோவொரு கத்தியை எடுத்து அவனிடம் போட்டாள். இதனால் கோபமடைந்த நாவிதன் அந்தக் கத்தியைத் திரும்பி அவள் மேல் எறிந்தான். உடனே அவள் "பாவி நீ காரியத்தைக் கெடுத்தாயே. நான் பதைக்கும்படிக் கத்தியால் என் மூக்கை அறுத்துவிட்டாயே" என்று அலறினாள்.

79. கையினி லெடுத்த மூக்குங்
கத்தியுங் காட்டிக் காட்டி
ஐயகோ விந்த வூரில்
அரசன்கே ளானோ வென்ன
வெய்யவன் தூதர் கண்டு
வீசித்துநா விதனைக் கொண்டே
தையலும் பின்னே செல்லத்
தரணிகா வலன்முன் போனார். (66)

(இ.ள்) அறுந்து விழுந்த மூக்கையும் கத்தியையும் சுட்டிக் காட்டி, “ஐயகோ இந்த ஊரில் இக் கொடுமையை அரசனும் கேட்க மாட்டானோ” என்று கதறினாள். அதைக் கேட்ட அரசனின் தூதர்கள் வந்து நாவிதனைக் கட்டிக் கொண்டு நாவிதன் மனைவி பின் வர அரசனிடம் சென்றனர்.

80. மன்னவன் அவையில் மிக்க
மந்திரி மாரும் நீயார்
உன்னைமூக் கரிந்த வாரே
துரையெனப் பரத்தை வீட்டில்
பொன்னணி மார்பா போனான்
புலந்துநா னிருந்தே னையா[1]
என்னையோர் கத்தி யாலே
எறிந்துமூக் கரிந்தா னென்றாள். (67)

(இ.ள்) மன்னனின் அவையில் அமைச்சர்கள் அவளைப் பார்த்து, “யாரம்மா நீ? உன் மூக்கு எவ்வாறு அறுபட்டது எனக் கூறு” என்றனர். அவளும் பொன் அணிகலன்களை அணிந்த மார்பையுடைய அரசே, என் கணவனான இவன் பரத்தையரிடம் சென்று வந்தான். அதற்கு நான் ஊடல் கொண்டிருந்தேன். அதற்கு இவன் ஒரு கத்தியால் எறிந்து என் மூக்கை அறுத்துவிட்டான் பாவி என்றாள்.

81. நாவிதன் தன்னைக் கேட்க
நானொன்று மறியே னென்றான்
நீவிரிங் கிவனைச் சூல
நிலைகழு வேற்று மென்றான்
கூவியங் கவளை மூக்கைக்
குறைத்தவன் வேறே யொன்று
தேவசன் மாவி தெல்லாம்
செப்பினான் வலிய வந்தே. (68)

பா. பே.: பாடல் 80. 1. புலந்திருந் தேனிப் பாவி

(இ.ள்) இது குறித்து அமைச்சர்கள் நாவிதனைக் கேட்க, அவன், நான் எந்தப் பாவமும் அறியேன். என்றான். அதனை ஏற்காத மன்னன் நீங்கள் இவனை சூலம் போன்ற கழுவில் ஏற்றுங்கள் எனக் காவலர்க்கு ஆணையிட்டான். அப்பொழுது தேவசன்மா தானே முன்வந்து, "இவள் மூக்கை அறுத்தவன் வேறொருவன்" என்று கூறி நடந்ததனைத்தையும் விளக்கிச் சொன்னான்.

82. தேவசன் மாவி னாலே
தெளிந்துமந் திரியோ டாய்ந்து
நாவிதன் தனைவி டுத்து
நரபதி தந்து வாயன்
தேவியை முலையும் மூக்கும்
சிதைத்தனன் தூதி யான
பாவியைப் புரியைச் சுற்றிப்
படரொளி கொளுத்தி விட்டான் (69)

(இ.ள்) தேவசன்மா கூறியதாலே உண்மையை அறிந்த மன்னன் மந்திரிகளுடனே ஆராய்ந்து, நாவிதனை விடுவித்துவிட்டு, தந்துவாயன் மனைவியின் மூக்கையும் முலையையும் சிதைத்தனன். தூதியாக வந்த நாவிதன் மனைவியான பாவியை வைக்கோல் புரியைச் சுற்றி தீயிட்டுக் கொளுத்தினான்.

சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை - தொடர்ச்சி

83. இவ்வகை சொல்லக் கேட்டே
கரடக னிதற்கு நாம்செய்
துய்வகை யேதிங் கென்னத்
தமனக னுபாயத் தாலே
அவ்விரு வரையும் வெவ்வே
றாகநட் புடைத்துக் காட்டைக்
கைவச மாக்கிக் கொள்ள
கருதுவ துறுதி யென்றே. (70)

(இ.ள்) இவ்வாறு தமனகன் கூறக்கேட்ட கரடகன் இதற்கு நாம் என்ன செய்து உய்வடையலாம் என்று கேட்க, தமனகனும், ஒருபாயத்தாலே அவ்விருவரையும் வெவ்வேறாக நட்பை உடைத்துக் காட்டை நம் கைவசமாக ஆக்கிக் கொள்ளும் வகையைக் கருதுவது உறுதி என்றது.

84. நந்திய காரி யத்தை
நாடியே யெடுத்துக் கூட்டல்
வந்துறு மிடரைத் தம்பால்
வராமலே தடைப்ப டுத்தல்
முந்துற வருஞ்செல் வத்தை
முயற்சியால் தேடிக் கொள்ளல்
மந்திர விசார மூன்றும்
வல்லவ னமைசா மென்றான் (71)

(இ.ள்) நினைத்த காரியத்தை நாடி எடுத்து முடித்தல், அவ்வகையில் வரும் இடர்களைத் தம்பால் வராமல் தடுத்தல், வரவேண்டிய செல்வத்தை உரிய முயற்சியால் தேடிக்கொள்ளல், ஆகிய இம்மூன்று மந்திர விசயங்களிலும் வல்லவன் அமைச்சனாவான்.

85. ஏகமா யிருக்கும் சிங்க
விடபநட் புடைக்க நம்மால்
ஆகுமோ வென்ன வோவோ
அருமையோ வுபாயத் தாலே
காகமுன் னரவைக் கொன்ற
கதையறி யாயோ வென்ன
நாகமோர் காகத் தாலே
¼ ÀÚ¢ © °Û Ú P¢ Çz NPê L [1] (72)

(இ.ள்) ஒற்றுமையாக இருக்கும் சிங்கம் இடபம் ஆகிய இரண்டினது நட்பை உடைக்க நம்மால் ஆகுமோ

பா. பே.: பாடல் 85. 1. தாகமோ டுரைந யென்னத் தமனகன்
சொல்ல லுற்றான்

எனக் கரடகன் வினவ, தமனகன், "ஓ ! ஓ! இது என்ன அரிய செயலோ தந்திரத்தாலே முன்பு காகம் பாம்பைக் கொன்ற கதையை நீ அறிய மாட்டாயோ" என்று கேட்டது. உடனே கரடகன் நாகம் காகத்தால் அழிந்த கதை ஏது ? என்று கேட்டது.

காகம் நாகத்தைக் கொன்ற கதை

86. கோடுறு கிளையிற் காகம்
கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
கதுபெறு முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி. (73)

(இ.ள்) கிளைகள் மிகுந்த ஒரு மரத்தில் காகம் ஒன்று கூடுகட்டிப் பலகாலம் தன் பெட்டைக் காகத்தோடு வாழ்ந்து வந்தது. அந்த பெரிய மரத்தின் பொந்தொன்றில் படமெடுத்து ஆடும் கருநாகம் ஒன்று தங்கியிருந்தது. காகம் இடும் முட்டைகளை எல்லாம், கருநாகம் வந்து குடித்துவிட்டுச் சென்றுவிடும். இதனால் காகம் மனம் நொந்து வருந்தியது.

87. தன்னுயிர்ப் பாங்க னான
சம்புக னருகே போயிங்
கென்னசெய் குவனா னென்ன
இதைக்கொல வரிதோ நீபோய்
மன்னவன் தேவி யாடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
போடுக பொந்தி லென்ன (74)

(இ.ள்) காகம் தன் உயிர் நண்பனான நரியிடம் சென்று, தன் துன்பத்தைக் கூறி, இதற்கு நான் என்ன

செய்வது என வருந்திக் கேட்டது. நரியும் 'இப்பாம்பைக் கொல்வதோ அரிய செயல். கவலைப்படாதே. நீ போய் மன்னன் மனைவி நீராடும் குளியலறைக்குச் சென்று புகுந்து அவளுடைய பொன் மாலை ஒன்றைக் கவர்ந்து வந்து நாகம் இருக்கும் பொந்தில் போடுக' என்று கூறியது.

88. காகமப் படியே செய்யக்
காவல னேவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
யீர்த்தன ரீரும் போதில்
நாகமங் கிருந்து சீற
நறுக்கின ரிருதுண் டாக
ஆகையா லுபாயத் தாலே
யழிப்பதிங் கரிதோ வென்னும்[1] (75)

(இ.ள்) நரி கூறியபடியே காகமும் செய்தது. காகத்தைத் துரத்திவந்த காவலர்கள் அந்தப் பெரிய மரத்தின் பொந்தினை அழித்தனர். அவ்வாறு அழிக்கும் போது அதிலிருந்த நாகம் சீறியது. உடனே காவலர்கள் அதனை இரண்டு துண்டுகளாக நசுக்கிப் போட்டனர். எனவே தந்திர உபாயத்தாலே அழிப்பதென்பது இங்கு அரியதாகுமோ என்றது.

சிங்கத்தை முயல் கொன்ற கதை

89. குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடியொன் றுரையைத் தின்று[2]
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி (76)

பா. பே.: பாடல் 88. 1. ஆகையா லுபாயத் தாகா திலையென
வறையும் பின்னும்
பாடல் 89. 2. வேட்டையாடி யூன்மிகத் தின்று

(இ.ள்) குறுமுயல் ஒன்று சிங்கத்தைக் கொன்ற கதையொன்று உண்டு. அது என்னவெனில், அடர்ந்த காடு ஒன்றில் ஒரு சிங்கம் வாழ்ந்திருந்தது. அந்தக் காட்டில் வாழக்கூடிய விலங்குகள் அனைத்தையும் வேட்டையாடிக் கொன்று அரைகுறையாகத் தின்று வெறிகொண்டு திரிந்தது அந்தச் சிங்கம். அவ்வாறிருக்க ஒரு நாளில் விலங்குகள் எல்லாம் ஒன்று கூடி,

90. ஆணிளஞ் சிங்க மேயுன்
 னடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்
 விதத்தினிற் றினமொன் றாக
ஊணுனக் களிப்போ மென்ன
 உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்றா
 யருந்தியங் கிருக்கும் நாளில் (77)

(இ.ள்) இளமையான ஆண் சிங்கமே! உன்னுடைய இந்தக் காட்டில் விலங்குகளை எல்லாம் வீணாகக் கொல்ல வேண்டாம். ஒவ்வொரு வகை விலங்கினத்திற்கும் ஒவ்வொன்றாகத் தினமும் நாங்கள் உனக்கு உணவு அளிப்போம் என்று கூறின. இதனை ஏற்றுக் கொண்ட சிங்கம் அவ்வாறே ஆணையிட்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக அருந்தியிருந்தது. ஒரு நாள்,

91. தனிமுய லொன்றுக் கோர்நாள்
 தன்முறை வருத லோடும்
இனியிது விடாது நம்மை
 யெனினுமோ ரெடுப்பெ டுத்து
வினையமே செய்து பார்த்து
 வென்றுநாம் உய்ந்தோ மாகில்
தனிவிலங் கனைத்து முய்யும்
 நமக்குநற் புகழுண் டென்றே. (78)

(இ.ள்) ஒரு தனி முயலுக்குத் தன்முறைப் படிச் சிங்கத்திற்கு உணவாக வேண்டியது வந்தது. முயலும், இனி இச்சிங்கம் நம்மை விடாது என்றாலும் ஒரு தந்திரத்தாலே முயற்சி செய்து பார்த்து நாம் வென்று உயிர் தப்பினோமானால், காட்டின் விலங்கினங்கள் அனைத்தும் உய்வடையும், நமக்கும் நல்ல புகழ் உண்டாகும்.

92. கருதியே சிங்க வேற்றின்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னனம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் னுரைநீ யென்று
மனத்தினிற் சினந்து கூற (79)

(இ.ள்) என்று கருதிய முயல் சிங்கம் கடும்பசியோடு இருக்கும் நேரம் தவறி சிங்கத்திடம் வந்தது. கோபம் கொண்ட சிங்கம் முயலைப் பார்த்து, மன்னனான என் பசி நேரத்திற்குப் பெரிய மதயானை யாயினும் நேரம் தவறி வந்ததில்லை. சிறு முயலான நீ காலம் தாழ்த்தி வந்தது ஏன்? எனக்கு அதனைக் கூறுவாயாக என்று கேட்டது.

93. ஐயநின் பசிவே ளைக்கு
அடியனேன் வந்தே னாங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளிந் திருந்தேன்
பையவே சிங்க மாங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்யவுன் பக்கல் வந்தேன்
சுவாமியென் றிறைஞ்சி நிற்க (80)

(இ.ள்) 'ஐயா! உன் பசிநேரம் அறிந்தே அடியேன் நான் விரைந்து வந்தேன். வழியில் ஒரு கொடிய சிங்கத்தைப் பார்த்து அஞ்சி நான் அங்கு ஒளிந்திருந்தேன். அச்சிங்கம் மெல்ல அங்கிருந்து ஒரு குகைக்குள் புகுந்த பின்னர் தூய உன்னிடத்தில் வந்தேன் சுவாமி' என இறைஞ்சி நின்று கூறியது.

94. சிங்கநா மல்லால் வேறோர்
சிங்கநீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வாவென்
றழைத்தலு மழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை யெட்டிப் பார்த்த
ததனிழ லுருவந் தோன்ற (81)

(இ.ள்) இந்நாட்டில் என்னையல்லால் வேறொரு சிங்கத்தை நீ பார்த்தாயானால் அதனை எனக்குக் காட்டுவாய் வா என்று அழைத்தது. உடன் முயலும் அதனை அழைத்துப் போய்ச் சேறும் நீரும் சேர்ந்திருக்கக் கூடிய ஒரு பாழுங்கிணற்றைக் காட்டியது. சிங்கமும் அதனை எட்டிப்பார்க்க அதனுடைய நிழலுருவம் அங்குத் தெரிந்தது.

95. தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துஎங்கியே யுயிரி ழந்த
தென்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாமென்
றின்னமோர் நண்டு கொக்கை
யீர்ந்திட மாய்ந்த துண்டு[1] (82)

பா. பே.: பாடல் 95. 1. கொக்கை ஈர்ந்ததோர் கதையுஞ் சொல்லும்

(இ.ள்) தன் நிழலுருவத்தைத் தானே தன்னுடைய எதிரீ எனக் கருதிக் கிணற்றுள் பாய்ந்து சேற்றில் அழுந்திச் சிக்கி உயிரிழந்தது. எனவே உபாயத் தாலே அனைத்தையும் வெல்லலாம் என்று கூறி மற்றும் ஓர் நண்டு கொக்கைக் கொல்ல, கொக்கு மாய்ந்ததுண்டு.

நண்டு கொக்கைக் கொன்ற கதை

வேறு

96. மீனொன்றையு மேதின்றுடல் மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பானண்டுத னைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பானண்டிதை நீயிங்குறை பண்பேதுரை யென்ன (83)

(இ.ள்) மீன் ஒன்றை மட்டுமே தின்று உடல் வளர்த்து வந்த கொக்கு ஒன்று, அவ்விடத்தில் நண்டு ஒன்றினைக் கண்டு அதனைத் தனக்கு இரையாக்கிக் கொள்ள எண்ணியது. எனவே அது ஞானம் நல்கக்கூடிய தியானம் செய்வதாக எண்ணும்படி அமர்ந்திருந்தது. அதைக் கண்ட நண்டு கொக்கைப் பார்த்து நீ இங்கு இவ்வாறு இருப்பதன் காரணம் ஏது ? எனக் கேட்டது.

97.என்னென்றுரை செய்வேனினி யானெங்ஙன முய்வேன்
கொன்றுந்திய வலைகாரர்கள் கூடிக்குள மேரி
என்னுந்தட மெல்லாமிக வளைத்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன்முதல் சேரப்பிடித் தாரே (84)

(இ.ள்) அதைக் கேட்ட கொக்கு, 'நான் என்னவென்று சொல்வேன், இனி யான் எங்ஙனம் உய்வடைவேன். கொலை செய்யும் மனமுடைய வலைஞர்கள் சிலர் கூடி குளம், ஏரி என்று சொல்லக்கூடிய நீர் நிலைகள் எல்லாம் வளைத்து, வலை வீசிச் சின்னஞ் சிறு மீன்கள் முதல் அனைத்தையும் ஒரு சேரப் பிடித்தனர்.

98. இந்தக்குளம் நாளைக்கென எண்ணிக்கொடு போனார்
அந்தப்படி வந்தேபிடித் தவர்க்காவி யெடுத்தே சந்தைக்கடை
தொறுமீன்கடை தானேயென விற்பார்
எந்தப்படி யிவர்தப்புவ தெனவெண்ணி யிருந்தேன் (85)

(இ.ள்) இந்தக் குளத்தில் நாளை மீன் பிடிப்போம் என எண்ணிக்கொண்டு சென்றனர். அதன்படி அவர்கள் நாளை வந்து அனைவரையும் பிடித்து மீன்கள் முதல் அனைத்து உயிர்களையும் எடுத்துச் சந்தையில் மீன் கடைகளில் வைத்து விற்பனை செய்வர். இதிலிருந்து இந்த மீன்கள் எல்லாம் எப்படித் தப்புவது என எண்ணிக் கொண்டிருந்தேன்.

99. அந்தப்பழி காரர்வரு முனமேயோ ருபாயஞ்
சிந்தித்த னானப்படிச் செய்தாலவை யுய்யும்
எந்தப்படி யானு மழைத் திங்கேவரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குள மெய்தும்படி செய்வேன் (86)

(இ.ள்) அந்தப் பழிகாரர் வருமுன் தப்பிக்க ஓர் உபாயம் சிந்தித்தேன். அதன்படி செய்தால் அவை யாவும் உய்யும். நான் அழைத்தபடி வருவாயானால் இந்தக் குளத்தை விட்டு வேறோர் குளம் சென்று சேரும்படி நான் செய்வேன்"

100. என்றேபக ராசன்சொல வியனண்டதை நம்பிச்
சென்றேபல மீனோடுரை செயவேயவை கூடி
நன்றேயென வரவொவ்வொரு நடைக்கொன்றுகொ டேகிக்
கொன்றேசில தின்றேசில கொடும்பாறையி லுலர்த்தி (87)

(இ.ள்) என்று கொக்கரசன் சொல்ல, நண்டு அதை நம்பிச் சென்று பல மீன்களுடன் பேச அவை யெல்லாம் கூடி அது நல்ல உபாயம் எனத் தீர்மானித்து வந்தன. கொக்கு ஒவ்வொரு முறைக்கு ஒரு மீன் வீதம் எடுத்துக் கொண்டு சென்று அதைக் கொன்று சிலவற்றைத் தின்றும் சிலவற்றைப் பாறையில் உலர்த்தியும் வந்தது.

101. அலவன்றசை தனையுண்டிட வதையுங்கொடு செலவந்
நிலமெங்கணு மீனென்புகள் நிறைகொண்டது கண்டே
நலதிங்கிது பலமீனையு நனிதின்றது நமையுங்
கொலவந்தது நாமும்மிது கொலுமுன்கொல் வோமே. (88)

(இ.ள்) நண்டின் தசையை உண்ண ஆவல் கொண்ட கொக்கு அதனையும் எடுத்துக்கொண்டு சென்றது. அங்குத் தரையெல்லாம் மீன் எலும்புகள் நிறைந்திருக்கக் கண்டு, இக்கொக்கு பல மீன்களையும் நன்கு தின்றது. நம்மையும் கொல்ல வந்தது. இது நம்மைக் கொல்லுமுன் இதனை நாம் கொல்வோம்.

102. நம்மால்வரு பிழையேயிது நாமும்மந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேற் கொலுமதிலே யொரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினி செய்வோமென வெண்ணி
அம்மா பகன் கழுத்தைக்கவை யடியால்நெருக் கியதே. (89)

(இ.ள்) இத்துன்பம் நம்மால் வந்தது. நாமும் அந்த மீன்போல் சும்மா இருந்தோமானால் நம்மையும் கொன்று விடும். ஒரு தந்திரத்தின் மூலமாக எம்மால் இயன்றதைச் செய்வோம் என எண்ணி அக்கொக்கின் கழுத்தை தன் கணு போன்ற காலால் நெருக்கியது.

103. நெருக்குண்டற வீழ்ந்தேகொக்கு நீங்கிற்றுயி ரலவன்
இருக்குந்தல மேகித்தன தினத்தோடிருந் ததுவே
செருக்கும்பகை பெரிதாகிலும் சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைத்தாலதின் முடியாதது முளதோ[1] (90)

(இ.ள்) நண்டு கொக்கின் கழுத்தை நெருக்கியதால் கொக்கு உயிர் துறந்தது. நண்டு தன் சுற்றம் இருக்குமிடம் சென்று அவற்றோடு சேர்ந்து வாழ்ந்தது. எனவே, எதிர்க்கும் பகை பெரிதானாலும் சில தந்திரத்தால் செயல்படின் முடியாததும் உண்டோ.

பா. பே.: பாடல் 103. 1. முடியாதது மிலையே

சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்தகதை - தொடர்ச்சி

104. எனவேதம னகனோதிட விசைந்தேகர டகனிம்
மனமேகம தெனவேதினம் வாழும்மிவர் நட்போ
கனமானதந் திரத்தாலன்றிக் கலையாததற் கேற்ப
நினைவாய்தம னகநீயென நிகழ்த்தக்கர டகனே (91)

(இ.ள்) .. என்று தமனகன் கூறிட அதற்கு இசைந்த கரடகன், “மனம் ஒன்றி ஏகமானதாக வாழும் இவர்களைப் பெரிய தந்திரத்தாலன்றிப் பிரிப்பதற்கு ஏலாது. நீ அதற்குரிய வழியினைச் சிந்திப்பாய் தமனகா” எனக் கூறியது.

வேறு

105. இன்னன பலவு பாய
மியம்பியே தமன கன்றான்
தன்னிக ரிலாத சிங்கந்
தனித்ததோர் வேளை பார்த்துதங்
கன்னதன் பக்கற் சென்றே
யடிபணிந் திருகை கூப்பி
மன்னவோர் கருமங் கண்டு
வந்தனன் நின்பா லென்ன. (92)

(இ.ள்) இவ்வாறு பல உபாயங்களைக் கூறிய தமனகன், தன்னிகரற்ற சிங்கம் தனித்திருக்கும் நேரம் பார்த்து, அதன் பக்கத்தில்சென்று, அடிபணிந்து, இருகை கூப்பி, “ அரசே ஒரு காரியம் கண்டு வந்தேன்” என்றது.

106. யாதுநீ கருமங் கண்டிங்
கெய்தினை யுரைத்தி யென்ன
ஓதரு கருமஞ் சொல்லி
னுனதுசித் தத்தில் வைத்த

காதலான் மெய்யும் பொய்யாய்க்
காணுமோ தெரியா தென்றே
ஈதுநான் சொல் லஞ்சி
யிருந்தன னின்று கூறும் (93)

(இ.ள்) "நீ என்ன காரியம் கண்டு வந்தாய் சொல்" எனச் சிங்கம் சொல்ல, தமனகன் '' சொலற்கரிய அக்கருமத்தைச் சொன்னால், நீ கொண்டிருக்கும் பேரன்பின் காரணமாக நான் சொல்லும் உண்மையும் பொய்யாகத் தோன்றுமோ என்று அஞ்சியே இதுநாள் வரை இதைச் சொல்லாமல் இருந்தேன்.

107. அவ்வகை யெண்ணி னாலும்
அல்லது கோபித் தாலும்
எவ்வகை தண்டித் தாலும்
இறைவருக் கிடர்வா ராமல்
செவ்வைதேர் புத்தி சொல்லிச்
செய்கரு மஞ்செய் வித்தல்
வவ்விய தெவ்வ ராவி
மாயவே யுபாயஞ் செய்தல் (94)

(இ.ள்) ''அவ்வாறு பொய்யாக எண்ணி னாலும், என்மேல் கோபம் கொண்டாலும், எவ்வகையிலும் என்னைத் தண்டித்தாலும், மன்னராகிய உமக்கு துன்பம் வராமல் காத்தல், செம்மையான அறிவுரை கூறி, செய்யக்கூடிய காரியத்தைச் செய்வித்தல், பகைவரின் உயிர் மாயும்படியாக உபாயம் செய்தல்...

108. மந்திர விசாரத் தாலே
மன்னவர் மயக்க நீக்கல்
தந்திர வுபாயத் தாலே
சத்துரு நாசம் பண்ணல்
முந்திய செங்கோல் நூலின்
முறைதவ றாதி யற்றல்
இந்தவா றமைச்சர் நீதி
இவைசெயார் நரகில் வீழ்வார். (95)

(இ.ள்) ''மந்திராலோசனையால் அரசனது குழப்பத்தைத் தீர்த்தல், தந்திர உத்தியால் பகைவர்களை நாசம்செய்தல், முன் சொல்லிய செங்கோல் முறை தவறாமல் காரியங்களை நிகழ்த்துதல், ஆகிய இவை ஆறும் அமைச்சர்களுக்குரிய நீதியாகும். இவற்றைச் செய்யாதவர் நரகத்தில் வீழ்வர்...

109. ஐயநின் பழைய சேனை
யமைச்சரை நீக்கி விட்டே
வெய்யகோட் டிடபந் தன்னை
விரும்பிநல் லுறவு கொண்டு
மையலுற் றிருத்த லாலே
மாடர சாள வெண்ணிப்
பையவே யதற்கு வேளை
பார்த்திருக் கின்ற தென்ன (96)

(இ.ள்) '' ஐயா உன்னுடைய பழைய சேனைத் தலைவர் அமைச்சர்களை நீக்கிவிட்டு, கூரிய கொம்புகளை உடைய இடபத்தினை விரும்பி அதனுடன் நல்லுறவு கொண்டு, அதன்மேல் அன்பு கொண்டிருப்பதால் அந்த மாடு, தானே அரசாள எண்ணி மெல்ல அதற்குரிய காலத்தை எதிர்பார்த்திருக்கிறது'' என்று தமனகன் சொல்லியது.

110. மடங்கலு நகைத்தீ தென்ன
வார்த்தைநீ சொன்னாய் நம்மை
அடைந்துமுன் னமக்குச் சொன்ன
வாணையும் வார்த்தைப் பாடும்
கடந்துநம் மரசை யாளக்
கருதுமோ கருதா தென்னத்
தொடர்ந்துநம் விசாரி யாமற்
சொல்லுவ தில்லை யென்றே. (97)

(இ.ள்) சிங்கம் அதைக்கேட்டுச் சிரித்து, 'தமனகா! நீ என்ன வார்த்தை சொன்னாய். இடபம் நம்மை அடைந்து முன்பு நம்மிடம் சொன்ன ஆணையையும், வார்த்தைகளையும் கடந்து நம்முடைய அரசை ஆள அது நினைக்குமோ? அவ்வாறு கருதாது' என்று சிங்கம் சொன்னது. அதற்குத் தமனகன், 'தொடர்ந்து விசாரியாமல் நாம் எதையும் சொல்வதில்லை' என்றது.

111. என்னுடை முன்னே தானே
யிகழ்ந்துநின் சக்தி யெல்லாந்
தன்னுடை சக்திக் கீடு
தானல வென்று மற்றும்
பன்னுவாய் மதங்கள் பேசிப்
பகைநினைத் திருந்த தென்றால்
பின்னையு மதிற்சந் தேகம்
பேசில்யான் சொல்வ தென்னே. (98)

(இ.ள்) "அந்த இடபம் என்னுடைய முன்னாலேயே உம்மை இகழ்ந்து, உம்முடைய சக்தியெல்லாம் தன் ஆற்றலுக்கு முன் ஈடாகாது என்றும், மேலும் பல ஆணவப் பேச்சுகளும் பேசி, உம் மேல் பகை உணர்வுடன் இருந்தது என்று சொன்னால், அதற்குப் பின்பும் அதில் சந்தேகம் கொண்டு பேசினால் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது.

112. அரசரை இகழ்ந்து வாழு
மமைச்சரை அமைச்சர் தம்மைப்
புரைபடத் துரத்தி வாழும்
புரவலர் தம்மை யென்றும்
திருமக ளெனும டந்தை
சேர்ந்தினி திருந்து வாழான்
இருநிலக் கிழத்தி தானு
மிவரைவிட் டகலப் போவாள். (99)

(இ.ள்) "அரசரைப் பழித்துப் பேசும் அமைச்சரையும், அமைச்சரைத் தம்மிடமிருந்து நீக்கிவிட்டிருக்கும்" அரசரையும் திருமகள் என்னும் மடந்தை என்றும் சேர்ந்திருக்க மாட்டாள் அவரை விட்டு நீங்கிடுவாள்.

113. கொற்றவர் காரி யத்திற்
குலவுமந் திரியூ கத்தில்[1]
உற்றவர் தம்மை நீக்கி
ஒருவன்மேல் கொற்றம் வைப்பின்[2]
மற்றவ ராசை யெல்லாம்
வௌவியே கொண்டு பின்னும்
செற்றமுங் கூர்ந்து வேந்தைச்
செலுத்திட நினைப்ப ரன்றே. (100)

(இ.ள்) "அரசனுடைய காரியங்களைச் செய்யும் மதியூக அமைச்சர்களில் தமக்குற்றவர்களை நீக்கிவிட்டு ஒருவன் மேல் மட்டும் அரசுப் பொறுப்புகளை, நம்பிக்கையை வைத்தால், அவர் மற்றவர்களுடைய விருப்பங்களை எல்லாம் கவர்ந்து அழித்துவிட்டுப் பின்னர் அதிக மனத்துணிவுகொண்டு அரசைத் தானே செலுத்த நினைப்பரன்றோ.

114. மூடருக் குபகா ரந்தான்
முந்துறச் செய்து தம்மைப்
பீடுசெய் தவர்க்குத் தாமும்
பிரதியு பகாரஞ் செய்யார்
நீடிய வுபகா ரங்கள்
நிகழ்த்தியே தமக்குத் தாமே
கேடுகள் தேடிக் கொள்வார்
கேண்மையை நினைக்கொ ணாதே. (101)

பா. பே.:

பாடல் 113. 1. குலவுமதி யூகந் தன்னில்
2. ஒருவனை முதலா வைப்பின்

(இ.ள்) ''மூடர்களுக்கு நாம் முன்பு உபகாரம் செய்து அவரைப் பெருமைப்படுத்தினாலும் அவர்க்கு அம்மூடர் பிரதியுபகாரம் செய்யமாட்டார். பதிலாகத் தீய அபகாரங்கள் (செயல்கள்)செய்து தமக்குத்தாமே கேடுகள் தேடிக் கொள்வர். அத்தகையோர் நட்பினை நினைக்கவும் கூடாது.

115. நஞ்சொடு கலந்த சோற்றை
நடுக்குற வசைந்த பல்லை
வஞ்சகர் நட்பை மிஞ்சும்
மந்திரி தன்னைச் சற்றும்
எஞ்சல்வைத் திடாமல் வேரோ
டெடுக்கவே வேணும் வைத்தால்
விஞ்சிய துன்ப மெல்லாம்
விளைத்திடும் வித்தாய் நிற்கும்[1] (102)

(இ.ள்) ''நஞ்சு கலந்த சோற்றையும் வலியுடன் அசையும் பல்லையும், வஞ்சகருடனான நட்பையும், அரசனை மிஞ்சி நடந்துகொள்ளும் மந்திரியையும் சற்றும் எச்மின்றி வேருடன் அழித்தல் வேண்டும். மாறாக மிச்சம் வைத்தால் பின்னர் அதுவே மிகுந்த துன்பங்களை விளைவிக்கும் வித்தாக நிற்கும்.''

116. யாதுசஞ் சீவ கன்னம்
மிடத்தினில் வைத்த குற்றம்
ஒதுநீ யென்னச் சிங்கந்
தமனக னுரைக்கு மோர்நின்
போதனை யன்றி யேதன்
புத்திமேற் கொண்டு செல்லும்
தீதுட னுனையி கழ்ச்சி
செய்தல்போ தாதோ வென்ன (103)

பா. பே.: பாடல் 115. 1. மிஞ்சிட வைத்திடாமல் எடுக்கவே வேண்டும் வைத்தால்
அஞ்சிய துன்பமெல்லாம் ஆக்குமென் றறையக் கேட்டு

(இ.ள்) (தமனகன் கூறியதைக் கேட்ட) சிங்கம், "சஞ்சீவகன் நம்மிடத்தில் செய்த குற்றம் என்ன ? நீ சொல்வாய்" என்று கேட்டது. தமனகனும், உன்னுடைய ஆணையின்றித் தன் சொந்த புத்தியால் செயல்படுவதன்றி, தீய சொற்களுடன் உன்னை இகழ்ந்துரைப்பது போதாதோ'' என்று சொன்னது.

117. **தஞ்சமென் றடைந்த பேர்க்குத்**
தானப யங்கொ டுத்தே
வஞ்சகம் நினைத்துக் கோறல்
வன்மையன் றுலகிற் சொல்லும்
பஞ்சபா தகத்தின் முந்தும்
பாதக மிதுவே மேலும்
கொஞ்சமில் நிரையந் தோறுங்
குளிப்பவ ரிவரே கண்டாய் **(104)**

(இ.ள்) '' நம்மைத் தஞ்சமென்று அடைந்தவருக்கு நாம் அபயம் கொடுத்துவிட்டுப் பின்பு வஞ்சகம் நினைத்து அவரைக் கொல்வது பெருமை இல்லை. அது உலகோர் சொல்லும் பஞ்சமா பாதகத்தினும் மோசமான பாதகமாகும். மேலும் குறைவற்ற நிரயத்தில் மூழ்குபவர் இவரேயாவார்.

118. **நாமதை விரும்பிக் கொண்ட**
நட்பலாற் பிறிதொன் றில்லை
தீமையங் கதுசெய் யாது
செய்யினும் பொறுப்ப தன்றி
யாமிடர் செய்தல் தீதே
என்றுபிங் கலன்றான் சொல்லச்
சாமியிங் கிதுவேந் தர்க்குத்
தகாதெனப் பின்னுஞ் சொல்லும் **(105)**

இ.ள்) "நாம் அந்த எருதினை விரும்பி நட்புக் கொண்டதல்லால் வேறொன்றுமில்லை. அது நமக்குத் தீமை செய்யாது. அவ்வாறு செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்வதன்றி, நாம் அதற்கு இடர் செய்வது தீமையாகும்'' என்று பிங்கலன் சொன்னது. உடனே தமனகன், "ஐயா இது அரசருக்கு தகுதியானதன்று'' எனச் சொல்லி மேலும் உரைத்தது.

119. அன்னிய ரேனுந் தொல்லை
அமைச்சர்க ளேனு மற்றும்
மன்னிய சுற்ற மேனும்
மைந்தர்க ளேனும் வேந்தன்
முன்னியே யொருவர் மீதில்
மோகம்வைத் திடில வன்பால்
மன்னிய வரசு மிக்க
சுகமுந்தாங் கொள்வர் மன்னோ (106)

(இ.ள்) "அரசே! அன்னியராயினும், பழமையான அமைச்சராயினும் மற்றும் நிலைபெற்ற சுற்றத்தினராயினும், தான் பெற்ற மக்களாயினும் அரசன் ஒருவர் மீது மிகுந்த அன்பு வைத்ததால் அவர் அந்த அரச பதவியையும் அரச சுகத்தினையும் தானே எடுத்துக் கொள்வர்.

120. செல்வத்தி லாசை யில்லார்
செகத்தினி லொருவ ருண்டோ
நல்வினை யில்லா வேற்றை
நம்பியுன் செல்வ மான
பல்வகை விசாரிப் பெல்லாம்
பரிந்துநீ யளித்தா யுன்னைக்
கொல்வகை யுபாய நெஞ்சில்
குறித்திருக் கின்ற தன்றே. (107)

(இ.ள்) ''செல்வத்தின்மேல் ஆசை இல்லாத வர்களே உலகத்தில் எவரேனும் உண்டோ நல்ல செயற்பாடுகள் இல்லாத இடபத்தை நம்பி உன்னுடைய செல்வமான அரசுப் பணிகளையும் உன் பல்வகை அதிகாரங்களையும் விரும்பி அளித்தாய். ஆனால் அது உன்னைக் கொல்லும் உபாயத்தைத் தன் நெஞ்சில் குறித்திருக்கிறது.

121. நல்லறி வமைச்சர் புத்தி
நஞ்சுபோ லிருந்து பின்னர்
எல்லையில் செல்வ மாவி
இன்பமு முதவும் நல்லோர்
அல்லவர் புத்தி முன்னம்
அமுதெனத் தோன்றிப் பின்னர்
ஒல்லையிற் செல்வ மின்பம்
உயிரையும் இழக்கப் பண்ணும். (108)

(இ.ள்) ''நல்லறிவுடைய அமைச்சர்கள் சொல்லும் ஆலோசனை முதலில் நஞ்சு போலிருந்து, பின்னர் எல்லையற்ற செல்வம், ஆவி, இன்பம் ஆகியவற்றைத் தந்துதவும். ஆனால் நல்லோர் அல்லாதவர் கூறும் புத்திமதி முதலில் அமுதுபோல் தோன்றிப் பின்னர் முடிவுற்ற செல்வம், இன்பத்துடன் உயிரையும் இழக்கும் படிச் செய்யும்.

122. தனக்குரி யாரை விட்டுத்
தான்பிறர்க் கமைச்சு நல்கும்
மனத்தனா மரசன் பின்னை
வறுமையாம் பரவை வீழ்ந்து
கனத்தவெந் துயர மான
கராவின்வாய்ப் பட்டு மாழ்கி
இனத்தராம் புணைகா ணாமல்
இழப்பனா ருயிரை மன்னோ. (109)

(இ.ள்) ''தனக்குரிய நண்பர்களானவர்களை விட்டுவிட்டுத் தான் பிறருக்கு அமைச்சுப் பதவி முதலியவற்றைக் கொடுக்கக்கூடிய மனமுடைய அரசன் பின்னாளில் வறுமை என்னும் கடலில் வீழ்ந்து பெருகிய கொடிய துன்பம் என்னும் முதலை வாய்ப்பட்டுத் தன் இனமாகிய புணையைக் காணமாட்டாமல் தன் உயிரையும் இழப்பாரே.''

123. நச்சுமா மரத்தை வைத்து
நளிகட லமிர்தம் பெய்தும்
பச்சிலை முதலாக் கொல்லும்
பாம்புபால் பெய்திட் டாலும்
குச்சித விடத்தை நல்கும்
குவித்தசர்க் கரைமேல் நட்டு
மிச்சமாத் தேன்பெய் தாலும்
வேம்புதன் கசப்பும் மாறா. (110)

(இ.ள்) ''நச்சு மரத்தை நட்டு வைத்துப் பாற்கடலில் கொண்ட அமுதத்தை ஊற்றி வளர்த்தாலும் அம்மரத்தின் பசிய இலைகள் உயிரைக் கொல்லும் இயல்பினதாகவே இருக்கும். கொடிய பாம்பிற்குப் பால் வார்த்தாலும் இழிந்த நஞ்சினையே தரும். குவியலாகப் போட்டு வைத்த சர்க்கரைமேல் நட்டுவைத்துத் தேனை ஊற்றி வளர்த்தாலும் வேம்பின் கசப்பு மாறுவதில்லை.''

124. இன்னவை போலுந் துட்டர்க்
கிதம்பல விதஞ்செய் தாலும்
பின்னுமங் கவர்தன் மார்க்கம்
பெருகுநற் குணத்த ராகார்
அன்னரை மூலத் தோடே
யழிக்கில்நஞ் சழியுந் துட்டர்
மன்னுயி ரழித்தா லேதுன்
மார்க்கமு மழியுந் தானே (111)

(இ.ள்) ''இவற்றைப் போன்று தீயவர் களுக்கு இனிய பல உபகாரங்கள் செய்தாலும் அவர்தாம் பெருகும் நற்குண வழியினராகார். அத்தன்மையை வேரோடு அழித்தால்தான் அவர்தம் நச்சுக் குணம் அழியும். அவர்களை அழிப்பதன் மூலம் துன்மார்க்கமும் அழியும்.''

125. **வேந்தனுக் குறும பாயம்**
விளையுமுன் னறியப் பண்ணல்
போந்தவவ் வபாயந் தன்னைப்
புத்தியி னாலே நீக்கல்
ஏந்தலோர் மோகத் தாலே
எண்ணமற் றிருந்தா னேனும்
மாந்தக வுறுதி சொல்லல்
அமைச்சர்க ணீதி யாமே. (112)

(இ.ள்) ''அரசனுக்கு ஏற்படும் அபாயத்தை அது தோன்று முன்னரே அறிவித்தலும், அப்படியும் வந்துற்ற அபாயத்தைத் தன் அறிவுத் திறத்தாலே நீக்கலும், மன்னவன் ஏதோ ஒரு மயக்கத்தில் சிந்தனை யற்றிருந்தாலும், அவனுக்கு உறுதியான நெறிகளைச் சொல்வதும் அமைச்சர்களுக்குரிய நீதியாகும்.

126. **எத்தனை விதஞ்சொன் னாலும்**
எள்ளள வாகிலும் நின்
சித்தமு மறிய வில்லைச்
செய்வதென் இனியான் வேந்தர்[1]
மத்தவெங் களிறு போல
மனஞ்செலும் வழியே சென்று
மெத்தவு மளறு பாய்ந்தால்
வெறுப்பர்மந் திரியை யென்ன.[2] (113)

பா. பே.: பாடல் 126. 1. செய்வதொன் றறியேன் வேந்தர்
பாடல் 126. 2. மெத்தவும் விளைந்த தென்றால்

(இ.ள்) ''நான் இது குறித்து எத்தனை வகையில் எடுத்துச் சொன்னாலும் அது உன் சித்தத்தில் எள்ளளவேனும் சென்று சேரவில்லை என்றால் இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. வேந்தர் மதம்பிடித்த யானை போன்று மனம் போன போக்கில் சென்று மிகுந்து புதை சேற்றில் (நரகத்தில்) வீழ்ந்தால் அமைச்சர்களை உலகம் வெறுக்காதோ ?''

127. ஆயினிவ் வாறு சஞ்சீ
வகனைநாம் கேட்போ மென்று
சீயமங் குரைப்ப நல்ல
சிந்தனை செய்தாய் சூழ்ச்சி
ஏயுமந் திரிவி சாரம்
இதயத்தில் வைப்ப தல்லால்
வாயரங் கத்திற் சொன்னால்[1]
மரணமே திண்ண மாமால். (114)

(இ.ள்) "அவ்வாறாயின் நாம் சஞ்சீவகனை விசாரிப்போம்" என பிங்கலகன் சொல்ல, ''நல்ல சிந்தனை செய்தாய். அரசன் தன் திட்டங்களையும் அமைச்சருடன் கொண்ட ஆலோசனைகளையும் தன் இதயத்தில் இரகசியமாக வைக்க வேண்டுமேயல்லால் அதை வாய்விட்டு அரங்கத்தில் சொன்னால் மரணம் அடைவது நிச்சயம்.''

128. குருவுப தேசம் மாதர்
கூடிய வின்பம் தன்பால்
மருவிய நிதியம் கல்வி
வயதுதான் செய்த தன்மம்
அரியமந் திரிவி சாரம்
ஆண்மையாங் கிவைக ளெல்லாம்
ஒருவரு மறிய வொண்ணா
துரைத்திடி லழிந்து போமே. (115)

பா. பே.: பாடல் 127. 2. வாயுறப் புறத்திற் சொன்னால்

(இ.ள்) "குரு கூறிய உபதேசம், மங்கையரைக் கூடிக் கலந்த இன்பம், தன்பால் சேர்ந்துள்ள செல்வம், தான் கற்ற கல்வி, தன் வயது, தான் செய்த அறச்செயல்கள், அருமை மிகு அமைச்சர்களுடன் செய்த ஆலோசனைகள், தன் ஆளுமைத் தன்மை ஆகிய இவையெல்லாம் பிறர் அறியக் கூடாதவை இவற்றை வெளிப்படக் கூறிடில் அவை அழிந்து போம்.

129. கடன்படிற் கொடுத்த சேடம்
கனல்படில் விடுத்த சேடம்
விடந்தொடின் மீட்ட சேடம்
மேவலர் செற்ற சேடம்
படர்ந்துபின் கெடுக்கு முன்னே
பற்றறக் களைந்து போட்டால்
திடம்பெறு செல்வந் துய்த்துச்
செருக்கிவாழ்ந் திருக்க லாமே. (116)

(இ.ள்) "நாம் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தியது போக எஞ்சியுள்ள கடன், நெருப்புப் பற்றினால் முழுதும் அணைக்காமல் மீதம் வைப்பது, நச்சுப்பாம்பு முதலியவை தீண்டலால் உடலில் சேர்ந்த நஞ்சு, பகைவர் கொண்ட கோபத்தின் எச்சம், ஆகியவை பெருகிப் பின்னால் நம்மைக் கெடுக்கும் முன்பு, அவற்றை முற்றமுழுக்க அழித்துவிட்டால் வளமான செல்வத்தைத் துய்த்துப் பிறர் முன் செருக்குடன் வாழலாம்."

130. என்பன சொல்ல நம்மை
இடபமென் செய்யு மென்றே
வன்பொடு சிங்கங் கூற
மாட்டைநாம் நம்பப் போகா

அன்புட னருகிற் சேர்க்கில்
அழிவதே திண்ண மையா
முன்பொடு சீலைப் பேனார்
முகுட்டி னாலே ழிந்த வாறே. (117)

(இ.ள்) எனப் பலவும் தமனகன் சொல்ல, சிங்கம் அன்பு கொண்ட மனத்துடன், “இடபம் நம்மை என்ன செய்துவிடும்” எனக் கூறியது. உடனே தமனகன், ‘‘மாட்டை நாம் நம்பக் கூடாது அதை அன்புடன் நம்மருகில் சேர்த்தால் நாம் அழிவது உறுதி ஐயா. முன்பு சீலைப்பேன் ஒன்று மூட்டைப் பூச்சியாலே அழிந்த கதைபோல் ஆகிவிடும்” என்றது.

சீலைப்பேன் முகுட்டுப் பூச்சியால் அழிந்த கதை

131. இக்கதை யாது சொல்வாய்
என்றுபிங் கலனார் கேட்ப
மிக்கதோர் நகரின் மந்த
விசர்ப்பிணி அரசன் மெத்தை
புக்கொளித் தன்னார் மின்னார்
புணர்ச்சிசெய் துறங்கு மந்தப்
பக்குவம் பார்த்தி ரத்தம்
பருகியங் கிருக்கும் நாளில். (118)

(இ.ள்) அக்கதை யாது எனக்குச் சொல்வாய் எனப் பிங்கலகன் என்னும் சிங்கம் கேட்டது. நரி கதையைச் சொல்லத் தொடங்கியது. வளம் மிக்க நகரம் ஒன்றில் மந்தவிசர்ப்பிணி என்னும் சீலைப்பேன் அந்நகரத்து அரசனுடைய மெத்தையினுள் புகுந்து ஒளிந்திருந்து, மன்னர் மங்கையரைக் கூடிக் கலந்து, பின் உறங்கும் அந்த நேரம் பார்த்துப் பக்குவமாய் இரத்தம் பருகி வாழ்ந்திருந்தது.

132\. கொள்ளிவா யடியிட் டாற்போல்
குறுமுகு டொன்று சேர்ந்தங்
குள்ளுறை சீலைப் பேனை
யுறவுகொண் டுனக்கு நானே
தெள்ளிய நண்ப னாகிச்
சேர்ந்தினி திருப்போ மென்ன
முள்ளெயிற் றினிற் றுடுக்கா
யரவுபோல் கடிப்பா யென்னும். (119)

(இ.ள்) ஒரு நாள் கொள்ளிவாய்ப்பிசாசு வந்ததுபோல் குறுகிய முகட்டுப்பூச்சி யொன்று அங்கு வந்து சேர்ந்து, அங்கு வசிக்கும் சீலைப்பேனுடன் உறவு கொண்டு, உனக்கு நானே சிறந்த நண்பனாவேன். நாம் இனி ஒன்றாகச் சேர்ந்திருப்போம் என்றது. அதற்குச் சீலைப்பேன், "நீ முள் போன்ற பற்களால் துடுக்குடன் அரவம்போல் கடிப்பாயே" என்று கூறியது.

133\. துடுக்குநான் செய்கி லேன்நீ
சொன்னது கேட்பே னென்று
பொடுக்கெனக் காலில் வீழப்
புந்தியி லிரங்கி நீதான்
வெடுக்கெனக் கடித்தி டாதே
வேந்தன்மின் னாரைக் கூடிப்[1]
படுக்கையி லுறக்க வேளை
பார்த்துநீ பருகு மென்ன[2] (120)

(இ.ள்) ''துடுக்குத் தனமாக நான் ஏதும் செய்ய மாட்டேன்.'' நீ சொன்னபடிக் கேட்பேன் என்று சொல்லி முகட்டுப்பூச்சி சீலைப்பேனின் காலில் விழ, சீலைப்பேன் மனம் இரங்கி, ''நீ மன்னனை வெடுக்கெனக்

பா. பே.: பாடல் 133. 1. வேந்தனு மனையா டானும்
2. பார்த்துநீ பசிதீ ரென்ன

கடித்திடாதே, மன்னன் மின்னல் போன்ற மங்கையரைக் கூடியபின் படுக்கையில் உறங்கும் வேளை பார்த்து நீ குருதி பருகு'' என்றது.

134. நல்லது தானே யென்று [1]
நண்ணிய முகுடு வேந்தன்
மெல்லிய ளுடனே தானும்
விழித்திருக் கின்ற போதே
பல்லினால் கடிக்க வேந்தன்
பதைத்தெழுந் தேதோவென்று
சொல்லலுந் தீபங் கொண்டு
சோதனைக் காரர் பார்க்க (121)

(இ.ள்) நல்லது (நீ சொன்னபடி செய்கிறேன்) என்று கூறிய முகட்டுப்பூச்சி, மன்னன் மெல்லியளாளுடன் விழித்திருக்கின்ற போதே அவனைக் கடித்தது. பதைத்தெழுந்த வேந்தன் என்னவோ ஏதோ கடித்தது என்று சொல்லவும் பணியாளர்கள் தீபம் கொண்டுவந்து பார்த்தனர்.

135. முகுடனா ரொளித்துப் போனார்
முன்னமங் கிருந்து வாழும்
விகடமில் லாத வந்த
விசர்ப்பிணி தன்னைக் கண்டே
அகடுநீ செய்தா யென்றங்
கதனுயி ரழித்துப் போட்டார்
வகையறி யாமற் செத்து
மாய்ந்தது சீலைப் பேனே. (122)

(இ.ள்) உடனே முகட்டுப்பூச்சி ஓடி ஒளிந்து கொண்டது. ஆனால் முன்னமே அங்கிருந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கள்ளமில்லா மந்தவிசர்பணியைக் கண்ட பணியாளர்கள் நீதான் தீங்கு செய்தனையோ என்று கூறி

பா. பே.: பாடல் 134. 1. நல்லதென் றடைந்து பின்டின் டிபனெனு நாம மூடு

அதை அழித்துவிட்டனர். வாழும் வகையறியா சீலைப்பேன் இறந்துபட்டது.

சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை - தொடர்ச்சி

136. என்றொரு கதையுஞ் சொல்லி
        எருதுனைப் பொரவருங் கால்
துன்றிய மழையுங் காற்றும்
        சூழ்ந்திடு வேளை தன்னில்
தன்தனி வால்மு றுக்கித்
        தலையொடு கொம்ப சைத்து
மன்றக நடுங்க வந்து
        மார்பினில் பாயு மன்னோ (123)

(இ.ள்) என்று ஒரு கதையைச் சொன்ன தமனகன் [1] மேலும் சிங்கத்திடம், ''எருது உன்னுடன் போரிட வரும்பொழுது மழையும் காற்றும் சூழ்ந்திருக்கும் நேரத்தில் தன் தனித்தன்மையுடைய வாலை முறுக்கித் தலையையும் கொம்பையும் அசைத்து இம்மன்றம் நடுங்கும்படியாக வந்து உன் மார்பினில் பாயும்.''

137. சீயரா சேந்திர னேநான்[1]
        செப்பினே னுனக்கு நன்மை
நீயதை வெளியி டாமல்
        நெஞ்சில்வைத் திடப முன்னைப்
பாயவந் துற்றால் ஆவி
        பதைத்திட வதைத்தி நானும்
போயினிப் பின்பு வருவேன்[2]
        புனிதவென் றேகிற் றம்மா (124)

பா. பே.:

பாடல் 137. 1. சீயமா மரசனே நான்

2. போயிவண் வருவேன் பின்னர்

(இ.ள்) ''சிங்கராஜனே நான் உனக்குச் சொன்னவை நன்மை தருவனவாகும். இதனை நீ வேறு யாரிடமும் கூறாமல் மனத்திற்குள்ளாகவே வைத்திரு இடபம் உன்மேல் பாய வந்தால் அது இறக்கும் வண்ணம் அதனைத் தாக்கிப் போரிடவேண்டும் புனிதனே! நான் இப்பொழுது போய்ப் பிறகு வருகிறேன்" என்று கூறிப் போனது.

138. ஏகியே தமன கன்றா
னிடபசஞ் சீவ கன்பால்
போகவங் கதுவுங் கண்டு
புகழுடன் சுகமோ வென்ன
நாகிளங் காளை வேந்தே
நமக்குமோர் சுகமு முண்டோ
ஆகமே துயிரே தென்றும்
அரசரைச் சேவிப் பார்க்கே (125)

(இ.ள்) அங்கிருந்து சென்ற தமனகன் சஞ்சீவகன் என்ற எருது இருக்கும் இடத்திற்குச் சென்றது. அதனைக் கண்ட எருது, தமனகனிடம் நீ புகழுடன் சுகமாக உள்ளாயா என்று கேட்டது. தமனகனும் ''இளம் காளை வேந்தே நமக்குச் சுகம் என்பதுமுண்டோ, அரசரைச் சேர்ந்து பணிபுரிவார்க்கு உடல் ஏது உயிர் ஏது.

139. செல்வமுஞ் செல்வ மல்ல
சிந்தையுஞ் சிந்தை யல்ல
சொல்வதுஞ் சொல்வ தல்ல
சுகிப்துஞ் சுகிப்ப தல்ல
கல்லவியுங் கல்வி யல்ல
கருங்கொலைப் பாம்பு போலக்
கொல்வினை யரசர் சேவை
குறித்துவாழ் பவர்க்குத் தானே (126)

(இ.ள்) கொல்லும் தன்மையையுடைய கரும்பாம்பு போல் கொலைத்தொழிலையுடைய அரசரின் சேவை குறித்து வாழ்பவர்க்கு அவர்கள் செல்வமும் செல்வமல்ல. சிந்தனையும் அவர்களுக்கான சிந்தனை யில்லை. அவர்கள் சொல்வது சொல்லல்ல. அவர்கள் அனுபவிக்கும் சுகமும் நன்மை தரும் சுகமல்ல. அவர்கள் கற்ற கல்வியும் அவர்களுக்குதவும் கல்வியாகாது.''

140. எனத்தம னகனுஞ் சொல்ல
இறைவர்நெஞ் சேற்கு மாறு
மனத்தில்வஞ் சகமில் லாமல்
மகிமையாய் நடந்து கொண்டால்
சினத்தமன் னவரா னாலும்
சினேகமாய்த் தமக்கு முந்தும்
இனத்தரில் இனத்த ராக
எண்ணியே நடத்து வாரே. (127)

(இ.ள்) என்று தமனகன் சொல்ல, சஞ்சீவகன், ''மன்னர்தம் மனம் ஏற்றுக்கொள்ளும் வகையில் மனத்தில் வஞ்சக மில்லாமல், நல்ல முறையில் நடந்து கொண்டால், கோபம் கொள்ளக்கூடிய மன்னரானாலும் நல்ல நட்புறவுடன் தமக்கு முன்வந்துதவும் இனத்தில் இனத்தராகி எண்ணி நடத்துவர்.''

141. எனவீடை கூறச் செல்வ
மெய்திலின் புறுவா ரில்லை
வனிதையர் காமத் துற்று
வலியிழ வாதா ரில்லை[1]
அனகவெஞ் சமனைத் தப்பி
ஆவிவைத் திருப்பா ரில்லை
மனத்தொடு வேந்தர் சித்தம்
வரநடப் பாரும் இல்லை (128)

பா. பே.: பாடல் 141. 1.வலியிழ வாழ்ந்தா ரில்லை

(இ.ள்) என்று இடபம் கூற, ''செல்வம் எய்துவதன் மூலம் இன்புறுவார் இல்லை. பெண்கள் மேல் காமம் கொண்டு தன் வலிமையை இழவாதா ரில்லை. கொடிய எமனிட மிருந்து தப்பி உயிர் வாழ்ந்தார் இல்லை. தன் மனத்தோடு வேந்தரின் மனமும் ஒன்றிய தன்மையில் வாழ்பவரும் இல்லை.''

142. துச்சன ருடனே கூடிச்
சுகமடைந் தாரு மில்லை
இச்சையில் யாச கத்தால்
இடருறா தவரு மில்லை
குச்சிதக் களவி னாலே
கொழுநிதி படைத்தா ரில்லை
அச்சமில் அரச ராலே
அழிபாடா வாழ்வு மில்லை. (129)

(இ.ள்) ''இழிந்தவர்களுடன் கூடி நன்மை யடைந்த வர்கள் இல்லை. விருப்பமில்லாத யாசகத்தால் துன்பப் படாதவரும் இல்லை. கீழ்மையான களவினால் பெருநிதி சேர்த்தவரும் இல்லை. அச்சமில்லாத அரசராலே அழிவினை அடையாதவரும் இல்லை.''

143. நல்லிடம் நல்ல காலம்
நற்பொருள் நல்ல தோழர்
சொல்லுமிவ் வகையுஞ் சற்றுந்
துளக்கமில் லாத நெஞ்சும்
எல்லையில் ஈவும் பெற்றார்
எய்துவர் சிலநாள் வாழ்க்கை
அல்லவர் இன்ன நாளில்
அழிவரென் றறிய லாகா. (130)

(இ.ள்) ''தன் செயல்களுக்கு ஏற்ற நல்ல இடம், நல்ல காலம், உரிய நல்ல பொருள், நல்ல நண்பர்கள், எனச்

சொல்லக் கூடிய இவற்றுள் சற்றும் குறைவற்ற மன உறுதியும் எல்லையற்ற கருணையும் கொண்டவர் இந்த மண்ணில் சில நாள் சில காலமாவது வாழ்ந்திருப்பர். அவ்வாரில்லாதவர்கள் எப்பொழுது மரணத்தைத் (அழிவை) தழுவுவார் என அறிந்து கூற வியலாது'' என்றது.

144. இவைகணீ சொல்ல வந்த
தென்னபிங் கலன்றா னுன்பால்
தவறுதா னிழைத்த துண்டோ
சாற்றென விடபங் கூறக்
கவடமாய் செப்பும் ராச
காரியந் தன்னைச் சொன்னால்
அவகட வேந்தன் சற்றே[1]
யறியினும் நமைக்கொல் வானே. (131)

(இ.ள்) 'இவற்றையெல்லாம் நீ சொல்ல வந்தது எதற்காக. பிங்கலன் உனக்கு ஏதேனும் தவறு இழைத்து விட்டானா? சொல் எனச் சஞ்சீவகன் கேட்க, கபட எண்ணத்துடன் பேசும் அரசனின் செயல்களை வெளியே சொன்னால் அதனை வஞ்சகமான மன்னன் சிறிது அறிந்தாலும் நம்மைக் கொன்றுவிடுவான்.

145. என்னினும் நீயும் நானும்
இதயமொன் றாகை யாலே
உன்னுட கருமஞ் சொல்ல
லுற்றனன் மற்றொன் றல்ல
மன்னவன் சேனைக் கெல்லாம்
மகிழ்விருந் தளிக்க நாளை
நின்னையே கொல்ல வென்றே
நினைத்தனன் மனத்தி லென்ன (132)

பா. பே.: பாடல் 144. 1. அவமதி வேந்தன் சற்றே

(இ.ள்) என்றாலும் நீயும் நானும் இதயம் ஒன்றியவர்களாதலால் உன்னிடத்தில் அதைச் சொல்ல-லுற்றேன். வேறில்லை. மன்னன் தன் சேனைகள் எல்லாம் மகிழும்படி நாளை விருந்தளிப்பதற்காக உன்னைக் கொல்ல எண்ணியுள்ளான் என்றது.

146. அஞ்சியே மிகவுஞ் சஞ்சீ
வகனகங் கலங்கி வேந்தர்
நெஞ்சகம் நம்மைக் கொல்ல
நினைத்தகா ரணமே தென்ன
எஞ்சினோர் மீதிற் கோபம்
யாவர்க்கு மெய்து மென்பார்
வெஞ்சின வேந்தர்க் குற்ற
வெகுளியா ரறிய வல்லார். (133)

(இ.ள்) அதைக் கேட்டு மிகுந்த அச்சம் கொண்ட சஞ்சீவகன் மனம் கலங்கி, 'வேந்தன் நம்மைக்கொல்ல நினைத்த காரணம் என்ன?' என்றது. "ஆதரவற்றவர் மீது யாவரும் கோபம் கொள்வர் என்பார்கள். எனவே வேந்தனுக்குற்ற கோபத்தின் காரணத்தை யாரரியவல்லார்."

147. பரவையை யளவிட் டாலும்
பாரெலா மளவிட் டாலும்
வரைமுழு தளவிட் டாலும்
மாதர்நெஞ் சளவிட் டாலும்
இரைதனைக் கருதித் தன்பால்
எய்தினர் தம்மைக் கொல்லும்
அரசர்நெஞ் சொருவ ராலும்
அளவிட முடியா தென்ன. (134)

(இ.ள்) 'கடலின் ஆழத்தையும் அளவையும் அளந்து கண்டாலும், உலகம் முழுவதையும் அளந்திட

முடிந்தாலும், மலைகளையும் அளக்க முடிந்தாலும், மங்கையரின் மன ஆழத்தை அளந்து கூற முடிந்தாலும், இரையைக் கருத்தில் கொண்டு தன்பால் அடைக்கலமாக வந்தவர் தம்மைக் கொல்ல நினைக்கும் அரசரின் மனத்தை அளவிட்டு அறிந்து கூற முடியாது' என்றது.

148. மின்னனார் தங்கள் நெஞ்சம்
விடரையே விரும்பி நிற்கும்
பொன்னெலாம் உலுத்தர் தேடும்
பொருளையே சேர்ந்து நிற்கும்
மன்னிய மழையு மோத
வாரியிற் பெய்து நிற்கும்
அன்னபோல் வேந்தர் தாமும்
அபாத்திரம் விரும்பி நிற்பார். (135)

(இ.ள்) 'மின்னல் போன்ற பெண்களின் உள்ளம் காமுகரையே விரும்பியிருக்கும். பொன்னெல்லாம் இழிவானவர்கள் தேடும் பொருளையே சேர்ந்திருக்கும். மழையும் கடலையே சார்ந்து பொழியும். அது போல வேந்தரும் தகுதியற்றோரையே விரும்பி இருப்பர்.'

149. காரணத் தாலே வேந்தன்
கனன்றன னாகில் வேறோர்
காரணத் தாலே யன்னான்
கருத்தினைத் திருத்த லாகும்
காரணம் யாது மின்றிக்
கனன்றன னாகில் வேறோர்
காரணத் தாலே யன்னான்
கருத்தினைத் திருத்த லாகா. (136)

(இ.ள்) 'ஏதாவது ஒரு காரணத்தால் வேந்தன் கோபம் கொண்டானென்றால் வேறொரு காரணத்தால் அவனுடைய கருத்தினை மாற்றித்திருத்தலாம். காரணமே

இல்லாமல் அவன் கோபம் கொண்டால் வேறெந்த காரணத்தைக் கொண்டும் அவன் எண்ணத்தை மாற்ற இயலாது.'

வேறு

150. என்றுசஞ் சீவக னியம்ப மன்னவன்
அன்றுனை யழைத்ததும் ஆணை யிட்டதும்
இன்றுனைத் தனக்குளார்க் கிரைவ ழங்கவே
கொன்றிட நினைத்ததுங் கொடிய பாபமே. (137)

(இ.ள்) எனச் சஞ்சீவகன் கூற, தமனகன் கூறும், 'மன்னவன் அன்று உன்னை அழைத்ததும், உனக்கு அமைச்சுப் பதவி வழங்கி ஆணை இட்டதும், இன்று உன்னைத் தனக்கு உரிய இனத்தார்க்கு இரையாகக் கொடுக்கவே. உன்னைக் கொன்றிட நினைத்ததும் கொடிய பாவமாகும்.'

151. மந்திரி பண்டிதர் மருத்துவஞ் செய்வோர்
சிந்தையு மன்னவன் சிந்தைக் கேற்றிடில்
தந்திர வுபாயமும் தரும நீதியும்
அந்தமில் இன்பமும் அவனுக் காகுமே. (138)

(இ.ள்) 'அமைச்சர்கள், கற்றறிந்த அறிஞர்கள், மருத்துவர்கள் ஆகியோர் எண்ணமும் மன்னனுடைய சிந்தனைக்கு உகந்ததாக இருந்தால் தந்திர உத்திகளும் தருமமும் நீதியும் அளவற்ற இன்பமும் அவனுக்கு உரியதாகும்.

152. துட்டர்பால் நன்றியே தொடர்ந்து செய்யினும்
முட்டர்பால் சுபாஷித மொழிகள் பேசினும்
ஒட்டிய மூங்கைமுன் உசிதஞ் சொல்லினும்
நட்டமே யல்லது நன்மை யில்லையே. (139)

(இ.ள்) துட்டர்களுக்குத் தொடர்ந்து நன்மையே செய்தாலும், மூடர்களுக்கு இனிய சொற்களைப் பேசினாலும், ஊமையர் முன் தகுதியானவற்றைச் சொன்னாலும் இழப்பேயன்றி எந்த நன்மையும் பயப்பதில்லை.'

153. நல்லறி வசேதனர்க் குரைப்ப துங்கொடும்
புல்லர்முன் தன்கலி புகன்றி ரப்பதும்
அல்லியற் கின்ப மாதரை யளிப்பதும்
கல்லின்மே லெறிந்திடுங் கலங்க ளொக்குமே. (140)

(இ.ள்) 'அறிவற்றவர்களுக்கு நல்லறிவுடைய செய்திகளைக் கூறுவதும், மோசமான இழிவினர் முன் ஒருவன் தன் துன்பத்தைக் கூறுவதும், அலிகளுக்கு இன்பம் நல்கும் அழகிய மாதரை அளிப்பதும் கல்லின்மேல் எறியப்படும் பாத்திரம் சிதைவதுபோல் அழிந்துபோம்.'

154. பொருங்களர் நிலத்திலே பெய்த மாரியும்
திருந்திலாச் செவிடர்பால் செப்புப தேசமும்
அருங்கொடி யோர்களுக் களித்த தானமும்
ஒருங்குற வோர்ந்திடில் ஒக்கு மென்பவே. (141)

(இ.ள்) 'களர் நிலத்தில் பொழிந்த மழையும், திருத்தமற்ற செவிடர்களிடத்துக் கூறும் உபதேசமும் கொடியவர்களுக்குக் கொடுத்த தானமும், ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றாகவே அமையும் என்பர்.'

155. சந்தன மரங்களைச் சலச வாவியைப்
பந்திகொள் தாழையைப் பாம்பு வெங்கரா
நந்துமுட் சூழ்வபோல் நாட்டு வேந்தரைத்
தொந்தமாய் விடாமலே துட்டர் சேர்வரே. (142)

(இ.ள்) 'சந்தன மரங்களையும், நீர் நிறைந்த வாவியையும், வரிசையாக வளர்ந்துள்ள தாழை மரங்களையும் முறையே பாம்பும், முதலையும், முள்ளும் சூழ்ந்திருப்பது போன்று நாட்டை ஆளும் அரசனிடம் துட்டர்கள் விடாமல் சேர்ந்திடுவர்.'

156. ஆதலின் மன்னவர் அருகு நல்லமெய்ப்
போதமே யடைந்தவர் பொருந்தி டின்மிகப்
பேதக மாக்கியே பின்னுங் கொல்லவும்
சூதுகள் நினைப்பதும் துட்டர் நீதியே. (143)

(இ.ள்) 'எனவே மன்னவர் அருகில் நல்ல மெய்யறிவு கொண்டவர்கள் நெருங்கினால் அவரை பகைகொளச் செய்து பின்பு அவரைக் கொல்லும் வகையில் தந்திரங்கள் செய்வது துட்டர்கள் நீதியாகும்.'

வேறு

157. அரச னின்சொலும் அபய வார்த்தையும்
பரிவு மிங்கிதப் பார்வை[1] யின்பமும்
திரம லோவெனச்[2] சிந்தை யாரவே
கருதி னோமவை கபட மானதே[3]. (144)

(இ.ள்) 'அரசனின் சொல்லும், அவன் கூறிய அபயச் சொற்களும், கொண்ட பரிவும் பார்த்த இனிய பார்வையும், அளித்த மகிழ்ச்சியும், உறுதியானது என மனமாற நம்பினோம். ஆனால் அவையனைத்தும் கபடமானவையே.'

பா. பே.: பாடல் 157. 1. பரவு மிங்கிதப் பார்வை
2. திரமதாமென
3. கருதினோமது கணட்ட மானதே

158. ஐயை யோவிவ னபய வார்த்தையை
மெய்ய தாமென விரும்பி னோங் கொலை
செய்ய வெண்ணினன் சிங்க வேந்தனங்
கையி லாவது கருதல் நீதியோ. (145)

(இ.ள்) 'ஐயையோ இவ்வேந்தன் கூறிய அபய வார்த்தைகளை உண்மையானவை என விரும்பினோம். ஆனால் அவனோ கொலை செய்ய எண்ணினானே. சிங்கவேந்தன் நம்மைக் கொல்லக் கருதுதல் நீதியாமோ.

159. தூரக் கண்டுநீ தொழுமு னேதொழு
தாரப் புல்லிமோந் தருகில் வைத்துப
சாரத் தாலுனைத் தருக்கி வித்தது
சேரத் தான்கொலை செய்ய வெண்ணியே. (146)

(இ.ள்) 'தூரத்தில் வரும்போது நீ வணங்கும் முன்பு அவன் உனை வணங்கித் தொழுது உன்னை ஆரத்தழுவி தன்னருகில் வைத்து உபசார வார்த்தைகளால் உன்னைப் பெருமை கொள்ளச் செய்ததெல்லாம் உன்னைக் கொலை செய்யும் எண்ணத்தாலேயாகும்.'

160. இருளை நீக்க விளக்கு மெழுதிரைப்
பரவை நீத்தப் புணையும் படைத்துமிக்
கரவர் நெஞ்சினில் வஞ்சங் கடக்கவோர்
அரிய தந்திரம் அளித்திலன் வேதனே. (147)

(இ.ள்) 'இருளை நீக்கும் விளக்கினையும் அலைகள் எழுந்தார்ப்பரிக்கும் கடலை நீந்தப் படகினையும் படைத்தும் இந்தக் கயவர் நெஞ்சின் வஞ்சகத்தைக் கடக்க ஓர் அரிய தந்திரத்தினை வேத முதல்வனாகிய இறைவன் அளிக்கவில்லையே.'

161. ஆனை வேக மடங்குந் தோட்டியால்
வேனில் வெம்மை யடங்கும் விசிறியால்
ஈனர் வேக மியம்பில் அவருயிர்
போன போதடங் கும்புவி மீதிலே.[1] (148)

(இ.ள்) இவ்வுலகில் 'யானையின் வேகம் தோட்டியால் அடங்கும். வேனில் காலத்தின் வெம்மை விசிறியால் அடங்கும். ஈனர்களின் வேகம் சொல்லப்போனால் அவர் உயிர் போனபோதே அடங்கும்.'

162 வண்டு பூமது விட்டுக் கரிமதம்
உண்டு காதடி பட்டுயிர் மாய்வபோல்
துண்டை வேந்தர்நல் லோர்சொன் மறுத்துமால்
கொண்டு தீயர்சொல் கொண்டுயிர் மாய்வரே. (149)

(இ.ள்) 'வண்டானது மலர்களில் உள்ள மதுவினை உண்பதைவிட்டு யானையின் மதநீரை உண்ணச்சென்று யானையது காதால் அடிபட்டு மாய்வதுபோல துட்டரான வேந்தர்கள் நல்லோர் தம் சொல்லை மறுத்து மயக்கம் கொண்டு தீயோர் சொல் கேட்டு உயிர் துறப்பர்.'

163. துட்டர் நண்பு தொடங்கிநல் லோர்களும்
நட்ட மெய்துவர் நன்மை யவர்க்கிலை
இட்ட மாக விருந்தொரு காக்கையோர்
ஒட்ட கத்தி னுயிரை மாய்த்ததே. (150)

(இ.ள்) 'தீயோருடன் நட்புகொண்ட நல்லோரும் நட்டப்படுவர். அவர்க்கு நன்மை கிட்டுவதில்லை. நட்பாக இருந்த ஒட்டகத்தை ஓர் காக்கை உயிரை மாய்த்ததுவே' என்றது தமனகன்.

பா. பே.: பாடல் 161. 1. போன போதடங் கும்புவி நீதியே.

காகம் ஒட்டகத்தை அழித்த கதை

164. உரைசெய் அக்கதை என்றெரு தோதலும்
இருள்செய் காட்டின் மதோற்கட னென்னுமோர்
அரசு சிங்கம் அதற்குள மந்திரி
நரிவீ யக்கிரங்[1] காக்கையும் நண்ணுநாள் (151)

(இ.ள்) அக்கதை என்னவென்று சொல் எனச் சஞ்சீவகன் கேட்க, தமனகன் கூறும். இருள் சூழ்ந்திருக்கும் அடர்ந்த காட்டினுள் மதோற்கடன் என்னும் ஒரு சிங்கம், தன் மந்திரியான நரி, புலி, காகத்துடன் வாழ்ந்திருந்தது.

165. ஒட்ட கம்வழி தப்பியங் குற்றிடக்
கிட்டி வாயசம் ஆரெனக் கேட்டலும்
ஒட்டை உண்மை உரைத்திட வாணையும்
இட்டு வாயசந் தானழைத் தேகியே. (152)

(இ.ள்) ஓர் ஒட்டகம் வழி தப்பி அங்கு வர, காகம் அதைப் பார்த்து நீ யாரெனக் கேட்க, ஒட்டகம் உண்மையைக் கூறியதும், காகம் அதற்கு உறுதியளித்து தன்னுடன் அழைத்துச் சென்றது.

166. மன்ன னானம தோற்கடன் முன்விட
அன்ன வேந்தன் அபயங் கொடுத்துநீ
இன்ன லின்றிக் கதனக னென்றுபேர்[2]
மன்னி மந்திரி மாரொடு வாழ்கென. (153)

(இ.ள்) காகம் ஒட்டகத்தைத் தன் மன்னனான மதோற்கடன் முன்விட வேந்தனும் அந்த ஒட்டகத்திற்கு ஆதரவு கொடுத்து, நீ எத்துன்பமும் இன்றி இங்குக் கதனகன் என்ற பெயர் பெற்று எமது மந்திரியருடன் வாழ்க என்றது.

பா. பே.:

பாடல் 164. 1. நரியும் வேங்கையும்
பாடல் 166. 2. இன்ன லின்றிமந் தானக னென்று பேர்

167. சம்பு வும்புலி யுங்கொடி யும்தமை
நம்பு கென்று சொலிச்சில நாளெலாம்
இன்ப மாக விருந்தொரு நாள்தம்
வெம்ப சிக்கு விருந்துண நாடியே.[1] (154)

(இ.ள்) நரியும் புலியும் காகமும் ஒட்டகத்திடம் தங்களை நம்புக என்று ஆதரவு கூறி சில நாட்கள் இன்பமாக வாழ்ந்திருந்தன. ஒரு நாள் தமது கொடிய பசிக்கு விருந்தாக உண்ண எண்ணி,

168. அரைசு சிங்கத் தருகுசென் றேபசித்
திரைவி ரும்பிநின் னேவலுக் கேகினம்
விரைவில் வந்தொரு வேட்டை கண்டெமக்
கிரைத ரும்படி யேகெனக் கூறவே.[2] (155)

(இ.ள்) அரசனான சிங்கத்திடம் சென்று, 'ஐயா, பசியால் இரை வேண்டி உன்னுடைய ஏவல் நோக்கி வந்தோம். விரைவில் வந்து ஒரு வேட்டையாடி எங்களுக்கு இரை தர வேண்டும்' எனக் கூறின.

169. சிங்கம் நீவிர் சென்றிரை தேர்ந்துவந்
திங்கு நல்கு மெமக்கெ னச்சொல
அங்கு நான்கு மடவியெ லாந்திரிந்
தெங்கு மில்லை இரையென வந்தவே.[3] (156)

பா. பே.: பாடல் 167, 168, 169 ஆகிய மூன்றும் அச்சுப் பிரதியில் மாற்றங்களுடன் காணக்கிடைக்கின்றன.

பாடல் 167. 1. சம்பு வும்புலி யுங்கொடி யும்மெமை
நம்பு கென்று சொலிச்சில நாளெலாம்
தம்பு லத்திற் சகோதர ராமென
இம்பர் போற்ற விருந்துடன் வாழ்ந்தவே

பாடல் 168. 2. உரைசெய் சிங்க மொருதின நோய்கொடு
விரைசெய் வேட்டையின் மேற்செல வேறிருந்
திரைசெய் வேட்கையை யெய்தி யமைச்சரைப்
புரைசெ யன்பொடு நோக்கிடப் புகலுமால்

பாடல் 169. 3. பொங்கு வெம்பசி யேற்கிரை போய்க்கொணர்ந்
திங்கு நல்கு மென்றுரை செய்திட
அங்கு நான்கு மடவியெ லாந்திரிந்
தெங்கு மில்லை யிரையென வந்தவே

என்றுள்ளன

(இ.ள்) அதற்குச் சிங்கம் 'நீங்கள் சென்று இரை தேடி வந்து எனக்கும் கொண்டுவந்து கொடுங்கள்' எனச் சொல்ல, அந்த நான்கும் காடெல்லாம் திரிந்தும் எங்கும் இரை கிடைக்கவில்லை எனத் திரும்பி வந்தன.

170. உற்ற நான்கிலவ் வொட்டகம் ஒன்றலால்
மற்றி ரண்டையும் வம்மின்க ளென்றுதான்
கற்ற பாடையிற் காகம ழைத்துப்போய்க்
கொற்ற வேந்தன் சமூகம் குறுகியே. (157)

(இ.ள்) அந்த நான்கினுள் ஒட்டகத்தை நீக்கிக் காகம் மற்ற இரண்டையும் தான் கற்ற சங்கேத மொழியால் தனியாக அழைத்துப் போய் மன்னனான சிங்கத்தின் முன் வந்து சேர்ந்தது.

171. மன்ன னேயிவ் வனங்களெ லாந்திரிந்
தின்ன லுற்றும் இரையொன்று காண்கிலம்[1]
உன்ன ருட்கொ டுயிர்பிழைப் போமென
முன்னி வந்தன மென்று மொழியவே. (158)

(இ.ள்) 'அரசே இக்காடு முழுவதும் திரிந்து இன்னல் பல உற்றும் இரை ஒன்றும் கிடைக்கவில்லை. உன்னருளாலே இன்று உயிர் பிழைப்போம் என்று எண்ணி வந்தோம்' என்று கூறியது.

172. யாது நுங்கருத் தென்றுசிங் கஞ்சொல
கோதில் வேந்த கதனகற் கொன்றிட
போது மென்று புகலச் சிவசிவா
ஈது பாவ மெனச்செவி மூடியே. (159)

(இ.ள்) அதற்கு சிங்கம், 'உம் கருத்து என்ன?' என்று சொல்ல, 'குற்றமற்ற வேந்தனே, கதனகனைக்

பா. பே.: பாடல் 171. 1. இரையொன்று மில்லையால்

கொன்றால் போதும்' என்று காகம் சொல்ல, சிங்கம் 'சிவ சிவா ! இது கொடிய பாவம்' என்று கூறிக் காதுகளை மூடியது.

173. வாய சம்மது கண்டு வனத்தில்வாழ்
சீய மன்னவர் செய்கையி தாகும்நி[1]
யாய மென்று நவில்குவன் யான்முனம்
மாய வன்சொலும் வாய்மையிவ் வாறரோ. (160)

(இ.ள்) அது கண்ட காகம் 'வனத்தில் வாழும் சிங்க மன்னர்களின் செயல் இதுவேயாகும். இது நியாயம் என்றே நான் கூறுவேன். முன்னர் மாயவனான கண்ணனும் கூறிய உண்மை இதுவே.

174. ஒருவ னைக்கெடுத் தோர்குடி காக்கலாம்
ஒருகு டிகெடுத் தோர்நகர் காக்கலாம்
ஒருந கர்கெடுத் தோர்பெரு நாடெலாம்
ஒருவு துன்ப முறாவகை காக்கலாம். (161)

(இ.ள்) ஒருவனைக் கெடுத்து ஒரு குடியைக் காக்கலாம். ஒரு குடியைக் கெடுத்து ஓர் ஊரைக் காக்கலாம். ஓர் ஊரைக் கெடுத்து ஒரு பெரிய நாடே துன்பமுறா வகையில் காக்கலாம்.

175. என்று பஞ்சவர் முன்ன மியம்பவே
நன்றி தென்றவர் நன்மகன் தன்னையும்
கொன்று நின்று களப்பலி கூட்டியே
வென்றி யெய்தின ரென்று விளம்பவே. (162)

(இ.ள்.) என்று பாண்டவர்கள் முன் கண்ணன் கூறவே, நல்லது என்று பாண்டவர்கள் தம் மகனாகிய

பா. பே.: பாடல் 173. 1. வாயசம்மது கண்டடல் மன்னகேள்
சீய மன்னவர் செய்யை தாகும்நி

அரவானைக் கொன்று களப்பலி நிகழ்த்திப் போரில் வெற்றி எய்தினர்' என்று காகம் கூறியது.

176. அபயம் வாங்கி அடைக்கலம் புக்கதை
அபயம் மாற்றி அழிப்பர்க ளோவென
அபயம் ஈந்தவுன் னாலழி யாமலுன்
அபயம் காத்தத னாலதைக் கொல்வமால். (163)

(இ.ள்.) 'அபயம் என வந்து அடைக்கலம் புக்கதை அந்த அடைக்கலத்தை மாற்றி அழிப்பார்களோ?' எனச் சிங்கம் கேட்க, 'அபயம் தந்த உன்னால் அது அழியாமல் அதனாலேயே அதனைக் கொல்வோம்.'

177. என்று காகம் இயம்பம தோற்கடன்
ஒன்று முத்தரம் ஓதில னாதலால்
மென்று முள்ளை விழுங்கிய ஒட்டகம்
நின்ற பாலதை தேடிவந் துற்றவே[1] (164)

(இ.ள்.) என்று காகம் கூறவே மதோற்கடன் எந்தப் பதிலும் கூறவில்லையாதலால், முள்ளிலைகளை மேய்ந்து கொண்டிருந்த ஒட்டகம் இருக்குமிடம் தேடி அவை மூன்றும் வந்தடைந்தன.

178. அரசன் வெம்பசி யால்வருந் துற்றனன்[2]
இரைமற் றியாது மினிக்கிடை யாதுநாம்
உரைசெய் வோமென நான்கு மொருமையாய்
அரசன் முன்சென் றடிகள் வணங்கியே. (165)

(இ.ள்.) அரசன் கொடும் பசியால் வருந்துகிறான். இங்கு இரை ஏதும் கிடையாது. நாம் நம்மைத் தருவதாகக்

பா. பே.: பாடல் 177. 1. நன்றி தென்று நயந்தநெஞ் சொட்டகம்
நின்ற தோரிடம் தேடிவந் துற்றதே
பாடல் 178. 2. அரசன் வெம்பசியாகி வருந்தவான்.

கூறுவோம் என ஒரே மனத்தினராய்க் கூறி அரசன் முன் வந்து பாதங்களை வணங்கிக் கூறுகின்றன.

179. மன்ன னேயிவ் வனத்தி லிரையிலை
என்னை நீகொன் றிரையருந் தென்றுமுன்
சொன்ன காகத்தை நோக்கிம தோற்கடன்
என்ன நின்னுடல் சின்னதென் றேசொல. (166)

(இ.ள்.) முதலில் காகம் 'அரசே இவ்வனத்தில் இரை கிடைக்கவில்லை. ஆகவே என்னைக் கொன்றுண்' என்று கூற, மதோற்கடன் உன்னுடல் மிகச் சிறியது என்று கூறியது.

180. ஆயி னென்னை யருந்தெனச் சொன்னகோ
மாயு வோதவவ் வாறு மறுத்திடப்
பாயும் வெம்புலி தன்னைப் பருகென
நீயு மெற்கு நிரம்பிரை யோவென. (167)

(இ.ள்.) 'அதனால் என்னை உண்க' என நரிசொல்ல, சிங்கம் முன்போல் கூறி மறுத்தது. உடன் புலி தன்னை உண் எனக் கூறியதும், ''நீயும் எனக்குப் போதுமான இரையாகுவையோ'' எனக் கூறி மறுத்தது.

181. கதன கன்னிதைக் கண்டு நமைக்கொல
இதயம் வைத்தன வென்று நினைந்துநான்
அதன மென்னை யருந்தெனச் சொல்லுமுன்
பதறி வெம்புலி பாய்ந்திட மாய்ந்ததே. (168)

(இ.ள்.) இதைக் கண்ட கதனகன், நம்மைக் கொல்லத் திட்டம் தீட்டியுள்ளன என எண்ணிக் கொண்டு, 'நான் போதுமானவன் என்னை உண்' என்று சொல்லுமுன் புலி விரைந்து பாய்ந்து அதனைக் கொன்றது.

182. சிங்க மென்னி யருந்திசெந் நீருணத்
துங்க வெம்புலி மூளையைத் துய்த்திட
வெங்கள சம்புக னீரல் பிடுங்கிட
தங்கு காகந் தசைக ளயின்றதே. (169)

(இ.ள்.) சிங்கம் ஒட்டகத்தின் கழுத்தைக் கடித்துத் தின்றும் இரத்தத்தைக் குடித்தும் பசியாறியது. கொடிய புலி ஒட்டகத்தின் மூளையைத் தின்றது. நரி ஈரலைப் பிடிங்கித் தின்றது. காகம் ஒட்டகத்தின் தசைகளைத் தின்றது.

சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை - தொடர்ச்சி

183. கொடிய ரோடெவர் கூடினு மாங்கவர்
மடிதல் திண்ணமிவ் வாறவர் கொல்லுவர்
கொடிய வேந்தர்கை யிற்கொலை யுண்ணலின்
நெடிய போரில் உயிர்விடல் நீதியே. (170)

(இ.ள்.) கொடியவர்களோடு யார் கூடி யிருந்தாலும் அவர் மடிவது உறுதி. ஒட்டகத்தைச் சிங்கம் முதலானவை கொன்றது போல் கொடியவர் கொல்லுவர். கொடிய வேந்தர்களின் கையால் கொலையுண்டு மடிவதைவிட நீண்டபோரில் உயிர் துறத்தல் உயர்ந்த நீதியாகும்.

184. போரில் ஆவியைப் போக்கிடிற் சுவர்க்கமும்
போரில் வென்று பிழைத்திடிற் பூமியும்
சேரும் வீணில் உயிர்விடில் சொர்க்கமும்
பாரும் இல்லை நிரயம் படிவரே. (171)

(இ.ள்.) போரில் இறந்தால் சொர்க்கமும், வென்றால் நாடும் கிடைத்திடும். வீணாக உயிர் விட்டால் சொர்க்கமும் பூமியும் இல்லாமல் போவதுடன் நரகம் சென்றடைவர்.

185. பொருந ரோடு பொருதுயிர் மாய்பவர்
இருநி லத்துள் இறந்தும் இறந்திலர்
வெருவி யாவி விரும்பி இருப்பவர்
தரையின் மேவுசஞ் சாரப்பி ரேதமே. (172)

(இ.ள்.) எதிர்ப்பவரை எதிர்த்துப்போரிட்டு உயிர்விடுபவர் பரந்துபட்ட இவ்வுலகில் இறந்தும் இறவாமல் வாழ்பவர் ஆவார். மாறாக அஞ்சி உயிர்மேல் ஆசைப்பட்டு இருப்பவர்கள் தரையில் இருக்கும் நடமாடும் பிரேதமே.

186. அறிவி லார்தம தாண்மையி னாற்பிறர்
சிறிய ரென்றுதன் சிந்தை நினைப்பது
மறிதி ரைக்கடல் மன்னவன் முன்னமோர்
குறிய சிட்டைக் குறித்தது போலுமால். (173)

(இ.ள்.) அறிவில்லாதவர்கள் தங்கள் ஆண்மையினால் பிறரைச் சிறியவர் என நினைப்பது, மறித்து வீழும் அலைகடல் வேந்தன் முன்பு ஒரு சிட்டைக் கருதியது போலாகும்.

கடலைச் சிட்டு வென்ற கதை

187. விடைய தேதக் கதையென வேலையின்
புடையின் மேய்ந்திடுஞ் சிட்டுப் பொருந்திய
பெடையுந் தானும் பிரிவின்றி யாங்கோர்
செடியின் கீழிற் சிலநா ளிருந்ததே. (174)

(இ.ள்.) இடபம் அக்கதை என்னவென்று நரியைக் கேட்க, கடற்கரையில் மேய்ந்திருந்த சிட்டு ஒன்று தன் பெட்டையுடன் சேர்ந்து அங்கிருந்த ஒரு செடியின் கீழ் பிரிவின்றி வாழ்ந்திருந்தது.

188. அன்ன நாளிற் பெடைசினை யாய்முதிர்ந்
தென்ன புத்தி எனக்கிட மேதென
மன்னு மிவ்விட மன்றிமற் றோரிடம்
பின்னை யில்லெனச் சேவலும் பேசவே. (175)

(இ.ள்.) அவ்வாறு அவை வாழ்ந்திருக்கும் போது பெண்சிட்டு கருவுற்று முட்டையிடும் பருவம் வந்தது. பெண்சிட்டு ஆண்சிட்டைப் பார்த்து நான் முட்டையிட ஏற்ற இடம் எது எனக் கேட்க. இவ்விடத்தை விடச் சிறந்த இடம் வேறு இல்லை என்றது ஆண் சிட்டு.

189. பொருக டற்கரை தன்னில்பொ ருந்தியே
அருமை முட்டையை யிட்டுவைத் தாலதை
திரையெ டுத்துக்கொண் டேகிலென் செய்குவோம்
உரையெ னச்சிறு பேடுநின் றோதவே. (176)

(இ.ள்.) அந்தக் கடற்கரையில் முட்டையிட்டு வைத்தால் கடலலை அதை எடுத்துக்கொண்டு சென்றால் என்ன செய்வது சொல் எனப் பெண் சிட்டு கேட்டது.

190. போடி போவென்னப் பெண்புத்தி யிக்கரை
நாடி யக்கடல் நம்மையெண் ணாமலே
ஆடி முட்டைகொண் டேகி லதுபடும்
பாடு நாயும்ப டாதென்று சாற்றவே. (177)

(இ.ள்) போடி போ, என்ன பெண் புத்தி உன்னுடையது. இக்கரையில் இடப்படும் முட்டைகளை அக்கடல் நம்மை நினைத்துப் பாராமல் எடுத்துச் சென்றால் அக்கடல் படும்பாடு நாயும் படாது என்றது ஆண் சிட்டு.

191. என்ன புத்திநீ யெண்ணி யுரைத்தனை
அன்ன முற்படச் சொன்னதை விட்டுயிர்
தன்னை யாமை தரையில் விடுத்ததே
என்ன வக்கதை யேதுரை என்றதே. (178)

(இ.ள்) உடனே பெண்சிட்டு, “நீ என்ன புத்தி கொண்டு சொல்கிறாய். முன்பு அன்னம் சொன்னதை மறந்துவிட்டு தரையில் விழுந்து ஆமை உயிர்விட்டது போலுள்ளது” என்று சொல்ல அக்கதை என்ன சொல் என்றது ஆண் சிட்டு.

ஆமை சொற்புத்தி கடந்து இறந்த கதை

வேறு

192. விகடசங் கடமென்னு மன்னத் தோடே
மேவுகம்புக் கிரீவ னெனு மாமை முன்னர்
சுகமுடனே ஒருகுளத்தி லனேக நாளாய்த்
தோழமையாய் இருக்கமழை சொரிவில் லாமல்
அகல்குளமும் புனல்வற்றிப் போகை யாலே
அப்புறமோர் குளநாடிப் போக வன்னம்
பகரறிய வாமைதனை யழைத்திக் கோலைப்
பற்றிவாய் திறவாதே வருக வென்றே. (179)

(இ.ள்) முன்னொரு காலத்தில் விகடன் சங்கடன் என்னும் இரு அன்னத்துடன் கம்புக்கிரீவன் என்னும் ஆமை நட்பு கொண்டு சுகமுடன் ஒரு குளத்தில் பல நாள் வாழ்ந்து வந்தது. அப்பொழுது ஒரு சமயம் மழையின்றி அக்குளம் நீர் வற்றி போனது. எனவே அன்னம் ஆமையை அழைத்து ‘நாம் வேறோர் குளத்தை நாடிப் போகலாம். இக்கோலை வாயால் பற்றி வாய் திறவாமல் வருக’ என்றது.

193. இருபுறமுந் தாம்கவ்விக் கொண்டு வானில்
எழுந்துபறந் தவைகொடுபோம் வழியிற் கண்டோர்
கருதியிது புதுமையென நகைத்து நின்று
கைகொட்டிப் பார்க்கவந்தக் கமட னாரும்

மருவுநகை யேதென்று கேட் வெண்ணி
வாய்திறந்து கீழ்விழுந்து மடிந்து போனார்
ஒருமையுளார் சொன்னதுகே ளாத பேர்கள்
உறுங்கரும மிவ்வாறென் றோதிப் பின்னும். (180)

(இ.ள்) ஆமை கோலைக் கவ்விக்கொள்ள இருபுறமும் கோலைப் பற்றிக்கொண்டு அன்னங்கள் பறந்தன. வழியில் அதைக் கண்டவர்கள் "இது புதுமை" எனக் கூறிக் கைகொட்டி நகைத்தனர். ஆமையும், சிரிப்பது ஏன் எனக் கேட்க எண்ணி வாய் திறந்து கீழ் விழுந்து இறந்தது. ஒன்றுபட்ட மனத்தார் சொன்னதைக் கேட்காதவர்கள் அடையும் நிலை இதுவே என்று கூறி மேலும் கூறியது.

மும்மீன் கதை

194. சேவலது கேட்கமற்றோர் கதையுண் டென்னச்
செப்புகவக் கதையென்னப் பேடு கூறும்
வாவுபுனற் குளமொன்றங் கதிலே மும்மீன்
வாழ்ந்தவவை தம்முளொன்று வருமுன் காப்போன்
தாவுசெயன் மற்றொன்று வருங்காற் காப்போன்
சாற்றிடின்மற் றொன்றுவந்த பின்காப்போனாம்
ஓவறவே யனேகநா ளிருந்து பின்னர்
ஒருநாளில் வலைஞர்புகல் உரையைக் கேட்டே. (181)

(இ.ள்) சேவலாகிய நீ கேட்பதற்கு மற்றுமோர் கதை உண்டு எனப் பேடு கூற அக்கதை என்ன வென்று ஆண்சிட்டு கேட்டது. பெண்சிட்டு கூறும், ஒரு குளத்தில் மூன்றுமீன்கள் வாழ்ந்து வந்தன. அவற்றுள் ஒன்று வருமுன் காப்போன். மற்றொன்று வருங்கால் காப்போன். மூன்றாவது வந்தபின் காப்போன் என்பனவாம். இவை ஒற்றுமையாகப் பலநாள் வாழ்ந்து வந்தன. ஒருநாள் வலைஞர்கள் பேசுவதைக் கேட்டு,

195. இந்தவிடம் விட்டுமற்றோ ரிடத்திற் செல்வோம்
என்றுவரு முன்காப்போ னிசைப்ப வம்மீன்
வந்தபொழு தாகவதற் கிப்போ தேநாம்
வழிபார்க்க வேண்டுமோ விடைச்சி தானே
அந்தமுடன் சோரரிரு வரையும் வீட்டில்
அவற்கணவன் கண்டுமவ னறியாவண்ணம்
தந்திரமொன் றாலவரைத் தப்ப விட்டுத்
தானுமவ னைப்புணர்ந்து தருக்கினாளே. (182)

(இ.ள்) வருமுன் காப்போன் மற்றவற்றைப் பார்த்து, " இந்த இடத்தை விட்டு வேறோர் இடத்திற்குச் செல்வோம் என்றது. அதற்கு வருங்காற் காப்போன், வந்த பொழுது ஆகவேண்டியதைப் பார்ப்பதற்கு இப்பொழுதே வழி பார்க்க வேண்டுமோ? இடைச்சி ஒருத்தி தன்னை நாடி வந்த கள்ளக் காதலர் இருவரையும் வீட்டில் அவள் கணவன் கண்ட பின்னும் அவனறியா வண்ணம் ஒரு தந்திரத்தால் அவர்களைத் தப்பவிட்டுத் தானும் தன் கணவனுடன் சேர்ந்திருந்து மகிழ்ந்தாளே.

இடைச்சி சோர புருடரைக் காத்த கதை

196. கள்ளமாப் பிள்ளையிரு வரவரா ரென்னிற்
கருதுதண்ட பாசனவன் காளை யோடே
உள்ளமகிழ்ந் தவன்கூடி இருக்கும் நாளில்
ஒருநாளங் கேகாளை யுற்ற வேளை
மெள்ளவவன் தந்தைவர வவனைத் தொம்பை[1]
மேவுவித்தங் கவனுடனே மேவுங் காலை
வள்ளலெனும் புருடன்வரச் சண்டை போலே
வைதுகொண்டு போவென்றே வழிவிட் டாளே. (183)

பா. பே.: பாடல் 196. 1. ஒருநாளி லவன்றந்தை யுற்ற வேளை
மெள்ளவவன் காணுமுனம் அவனைத் தொம்பை

(இ.ள்) இடைச்சி ஒருத்தி தண்டபாசன் மற்றும் அவன் மகன் காளை என்னும் இருவருடனும் கள்ளத் தொடர்புகொண்டு இன்புற்றிருந்தாள். ஒரு நாள் அவள் வீட்டிற்குக் காளை வந்திருந்தான். திடீரென அவனுடைய தந்தை தண்டபாசன் அங்குவர இடைச்சி காளையை நெற்குதிரில் ஒளிந்திருக்கச் சொல்லிவிட்டு வந்தவனுடன் மகிழ்ந்திருந்தாள். அந்த நேரத்தில் அவளுடைய கணவன் அங்கு வந்தான். உடனே அவள் தண்டபாசனிடம் நீ வைதுகொண்டே வெளியே போ எனக் கூறி அனுப்பினாள்.

197. அப்படியே வைதுகொண்டு விரைந்து போனான்
அகத்துடையான் இவன்வரக்கா ரணமே தென்றான்
எப்படியோ இவராரோ அறியேன் கையில்
எடுத்ததடி யுங்கொண்டு துரத்தி வந்தான்
தப்பியொரு பயலோடி வந்து வீழ்ந்து
தாயேயுன் தஞ்சமென்றிங் கொளித்துக் கொண்டான்
கைப்பிடித்த தடியுடனே தேடித் தேடிக்
காணாமற் கருவிக்கொண் டேகி னானே. (184)

(இ.ள்) அதன்படியே அவன் வைதுகொண்டே வேகமாகப் போனான். அவளுடைய கணவன் 'இவன் வரக் காரணம் என்ன?' என்று கேட்டான். இவர் யாரென்று எனக்குத் தெரியாது கையில் தடியுடன் அவன் யாரையோ துரத்தி வந்தான். அவனிடமிருந்து தப்பி ஒரு பயல் ஓடிவந்து வீழ்ந்து, "தாயே உன் தஞ்சம்" என்று கூறி இங்கு ஒளிந்து கொண்டான். வந்தவன் தன் தடியுடன் வீடெங்கும் தேடித்தேடிக் காணாமல் கருவிக்கொண்டே சென்றான் என்றாள்.

198. என்றுசொல்ல நன்றுசெய்தாய் என்ன வீட்டில்
இருந்தவனை யழைக்கவவன் வெளியே வந்தான்
ஒன்றுமிலை யவன்போனான் நீயும் போவென்
றுரைத்தனனங் கவனுமெள்ளத் தப்பிப் போனான்

இன்றுநமக் கென்னதுன்பம் வந்த வேளைக்
கேற்றபடி நினைப்பமென்ன ஏற்ப விட்டன்
றுன்னுவிதிப் படிமுடியு மென்ன மும்மீன்
சொல்லாம லேயயலோர் சுனையிற் போமால்.[1] (185)

(இ.ள்) அவள் அவ்வாறு சொல்ல 'நல்ல காரியம் செய்தாய்' என்று சொல்லி வீட்டில் இருந்தவனை அழைக்க, அவன் வெளியே வந்தான். அவனைப் பார்த்துத் துன்பம் ஒன்றுமில்லை நீயும் போகலாம் என்று அனுப்பி வைத்தான். இன்று நமக்கு என்ன துன்பம் வந்தாலும் வந்த நேரத்தில் அதற்கேற்பச் சிந்தித்து முடிப்போம் என்று சொல்ல, வந்தபின் காப்போன் விதிப்படி எல்லாம் முடியும் என்றது. உடனே முதல் மீன் ஏதும் சொல்லாமலேயே வேறோர் சுனைக்குச் சென்றது.

199. மற்றைநாள் வலைபோட்டார் வருங்காற் காக்கும்
மதியெனுமீ னகப்பட்டு மரித்த மீன்போல்
உற்றதுமற் றதையெடுத்துக் கரைமேற் போட்டே
ஒருதரம்பின் வீசவந்த பின்னேகாப்போன்
கொற்றவலைக் குள்ளாகிப் பதைத்துப் பாயக்
கொன்றுவிட்டா ரதற்குள்ளே குளத்து நீர்தான்
வற்றவிட்ட வாய்காலுடன் புனலிற் பாய்ந்து
மறுகுளத்திற் புகுந்திருந்து வாழ்ந்த தன்றே. (186)

(இ.ள்) மறுநாள் வலைஞர் வந்து வலை வீசினர். வலையில் வருங்காற் காக்கும் மதி எனும் மீன் அகப்பட்டு இறந்த மீன்போல் கிடந்தது. வலைஞர் அதை எடுத்துக் கரையில் போட்டுவிட்டு பின்னும் ஒரு தரம் வலையை வீச, வந்தபின்காப்போன் அதில் சிக்கிப் பதைத்து துடிக்க, அதை வலைஞர்கள் கொன்றுவிட்டனர். அதற்குள்ளே

பா. பே.: பாடல் 198. 1. கேற்றபடி செய்வமென வருமுன்காப்போன்
அன்றும் மற்றோர் தடாகமேக மற்றை மீன்கள்
அகலாம லச்சுனையி லிருக்கும்போது

குளத்து நீரை வற்றவிட்ட வாய்க்காலில் செல்லும் நீரில் பாய்ந்து வருங்காற் காப்போன் வேறொரு குளத்திற்குச் சென்று வாழ்ந்தது.

கடலைச் சிட்டு வென்ற கதை - தொடர்ச்சி

200. என்றுசொலச் சேவனமக் கிடமு மீதே
இவ்விடத்தே நீயுமுட்டை யிடுவா யென்னத்
தன்றுணையும் முட்டையிட இவைக ளெல்லாம்
சமுத்திரரா சனுங்கேட்டுச் சமர்த்தைப் பார்ப்போம்
என்றுமுட்டை தனையெடுத்துப் போனா னப்போ
தெமது முட்டை தனைச்சும்மா தந்தா லுய்ந்தாய்
இன்றுதரா திருந்தாயேற் கடலே துன்பம்
எய்துவிப்பே னெனப்பேசா திருந்த தன்றே. (187)

(இ.ள்) என்று பெண் சிட்டு சொல்ல, ஆண்சிட்டு, 'நமக்கு இதுவே வாழிடம். நீ இங்கேயே முட்டை இடுவாய்' என்று சொல்ல, பெட்டையும் அங்கு முட்டை இட்டது. இவை பேசியவற்றை எல்லாம் சமுத்திரராசன் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, சிட்டின் சாமர்த்தியத்தையும் பார்ப்போம் என்று எண்ணி முட்டைகளை எடுத்துப் போனான். அப்போது ஆண்சிட்டு, "எங்கள் முட்டைகளைத் தந்தால் நீ தப்பிப்பாய் இல்லாவிடில், கடலே! உனக்குத் துன்பம் விளைவிப்பேன் என்று சொல்லியும் சமுத்திரராஜன் பேசாதிருந்தான்.

201. அக்கணமே தன்னினங்கள் எல்லாங் கூட்டி
அகிலத்திற் பலபறவைச் சாதி யெல்லாம்
ஒக்கவரச் சென்றுபட்சி ராஜன் முன்போய்
உவணதே வாபறவை குலங்கட் கெல்லாம்
மிக்கதொரு பெரும்பழியாய்ச் சமுத்திர ராசன்
மிகையுடனே முட்டைகொண்டா னந்த முட்டை
இக்கணமே யழைப்பித்தா லன்றி யாரும்
எண்ணார்நம் குலத்தையென்றே இரங்கிக் கூற. (188)

(இ.ள்) உடனே ஆண் சிட்டு, தன் இனப் பறவைகளாக கூட்டி, உலகத்தின் பலவகைப் பறவை இனங்களையும் ஒன்று திரட்டி, பறவைகளுக்கரசன் முன் போய், பறவைகளுக்கு அரசே பறவைக் குலங்களுக்கெல்லாம் பெரும் பழியாகச் சமுத்திரராஜன் அதிகாரத்துடன் என் முட்டைகளைக் கவர்ந்து கொண்டான். அந்த முட்டைகளை இக்கணமே மீட்டுக் கொணரச் செய்தாலன்றி யாரும் நம் பறவைக் குலத்தை மதிக்க மாட்டார் என்று வருந்திக் கூறியது.

202. கருடனுமாங் கதையபிமா னித்துக் கொண்டு
கண்ணனுடை சந்நிதியிற் கழறக் கேட்டே
பொருகடல்வேந் தனையழைத்து முட்டை கொண்டு
போனதென்ன விந்நேரம் கொண்டு வந்தே
குருவிகையிற் கொடுத்தாலே கொடுத்தா யன்றேல்
குறையுனக்குண் டெனக்கூறக் குலைந்து நெஞ்சம்
வெருவிமுட்டை கொண்டுவந்து கொடுத்தா னென்றால்
மேதியினிற் றந்திரம்போல் வேறே தென்னும். (189)

(இ.ள்) கருடனும் அதை ஏற்றுக்கொண்டு, கண்ணனுடைய சந்நிதி முன் சென்று வேண்டிக் கொண்டது. அதைக் கேட்ட கண்ணன் கடலரசனை அழைத்து, ''முட்டையை எடுத்துச் சென்றது ஏன் ? உடனே அவற்றைக் கொண்டுவந்து குருவி கையில் கொடுப்பாய். இன்றேல் உனக்குத் துன்பம் ஏற்படும் என்று கூற, கடலரசன் மனம் குமைந்து அஞ்சி முட்டையினைக் கொண்டு வந்து கொடுத்ததென்றால் உலகில் தந்திர உத்திற்கு இணை வேறு ஏது ? என்றது.

சிங்கத்தோடு வாழ்ந்து இடபம் இழந்தகதை - தொடர்ச்சி

203. இப்படியே நரிசொல்லும் புத்தி யெல்லாம்
இடபமுண்மை யெனமனதி லெண்ணிக் கொண்டே
ஒப்பரிய சிங்கத்தைப் பொருது கொல்லும்
உபாயமெவ்வா ரெனச்சிங்க முன்னைக் கொல்ல
வெப்பமுடன் கண்சிவந்தே யுடல்கம் பித்து
வெவ்வாயுந் திறந்து சண்டை முடுக்கும் நீயும்
அப்பொழுதுன் வாலெடுத்துத் தலையுங் கொம்பும்
அசைத்துக்கொண் டெதிரேசென் றமர்செய்
வாயே. (190)

(இ.ள்) இப்படியாக நரி சொன்னவற்றை யெல்லாம் உண்மை என நம்பிய இடபம், "ஒப்பற்ற அந்தச் சிங்கத்துடன் போரிட்டுக் கொல்லும் வழிதான் என்ன ?" என்று கேட்க, சிங்கம் உன்னைக் கொல்ல வெம்மையுற்ற உடலுடன் கண் சிவந்து உடல் அசைத்து திறந்த வாயுடன், சண்டையைத் தொடங்கும். நீயும் அப்பொழுது உன் வாலையும் தலையையும் கொம்பையும் அசைத்துக் கொண்டே எதிரே சென்று போர் புரிவாயே.

204. என்றுபுத்தி சொல்லிவைத்துக் கரட கன்பால்
ஏகியதற் குரைத்தரசன் பக்கற் சென்றே
இன்றுகொல்ல வருதிடபம் நீயு மெத்த
எச்சரிக்கை யாயிருக்க வென்று மீளக்
குன்றுநிக ரிடபமெதிர் வந்தே யந்தக்
கொடியசிங்கம் பொரவிருந்த கொள்கை கண்டே
வென்றிதைநாம் கொல்வோமென் றெண்ணித் தானும்
வெகுண்டுதுள்ள வந்துசமர் விளைத்த தன்றே.(191)

(இ.ள்) என்று தமனகன் எருதுக்கு அறிவுரைகள் சொல்லி விட்டுக் கரடகன்பால் வந்து நடந்ததை எல்லாம் உரைத்துவிட்டுப் பின் அரசனிடம் வந்து, இன்று அந்த

இடபம் உன்னைக் கொல்ல வருகிறது. நீயும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றது. குன்றினை ஒத்த தோற்றமுடைய எருது சிங்கத்தின் எதிரே வந்து அது போரிடத் தயாராக இருந்த தன்மையைக் கண்டு, இதை நாம் வென்று கொல்வோம் என எண்ணித் தானும் வெகுண்டு வந்து போர் புரிந்தது.

205. விண்ணதிர மண்ணதிரக் கடல்த தும்ப
வெற்பதிர ஒன்றோடொன் றுறுதல் கண்டு
துண்ணெனநெஞ் சகநடுங்கி யரசர்க் கிந்த
துன்பம்விளைந் ததுசுவாமித் துரோக மன்றோ
கண்ணெதிரே கண்டுமனங் களித்தா யென்று
கரடகன்றான் றமனகனைக் கழறிப் பேதம்
பண்ணினது போதுமினி விலக்கி நட்புப்
பண்ணுவது தருமமென்றே பகர்ந்து பின்னும். (192)

(இ.ள்) விண்ணும் மண்ணும் அதிரவும் கடல் கொந்தளிக்கவும், மலைகள் அதிரவும் ஒன்றோடு ஒன்று போரிடுவதைக் கண்ட கரடகன் திடுக்கிட்டு மனம் நடுங்கி அரசர்க்கு இந்தத் துயரம் வந்தது ராஜ துரோகமன்றோ ? இதைக் கண்ணெதிரே கண்டும் மனம் மகிழ்ந்தாயா? என்று தமகனிடம் மனம் கலங்கிக் கூறிப் 'பேதம் பண்ணியது போதும் இனி விலக்கி இருவருக்கும் மீண்டும் நட்பு ஏற்படுத்துவதே அறம்' எனக் கூறிப் பின்னும்..

206. பிரித்திடுதல் பிரியாமற் பேணிக் கொள்ளல்
பிரிந்தவரை முன்போலப் பேதம் இன்றிப்
பொருத்திடுதல் இவைமூன்றும் வல்ல பேரே
புவிமீதில் அமைச்சர்களாய்ப் புகழ்கொள் வர்கள்
பெருத்தரசர் இன்பமுற்றால் அமைச்சர் இன்பம்
பெறுவரவர் துன்பமுற்றா லுறுவர் துன்பம்
கருத்தில்வன்ம மமைச்சர்வைத்தா லவர்சே னைக்குங்
காவலர்சூழ் தமக்கும்வரும் கதிகே டென்றே. (193)

(இ.ள்) ஒன்றாக இருந்தோரைப் பிரித்தல், அவர்களைப் பிரியாமல் பேணிக் காத்தல், பிரிந்தவரை மீண்டும் முன்போல் வேறுபாடு இன்றிப் பொருத்திடுத்தல். இவை மூன்றும் வல்லவரே உலகில் அமைச்சர்களாய்ப் புகழ் பெறுவர். அரசர் இன்பமுற்றால் அமைச்சர் இன்பம் பெறுவர். அரசர் துன்பமுற்றால் அமைச்சரும் துன்பமடைவர். அரசர் கருத்தில் வன்மம் வைத்தால் அவர்தம் சேனைக்கும், காவலர்க்கும், சூழ்ந்திருக்கும் தமக்கும் கேடு வரும்.

207. ஒருமையிலா மல்தருமந் தேடுவாரும்
உற்றாரைக் கெடுத்துநிதி தேடுவாரும்
மருவுசுகத் தால்வித்தை தேடு வாரும்
வலிமையினால் மாதரின்பந் தேடு வாரும்
இருவருயிர் ஒன்றெனவே கூடி வாழ்ந்தங்
கிருப்பவரை நாங்கெடுப்போ மென்று நெஞ்சிற்
கருதியவர்க் கின்னல்பல தேடு வாரும்
காசினியில் இன்பமெய்தார் கதியெய் தாரே. (194)

(இ.ள்) மனம் ஒருமையில்லாமல் தருமத்தைத் தேடுவாரும், தம் உற்றாரைக் கெடுத்து அதன் மூலம் செல்வத்தைத் தேடுவாரும், உடல் சுகத்தால் கல்வி வித்தையைத் தேடுவாரும், வலிமை செய்து மாதரிடம் இன்பம் தேடுவாரும், இருவர் உயிர் கலந்து ஒன்றாகக் கூடி வந்திருப்பவர்களைக் கெடுப்போம் என நெஞ்சில் வஞ்சம்கொண்டு அவர்க்குப் பல இன்னல்கள் தேடுவாரும் உலகில் இன்பமடையமாட்டார்கள். அவர்கள் நற்கதியும் அடையமாட்டார்கள்.

துட்டபுத்தி கெட்ட கதை

208. துட்டபுத்தி யென்பவன்றன் பிதாவும் தானும்
துஞ்சினா னென்னவந்தக் கதையே தென்ன
பட்டணமொன் றுண்டதிலே வணிக ரீன்ற
பாலரிரு வோரொருவன் தருமபுத்தி

துட்டபுத்தி மற்றொருவன் இவர்கள் கூடித்
தூரத்தில் நிதிதேடப் போனா ரங்கே
இட்டமுடன் தருமபுத்திக் காயி ரம்பொன்
எய்தவவன் தனக்கெய்தா திடருற் றானே. (195)

(இ.ள்) இவ்வாறே துட்டபுத்தி என்பவனும் அவன்தன் தந்தையும் இறந்தனர் என்று கரடகன் சொல்ல, அது என்ன கதை எனத் தமனகன் கேட்டது. ஒரு நகரத்தில் இரு வணிக குமாரர்கள் இருந்தனர். ஒருவன் பெயர் தருமபுத்தி, மற்றொருவன் துட்டபுத்தி. இவ்விருவரும் சேர்ந்து நெடுந்தொலைவில் உள்ள நகருக்கு நிதி தேடச் சென்றனர். அங்குத் தருமபுத்திக்கு ஆயிரம் பொன் லாபம் கிடைத்தது. இதைக் கண்டு துட்ட புத்தி மனம் துயரப்பட்டான்.

209. ஆயிரம்பொன் கிடைத்திருந்தும் விசார மென்ன
ஐந்நூறைந் நூறாகப் பகுத்துக் கொள்வோம்
நீயிரங்க லென்றுதன்ம புத்தி வைத்த
நேயத்தா லாங்கவனைக் கூட்டிப் போக
ஞாயமல்ல வீதையூரிற் கொண்டு போதல்
நாமிந்த மரத்தின்கீழ்ப் புதைத்து வைத்துப்
போயிதனை மற்றொருநாள் எடுத்துப் போதல்
புத்தியென்றே துட்டபுத்தி போதித் தானே. (196)

(இ.ள்) அவன் மனத் துயரத்தைக் கண்ட தருமபுத்தி, ‘ஆயிரம் பொன் கிடைத்திருந்தும் ஏன் வருந்துகிறாய்? இதை நாம் ஐந்நூறு ஐந்நூறாகப் பிரித்துக் கொள்வோம். நீ கவலைப் படாதே’ என்று அவன் மேல் வைத்த அன்பின் காரணமாகக் கூறி, அவனை அழைத்துக்கொண்டு திரும்பினான். வழியில் ‘இதை நாம் இப்பொழுது ஊருக்குள் கொண்டு செல்வது நியாயமல்ல. எனவே நாம் இந்த ஆயிரம் பொன்னையும் இந்த மரத்தின் கீழ் புதைத்து வைத்து விட்டுச் செல்வோம் பின்னொரு நாள் வந்து எடுத்துக் கொள்வோம். அதுவே அறிவுடைமை ஆகும்’ எனக் கூறினான்.

210\. அன்னவன்சொற் படிகேட்டோர் மரத்தின் கீழே
ஆயிரம்பொன் னையும்புதைத்து வைத்துப் போனார்
பின்னிரவில் துட்டபுத்தி கொண்டு போனான்
பிறகொருநா ளிருவருமாய்க் கூடிக் கொண்டு
பொன்னிருந்த விடம்பார்த்தார் காணார் துட்ட
புத்தியைநீ யிதையெடுத்துப் போக லாமோ
வென்னவவன் நீயெடுத்துப் போனா யென்ன
இருவரும்போய் வழக்கர்முன் னேறி னாரே.[1] (197)

(இ-ள்) துட்டபுத்தியின் சொல்லைக் கேட்டு ஒரு மரத்தின் கீழே ஆயிரம் பொன்னையும்புதைத்து வைத்துவிட்டு இருவரும் ஊருக்குள் சென்றுவிட்டனர். அன்று பின்னிரவில் துட்டபுத்தி வந்து ஆயிரம் பொன்னையும் எடுத்துச் சென்றுவிட்டான். பிறகு ஒரு நாள் இருவரும் சேர்ந்து வந்து பொன் புதைத்து வைத்த இடத்தைப் பார்க்க, அங்குப் பணம் காணவில்லை. உடனே தருமபுத்தியைப் பார்த்து துட்டபுத்தி நீ இதை எடுத்துப் போகலாமா? என்று கேட்டான். உடனே தருமபுத்தி நீ தான் எடுத்துப் போனாய் எனப் பழித்தான். இதனால்இருவரும் நீதிமன்றம் சென்றனர்.

211\. ஒருவர்மே லேயொருவர் சாற்ற வந்த
வூர்வழக்கர் சாட்சிபிற ருண்டோ வென்ன
இருவருமே யறிந்ததல்லால் பிறரங் கில்லை
யென்றுதன்ம புத்திசொல்ல விதற்கு சாட்சி
மரமுரைக்கு மென்றுதுட்ட புத்தி சொல்ல
வழக்கரெல்லா மதிசயமாய் மரத்தைக் கேட்போம்
இருள்விடிந்த பின்வாரும் நீவி ரென்றார்
இல்லிடத்திற் கவரவரு மேகி னாரே. (198)

(இ-ள்) இருவரும் ஒருவர் மேலொருவர் குற்றம் சாட்டியதைப் பார்த்த ஊர் வழக்கர்(நடுவர்) உங்கள் சொற்களுக்குச் சாட்சி உண்டோ என்று கேட்டார். இதற்கு தருமபுத்தி 'நாங்கள் இருவர் மட்டும் அறிவோம். இதை

பா. பே.: பாடல் 210. 1. இருவரும்போய் வழக்கர்முன்ன மியம்பி னாரே.

அறிவோர் பிறர் அங்கு இல்லை' என்றான். உடனே துட்டபுத்தி மரம் சாட்சி சொல்லும் என்று சொன்னான். வழக்கர் எல்லாம் அதிசயமாய், 'மரத்தைக்கேட்போம். விடிந்தபின் இருவரும் வருக' எனக் கூற அனைவரும் வீட்டிற்குச் சென்றனர்.

கொக்கு நாகத்தைக் கொன்ற கதை

212. துட்டபுத்தி தன்னுடைய பிதாவை யந்தத்
தொன்மரத்து ளொத்திதனைச் சொல்நீ யென்ன
நட்டம்வரும் நீநினைத்த நினைவி னாலே
நமக்கின்று முன்னமொரு நாகங் கொக்கின்
முட்டைகளைக் களவுகொள்ள கொக்கு நண்டின்
மொழிப்படியே கீரிவளை தொடுத்துப் பாம்பின்
வட்டவளை மட்டாக மீனைப் போட
வந்தொருகீ ரியும்பாம்பை வதைத்த தென்றான். (199)

(இ.ள்) துட்ட புத்தி தன் தந்தையை மரத்துள் ஒளிந்திருந்து எனக்காக சாட்சி சொல் என்றான். அவன் தந்தையோ உன் எண்ணத்தால் நமக்கும் பெரிதும் நட்டம் வரும். முன்னம் ஒரு நாகம் கொக்கின் முட்டையைக் கவர்ந்து உண்டது. கொக்கு நண்டிடம் ஆலோசித்து அதன்படி கொக்கு பாம்பின் வளை முதலாக ஒரு கீரியின் இருப்பிடம் வரை மீனைப் போட்டது. மீனைத் தொடர்ந்து வந்த கீரி பாம்பைக் கொன்றது என்றான் .

213. தந்தையுரைத் ததுகேளான் வலிமை யாலே
தானிழுத்துப் போயிருளிற் றருவி னாழ்ந்த
பொந்தினிலே யங்கவனை வைத்துப் போனான்
பொழுதுவிடிந் ததன்பின்பு வழக்கர் கூடி
வந்துநின்று கேட்கவவன் தன்ம புத்தி
வணிகனெடுத் தானென்றே வழுத்த லோடும்
சிந்தையதி சயமாகி வழக்கர் தருவுஞ்
செப்பினது புதுமையெனச் செப்பி னாரே. (200)

(இ.ள்) தந்தை உரைத்ததைக் கேளாத துட்டபுத்தி பலாத்காரமாகத் தந்தையை இழுத்துக்

கொண்டு போய் மரத்தில் இருந்த பொந்தில் அமர்த்தி விட்டான். பொழுது விடிந்த பின்பு எல்லோரும் வந்து சாட்சி கேட்க, துட்டபுத்தியின் தந்தை தருமபுத்திதான் எடுத்தான் எனக் கூறினான். அதிசயப்பட்ட வழக்காகள் மரம் பேசுவது புதுமை என்றனர்.

214. இதுகபட மென்றுதன்ம புத்தி யெண்ணி
ஏறிமரப் பொந்திலெரி தழலை மூட்ட
அதிலிருந்த கிழவணிகள் பதைத்து வீழ்ந்தே
ஐயகோ துட்டபுத்தி கெடுத்தா னென்ன
மதியுடைய வழக்கரும்போ யரசர் முன்னே
வழுத்தலுமங் கவன்றன்னை வதைத்தார் தந்தை
குதிகொளன லால்வெதும்பி மாய்ந்தான் பொன்னும்
குறையாமற் தன்மபுத்தி கொடுபோ னானே. (201)

(இ.ள்) இது வஞ்சகம் என்று தருமபுத்தி எண்ணிக் கொண்டு, மரத்தில் ஏறி மரப்பொந்திற்குள் நெருப்பை மூட்டினான். உடனே அதிலிருந்த கிழவணிகன் பதைபதைத்துக் கீழே வீழ்ந்து "ஐயோ துட்டபுத்தி கெடுத்தானே'' என்று சொல்ல, மதியுடைய வழக்கரும் இதை அரசனிடத்தில் சென்று சொன்னார்கள். அரசன் துட்டபுத்தியை வதைத்தான்.அவன் தந்தை நெருப்பால் வெந்து மாய்ந்தான். தருமபுத்தி ஆயிரம் பொன்னையும் குறையாமல் எடுத்துச் சென்றான்.

இரும்பை எலி தின்ற கதை

215. என்றுமொரு பட்டணதிற் செட்டி மார்கள்
இருவரவர் சினேகமாய் இருக்கும் நாளில்
ஒன்று துலா மாயிரமா மிரும்பு கொண்டே
ஒருவணிகன் வசத்தொருவன் வைத்துப் போய்நாள்
சென்றுவந்தான் வருமுன்னே இரும்பை யெல்லாம்
தின்றுவிட்ட தெலியென்றே செப்பக் கேட்டு
நன்றதற்கு வந்ததென்ன போகு தென்று
நண்புகொண்டு முன்போல நண்ணி னானே. (202)

(இ.ள்) மேலும், ஒரு பட்டணத்தில் செட்டிமார்கள் இருவர் நட்பாக இருந்தனர். ஒருநாள் அவருள் ஒருவன் ஓராயிரம் துலாம் இரும்பை மற்றொரு வணிகனிடத்தில் கொடுத்து வைத்து, வெளியூர் சென்று, பின் நெடுநாள் கழித்து வந்தான். மீண்டும் அவன் தன் நண்பர்களிடம் வந்து இரும்பைக் கேட்க, இரும்பை யெல்லாம் எலி தின்றுவிட்டது எனச் சொன்னான். இதைக் கேட்ட செட்டி, நல்லது அதனால் என்ன வந்தது. போகிறது என்று கூறி முன்போல் நட்பாக இருந்தான்.

216. விருந்துசமைத் தார்களெண்ணெய் தேய்த்துக் கொண்டு
மிக்கவவன் பிள்ளைதனக் கெண்ணெய் தேய்த்துப்
பொருந்துகுளந் தனில்மூழ்க வென்றே யந்தப்
புதல்வனையுந் தான்கூட்டிப் போனா னங்கே
திருந்தியதோ ரிடத்தொளித்து வைத்து மூழ்கி
திரும்பிவந்தான் பிள்ளையெங்கே யென்றான் பிள்ளை
பருந்தெடுத்துப் போச்சுதென்றான் சண்டை யாகிப்
பட்டணத்தில் வழக்கர்முன்னே பகர்ந்திட் டாரே.[1] (203)

(இ.ள்) வந்தவனுக்கு விருந்து சமைத்தார்கள். அவன் எண்ணெய் தேய்த்துக்கொண்டு, குளத்தில் குளிக்கச் செல்வதாய்ச் சொல்லி ஏமாற்றிய வணிகனின் மகனையும் உடன் அழைத்துச் சென்றான். அச்சிறுவனைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் ஒளித்து வைத்துவிட்டுத் தான் நீராடிவிட்டுத் திரும்பினான். பிள்ளை எங்கே என்று தந்தை கேட்க, பிள்ளையைப் பருந்தெடுத்துப்போனதென்றான். இதனால் இருவருக்கும் சண்டையாகி, நகரத்து வழக்கர் முன் சென்று வழக்குரைத்தனர்.

217. பருந்துபிள்ளை தனையெடுத்துப் போமோ என்ன
பரிகாச மென்றுவழக் காளர் சொல்ல
இரும்புதுலா மாயிரத்தைக் குறைவை யாமல்
எலிதின்றால் பிள்ளைபருந் தெடாதோ வென்றான்

பா. பே.: பாடல் 216. 1. பகந்தா னீன்றோன்

கரும்பொனா யிரந்துலாம் கொடுத்தா யாகில்
கடுகியவன் உன்பிள்ளை கொடுப்பா னென்றார்
இரும்புவிலை குறைந்ததனால் ஆஸ்தி விற்றே
இனியபெண்டிர் பிள்ளையும்விற் றிழந்து
போனான். (204)

(இ.ள்) பிள்ளையை பருந்து எடுத்து போகுமோ? என்ன பரிகாசம் என்று வழக்காளர் கேட்டனர். 'ஓராயிரம் துலாம் இரும்பினை மிச்சம் வைக்காமல் எலி தின்றதென்றால், பிள்ளையையும் பருந்து எடுத்துப் போகாதோ' என்றான் வணிகன். உடனே வழக்காளர்கள், கரும்பொன்னாகிய இரும்பு ஓராயிரம் துலாமையும் நீ கொடுத்தாயாகில் உடனே அவன் உன் பிள்ளையைக் கொடுப்பான் என்றார். இரும்பு விலைக்குப் பணம் குறைந்ததனால் தன் ஆஸ்தியையும் விற்று போதாததற்கு தன் இனிய பெண்டு பிள்ளையையும் விற்று முழுதும் அவன் இழந்து போனான்.

சிங்கத்தோடு இடபம் வாழ்ந்து இறந்த கதை - தொடர்ச்சி

218. ஆகையினால் கவடுசெய்வார்க் காவ தில்லை
அறிவுடையோர்க் கொருதரஞ்சொன் னாற்போ தாதோ
நீகருத்தில் ஒருசிறிதும் எண்ணாய் சொல்லும்
நீதிகல்லுக் குரைத்தவா றொக்கு மென்று
வேகமுடன் கரடகன்கோ பிக்க வந்த
விகடநெஞ்சத் தமனகனும் வேந்தன் பக்கல்
போகவதற் குள்ளேபிங் கலந்தா னந்த
பொலியெருதைக் கொன்றிருந்து புலம்பு மன்றே.(205)

(இ.ள்) எனவே வஞ்சகம்செய்பவர்களுக்கு ஆகக்கூடிய நன்மை ஏதுமில்லை. அறிவுடையவர்களுக்கு இதை ஒருமுறை சொன்னால் போதாதோ ? இதை நீ ஒரு சிறிதும் கருத்தில் எண்ண மறுக்கிறாய். இது கல்லுக்கு நீதி உரைத்தது போலாகிறது என்று கரடகன் வேகமுடன்

கோபித்துச் சொன்னான். வஞ்ச நெஞ்சினனான தமனகன் அரசன் பக்கம் போவதற்குள் பிங்கலன் அந்த பெரிய எருதினைக் கொன்றுவிட்டுப் புலம்பி நின்றது.

219. புலம்பியபிங் கலன்முன்னே தமனகன் போய்ப்
பொருமவனைக் கொன்றுபுலம் புவதே னென்ன
நலம்பயனி லாதநச்சு மரமா னாலும்
நாம்வளர்த்து நாந்தரிக்க லாமோ வென்று
நிலம்புகழு மந்திரியைக் கெடுத்தா லந்த
நிருபனுக்குங் கேடுவரு மென்று கூற
குலம்பெறுதன் பிள்ளைபிதா தமையன் மந்திரி
கொலைகருதில் அவர்தமையுங் கொல்ல லாமே. (206)

(இ.ள்) புலம்பிய பிங்கலன் முன் தமனகன் போய் போரிட்ட அவனைக் கொன்றுவிட்டுப் புலம்புவது ஏன் ? என்றது. அதற்குப் பிங்கலன், எந்தப் பயனும் அளிக்காத நச்சு மரமானாலும் நாமே அதை வெட்டலாமோ? உலகம் புகழும் மந்திரியைக் கெடுத்தால் அரசனுக்கும் கேடு வருமே என்று கூறியது. இதற்குத் தமனகன், தன் குலத்தில் பிறந்த பிள்ளை, தந்தை, தமையன் அமைச்சர் இவர்கள் நம்மைக் கொல்லக் கருதி வருவாரேல் அவரையும் நாம் கொல்லலாம்.

220. கிருத்தியத்தி னடவாவந் தணனைத் தன்சொல்
கேளாத மனையாளைக் கவடு தன்னைக்
கருத்திலெண்ணி இருக்குமொரு தோழன் றன்னை
கடும்போரிற் புறங்கொடுக்கும் சேனை தன்னை
பெருத்தமதம் பிடித்திருக்கும் அமைச்சன் றன்னைப்
பின்முன்பா ராதழித்தல் பெரிய நீதி
உரைத்தவிவ ரான்மருவு சுகத்தை யெண்ணார்
உலகாளும் வேந்த ரென்பர் ஓதுங் காலை. (207)

(இ.ள்) தன் குலத்திற்குரிய தருமப்படி நடவாத அந்தணன், தன் சொல் கேளாத மனைவி, மனதில் கபடம் கொண்டுள்ள தோழன், பெரிய போரில் புறமுதுகிட்ட சேனை, பெரிதும் ஆணவம் கொண்டிருக்கும் அமைச்சன் ஆகிய இவர்களை முன்பின் பாராமல் அழித்தலே பெரிய நீதியாகும். சொல்லப் போனால் இப்படிப்பட்டவர்களால் ஏற்படும் சிறிய சுகத்தினை உலகாளும் வேந்தர்கள் நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.

221. **என்றுதம னமனும்பிங் கலகன் நெஞ்சில்**
இரக்கமெலாந் தவிர்வித்தே யிகலி யன்னான்
கொன்றவிட பத்திறுடல் தன்னை யப்பால்
கொண்டுபோய் கரடகனுந் தானு மாகத்
தின்றுபல நரிகளுக்கும் விருந்து மிட்டுச்
சிந்தைகளித் திருந்ததென்று செப்புங்காலே
வென்றிபெறல் மந்திரியூ கத்தி லென்றே
வேந்தன்மக னிடம்மறையோன் விளம்பி னானே.(208)

(இ.ள்) என்று தமனகன் பிங்கலன் நெஞ்சில் இருந்த இரக்கத்தினை முழுவதும் தவிர்த்து, பிங்கலன் கொன்ற இடபத்தின் உடல் தன்னை அப்பால் கொண்டு சென்று, கரடகனும் தானுமாகத் தின்று பின் பல நரிகளுக்கும் விருந்துமிட்டு மகிழ்ந்திருந்தது. எனவே அரசனின் வெற்றியெல்லாம் அமைச்சனின் மதியூகத்தாலேயே என்று அரசனின் மகன்களிடம் சோமசர்மா என்னும் அந்தணன் கூறினான்.

முதல் தந்திரம் மித்திரபேதம் முற்றும்

இரண்டாம் தந்திரம்

சுகிரில்லாபம்

(தங்களுக்குச் சமமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருத்தல்)

222. பொன்னலந் திகழும் தில்லைப்
பொதுவில்நின் றாடும் எந்தை
தன்னடி பணிந்து பஞ்ச
தந்திர வுபாயந் தன்னில்
முன்னரே மித்திர பேத
முறைபல வுரைத்தோ மிப்பால்
பன்னருஞ் சுகிரில் லாபப்
பகுதியின் தகுதி சொல்வாம். (1)

(இ-ள்) பொன்னின் நலம் திகழ்ந்து விளங்கும் தில்லைப் பொது மன்றில் நின்று திருநடம் புரியும் எந்தையாகிய சிவபெருமான் திருவடிகளைப் பணிந்து பஞ்சதந்திரத்தின் ஐந்து உபாயங்களுள் முதலில் மித்திர பேதத்தின் முறைகள் பலவற்றையும் விரித்துரைத்தோம். இனி சொல்லற்கரிய சுகரில்லாபப் பகுதியின் தன்மையைச் சொல்வோம்.

223. மித்திர பேவுத மார்க்கம்
வேதியன் கூற மைந்தர்
இத்திறம் நமக்கு முன்னாள்
யாவரும் உரைப்பா ரில்லை

உத்தம நீயே மேலும்
ஓதிய சுகிரில் லாபம்
எத்திறம் உரைத்தி யென்ன
விளம்புவன் சோம சன்மா. (2)

(இ.ள்) மித்திர பேதத்தின் வழிகளை அந்தணனாகிய சோமசர்மா கூற, இத்தன்மையின் திறத்தினை இதற்கு முன்னால் யாரும் எமக்கு உரைக்க வில்லை. உத்தமனே, நீயே மேலும் சொல்லப்பட்ட சுகிரில்லாபம் எத்தன்மையது எனக் கூற வேண்டும், என்று மன்னன் மக்கள் கேட்க, சோமசர்மா கூறலுற்றான்.

காகம், எலி, ஆமை, மான் இவை வேடனை வென்ற கதை

224. காகமொன் றெலியு மொன்று
கமடமு மொன்று மானும்
ஏகமிங் கிவைகள் நட்பாய்
இருந்துவே டனைமுன் வென்று
மோகமா யனேக காலம்
முயங்கியே யொருவ னத்தில்
ஓகைகூர்ந் திருந்த வென்ன
உரைத்திடக் கதையே தென்றார். (3)

(இ.ள்) ஒரு வனத்தில் காகம், எலி, ஆமை, மான் ஆகிய நான்கும் ஒற்றுமையுடன் நட்பாய் இருந்து வேடனை வென்று பின் பல காலமும் ஒன்றுபட்டுக் கூடி மகிழ்ச்சியாய் வாழ்ந்தன என்று சோமசர்மா கூற, அந்தக் கதை என்னவென்று மன்னன் மக்கள் கேட்டனர்.

புறாக்கூட்டம் வலையுடன் பறந்த கதை

225. தெள்ளிய மகிழா ருப்பியத்
திருநகர் தன்னைச் சூழும்
கள்ளவிர் சோலைக் குள்ளோர்
கருக்குமுள் ளிலவில் வாழும்

புள்ளினுள் ளதிக மான
புத்திமந் திரியு மாகி
எள்ளலில் லாதி ருக்கும்
இலகுபத னென்றோர் காகம்.* (4)

(இ.ள்) சிறப்புற்று விளங்கும் மகிழாரூப்பியம் என்னும் அழகிய நகரைச் சூழ்திருக்கும் தேன் மிகுந்த மலர்களை உடைய சோலைக்குள் உள்ள கருக்கு முட்புதரில், பறவை இனங்களுக்குள் அதிகமான புத்தி-யுடன் பறவைகளின் அமைச்சனாகி, எவ்விதப் பழிச் சொல்லும் இல்லாததாகிய இலகுபதனன் என்ற பெயரை-யுடைய காகம் ஒன்று வாழ்ந்திருந்தது.

226. வைகறை யெழுந்து தங்கள்
வகையினத் துடனே பாங்கோர்
பொய்கையில் மூழ்கி யேறிப்
பொருசிறை யுலர்த்தும் போது
கைகளில் வலையும் வில்லும்
கணைகளுங் கொண்டு காலன்
செய்கொலை பயிலும் வேடன்
சேர்ந்தன னவனைக் கண்டே. (5)

(இ.ள்) அக்காகம் காலைப் பொழுதில் தூக்கம் விழித்து தம் இனமாகிய பிற காகங்களுடன் ஆங்கிருந்த ஒரு பொய்கையில் நீராடிக் கரையேறி, அடர்ந்த தங்கள்

பா. பே.: பாடல் 225. தெள்ளிய திரைநீர்க் கோதா
வரிநதித் தீரஞ் சூழும்
கள்ளவிர் வனத்துக் குள்ளோர்
கருக்குமுள் ளிலவில் வாழும்
புள்ளினுக் கதிக மான
புத்தியுத் தியான தாகி
எள்ளலில் லாதி ருக்கும்
லகுபத னென்றோர் காகம்
என அச்சுப் பிரதியில் உள்ளது.

இறகினை உலர்த்திக்கொண்டிருந்தது. அப்பொழுது கைகளில் வலையும் வில்லும் அம்புகளும் கொண்டு எமனுடைய செயலாகிய கொலைத் தொழிலை நிகழ்த்தும் ஒரு வேடன் வந்தான் அவனைக் கண்டு ....

227. பறந்தன காக மெல்லாம்
லகுபத னொன்று மாங்கே
மறைந்திவன் கொடியோன் செய்யும்
வகையெலா மறிவோ மென்றே
யுறைந்தொரு பொதும்பர்க் குள்ளே
ஒளித்தது பார்த்தி ருப்பச்
சிறந்ததோர் வலையைச் சூழ்ந்து
தீனியுந் தெளித்து வைத்தான். (6)

(இ.ள்) ... காகங்களெல்லாம் அஞ்சிப் பறந்தன. ஆனால் இலகுபதன் மட்டும், இந்தக் கொடிய வேடன் என்ன செய்கிறான் என மறைந்திருந்து பார்த்தறிவோம் என எண்ணி ஒரு மரப்பொந்தில் ஒளிந்திருந்து பார்த்திருந்தது. அந்த வேடன் நல்லதொரு வலையை விரித்து, அதில் தீனியையும் தெளித்து வைத்தான்.

228. வைத்தவன் மறைந்தி ருக்குஞ்
சமயத்தின் மன்ன னான
சித்திரக் கிரீவ னென்னும்
புறவொன்று சேனை சூழப்
பைத்தவவ் வனத்திற் போந்து
பாங்கொரு மரத்திறங்கி
மொய்த்தவத் தானி யத்தை
முற்படக் கண்ட தன்றே* (7)

---

* பாடல் எண் 228 முதல் ஒன்பது பாடல்கள் சுவடியில் இல்லை. அச்சுப் பிரதியில் உள்ளன. கதைத் தொடர்பு கருதி இவை இப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

(இ.ள்) தீனியைத் தெளித்து வைத்த அந்த வேடன் மறைந்திருந்து பார்த்திருந்தான். அப்பொழுது சித்திரக்கிரீவன் என்னும் புறாவொன்று தன்னுடைய சேனைகள் சூழ அழகிய அந்த வனத்திற்குப் பறந்து வந்து அங்கிருந்த ஒரு மரத்தில் இறங்கின. அவை தெளித்து வைக்கப்பட்டிருக்கும் தானியத்தைக் கண்டன.

229. கண்டவப் புறாவின் வேந்து
கருத்தினி லாய்ந்து தன்பால்
கொண்டநற் பரிவா ரத்தைக்
குறித்திது கூறு மிந்த
உண்டகு தானி யந்தான்
உற்றதெவ் வாறிக் கானில்
எண்டரு மொருவர் யாரோ
இறைத்துவைத் திருக்க வேண்டும். (8)

(இ.ள்) தானியத்தைக் கண்ட அப்புறாக் கூட்டத்தின் அரசனான சித்திரக்கிரீவன் அதைப்பற்றி நன்கு சிந்தித்து ஆராய்ந்து பார்த்துத் தன் பரிவாரங்களை நோக்கிப் பின்வருமாறு கூறியது. '' உண்ணத் தகுந்த இந்தத் தானியம் இக்காட்டில் வந்தது எவ்விதம்? யாரோ ஒருவர்தான் இதை இறைத்து வைத்திருக்க வேண்டும்.''

230. ஈதுநா மறியு முன்னே
இவ்விரை விரும்பு வோமேல்
தீதுவந் திடும்பொன் காப்பிற்
சிந்தைவைத் தந்த ணாளன்
காதுவெம் புலியால் மாய்ந்த
கதையுள தெனப்பு றாக்கள்
ஓதுக வதனை யென்ன
வுரைத்திடுங் கபோத வேந்தன். (9)

(இ.ள்) ''இதைப்பற்றி நாம் நன்கு அறிந்து கொள்ளுமுன் இந்த இரையை விரும்பிச் செல்வோமாயின் நமக்குத் தீங்கு வந்துவிடும். பொன்னால் செய்யப்பட்ட காப்பின்மேல் ஆசைப்பட்ட அந்தணன் ஒருவன் கொடிய புலியால் மாய்ந்தான் என்று ஒரு கதை உள்ளது'' எனச் சொன்னது. உடனே அந்தப் புறாக்கள் அக்கதையைக் கூறவும் எனக் கேட்க, அந்தப் புறாக்களின் அரசன் கூறத் தொடங்கியது.

புலியால் பிராமணன் மரணமடைந்த கதை

231. மூப்புடை புலிதா னொன்று
மூழ்கியோ ரேரி யின்கீழ்
காப்புடன் தருப்பை தன்னைக்
கையில்வைத் திருக்கும் போது
நாப்புடை மறைவ லாளன்
நண்ணியவ் வழியிற் செல்லக்
கூப்பிடல் செய்தன் னோனைக்
குறித்தந்தப் புலிதான் கூறும். (10)

(இ.ள்) ''வயது முதிர்ந்த புலி ஒன்று ஓர் ஏரியில் மூழ்கி எழுந்து அதன் கையில் ஒரு தங்கக் காப்பும் தருப்பையும் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தது. அப்போது வேதங்கள் கற்ற அந்தணன் ஒருவன் அந்த வழியில் சென்றான். அவனை அப்புலி அழைத்து அவனிடம் கூறியது ..

232. அந்தண விந்தக் காப்பை
அளிப்பநீ வாவென் றோதச்
சிந்தையில் வேட்கை கூர்ந்து
செப்புவான் புலியா ரேநீர்
வெந்துயர்க் கொலைமாந் தர்க்கு
விளைப்பது விட்டுத் தானம்
எந்தநல் வழியிற் செய்வீர்
எனக்கதை கூறு கென்றான். (11)

(இ.ள்) 'அந்தணனே இந்தக் காப்பை நான் உனக்கு அளிப்பேன் நீ என்னருகில் வா' என்று கூறியது. அதைக் கேட்ட அந்தணன் ஆசை மிகக் கொண்டு, ''புலியாரே நீர் மனிதர்களைக் கொடூரமாகக் கொல்வதை விட்டு எந்த நல்ல வழியில் தானம் செய்வீர்கள். அதை எனக்குக் கூறும்'' என்றான்.

233. புலியது கேட்டு நானோ
பூசுரா நகமும் பல்லும்
இலன்கிழ மானேன் பாவ
மிழைப்பது விடுத்து நாளும்
பொலிதரு தானம் செய்கைப்
பொருளைக் கொண்டே னஞ்சேல்
சலமதில் மூழ்கி வந்து
தருமிதைக் கொடுபோ வென்ன. (12)

(இ.ள்) அதைக் கேட்ட புலி, ''அந்தணனே நானோ நகமும் பல்லும் இல்லாத கிழமானேன். தற்போது நான் பாவம் செய்வதை விட்டுவிட்டுத் தினமும் பொலிவினைத் தரக்கூடிய தானம் செய்தல் என்னும் கருத்தினைக் கொண்டுள்ளேன். எனவே அஞ்ச வேண்டாம். நீரில் மூழ்கி வந்து நான் தரும் இந்தக் காப்பை எடுத்துப் போ'' என்றது.

234. நன்றென மறையோன் மூழ்க
நண்ணினா னேரி நீரில்
அன்றவன் கால்கள் சேற்றில்
அழுந்திடத் திகைத்து நின்றான்
சென்றதப் புலிநா னுன்னைச்
சேற்றினின் றெடுப்பே னென்னக்
கொன்றது குருதி தன்னைக்
குடித்ததென் றுரைத்த தன்றே. (13)

(இ.ள்) அதைக் கேட்ட அந்தணன் நல்லது எனக் கூறி ஏரியில் மூழ்க எண்ணி நீரில் இறங்கினான். ஆனால் அங்கு அவன் கால்கள் சேற்றில் அழுந்தி மீள இயலாமல் போனதால் திகைத்து நின்றான். அப்பொழுது அந்தப்புலி அவனருகில் சென்று உன்னைச் சேற்றிலிருந்து காப்பாற்றுவேன் என்றுக் கூறிக்கொண்டு அவனைக் கொன்று இரத்தத்தைக் குடித்தது'' என்றது சித்திரக்கிரீவன்.

புறாக் கூட்டம் வலையுடன் பறந்த கதை - தொடர்ச்சி

235. அப்படிச் சொலப்பு றாவொன்
றகஞ்செருக் குற்றுக் கூறும்
இப்படி யெல்லாம் பார்க்கில்
இறைபெறா திறக்க வேண்டும்
எப்படி எக்கா லத்தில்
எய்துவ தெய்து மென்று
செப்பலும் புறாக்க ளெல்லாம்
சென்றந்த வலையிற் பட்ட. (14)

(இ.ள்) சித்திரக்கிரீவன் என்னும் புறா மேலே சொன்ன கதையைச் சொல்ல கூட்டத்தில் இருந்த புறா ஒன்று, மனச் செருக்குடன், இப்படி யெல்லாம் நாம் பார்த்திருந்தால் இறை பெறாமல் இறக்க வேண்டியதுதான். எது எப்படி எக்காலத்தில் நிகழ வேண்டுமோ அதன்படி நடக்க வேண்டியது நடக்கும் என்று சொன்னதும், அனைத்துப் புறாக்களும் இறையைத் தேடிச் சென்று வலையில் சிக்கின.

236. ஆங்கது கபோத வேந்தன்
அல்லலி னோக்கி யந்தோ
ஈங்கிவை யெல்லாம் மாள
இருந்துயிர் வாழ்வ னோநான்

தாங்கிய வலையிற் பட்டுச்
சாவதே தக்க தென்று
போங்கடு விசையிற் சென்று
பொள்ளென வீழ்ந்த தன்றே. (15)

(இ.ள்) அங்கு அதைக் கண்ட புறாக்களின் அரசன் சித்திரக்கிரீவன் மனம் வருந்தி, அந்தோ இவை யெல்லாம் இறந்துபட்டால் நான் மட்டும் இருந்து உயிர் வாழ்வேனோ? அதைவிட இந்த வலையில் நானும் சிக்கிச் சாவதே மேல் என்று கருதி மிகுந்த வேகத்துடன் சென்று விரைந்து வலையில் வீழ்ந்தது.

237. கரந்துபார்த் திருக்க மாடக்
கபோதரா சேந்தி ரனுந்தன்
பரந்தசே னைகளுங் கூடிப்
பகரிரை கருதி வீழ்ந்தங்
குரம்பெறு வலையில் சிக்க
உளங்களிப் பெய்தி வேடன்
விரைந்துவந் தனனக் கபோத
வேந்தனோர் உபாயம் நாடி.* (16)

(இ.ள்) அங்கே மறைந்திருந்த வேடன் புறாக்களின் தலைவனும் பிற புறாக்களும் சேர்ந்து இறையை நாடி வந்து வலிமையான வலையில் சிக்கியதைப் பார்த்து மனமகிழ்ச்சியடைந்து, வேகமாக வந்தான். அப்பொழுது புறாவரசன் உகந்த ஒரு தந்திரத்தைத் தீர்மானித்தது.

238. இடுக்கண்வந் துற்ற தேநாம்
இதையினித் தப்பு மாறு
பொடுக்கென வலையைக் கொண்டு
போவதே கரும மென்று

---

* இப்பாடல் அச்சுப்பிரதியில் இல்லை. சுவடியில் மட்டும் உள்ளது.

திடப்படச் சொலக்க போத
சேனைகள் ஒருங்கு கூடி
எடுத்துநீள் வலையைக் கொணடே
ஏகின விசும்பி லம்மா. (17)

(இ.ள்) துன்பம் வந்துவிட்டதே. நாம் இதிலிருந்து தப்புவதற்கு இந்த வலையைப் பொடுக் கெனத் தூக்கிக் கொண்டு பறந்து செல்வதே வழி என்று உறுதியாகச் சித்திரக்கிரீவன் சொல்ல, அந்தப் புறாப் படைகள் எல்லாம் ஒன்று கூடிவலையைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் எழுந்து பறந்தன.

239. வேடனு மதிச யித்து
விரைந்துபின் தொடர்ந்தோ மாகில்
ஓடிப்போய் களைத்து வீழும்
ஒருங்குடன் வளைத்துக் கொண்டு
சாடலா மிரையை யென்று
தன்மனத் தெண்ணிப் பின்னே
ஓடினான் கண்ணிற் காணா
தோடின புறாக்கள் மாதோ. (18)

(இ.ள்) இதைக் கண்ட வேடனும் அதிசயித்து, அதைப்பின் தொடர்ந்து விரைந்து சென்றோமானால் அவை ஓடிக் களைத்துக் கீழே விழும். அப்பொழுது அவற்றை மொத்தமாக வளைத்துப் பிடித்து இரையாக்கிக் கொள்ளலாம் எனத் தன் மனத்தில் எண்ணிப் பின் தொடர்ந்து ஓடினான். ஆனால் புறாக்கள் கண்ணில் காணா தூரத்திற்குப் பறந்தோடிவிட்டன.

240. காகமுங் கூடி யோடக்
கானவன் களைத்து மீண்டான்
ஏகின கபோத மன்னன்
எம்முடைத் தோழ னான

ஆகுவா மிரணி யன்வாழ்
அடவியிங் கிதுவே யப்பாற்
போகலா காதென் றங்கே
பொருந்திவந் திறங்கும் போது. (19)

(இ.ள்) இவர்களைத் தொடர்ந்து இலகுபதன் என்னும் காகமும் பின் தொடர்ந்து சென்றது. வேடன் ஓடிக் களைத்துத் திரும்பி விட்டான். பறந்துசென்ற புறாக்ளின் அரசன், 'எம்முடைய தோழன் இரணியன் வாழும் காடு இதுவே. இதைத் தாண்டி நாம் போகலாகாது. என்று தீர்மானித்து, தாம் வந்து சேர்ந்த அந்தக் கானகத்தில் இறங்கியது. அப்பொழுது,

241. இரணியன் கண்டு கூட்டம்
ஏதென வளையிற் செல்லக்
கரவுறு வளையி லந்தக்
கபோதனும் முகத்தை வைத்து
விரகுள நண்பா வென்று
விளித்தலும் தெளிந்து வந்து
பரவியீ தேது கண்ணி
பட்டவா றெவனோ வந்தோ. (20)

(இ.ள்) அவற்றைக் கண்ட இரணியன் இது ஏதோ ஒரு கூட்டம் வருகிறது. எனக் கூறி வளைக்குள் சென்றது. வஞ்சமற்ற சித்திரக்கிரீவனும் அந்த வளையில் முகத்தை வைத்து, 'மன உறுதியுடைய நண்பா' என்று அழைத்தது. நண்பனின் குரல் கேட்டுத் தெளிந்த இரணியன் வெளியே வந்து பார்த்து, 'இது என்ன கண்ணி? எப்படி இதில் சிக்கினீர்கள்.

242. இறந்தது நிகழ்வ தும்பின்
எதிர்வது மான காலம்
அறிந்தநீ யேதி னாலே
யடர்வலைப் பட்டா யென்னச்

சிறந்தபே ரறிவி னாலுஞ்
செப்பிய சமர்த்தி னாலும்
துறந்தவர் யாவர் சொல்லாய்
தொல்லைவல் வினையைத் தானே. (21)

(இ.ள்) கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என முக்காலமும் உணர்ந்த நீ இந்தச் செறிவான வலையில் எப்படிச் சிக்கினாய்' என்றது. உடனே புறா,'சிறந்த பேரறிவினரானாலும், பெரிய சாமர்த்தியமுடையவராயினும், தன் பழமையான வினைப்பயனிலிருந்து தப்பியவர் யார்?

243. எவ்விடத் தெக்கா லத்தில்
எவ்வகைக் கார ணத்தில்
எவ்வள வெவரா லேதான்
இருவினை அனுப வங்கள்
அவ்விடத் தக்கா லத்தின்
அவ்வகைக் கார ணத்தால்
அவ்வள வவரா லேதான்
அனுபவ மெய்து மன்றே. (22)

(இ.ள்) எந்த இடத்தில் எந்தக் காலத்தில் எவ்வகைக் காரணத்தால், எந்த அளவிற்கு எவரால் நல்வினை தீவினை ஆகிய இருவினைப் பயன்களை ஒருவன் அடைய வேண்டுமோ அந்த இடத்தில் அக்காலத்தில் அந்தக் காரணத்தால் அவ்வளவிற்கு அவரால்தான் அனுபவங்கள் நிகழுமன்றோ ?'

244. என்றுதான் கபோதஞ் சொல்ல
விரணியன் கடலின் மீனும்
துன்றுமா காயப் புள்ளும்
தொடர்வலைப் படுத லானும்

குன்றுநேர் களிறும் வெய்ய
கொலைபயிலரவு தானும்
நின்றுகட் டுண்ட லானும்
நிலைதளர் திறத்தி னாலும். (23)

(இ.ள்) என்று புறாவரசன் சொல்ல, 'இரணியனும் கடலில் வாழக்கூடிய மீனும், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளும் வலையில் படுகின்றன. மலை போன்ற யானையும் கொடிய கொலையை நிகழ்த்துவ தாகிய படமெடுத்தாடும் பாம்பும் பாகனிடமும் பிடாரனிடமும் கட்டுப்படுகின்றன. மேலும் அவை தன் நிலை தடுமாறி இறக்கின்றன.

245. வானுறு சுடர்கள் பாம்பால்
வருந்துத லாலும் மிக்கோ
ரானநற் புலவர் தரித்தி
ரத்தினா லழுங்க லானும்
ஈனரா மறிவி லார்பால்
இருநிதி சேர்த லானும்
தானிரு வினையை யாரும்
தள்ளுத லரிதே யென்றும். (24)

(இ.ள்) ஆகாயத்தில் படர்ந்துள்ள சூரியன் சந்திரன் ஆகிய இரண்டு சுடர்களும் ராகு கேது என்னும் பாம்புகளால் வருந்துகின்றன. அறிவு மிக்க நல்ல புலவர்கள் வறுமையினால் அழுந்தித் துன்புறுகின்றனர். அதே சமயம் இழிந்தவரும் அறிவற்றவருமானவர்களிடத்தில் பெரும் பொருள் சேர்கின்றன. எனவே நல்வினை தீவினையாகிய இருவினைகளையும் யாராலும் தவிர்த்தல் அறிதாகும்' என்றும்,

246. இன்னநல் நீதி சொல்லி
இரணிய னிரங்கி நண்பன்
தன்னிரு காலிற் பூண்ட
தளையுடன் சேனைக் காலில்
பின்னிய வலையுஞ் சின்ன
பின்னமாக் கடித்து விட்டே
பன்னிய வுபசா ரங்கள்
பகர்ந்துபின் அனுப்பிற் றம்மா. (25)

(இ.ள்) இப்படிப் பல நல்ல நீதிகளை எடுத்துச் சொல்லி இரணியன் வருந்தி, தன் நண்பனின் இரு காலிலும் இருந்த கட்டுகளுடன் புறாக் கூட்டத்தின் கால்களில் பின்னி யிருந்த வலையையும் கடித்துச் சின்னாபின்னமாக்கியது. அவற்றை விடுவித்துப் பலவகை உபசார வார்த்தைகள் கூறி அனுப்பியது.

காகம் எலி நட்புக் கொண்டது

247. ஏகின புறாக்கள் மற்றவ்
விரணியன் வளையிற் செல்லக்
காகமிங் கிவைக ளெல்லாம்
கண்டெலி நண்பன் மேலே
மோகமாய் வளையின் வாயின்
முகத்தைவைத் தழைத்த லோடும்
ஆகுநீ யாரோ யென்னை
அழைத்தகா ரியமே தென்ன? (26)

(இ.ள்) புறாக்கள் பறந்து சென்றபின் இரணியன் வளைக்குள் சென்றது. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த காகம், எலி நண்பன் மேலே மிகுந்த மோகம் கொண்டு, வளையின் வாயினில் முகத்தை வைத்து அழைத்தது. அதற்கு எலி, 'நீ யார் என்னை அழைத்த காரியம் என்ன ?' என்றது.

248\. யானொரு காக மென்பேர்
இலகுபத னகனென் பார்கள்
கானவ னாலே நைந்த
கபோதமன் னவன்பின் வந்தேன்
மானமும் குணமும் நட்பும்
வரிசையும் பரிவும் கண்டு
நானுமுன் நட்புக் கொள்ள
நாடியே யழைத்தே னென்ன (27)

(இ.ள்) காகமோ, ''நானொரு காகம் என் பெயர் இலகுபதனன் என்பார்கள். வேடனால் துன்புற்ற புறாக்களின் மன்னன் பின்னாலேயே வந்தேன். உன் ஒழுக்கமும், நற்குணமும், நட்புள்ளமும் செயல் முறையையும் கண்டு நானும் உன்னுடன் நட்புக் கொள்ள விரும்பியே அழைத்தேன்' என்றது.

249\. தின்னிரை நானும் கொன்று
தின்பவன் நீயுங் கூடி
இந்நிலந் தன்னில் நட்பாய்
இருந்திடல் ஆபத்தி ற்கே[1]
மன்னிய விடம தாகும்
வருநரி நட்பு தன்னால்
முன்னமோர் வலையி லேமான்
பட்டிடு முறைமை போன்றே.* (28)

(இ.ள்) அதற்கு, ''நீ தின்னக்கூடிய இரை நான். நீ என்னைக் கொன்று தின்பவன். இந்நிலையில் நீயும் நானும் கூடி நட்பாய் இருப்பது ஆபத்திற்கே யாகும். இது நிலைபெறும் நஞ்சாகும், நரி ஒன்றின் நட்பினால் முன்பு ஒரு மான் வலையில்பட்டது போன்று...

---

* 249 ஆம் எண் பாடலின் மூன்றாம் அடி முதல் 277ஆம் பாடலின் இரண்டாம் அடிவரை உள்ள பாடல்கள் சுவடியில் விடுபட்டுள்ளன. 277ஆம் பாடலின் மூன்றாம் நான்காம் அடிகள் இப்பாடலின் மூன்றாம் நான்காம் அடிகளாகச் சுவடியில் காணப்படுகின்றன.

பா. பே.: பாடல் 249. 1. நட்பாய் இருக்குமா றென்னே யென்ன

250\. தீங்கெனக் கெய்து மென்று
செப்பலுஞ் சிறுமை யெய்தி
ஓங்குமான் வலையில் பட்ட
விதந்தனை யுரைத்தி யென்று
ஏங்கலில் காக மென்னும்
இலகுபத னன்றான் கேட்கத்
தேங்கிய வுவகை யோடுஞ்
சீரெலி யுரைக்கு மன்றே. (29)

(இ.ள்) எனக்குத் தீங்கு தரக்கூடியதாகும் என்று இரணியன் கூறியதும், தன் நிலை தாழ்ந்து உயரிய மான் வலையில் சிக்கிய விதத்தினைச் சொல்க என்று ஏக்கத்துடன் இலகுபதனன் என்னும் காகம் கேட்க, மிகுந்த மகிழ்சியோடு எலி கூறலாயிற்று.

நரியால் மான் வலையிற்பட்ட கதை

251\. வளமுறு மகத நாட்டிற்
சண்பக வனத்தின் மன்னி
உளமகிழ் கொடியும் மானும்
உறவுகொண் டிருக்குங் காலைக்
கொளுமிளம் புல்லான் மான்மெய்
கொழுத்திடு மியல்பு நோக்கி
களமிகு நரியொன் றுள்ளக்
கபடத்தாற் கொல்ல வெண்ணி. (30)

(இ.ள்) வளம் மிக்க மகத நாட்டில் சண்பகவனம் என்னும் வனத்தில் தங்கி ஒரு காகமும் மானும் மனமகிழ்ச்சியுடன் நட்புறவு கொண்டிருந்தன. அப்பொழுது இளம் புல்லை மேய்ந்து உடல் கொழுத்திருக்கும் மானின் தன்மையைப் பார்த்த, கள்ளத்தனம் மிக்க நரி ஒன்று வஞ்சகத்தால் அதைக் கொல்ல எண்ணியது.

252. துன்னிய மான்பாற் சென்றென்
நண்பநீ சுகமோ வென்ன
அன்னதைக் கேட்டு நீயா
ரென்றலு மரியோ யானிக்
கொன்னுறு வனத்தில் வாழ்வேன்
குத்திர புத்தி யென்பேர்
பன்னிய கிளையொன் றில்லாப்
பாவியாய்த் திரிந்து நின்றேன். (31)

(இ.ள்) அந்த மானிடம் சென்ற நரி, நண்பா, ''நீ சுகமா?'' என்றது. அதைக் கேட்ட மான், ''நீ யார் ?'' என்றது. அதற்கு நரி, 'அரிய இயல்பினனானவனே, நான் இந்த அடர்ந்த காட்டில் வாழ்பவன். என் பெயர் குத்திர புத்தி என்பதாகும். இணைந்த உறவு ஒன்றும் இல்லாத பாவியாய்த் திரிந்து கொண்டுள்ளேன்.

253. இன்றுனைக் கண்டு நெஞ்சத்
தெய்தினே னுவகை யிப்போ
துன்றிருப் பணிசெய் துன்பா
லுற்றிட விழைந்தே னென்ன
நன்றென விசைந்தி ரண்டு
நண்ணுசண் பகத்தின் கீழே
துன்றின வதன்மே லுற்ற
சுபுத்தியாங் காகங் கண்டே. (32)

(இ.ள்) இன்று உன்னைக் கண்டு உள்ளத்தில் பெருமகிழ்ச்சி எய்தினேன். இப்போது உனக்குப் பணி செய்து உன்னுடன் தங்க விழைகிறேன்' என்று சொன்னது. அதைக் கேட்டு மானும் நல்லதென்றெண்ணி இரண்டும் பொருந்திச் சண்பக மரத்தின் கீழே தங்கின. அம்மரத்தின் மேல் வாழும் சுபுத்தி என்னும் காகம் இதனைக் கண்டு ..

254. மித்திர மானே நின்பால்
மேவினோன் யாவ னென்னப்
பத்தியிற் சினேகஞ் செய்யப்
படர்ந்தசம் புகனென் றோத
அத்தகை யான்றன் செய்கை
குலத்தொடு மாரா யாமல்
மத்தியத் திடநா மீகை
தகாதது வழங்கல் செய்தால். (33)

(இ.ள்) ''நண்பா மானே! உன்னிடம் வந்து சேர்ந்தவன் யார்?'' என்று கேட்க, மான், 'அன்பினால் நட்புக்கொள்ள வந்த நரி' என்று சொன்னது. உடனே காகம், 'அத்தகையவனுடைய செயலையும் குலத்தையும் ஆராய்ந்து பார்க்காமல் நம் நட்பினைத் தருவது தகுதியானதன்று. இது ...

255. தழுவுறு மொருபூ னைக்குச்
சரற்கவ னென்னுங் கூறும்
கழுகிடங் கொடுத்தி றந்த
கணக்குப்போல் முடியு மென்ன
வழுவலக் கதையெ னக்கு
மரபினிற் சொல்லு கென்று
பழுதறு மான்வி னாவப்
பகர்தருங் காக மன்றே. (34)

(இ.ள்) வந்து சேர்ந்த ஒரு பூனைக்குச் சரற்கவன் என்னும் கழுகு இடம் கொடுத்து இறந்த கதைபோல் முடியும்' என்று சொல்ல, குற்றமற்ற அக்கதையை எனக்கு முறைப்படிச் சொல்லுக என்று குறைவற்ற மான் கேட்க, காகம் கூறியது...

பூனைக்கு இடங்கொடுத்துக் கழுகிறந்த கதை

256. திரைகெழு கங்கா தீரத்
திரிகூட மலைப்பால் இத்திப்
பழுமரப் பொந்தின் கண்ணும்
பைத்தகூர் நகமு மில்லா

ஒருகிழக் கழுகு மற்றைப்
பறவைக ளுணவு நல்க
மருவுநாள் பார்ப்பை யுண்பான்
மார்ச்சாலம் வந்த தங்கே. (35)

(இ.ள்) அலைகள் நிறைந்த கங்கை நதிக் கரையில் திரிகூட மலைப் பக்கலில் இத்தி மரப்பொந்தில் கூரிய நகமும் கண் பார்வையும் இல்லாத ஒரு முதிய கழுகு வாழ்ந்து வந்தது. அதற்கு மற்ற கழுகுகள் உணவைக் கொடுத்து வந்தன. அவ்வாறு வாழும் நாளில் ஒரு நாள் குஞ்சுகளை உண்ணக் கூடிய பூனை ஒன்று அங்கே வந்தது.

257. அதைச்சிறு பார்ப்பெ லாங்கண்
டஞ்சியே யிரைதல் கேட்டுப்
பதைப்புறு கழுகு நீரேன்
பயமுறு கின்றீ ரென்ன
இதற்குளே பூனை யுய்வ
தெண்ணியக் கழுகின் பாற்போய்
விதிர்ப்பொடு வணங்க நீயார்
விளம்பெனப் பூனை கூறும். (36)

(இ.ள்) அப்பூனையைக் கண்ட சிறு குஞ்சுகள் எல்லாம் அஞ்சி அலறியதைக் கேட்ட கிழக் கழுகு மனம் பதைத்து, 'நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள்' என்று கேட்டது. அதற்குள் பூனை தான் தப்புவதற்காகக் கழுகின் அருகில் சென்று நடுங்கி வணங்கியது. அதையறிந்த கழுகு, 'நீ யார் எனக் கூறு' எனக் கேட்க,

வேறு

258. எனதுபெயர் நெடுஞ்செவியன் எனக்கழுகு நீயிவண்விட்
டுனதிடத்திற் கோடிலையேல் சாவாயென் றுரைத்திடலும்
நினதிடத்தில் வருமென்றன் வரலாற்றை நீகேட்டுச்
சினவுகினும் நன்றென்னச் செப்புமா லப்பூனை. (37)

(இ.ள்) என் பெயர் நெடுஞ்செவியன் எனப் பூனை கூறியது. அது கேட்ட கழுகு, ''நீ இவ்விடத்தை விட்டு உன்னிடத்திற்கு ஓடு. இல்லையேல் நீ சாவாய்'' எனக் கூறியது. அதற்குப் பூனை, ''உன்னிடத்தில் வந்த என்னுடைய வரலாற்றைக் கேட்டுவிட்டு நீ கோபப் பட்டாலும் நன்று'' எனக் கூறியது.

259. பேதமாஞ் சாதியினால் பிராணிகளைக் கொல்லுவதும்
நீதியா லுபசாரம் நிகழ்துவது நன்றன்றால்
ஆதலா லவனவன்றன் ஆசாரந் தனைக்கண்டே
யாதுசெயத் தக்கதோ அதுசெய்த லியல்பென்ன. (38)

(இ.ள்) ''இனவேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு பிராணிகளைக் கொல்லுவதும், உரிய உபசாரங்கள் செய்வதும் நல்லதன்று. எனவே அவனவ- னுடைய ஒழுக்க முறைகளைக் கண்டு என்ன செய்வது தகுதியோ அதனைச் செய்வதே இயல்பானது'' என்றது.

260. ஆக்கமிகுங் கழுகரசன் அதைக்கேட்டிப் பூனையினை
நோக்கியா னானீயிங் குற்றபடி நுவலென்னத்
தேக்குபுனற் கங்கைநதி தீரத்திற் றினந்தோறும்
ஆக்கையமிழ்ந் திடமூழ்கிச் சாந்திரா யணமாற்றி. (39)

(இ.ள்) செயல் திறம் மிக்க கழுகு அதனைக் கேட்டு அதனை நோக்கி, 'ஆனால் நீ இங்கு வந்த காரணம் என்னவென்று கூறுக' என்று கேட்டது. 'நிறைந்த நீர் செருக்குடைய கங்கை நதிக் கரையில் தினமும் உடல் அமிழும்படி நீரில் மூழ்கிச் சாந்திராயணம் ஆற்றி

261. தங்குற்றே னீமிகவுந் தருமவா னெனக் கேட்டே
இங்குற்றே னேனென்னில் வயதுமுதிர் இயற்புலவர்
எங்குற்றா ரெனவினவி யெய்தியறங் கேட்டிடுதல்
பொங்குற்ற மரபென்று புகலுவரெந் நூலோரும். (40)

(இ.ள்) வாழ்ந்து வந்தேன். நீ மிகவும் தருமவான் எனக் கேள்விப்பட்டு, இங்கு வந்தேன். ஏனென்றால் வயது முதிர்ந்த புலவர் எங்குள்ளார் என விசாரித்து, அங்குச் சென்று அறங்கள் கேட்டிடுதல் நிறைவான மரபு என்று கூறுவர் நூலறிஞர்கள்.''

262. அறம்விடுத்திட் டெனைக்கொல்ல அகந்துணிந்தா
யில்லறத்தின்
திறமெடுத்தோர் நடைநின்போற் கண்டதிலைத் தெவ்வருந்தம்
புறமடுத்து வந்தவர்க்குப் புரிந்திடுவர் உபசாரம்
மறமடுந்து வெட்டுகின்ற வருக்குநிழல் செயுமரமே. (41)

(இ.ள்) ''நீயோ அறத்தினை விட்டுவிட்டு என்னைக் கொல்லவதற்கு மனம் துணிந்தாய். இல்லற நெறியில் நின்றவர்கள் செயலுள் உன்னுடையதுபோல் கண்டதில்லை. பகைவரும் தம்மை அடுத்து வந்தவருக்கு உபசாரங்கள் செய்திடுவர். மரமும் தன்னை வெட்டுபவருக்கும் நிழல் தரும்.''

263. அதிதியெவன் பாலெய்தி முகம்வாடு மோவவன்றன்
பதிதருபுண் ணியங்கொண்டு பாவத்தை யவற்கீவான்
மதிகொடிய சண்டாளன் மனைக்கண்ணுங் கதிரெறிப்பான்
புதியரெவர் வந்திடினும் பூசிப்பார் பெரியோரே. (42)

(இ.ள்) ''அதிதியான ஒருவன் எவனிடத்தில் சென்று உதவி கேட்டு அவன் மறுப்பதால் முகம் வாடுகிறதோ அவனுடைய புண்ணியங்களை ஏற்றுக் கொண்டு அவனுக்குப் பாவங்களைத் தருவான். தீய எண்ணங்கொண்ட சண்டாளர்களின் வீட்டினுள்ளும் சூரியன் தன் ஒளியைத் தருவான். புதிதாக எவர் வரினும் பெரியோர்கள் அவர்களை மதித்து வணங்குவர்.''

264.என்றிசைப்பக் கழுகதைக்கேட் டியம்புமிறைச் சிகளருந்திக்
கொன்றுழல்வ துமதுகுலக் குணமெனமுன் குறித்ததென
நின்றவண்மற் றதைக்கேட்ட நெடுஞ்செவியன் தரைதொட்டு
நன்றுசிவ சிவவென்று நற்கரத்தாற் செவிபொத்தி. (43)

(இ.ள்) என்று பூனை சொன்னதைக் கேட்ட கழுகு 'உயிர்களைக் கொன்று இறைச்சிகளைத் தின்று உழல்வது உன் குலக் குணம் என முன்னோர் குறித்துள்ளனர்' என்று கூற, அதைக்கேட்டு அங்கே நின்ற நெடுஞ்செவியன் என்ற பூனை தரையைத்தொட்டு வணங்கிச் சிவசிவ என்று தன் கைகளால் காதை மூடிக்கொண்டது.

265. தருமநூற் பலதெரிந்து சார்ந்து வைராக்கியந்தீக்
கருமமெலா நீக்கினேன்யான் கடுங்கொலையே பாதகத்திற்
பெரிதாகு மதுபுரியின் நரகடைவர் பெருங்கானின்
மருவுபலா திகளுண்பன் மருவுவரோ பாவமென. (44)

(இ.ள்) ''அறநூல்கள் பலவும் தெரிந்து அந்த நூற்பொருளைச் சார்ந்து வைராக்கியம் உள்ளத்தில் கொண்டு, தீய செயல்களை யெல்லாம் நீக்கினேன் நான். பாதகத்தில் பெரிய பாதகம் கொடிய கொலையே ஆகும். அக் கொலைத் தொழில் புரியின் நரகத்தை அடைவர். கானகத்தில் உள்ள பழம் முதலியவற்றை உண்டு வாழ்பவர் பாவங்களைச் செய்வரோ ?''

266.கடுங்கழுகு தெளியுமா றிவ்வாறு கட்டுரைத்து
நெடுஞ்செவிய னெனும்பூனை நிலைத்ததன்வீ டுற்றதன்பின்
மடம்படுபார்ப் பினையுண்டு வைகுதலும் பறவையெல்லாம்
ஒடுங்குபறழ் காணாமல் தேடலறிந் தோடியதே. (45)

(இ.ள்) கழுகு மனம் தெளியுமாறு இவ்வாறு பல உரைகள் சொன்ன நெடுஞ்செவியன் எனும் பூனை அக்கழுகின் வீட்டிலேயே தங்கியிருந்து, இளம் குஞ்சுகள்

பலவற்றையும் உண்டு இருந்தது. பிற பறவைகள் எல்லாம் கூட்டில் தங்கியிருந்த குஞ்சுகளைக் காணாமல் தேடுவதை அறிந்த பூனை அங்கிருந்து ஓடியது.

267. புள்ளுகளக் கழுகிருக்கும் பொந்தடைந்து பார்த்திடலும்
வெள்ளெலும்பும் சிறகுகளும் விழுந்துறக்கண் டிது கொன்ற
தென்னலினம் பார்ப்பையெனக் கொன்றதா லதையிதனால்
உள்ளகுணந் தெரியாமல் இடங்கொடா ரொருவருக்கும். (46)

(இ.ள்) பறவைகள் அந்தக் கிழக்கழுகு இருக்கும் பொந்தினை அடைந்து பார்க்க, காய்ந்த எலும்புகளும் இறகுகளும் விழுந்திருக்க கண்டன. இக் கழுகே இளம் குஞ்சுகளைக் கொன்றது எனக் கருதிக் கழுகைக் கொன்றன. ஆதலால் உண்மை குணம் தெரியாமல் எவருக்கும் யாரும் இடம் கொடார்.''

நரியால் மான் வலையில் பட்ட கதை - தொடர்ச்சி

268. என்னலுமந் நரியதுகேட் டிவற்கு நீ நட்புசெயு
முன்னமே நின்னியல்பு தெரியுமோ மொழிதியெனப்
பின்னர்மான் காகத்தின் மனமொருமை பெறப்புரியத்
துன்னியவிம் மூன்றுமறாத் தொடர்புகொடு நின்றனவே. (47)

(இ.ள்) என்று கூறியதும், அதைக் கேட்ட நரி, 'இவனுடன் நீ நட்பு செய்யுமுன்னமே உன் இயல்பு இவனுக்கு தெரியுமோ சொல்' என்று கேட்டது. அதன் பின் மான் காகத்தின் மன இயைபினைப் பெற்ற நரியும், மானும், காகமும் ஆகிய இம்மூன்றும் இடையீடற்ற நட்புகொண்டு வாழ்ந்தன.

269. ஆயதினந் தனிலொருநாள் மானைப்பார்த் தந்தநரி
மேயுமிளம் பயிருனக்கு வேண்டுமட்டும் அருந்துமிடம்
நீயறிதி யெனக்காட்ட அன்றுமுதல் நெடியமான்
போயதனை மேய்ந்துபசி போக்கியிருந் திட்டதுவே. (48)

(இ.ள்) இவ்வாறு இவை இருக்கும் காலத்தில் ஒருநாள் நரி மானைப் பார்த்து, ‘நீ மேய்வதற்கு உரிய இளம் பயிர் வேண்டுமட்டும் உண்பதற்கு ஏற்ற இடம் நான் காட்டுகிறேன். நீ அறிந்துகொள்’ எனக் காட்டியது. அன்று முதல் மான் பயிரிட்டுள்ள அந்த இடத்திற்குச் சென்று பயிரை வேண்டுமட்டும் மேய்ந்து பசி போக்கி இருந்தது.

270. பயிரிட்டோன் இதுகண்டு வலைகட்டப் பாராது
செயரிட்ட மான்வழக்கப் படிசென்று சிக்குண்டென்
உயிரிட்ட நண்பனலா துயச்செய்வார் யாரென்று
தயிரிட்ட மத்தென்னத் தனதுமனஞ் சுழல்காலை. (49)

(இ.ள்) பயிர்செய்த விவசாயி தன் பயிர் நாளும் நாசமாவதைக் கண்டு வலைவிரித்தான். அந்த வலையைப் பாராது மான் வழக்கப்படி சென்று வலையில் சிக்குண்டது. அதிர்ச்சியடைந்த மான், என் உயிர் நண்பனை அல்லாது வேறு யார் என்னைக் காப்பாற்றுவார் எனத் தயிரில் இட்ட மத்து போன்று மனம் கலங்கித் தவித்தது.

271. வன்பினொடு நரிகண்டின் றெண்ணமெலாம் வாய்த்ததினித்
துன்பறவின் றிதனெலும்பைத் தசையினொடு சுவைத்துண்டே
இன்பினொடு முறலாமென் றெண்ணிவா ளாதிருப்ப
அன்புறுமான் கண்டிங்கென் தளைவிடுவி எனவறைய. (50)

(இ.ள்) வஞ்ச நெஞ்சம் கொண்ட நரி இதைக் கண்டு, தன் எண்ணமெல்லாம் நிறைவேறியது இனி எத்துன்பமும் இல்லாமல் இம்மானினது எலும்பைத் தசையோடு சேர்த்துச் சுவைத்து உண்டு மகிழலாம் என்று எண்ணி வாளாவிருந்தது. அன்புள்ளம் கொண்ட மான் இங்கு என் கட்டுகளை விடுவி என நரியைப் பார்த்து கேட்டது.

272. நரியதுகேட் டின்றைக்கோர் விரததினம் நாளையெனில்
பரிகரிப்பன் நினதுதளைப் பகர்தருதோ லாதலினால்
பிரியமுறு நட்பினர்க்கென் பிராணனையும் விடவல்லேன்
தெரிகிலையோ நீயென்றோர் செடியின்மறைந் திருந்ததே. (51)

(இ.ள்) அது கேட்ட நரியோ, 'இன்றைக்கு எனக்கு ஒரு விரத நாள். உனது கட்டு தோலாதலினால் நாளை உனக்கு உதவி செய்வேன். உன் கட்டுகளை விடுவிப்பேன். அன்புடைய நண்பர்களுக்கு நான் உயிரையும் விடவல்லேன் என்பது உனக்குத் தெரியாதா' என்று கூறிவிட்டு ஒரு செடியின் பின் மறைந்து நின்றுகொண்டது.

273. காகமது மித்திரனைக் காணாமல் அன்றிரவு
சோகமுற்றெங் கணுந்தேடித் தோல்வலையிற் பட்டதறிந்
தூகமுடை மானேயிங் குற்றுழல்வ தென்னெனலும்
நீகழறும் உரைகோளா மையின்வந்த நிலையிதுவே. (52)

(இ.ள்) காகமானது தன் நண்பன் மானைக் காணாது மிகுந்த மன வருத்தம் கொண்டு அன்றிரவெல்லாம் எங்கெங்கும் தேடி வந்தது. இறுதியில் மான் தோல் வலையில் சிக்கியிருப்பதைக் கண்டது. அதைப் பார்த்து, 'நல்ல உத்திகளை உடைய மானே இங்கேயிருந்து துன்பப்பட வேண்டிய அவசியம் என்ன?' எனக் கேட்டது. மானோ 'காக நண்பனே நீ கூறிய அறிவுரையைக் கேளாமலிருந்ததனால் வந்த நிலை இது'

274. நண்புகொண்ட நரியெங்கே யெனவெனது நல்லிறைச்சி
உண்பதற்கோர் செடியின்கீழ் ஒளித்திருந்த தெனப்புகலப்
பண்புறுகா கங்கேட்டுப் பயிர்க்கதிப னுறுகின்றான்
மண்படுமா றுயிர்கழிந்த வடிவம்போ லுறுகெனலும். (53)

(இ.ள்) ''சரி உன்னுடன் நட்பு கொண்டு வந்த நரி எங்கே'' எனக் காகம் கேட்டது. மான், 'என்னுடைய

நல்ல இறைச்சியைத் தின்பதற்காக அச்செடியின் பின்னே மறைந்துள்ளது' எனச் சொன்னது. இதைக் கேட்ட காகம், 'உரியவன் வருகிறான் நீ உயிர் இழந்ததைப்போல் கிடப்பாயாக' என்றது.

275. நண்ணியவப் பயிர்க்கதிபன் உயிர்கழிந்த நௌவியென
எண்ணியிதை யிழுத்தங்கு வலைகட்டு மெல்வையினில்
மண்ணின்விரைந் தோடுதலுந் தண்டமவன் வலித்தெறியத்
திண்ணியதோர் செடியின்கீ ழிருந்தநரி சிதைந்ததே. (54)

(இ.ள்) அங்கு வந்த விவசாயி, கீழே கிடக்கும் மானைப் பார்த்து, இது இறந்துவிட்டது, எனக் கருதி அம்மானை எடுத்து அருகில் வைத்துவிட்டு வலையைச் சுருட்டத் தொடங்கினான். அவ்வளவில் சரேலென எழுந்த மான் விரைந்து ஓடத் தொடங்க, விவசாய கையிலிருந்த கோலை மானை நோக்கி வீச, அந்தக் கோல் புதரின்பின் மறைந்திருந்த நரியின் மேல் பட்டு அங்கேயே நரி இறந்தது.

காகம் எலி நட்பு கொண்டது - தொடர்ச்சி

276. ஆதலினாற் புண்ணியமும் பாவமுமிங் கதிகரித்தால்
ஈதல்செயுந் தம்பயனென் றிசைத்தெலியும் இவ்வாறு
சாதலகன் மானுக்குச் சம்புகன்றன் நட்பினைப்போல்
ஓதரிய நின்னுறவும் உபயோகம் அன்றெனவே. (55)

(இ.ள்) எனவே புண்ணியமும் பாவமும் இங்கு மிகுதியானால், அவற்றின் பயனை அவை நல்கும் என்று சொன்ன எலி, மேலும், இவ்வாறு சாதலகன் என்ற மானுக்கு ஏற்பட்ட சம்புகனின் நட்பைப் போன்று சொல்லற்கரிய உன்னுடைய நட்புறவும் பயனற்றது என்றது.

வேறு

277. அன்னது கேட்ட காகம்
அகங்கரைந் துரைக்கு மையோ
என்னைநீ யுரைத்தா யென்றன்
இயல்பினைச் சிறிதுந் தேராய்

உன்னையான் கொன்று தின்றால்
ஒருகணப் பசிதீ ராதே
மன்னிநட் பாயி ருக்கில்
வாழலா மனேக காலம். (56)

(இ.ள்) அதைக்கேட்ட காகம், மனமுருகிக் கூறியது. 'ஐயோ என்ன நீ கூறினாய், என் இயல்பினைச் சிறிதும் அறியமாட்டாய். உன்னை நான் கொன்று தின்றால் எனக்கு ஒரு நேரம் பசி கூடத் தீராது. மாறாக நாம் நட்பாக இருந்தால் அனேக காலம் நாம் மகிழ்ச்சியாய் வாழலாமே.

278. சித்திரக் கிரீவ னைப்போல்
சேர்ந்தெனை நட்புக் கொண்டால்
எத்தனை நாளென் னாவி
இருக்குமவ் வளவு முன்மேல்
வைத்தநண் பொழிவ தில்லை
மற்றிது கபட மல்ல
சத்திய மென்று காகம்
சாற்றியே மேலும் கூறும். (57)

(இ.ள்) நீ சித்திரகிரீவனிடத்து நட்பு வைத்தது போல் என்னிடத்தும் நட்பு கொண்டால் நான் உயிரோடு இருக்கும் காலம் வரை உன் மேல் வைத்த அன்பு மாறாது. இது கபடமல்ல. சத்தியம்'' எனக் காகம் கூறி, மேலும் கூறும்.

279. எறிதிரைப் பரவை நீரில்
எரியுமோர் கொள்ளி புக்கால்
செறியுமப் புனல்வற் றாது
தீயவிந் திடுமவ் வாறே
அறிவுளா ரிடத்திற் கோபம்
அடைந்திடா தடைந்த தேனும்
உறுதியா மனத்தி னாலே
யொறுத்சதை யவிப்ப ரென்றே. (58)

(இ.ள்) ''அலைகள் மோதுகின்ற கடலில், எரியும் கொள்ளிக் கட்டை ஒன்று வீழ்ந்தால், அதனால் கடல் வற்றிவிடாது. மாறாக கொள்ளிக் கட்டையின் நெருப்பு அணைந்துவிடும். அதுபோன்று அறிவுள்ளவர்களிட த்தில் கோபம் தோன்றாது. அவ்வாறு தோன்றினாலும், தம் உறுதியான மனத்தாலே அந்த கோபமாகிய நெருப்பினைத் தவிர்த்து அழித்திடுவர்.''

280. உரைசெய வதனை நோக்கி
உன்னுடை புத்தி யென்றுந்
திரமிலை யுன்னைச் சேர்கிற்
செய்கரு மங்க ளாகா
புரைபடு மெனவே யென்றன்
புத்தியுன் புத்தி யோடே
வரையறக் கலந்தே எந்த
வகையில்நட் பாவே னென்று. (59)

(இ.ள்) ..என்று காகம் சொல்ல, எலி அதனை நோக்கி, ''உன் புத்தி என்றும் நிலையானதில்லை. உன்னை என்னுடன் சேர்த்தால் எந்தப் பணியும் சரியாக நடைபெறாது. குறையுடையதாகவே ஆகும். எனவே என் மனம் உன் மனத்துடன் எவ்வாறு கலந்து நான் உன் நண்பனாவேன்.''

281. கடலின்மே லோடுங் கப்பல்
கரையின்மே லோட்ட லாகா
புடவி மேலோடுந் தேரைப்
புணரிமே லோட்ட லாகா
திடமுடன் கூடா ரென்றுஞ்
சேர்வது மில்லை சேர்ந்தால்
கெடுவதே யுறுதி யல்லால்
கேண்மையா மாறு மில்லை. (60)

(இ.ள்) ''கடலில் செல்லக் கூடிய கப்பலைத் தரையில் ஓட்டுவது இயலாது அதுபோல் தரையில்

ஓடக்கூடிய தேரினைத் தண்ணீரில் செலுத்துவது என்பது இயலாது. எனவே மனத்திடம் இல்லாதவர்கள் என்றும் ஒன்று சேர்வதில்லை. அன்றிச் சேர்ந்தாலும் கெடுவதே உறுதி. அஃதல்லால் நட்பு என்பது ஏற்படுவது என்பது இல்லை.''

282. நாரியர் விருத்த சீலர்
நியாயமுந் துட்டர் செய்யுங்
காரிய நலமும் மெய்யாக்
கருதியே நட்புக் கொண்டே
பேருல கத்தி லின்பம்
பெற்றவ ரில்லை துன்பம்
சேருவர் மடியிற் பாம்பைச்
சேர்ப்பவர் போல வென்ன. (61)

(இ.ள்) ''பெண்கள், வயது முதிர்ந்தவர்கள் ஆகியோர் செய்யும் நியாயங்களும், கொடியோர் செய்யும் நற்செயல்களும் ஆகிய இவற்றை உண்மையாகக் கருதி அவர்களுடன் நட்புக் கொண்டே பரந்துபட்ட இந்த உலகத்தில் இன்பம் பெற்றவர்கள் இல்லை. மாறாக, அவர்கள் மடியில் பாம்பைக் கட்டிக்கொண்டவரைப் போல என்றும் துன்பத்தையே அடைவர்'' என்றது.

283. உள்ளது தானே துட்டர்
உறவெவ ருக்கு மாகா
தெள்ளிய என்னைக் காக்கை
யென்றுநீ எண்ண வேண்டாம்
வள்ளலே உனக்கு நானே
மயித்திர னாவேன் நீதான்[1]
தள்ளினா லுயிர்வி டுப்பேன்
சத்திய மென்று கூறி. (62)

பா. பே.: பாடல் 283. 1. வள்ளலே நினக்கு நான்றான் மன்னுநட்
பாவேன்

(இ.ள்) அதனைக் கேட்ட காகம், ''நீ சொல்வதெல்லாம் உண்மைதான். துஷ்டர்களின் உறவு எவருக்கும் நன்மை பயப்பதாகாது. ஆனால் தெளிந்த மனத்தினனான என்னை சாதாரணமான காகம் என எண்ண வேண்டாம். வள்ளன்மையுடைய எலியே, உனக்கு நானே நண்பனாக ஆவேன். மாறாக நீ என்னை உதறித் தள்ளினால் உயிரை விட்டுவிடுவேன் இது சத்தியம்.''

284. மாந்தருக் கெல்லாம் நட்பு
வருந்திர வியத்தி னாலே
போந்திடு பறவைக் கெல்லாம்
புசித்திடு நிமித்தத் தாலே
காய்ந்திடுதுட்டர்க் கெல்லாம்
கண்டிதப் புத்தி யாலே
சேர்ந்திடும் பெரியோர்க் கெல்லாம்
தெரிசனத் தாலே யெய்தும். (63)

(இ.ள்) ''உலகில் மனிதருக்கெல்லாம் செல்வத்தின் அடிப்படையில் நட்பு தோன்றும். பறவை களுக்குத் தாங்கள் உண்ணும் இரையின் அடிப்படையில் நட்பு தோன்றும். கொடிய தீயவர்களுக்கிடையே அவர்க ளுடைய கீழ்மையான குணத்தாலே நட்பு தோன்றும் சான்றோர்களுக்கெல்லாம் தங்கள் பார்த்துக் கொள்வ தாலேயே நட்பு தோன்றும்.''

285. நல்லவர் கண்ட போதே
நண்பின ராவார் பொல்லாப்
புல்லியர் தண்டத் தாலே
பொருந்திநட் பாவர் காந்த
மெல்லிய ஊசி காணில்
மேவிடுந் துண்ட மான
வல்லிரும் பெரியில் வெந்து
வருந்தியே யொட்டு மன்றே. (64)

(இ.ள்) ''நல்ல உள்ளமுடையவர்கள் பார்த்த போதே நண்பர்களாகிவிடுவர். பொல்லாத தீயோர்கள் தன்டனையால் பொருந்தி நடப்பர். காந்தமானது மெல்லிய ஊசியைப் பார்த்த மாத்திரத்திலேயே அதனுடன் இணைந்து ஒட்டிக் கொள்ளும். ஆனால் துண்டுகளாக இருக்கும் இரும்பு நெருப்பில் வெந்து வருந்திய பின்னரே ஒன்றோடு ஒன்றாக இணையும்.''

286. நின்னுடை யறிவு நெஞ்சின்
நேயமு முபாய முங்கண்
டுன்னுடை நட்பு வேண்டி
யுற்றுன தருகே வந்தேன்
என்னுடை யறிவு நெஞ்சி
லிரக்கமும் சகாய மும்நீ
மன்னியிங் கறிதி யென்று
வாயச வேந்தன் கூற. (65)

(இ.ள்) ''உன்னுடைய அறிவும் நெஞ்சின் அன்பும் புத்திக் கூர்மையையும் கண்டு, உன்னுடைய நட்பினை நான் விரும்பி உன்னை நாடி உன்னருகே வந்தேன். என்னுடைய அறிவுத் திறன், மன இரக்கம், நட்பும் நீ அறிந்துகொள்ள வேண்டும்'' என்று காகம் கூறியது.

287. நன்றென வீரணி யன்றான்
நகைமுக மாகி நட்பாய்
என்றும்நாம் இடைவி டாமல்
இருப்பமென் றனுப்பக் காகம்
வென்றிகொள் புலி யிரத்தம்
வீந்தமா னிறைச்சி தானும்
தின்றெலி தனக்கோர் பங்கு
தினந்தின மளித்து வாழும். (66)

(இ.ள்) இதனைக் கேட்ட இரணியன் என்னும் எலி, நல்லது என்று கூறி இனிய முகத்துடன் "நாம் இருவரும் என்றும் பிரியாமல் நட்பாய் இருப்போம்" என்று கூறி அனுப்பியது. காகம் பறந்து சென்று புலியின் இரதமும், இறந்த மானின் இறைச்சி ஆகியவற்றைத் தானும் உண்டு எலிக்கும் ஒரு பங்கினைத் தினமும் கொடுத்து நட்பாய் வாழ்ந்திருந்தது.

288. அந்தநாள் தன்னி லோர்நாள்
அடவியில் இரைக ளில்லை
முந்தவே எனக்கு நண்பாய்
முயங்கிடும் ஆமை யினமே
மந்தர னவன்பாற் செல்லின்
வாவியின் மீன்க ளெல்லாம்
தந்திடும் நாமும் தின்று
தருக்கியங் கிருக்க லாமே. (67)

(இ.ள்) இவ்வாறு இரண்டும் மகிழ்ச்சியாக இருக்கும்போது ஒரு சமயத்தில் காட்டில் எங்கும் இரைகள் கிடைக்கவில்லை. இதை உணர்ந்த காகம், "எனக்கு நண்பனாய் உள்ள மந்தரன் என்ற ஆமை ஒன்று உள்ளது. நாம் அதன் பால் சென்றால் குளத்தில் உள்ள மீன்களைப் பிடித்து நமக்குக் கொடுக்கும். நாமும் அவற்றைத் தின்று, மகிழ்ச்சியுடன் அங்கே இருக்கலாம்."

289. என்னவே எலியும் நெஞ்சில்
எனக்கொரு துக்க முண்டங்
கன்னதை யுன்னோ டேனா
னங்குவந் துரைப்பே னென்ன
தன்னிரு காலாற் கொண்டு
தானும்வா னெறியிற் செல்ல
மன்னிய வாமை கண்டே
வந்தெதிர் கொண்டி ருந்தே. (68)

(இ.ள்) ... என்று காகம் சொல்லக் கேட்ட எலி "என் மனத்தில் ஒரு துன்பம் உள்ளது. அதனை நான் உன்னோடு அங்கு வந்து சொல்லுவேன்" என்று கூற, காகம் தன் இரண்டு கால்களால் பற்றிக்கொண்டு வான்வெளியில் சென்றது. இவர்கள் வருவதைக் கண்ட ஆமை அவற்றை எதிர்கொண்டு வரவேற்றது.

290. இற்றைநாள் வரையும் நன்றாய்
இருந்தையோ நண்ப வென்றே
உற்றநற் கருமம் பேசி
உபசரித் திருக்கும் போதில்
மற்றெலி யாரென் றாமை
வினவயாம் வருந்தி முன்செய்
நற்றவப் பயனால் வந்த
நலந்தரு நண்பன் காணே. (69)

(இ.ள்) "இதுநாள் வரையில் நீ நன்றாக இருந்தாயோ நண்பனே !" என்று ஒன்றையொன்று நலம் விசாரித்து அவரவர் செயல்களைப் பற்றிக் கேட்டுப் பேசி உபசரித்திருக்கும் போது, "இந்த எலி யார்" என்று ஆமை வினவ, காகம், "நான் முற்பிறவியால் செய்த தவப்பயனாய் எனக்கு வாய்த்த நல்ல நண்பர் இவர்" என்று கூறியது.

291. இங்கிதன் பெருமை சொல்லில்
யாவரால் முடியும் சேடன்
தங்குமா யிரநா வாலுஞ்
சாற்றினும் முடியா தென்று
துங்கமார் கபோத ராசன்
தொடர்வலைப் பட்ட வாறும்
அங்கதை விடுத்த வாறும்
அடைவுடன் சொல்லிற் றம்மா. (70)

(இ.ள்) மேலும், "இந்த எலியின் சிறப்பினை முழுமையாகக் கூற யாரால் இயலும். ஆயிரம் நாவினைக் கொண்ட ஆதிசேடனும் சொல்வது இயலாது," என்று கூறி, புறாக்களின் அரசன் வலையில் பட்டதும், அந்த வலையை அறுத்து விடுவித்ததுமான அனைத்தையும் கூறியது எனவும்.

292. சொல்லலுங் கமட வேந்தன்
 தோழனீங் கிவனே யென்று
நல்லுப சாரஞ் சொல்லி
 நண்புகொண் டிருகை யாரப்
புல்லிமோந் தருகி ருத்திப்
 பொருந்திய விருந்து மிட்டே
எல்லையில் களிப்பி னோடே
 யிருந்திர ணியனை நோக்கி. (71)

(இ.ள்) இவ்வாறு காகம் கூறியதும் ஆமை வேந்தன், இவனே நம் தோழன் என்று நல்ல உபசார வார்த்தைகள் சொல்லி நட்பு கொண்டு இரு கைகளாலும் ஆரத்தழுவி உச்சி மோந்து தன்னருகில் அமர்த்தி, உரிய வகையில் விருந்தும் இட்டு எல்லையற்ற மகிழ்ச்சியுடனிருந்து இரணியனை நோக்கி,

எலி தன் வரலாறு சொன்ன கதை

293. உன்னிட மேது நீயிங்
 குரைசரித் திரந்தா னேது
நின்னிடம் விட்டிங் கேநீ
 நிலைத்தகா ரணமே தென்ன
என்னிடம் மகிழா ருப்பியம்
 எனுமொரு நகரச் சமீபந்[1]
தன்னிலோர் தவசி மேவுந்
 தனிமட மொன்றுண் டங்கே. (72)

பா. பே.: பாடல் 293. 1. என்னிட நகரஞ் சம்ப காவதி யென்பதிது

(இ.ள்) உன் இடம் எது? நீ இங்கு சொல்லக் கூடிய வரலாறுதான் என்ன? நீ உன்னிடத்தை விட்டு இங்கு வந்து தங்கும் காரணம்தான் என்ன? என்று கேட்டது. அதற்கு எலி, என்னுடைய இடம் மகிழாரூப்பியம் என்னும் ஒரு நகரம். அதன் அருகில் ஒரு சந்நியாசி வாழும் தனி மடம் ஒன்று உண்டு. அங்கே...

294. பெருவளைக் குள்ளி ருப்பேன்
பிச்சகன் சூடர் கன்னன்[1]
தெருவெலாம் பிச்சை தேர்ந்து
சிறிது தான் புசித்து மீதி
ஒருசிறு பாத்தி ரத்தில்
உய்த்துவே றொன்றால் மூடி
வருபர தேசிக் கென்று
வைத்தவன் உறங்கும் போது. (73)

(இ.ள்) உள்ள பெரிய வளை ஒன்றிற்குள் தங்கி வாழ்ந்திருப்பேன். சந்நியாசி சூடர்கன்னன் தெருவெல்லாம் பிச்சையெடுத்து வந்து தான் சிறிது உண்டுவிட்டு, மீதம் உள்ளதை ஒரு சிறு பாத்திரத்தில் போட்டு வைத்து வேறொரு பாத்திரத்தால் மூடி வரக்கூடிய யாராவது ஒரு பரதேசிக்கென்று பாதுகாத்து வைத்துவிட்டு உறங்கும்போது,

295. வந்து நா னந்தச் சோற்றில்
வயிறுகொண் டதைய ருந்தி
அந்தமா யோகி கையில்
அகப்படா தொளித்துக் கொள்வேன்
இந்தவா றனேக காலம்
இருக்குநாள் தன்னி லோர்நாள்
புந்திகூர் ஞானி தன்பால்
பொருந்தினன் ஒருசன் னியாசி. (74)

பா. பே.:ப ாடல் 294. 2. பெருவளைக் குள்ளி ருப்பேன் பிஞ்ஞுகன் சன்னியாசி

(இ.ள்) நான் வந்து அந்த சோற்றில் என் வயிறு கொள்ளும் அளவு உண்டு விட்டு அந்த யோகியின் கையில் அகப்படாமல் ஒளிந்துகொள்வேன். இவ்வாறாக பல காலம் நடைபெற்று வரும் நாளில் ஒரு நாள் அறிவுமிக்க அந்த ஞானியின் இடத்திற்கு வந்து சேர்ந்தான் ஒரு சந்நியாசி.

296. பொருந்திய வவனுந் தானும்
பொருவில்சாத் திரங்கள் பேசி
இருந்தனர் அநேக நேரம்
யானும்வெம் பசியி னாலே
வருந்தியே வளையை விட்டு
வந்துபாத் திரத்திற் சோற்றை
அருந்திய சத்தங் கேட்டே
அதட்டியே துரத்தி விட்டான். (75)

(இ.ள்) வந்து சேர்ந்த சந்நியாசியும் அங்கிருந்த சந்நியாசியும் உயர்ந்த சாத்திரங்கள் பலவற்றையும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். நானும் நெடுநேரம் கொடிய பசியால் துன்புற்று வருந்தவே, வளையைவிட்டு வெளியே வந்து பாத்திரத்தில் இருந்த சோற்றை உண்ண முற்பட்டபோது அந்த சத்தத்தைக் கேட்டு என்னை அதட்டித் துரத்திவிட்டனர்.

297. துரத்திய சூடர் கன்னன்
தோழனங் கவனை நோக்கி
விரத்தனா யிருந்து ஞானம்
வினவிய உனக்கிப் போது
கருத்தது வெறுத்த தென்ன
காரண மென்று கேட்க
விரதமே தெனக்குச் சோற்றை
விரும்பிய எலிக்கே என்றான்.[1] (76)

பா. பே.: பாடல் 297. 1. கருத்துவேறுற்ற தென்ன காரண மென்று கேட்க
தெரித்திடு முனது சொல்யா னனாதரஞ் செய்ய
கில்லேன்

(இ.ள்) என்னை துரத்திய சூடர்கன்னனின் தோழன் அவனைப் பார்த்து, "விரதசீலனாக இருந்து ஞான விஷயங்களைக் கேட்டறிந்த உனக்கு இப்பொழுது முகம் கருத்து மனம் வெறுத்தது என்ன காரணம்?" என்று கேட்டான். அதற்கு வந்த சந்நியாசி, "விரதம் எனக்கேது சோற்றை விரும்பி உண்ட எலிக்கே விரதம்" என்றான்.

298\. எலிக்குமோர் விரத முண்டோ
என்னநீ சொன்ன தென்ன[1]
யலிக்குநான் உழன்றெ டுத்த
பாத்தெலாந் தின்று கொண்டே
கெலிப்புடன் திரியு தய்யா[2]
கிட்டினும் பிடிக்கக் கூடா
தெலிக்குளிப் படிநான் கண்ட
தில்லையென் றிரங்கிச் சொன்னான். (77)

(இ.ள்) "எலிக்கும் விரதம் என்று உண்டோ! நீ என்ன சொல்கிறாய்" என்று கேட்க, நான் துன்புற்றுப் பிச்சையாக எடுத்துவந்த உணவையெல்லாம் இந்த எலி தின்றுகொண்டு எக்களிப்புடன் திரிகின்றது. என்ன செய்யினும் அதைப் பிடிக்க முடியவில்லை. எலிகளுக்குள்ளே இப்படி ஒரு எலியை நான் பார்த்ததில்லை என்று மனம் வருந்திச் சொன்னான்.

299\. அன்னவன் றன்னை நோக்கி
அதிதியவ் வெலியொன் றேயோ
பின்னையு முண்டோ வென்னப்
பேரெலி யொன்றே யென்றான்
மன்னுகா ரணம்வே றுண்டு
மறையவன் தேவிக் கன்னான்
சொன்னகா ரணம்போ லென்று
சொல்லவக் கதையே தென்ன. (78)

பா. பே.: பாடல் 298. 1. எலிக்கிந்த குறிப்பைக் கண்டே யென்மனம் வேறிற்று
2\. கெலப்புட றுளதிங் கையா

(இ.ள்) அப்படிச் சொன்னவனை நோக்கிச் சந்நியாசி, வந்து உணவை உண்ணும் எலி இது ஒன்றுதானா, வேறு எலிகள் உண்டா எனக் கேட்க, இந்த பெரிய எலி ஒன்றேதான் என்றான் இருந்த சந்நியாசி, அவ்வாறாயின் காரணம் வேறு உண்டு. மறையவன் தன் மனைவிக்குச் சொன்னது போல ஓர் காரணம் இருக்கும் எனச் சொல்ல அந்தக் கதை என்ன? என்றான் சந்நியாசி.

திதி செய்த கதை

300. முன்னமோர் கானந் தன்னில்
முதுமறை யாபாத்தி யாயன்
தன்னுடை மனையா ளான
சவுண்டலி தன்னை நோக்கி
தென்னவர் பருவந் தன்னில்
திதிசெய்ய வேண்டுமென்ன
அன்னவன் செலவுக் கில்லை
அரிசியு மில்லை யென்றாள். (79)

(இ.ள்) முன்னொரு காலத்தில் ஒரு கானகத்தில் பழமையான வேதங்களை உபதேசிக்கும் உபாத்தியாயன் ஒருவன் இருந்தான். அவன் தன் மனைவியான சவுண்டலியை நோக்கி, ''தென்புலத்தார்க்கு உரிய பருவந்தன்னில் திதி செய்ய வேண்டும்'' என்று சொல்ல மனையாளோ, ''வீட்டில் செலவுக்குப் பணமும் இல்லை. அரிசியும் இல்லை'' என்றாள்.

301. என்றலும் உபாத்தி யாயன்
இருந்தது கொண்டு செய்தல்
நன்றதை வைத்து வேறே
நாடினால் வேட னோரி
பொன்றினாற் போலப் பொன்றிப்
பொருளையு மிழப்ப ரென்ன
வென்றிகொள் வேட னோரி
விளிந்தவா றியாதோ வென்றாள். (80)

(இ.ள்) என்று அவள் சொன்னதும், உபாத்தியாயன், ''வீட்டில் இருப்பதைக்கொண்டு செய்வதே நல்லது. அதைவிட்டு வேறொன்றை நாடினோமானால், வேடனும் நரியும் இறந்ததைப் போல இறப்பதுடன் பொருளையும் இழப்பர்'' என்றான். அதைக் கேட்ட மனைவி, வேடனும் நரியும் இறந்த வகை என்ன? என்று கேட்டாள்.

வேடனும் நரியும் இறந்த கதை

302. வேடுவ னொருவன் காட்டில்
வேட்டைகள் கிடை யா மற்றே
வாடியே யனேக நாளாய்
வனத்திலே திரிய ஓர்நாள்
ஓடிய மானின் பின்னே
யுலைந்ததை யெய்து கொண்டு
நாடினன் சேரி யங்கோர்
தனிபெரும் பன்றி கண்டனன். (81)

(இ.ள்) ''ஒரு வேடன் நெடுநேரமாக வேட்டைக்காகக் காட்டில் அலைந்து திரிந்தும் வேட்டைகள் கிடைக்காமல் போனது. இவ்வாறாக பலநாளாக அலைந்து மனம் வாடியிருக்க, ஒரு நாள் ஒரு மானைக் கண்டு ஓடுகின்ற அந்த மானின் பின்னே ஓடி அதை எய்து எடுத்துக்கொண்டு வீடு திரும்பினான். அவனுடைய சேரிக்கு அருகில் வரும்போது அங்கே ஒரு பெரிய பன்றியைக் கண்டான்.

303. இதையுநா மெய்தோ மாகில்
இரண்டுநாள் தீனி யுண்டென்
றதையுமங் கெய்தான் பன்றி
யவனையுங் கொன்று சாக
முதுநரி யொன்று கண்டு
மூன்றுநா ளிரையுண் டென்று
குதைவிநாண் கடிப்ப வில்லுக்
குத்திடச் செத்த தென்றான் (82)

(இ.ள்) இந்தப் பன்றியையும் நாம் எய்தோ மாகில் இரண்டு நாளுக்குத் தேவையான உணவு கிடைத்துவிடும் என்றெண்ணி அப்பன்றியையும் எய்தான். ஆனால் வெகுண்ட பன்றி அவன் மீது பாய்ந்து அவனையும் கொன்று தானும் உயிர்விட்டது. இறந்து கிடந்த வேடன், பன்றி, வில் ஆகியவற்றைக் கண்ட நரி ஒன்று தனக்கு மூன்று நாளுக்குத் தேவையான உணவு கிடைத்தது என்று மகிழ்ந்து முதலில் வில்லின் நாணைக் கடிக்க நாண் அறுந்து வில்லால் அடிபட்டு இறந்தது'' என்றான் மறையவன்.

திதி செய்த கதை - தொடர்ச்சி

304. உள்ளது கொண்டு தன்ம
முதவிநாம் புசிப்போ மென்று
தெள்ளிய மறையோன் சொல்லத்
தேவியும் மகிழ்ந்து வீட்டில்
என்னலா தொன்று மில்லை
இதையினிக் கழுவி யாட்டி
வள்ளலே மறையோர்க் கெண்ணெய்
வழங்கிநீ ராட்ட வென்றே. (83)

(இ.ள்) ''உள்ளதைக்கொண்டு தருமச் செயல்கள் செய்து நாமும் உண்போம்'' என்று தெளிந்த வேதியன் சொல்ல, அவனுடைய மனைவியும் மகிழ்ந்து, வீட்டில் எள்ளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இதைக் கழுவி ஆட்டி, வரக்கூடிய மறையவர்களுக்கு எண்ணெய் கொடுத்து அவர்களை நீராட்டிடலாம் என்று கருதி,

305. திலத்தையாய்ந் தெடுத்து நீரிற்
செப்பமாய்க் கழுவிப் பாயில்
உலர்த்தினா ளுலர்த்த வந்த
ஊரினிற் காக்கை தின்று
நிலத்தினி லிறைப்பக் கண்டு
நெஞ்சகங் கலங்கி யோடிப்
புலத்திய னென்னும் வேத
பூரணன் மனையிற் சென்றே. (84)

(இ.ள்) எள்ளை எடுத்து நீரில் நன்றாகக் கழுவிப் பாயில் போட்டு உலர வைத்தாள். உலர்த்தி வைத்த அந்த எள்ளை காக்கைகள் தின்று நிலத்திலும் இறைத்து வீணாக்கியது. இதைக் கண்டு மனம் கலங்கிய அவள், புலத்தியன் என்னும் மற்றொரு வேதியனின் வீட்டிற்குச் சென்று...

306. அங்கவன் தேவி தன்னை
யழைத்துநான் பருப்புத் தாரேன்
மங்கையே எள்ளுத் தந்து
மாற்றெனும் மாற்றங் கேட்டே
இங்கொரு கார ணத்தால்
எள்ளுக்கு மாற்ற வந்தாள்
நங்கையே யென்று வேதன்
நாடியே விசாரித் தானே. (85)

(இ.ள்) அங்கு அவன் மனைவியை அழைத்து, நான் பருப்பு தருகிறேன். பதிலாக நீ எள் தந்து மாற்றிக்கொள் என்று சொனனாள். அவள் கேட்டதை புலத்தியன் ஏதோ ஒரு காரணத்தால் இவள் பருப்புக்கு எள் மாற்ற வந்தாள் என்று கருதி வந்து, அது குறித்து விசாரித்தான்.

எலி தன் வரலாறு கூறியது – தொடர்ச்சி

307. ஆரண னறிந்து கொண்டா
னப்படி நாமு மிந்தக்
காரண மறிவோ மென்று
கடுகியே கொட்டெ டுத்துப்
பார்வளை யகழ்ந்து வெட்டிப்
பார்க்கநா னோடிப் போனேன்
சேரவங் கிருந்த செம்பொன்
றிரளெலா மெடுத்துக் கொண்டார். (86)

(இ.ள்) ''வேதியன் விசாரித்து அறிந்து கொண்டதைப் போல நாமும் இந்தக் காரணத்தை அறிவோம் என்று, விரைந்து ஒரு கடப்பாரையை எடுத்து என் வளையைத் தோண்டிப் பார்த்தனர். நான் அஞ்சி அங்கிருந்து ஓடிப் போனேன். அவர்கள் அங்கு சேர்த்து வைத்திருந்த பொன்னையெல்லாம் எடுத்துக்கொண்டனர்.

308. வேறொரு வளையிற் றங்கி
வெம்பசி தனக்கு முன்போல்
சோறுநா னருந்தப் போனேன்
துரத்திவந் தடித்தா ரின்று
காறுமங் கவர்ம டத்தைக்
கருதவும் பயந்து திங்கள்
ஆறுமோ ராறும் வேறோ
ரடவிபுக் கிருந்தேன் யானே. (87)

(இ.ள்) ''நான் வேறொரு வளையில் தங்கியிருந்து என் பசியைத் தணித்துக்கொள்ள முன்போல் சோற்றினை அருந்தப் போனேன். ஆனால் அவர்கள் துரத்தியடித்தனர். இனியும் அந்த மடத்தில் தொடர்ந்து தங்குவதற்குப் பயந்து பன்னிரண்டு மாதங்களாக வேறொரு காட்டிற்குச் சென்று அங்கேயே வாழ்ந்திருந்தேன். ''

309. திரவியந் தானே புத்தி
திரவியந் தானே வித்தை
திரவியந் தானே சுற்றம்
திரவியந் தானே மித்திரம்[1]
திரவியந் தானே சத்தி
திரவியந் தானே முத்தி
திரவியந் தானே யாவுஞ்
செய்வதல் லாது முண்டோ. (88)

பா. பே.: பாடல் 309. 1. திரவியந் தானே சுத்தம் திரவியந்தானே சித்தி

(இ.ள்) 'செல்வத்தால்தான் புத்தி, செல்வத்தால்தான் கல்வி, செல்வத்தால்தான் சுற்றத்தினர், செல்வத்தால்தான் நட்பு, செல்வத்தால்தான் சக்தி, செல்வத்தால்தான் அனைத்தும் உண்டாகும். செல்வம் இல்லாது ஆவதும் உண்டோ ?'

310. சத்துவம் புத்தி வித்தை
சதுர்விதார்த் தங்க ளான[1]
இத்தனை விதமுஞ் செல்வ
மில்லையேல் இல்லை யாகும்
சத்துவம் புத்தி வித்தை
சதுர்விதார் தங்க ளான
இத்தனை விதமுஞ் செல்வ
மெய்திடி லெய்து மன்றே. (89)

(இ.ள்) ''சத்துவம் புத்தி, வித்தை, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை பொருள்கள் ஆகிய இத்தனையும் செல்வம் இல்லையேல் இல்லை யென்றாகும். சத்துவம், புத்தி, வித்தை, அறம் முதலான நான்கு பொருள்களும் செல்வம் இருந்தால் தாமே வந்து சேர்ந்துவிடும்.'

311. சுதியிலார் பாட்டும் நல்ல
சுற்றமில் லாத நாடும்
மதியிலார் கவியும் நல்ல
மனைவியில் லாத வீடும்
பதியிலாள் அழகும் பாழே
பார்க்கிலிங் கிவைபோ லல்ல
நிதியிலார்க் கெவையும் பாழே
நினைக்கில்மூ வுலகும் பாழே. (90)

பா. பே.: பாடல் 310. 1. சத்துவம் புத்தி வித்தை சதிர்விதா நங்களான.....

(இ.ள்) 'சுருதி இல்லாத பாட்டு, மன்னனுக்கு நல்ல சுற்றம் இல்லாத நாடு, அறிவு இல்லாதவன் கவிதை, நல்ல மனைவி இல்லாத வீடு, கணவனில்லாப் பெண்ணின் அழகு, ஆகிய இவையனைத்தும் பாழாகும். பார்க்கப் போனால் இவற்றைப் போலன்றிச் செல்வம் இல்லாதவர்க்கு எல்லாமே பாழாகும். நினைத்துப் பார்த்தால் மூவுலகும் பாழாகும்.'

312. கதிரவ னிலையேல் கண்ணிற்
காண்பன மறையு மாபோல்
நிதியமொன் றிலையேல் யார்க்கும்
நீதிமா ஞானம் போதம்
துதிபெறு கீர்த்தி யாண்மை
சூழ்ச்சிமந் திரிவி சாரம்
சதுரபி மான மெல்லாம்
தன்னிலே மறைந்து போமால். (91)

(இ.ள்) 'கதிரவனின் ஒளி இல்லாது போனால் கண்ணில் காணப்படும் பொருள், காண இயலாமல் மறைந்து போகும். அதுபோன்று செல்வம் ஒருவனிடத்தில் இல்லையென்றால் நீதி, பெரிய ஞானம், அறிவுத் தெளிவு, துதிக்கப்படும் புகழ், ஆண்மை, சிந்தனை, அமைச்சர்தம் ஆலோசனைகள், திறமை, பிறர் கொள்ளும் அபிமானம் ஆகிய யாவும் மறைந்து போகும்.'

313. வறுமையா லேயா சிக்க
வருமவர் தமக்கு மாவீ
இறுமவர் தமக்குஞ் செய்யு
மியற்கையொன் றாமே தென்னில்
உறுதிபோம் கைகால் சோரும்
உள்ளமுங் கலங்கும் மெய்யுங்
குறுகியே நடுக்கும் வாயுங்
குழறுநல் லறிவும் போமே. (92)

(இ.ள்) 'வறுமை காரணமாக யாசிக்க வருபவர் தமக்கும், ஆவி பிரியும் நிலையில் உள்ள ஒருவருக்கும் நிகழும் நிகழ்வு ஒன்றேயாகும். அஃது யாதெனில் உடல் உறுதி போகும், கைகால் சோர்ந்துபோகும். உள்ளம் கலங்கும். உடல் குறுகி நடுங்கும். வாயும் குழறும். நல்லறிவும் போய்விடும்.'

314. பொன்னின்மே லிருந்து சோற்றைப்
புசித்தனை பொன்னும் போச்சே
இன்னமு முனக்கு வெட்க
மில்லையோ வென்று சூடர்
கன்னன்முன் சொன்ன தென்றன்
கருத்துளே வருத்த லாலே
நின்னைவந் தடைந்தே னென்னை
நீயினிக் காப்பா யென்னும். (93)

(இ.ள்) 'பொன்னின் மேல் அமர்ந்திருந்து என் சோற்றை உண்டாய். இப்பொழுது உன்னிடமிருந்த பொன்னும் பறிபோனது. எலியே இன்னும் உனக்கு வெட்கம் இல்லையா?'' என்று சூடர்கன்னன் என்னைப் பார்த்துச் சொன்னது என் மனத்தைப் பெரிதும் வருத்துவதால் உன்னை வந்தடைந்தேன் இனி நீ என்னைக் காப்பாய்' என்று எலி சொன்னது.

315. இரணியன் தன்னை நோக்கி
இலகுபத னகனும் நீயும்
திரமுடன் வந்து சேர்ந்த
செல்வமுற் பிறப்பி லேயான்
பரவிய தெய்வந் தந்த
பாக்கிய மன்றோ வென்று
புரைவற நண்பு கொண்டு
பொருந்தியங் கிருந்து கொண்டே. (94)

(இ.ள்) இரணியனைப் பார்த்து ஆமை, ''இலகுபதனகனும் நீயும் உறுதியுடன் இங்கு வந்து சேர்ந்தது எனக்குச் செல்வம் எய்தியது போன்றது. முற்பிறப்பிலே நான் வணங்கிய தெய்வம் தந்த பெரும் பாக்கியமாகும்'' என்று கூறி குற்றமற்ற நட்புக்கொண்டு மூன்றும் அங்கே வாழ்ந்திருந்தன.

316. மந்தரன் மீன்கள் கொண்டு
வரலகு பதன கன்போய்
எந்தடை வேறு நல்ல
விறைச்சிகள் கொண்டு செல்லச்
சுந்தர விரணி யன்போய்
சோறுகொண் டேக மூன்றும்
சந்ததங் கூடி யுண்டு
தருக்கியங் கிருக்கும் நாளில். (95)

(இ.ள்) மந்தரனாகிய ஆமை மீன்கள் கொண்டுவர இலகுபதனகன் போய் எவ்வகையாலும் நல்ல இறைச்சிகள் கொண்டு வந்தது. இரணியன் போய் சோறு கொண்டுவர மூன்றும் என்றென்றும் ஒன்று கூடி அவற்றை உண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தன.

காகம், எலி, ஆமை, மான் இவை வேடனை வென்ற கதை - தொடர்ச்சி

வேறு

317. கான வேடனைக் கண்டு நடுங்கிய
மானி னோர்கலை மானவ ணெய்தலும்
ஞான மந்தர னும்மிரு நண்பரும்
ஏன்ந டுங்கினை யென்று வினவவே. (96)

(இ.ள்) ஒரு நாள் வேடனைக் கண்டு அஞ்சி நடுங்கிய மான் ஒன்று அங்கே வந்து சேர்ந்தது. மந்தரனும் மற்ற இரு நண்பர்களும் மானைப் பார்த்து 'ஏன் நடுங்குகிறாய்' என்று கேட்டன.

318. வெஞ்ச மன்புரை வேட னொருவனே
நஞ்ச வம்புகொண்டெய்ய நடுங்கியே
தஞ்ச மங்கிலை யாலுமைச் சார்ந்தனன்
அஞ்ச லென்றப யந்தரு வீரென. (97)

(இ.ள்) ''எமனைப் போன்ற வேடன் ஒருவன் என்மீது நஞ்சு தடவிய அம்பினை எய்ய முற்பட, நான் நடுங்கி அங்கிருந்து பாதுகாப்பில்லை என்று உம்மை வந்து சேர்ந்தேன். நீங்களே என் அச்சம் நீக்கி அடைக்கலம் தரவேண்டும்'' என்றது மான்.

319. நல்ல துன்பெயர் யாது நவிலென
எல்லை மன்சித்தி ராங்கனெ னச்சொல்வர்
சொல்லுந் தந்தைதாய்ச் சுற்றமொன் றின்மையால்
புல்லு கானம் புகுந்து வருந்தினேன். (98)

(இ.ள்) 'நல்லது, உன் பெயர் யாது எனச் சொல்' என்று கேட்க, உலகத்தார் என்னைச் சித்திராங்கன் என்பர். எனக்குத் தந்தை, தாய், சுற்றம் என எதுவும் இல்லாததால் இக்காட்டில் புகுந்து துன்புறுகிறேன்.

320. தந்தை தாய்தமர் நீவிர்நும் தஞ்சமாய்
வந்த வென்மிசை நண்புவைத் தீரெனில்
எந்த நாளும் உமைப்பிரி யேனென
மந்த ரன்முதல் மூன்றும் வகுக்குமால். (99)

(இ.ள்) எனக்குத் தந்தை தாய் உறவு எல்லாம் நீங்கள்தான். உங்களிடம் தஞ்சமாய் வந்த என்மீது நட்பு வைத்தீரானால் எந்த நாளும் உங்களை விட்டுப் பிரியமாட்டேன்'' என்று மான் கூற, மந்தரன் முதலான மூன்றும்...

321. நன்று நாமினி நால்வருங் கூடியே
ஒன்று சிந்தைய ராகி யொருமையாய்
என்றும் வாழ்வ தியல்பென வெண்ணியே
அன்று தாமும் அபய மளித்தவே[1]. (100)

பா. பே.: பாடல் 321. 1. அன்று மூன்று மபய மளித்தவே

(இ.ள்) நல்லது, நாம் இனி நால்வரும் கூடி ஒரே மனத்தினராய், ஒற்றுமையாய் வாழ்வதுதான் நமக்கு இயல்பு என எண்ணி, அன்று அவை அந்த மானுக்கு அபயம் அளித்தன.

322. **நான்கு மிப்படி நல்லுற வாகியே**
ஆங்கு வைகு மளவினி லோர்பொழு
தோங்கு மானிரைக் கோடியோர் காட்டினில்
தேங்கு வேடன் வலையினிற் சிக்கியே. (101)

(இ.ள்) இவை நான்கும் இப்படி நல்ல நட்புடன் அங்கே வாழும்போது ஒருநாள் மான் இரை தேடிச் சென்று ஒரு காட்டில் வேடன் விரித்த வலையில் சிக்கிக் கொண்டது.

323. **சித்தி ராங்கன் திகைத்தது கண்டுதான்**
கத்து காகத்தின் பாடைதங் காதுற
மெத்து மாமையும் மூடிக மும்விரைந்
தத்தி சைக்கண டைந்ததைக் கண்டவே. (102)

(இ.ள்) வலையில் சிக்குண்ட சித்திராங்கன் என்னும் மான் திகைத்தது கண்டு காகம் கத்த, காகத்தின் மொழி தம் காதுகளில் விழுந்தவுடன் ஆமையும் எலியும் ஒலிவந்த திசையில் விரைந்தோடி வந்து மானின் நிலையைக் கண்டன.

324. **காக்கை சென்றெதிர் கூவிக் கதறியே**
தீக்கண் வேடன் வலையினிற் சிக்கியே
நோக்கு நவ்வி நுடங்கும் வருத்தத்தை
நீக்க வேண்டும் நிமிடத்தி லென்னவே. (103)

(இ.ள்) காக்கை அவற்றின் எதிரில் சென்று கூவிக் கதறி, தீ போன்ற கண்களை உடைய வேடன் விரித்த வலையில் சிக்கி வருந்தும் மானின் துன்பத்தை நிமிடத்தில் நீக்க வேண்டும் என்றது.

325. கூடி மூன்றுங் குறுகி வலைக்குளே
வாடி நின்ற மறிமுகம் நோக்கியே
பீடு லாவு மறிவிற் பெரியைநீ
ஓடி யிவ்வலை யுற்றதென் னோவென. (104)

(இ.ள்) மூன்றும் கூடி வந்து வலைக்குள்ளே மனம் வாடி நிற்கும் மானின் முகம் பார்த்து, 'அறிவிற் சிறந்த நீ ஓடிவந்து இந்த வலையில் சிக்கியது எவ்வாறு' என்று வினவ..

326. பின்னை வேண்டின பேசுதும் வேடன்வந்
தென்னை யாவி யிறுத்திடு முன்னமே
மன்னு காலில் வலையை விடுத்திடென்
றுன்னு மூடிகத் தோடுரை செய்யவே. (105)

(இ.ள்) 'பேச வேண்டியதைப் பின்னர் பேசிக் கொள்ளலாம். வேடன் வந்து என் உயிரை மாய்க்குமுன் முதலில் என் காலில் கட்டியுள்ளதை அறுத்து என்னை விடுவிக்கவும்' என எலியிடம் மான் கேட்டுக்கொண்டது.

327. என்ன பீதியு னக்கென் றெலிசொல
முன்னை நான்குரு ளைப்பரு வத்திலே
என்னை யோடு மடவியில் வைகினேன்
துன்னு வேடன் பெருவலை சூழ்ந்தனன். (106)

(இ.ள்) 'ஏன் பயப்படுகிறாய்' என்று எலி சொல்ல, மான், முன்பு நான் குட்டியாக இருந்தபோது, என் தந்தையுடன் காட்டில் வாழ்ந்து வந்தேன். ஒரு நாள் வேடன் ஒருவன் பெரிய வலை ஒன்றை விரித்திருந்தான்.

328. தாவி யந்த வலைதனைத் தாண்டியோர்
காலில் விழுந்தனன் கண்டு கடுங்கொலைப்
பாவி யென்னைப் பிடித்துப்போய்ப் பட்டணக்
காவ லன்மகிழ் காணிக்கை யீந்தனன். (107)

(இ.ள்) 'நான் தாவி அந்த வலையைத் தாண்டி ஒரு வாய்க்காலில் விழுந்தேன். அதைப் பார்த்த கொடுமையான கொலைபாதகனான வேடன் என்னைப் பிடித்துப் போய்ப் பட்டணக் காவலன் மனம் மகிழும்படிக் காணிக்கையாகக் கொடுத்து விட்டான்.'

329. அந்த மன்னன் குமரர்க் களித்தலும்
மைந்தர் சிந்தை மகிழ்ந்து களிப்பினாற்
சந்த தம்விளை யாடித் தருக்கியே
பந்த மிட்டுவைத் தாரந்த நாளிலே. (108)

(இ.ள்) 'அந்த மன்னன், என்னைத் தன் மகன்களுக்குக் கொடுத்தான். அவர்கள் மனமகிழ்ச்சியுடன் தினமும் என்னுடன் விளையாடி என்னைக் கட்டி வைத்தனர். ஒரு நாள்

330. மழைமு ழக்கி வருதலு நாமுநம்
உழையி னத்துட னோடித் திரிந்துபைங்
குழைமு றிப்பதெந் நாளெனக்[1] கூறிநின்
றழுத ரற்றினன் யானது கேட்டலும்[2]. (109)

(இ.ள்) 'மழை சூழ்ந்து வந்தது. நான், நாமும் நம் மானினத்தோடு ஓடித் திரிந்து பசிய குழைகளை முறித்து உண்பது என்றோ என்று கூறி நின்று அரற்றி அழுதிருந்தேன். அதைக் கேட்டு,

331. என்ன காரண மோவறி யோமிது
தன்னை நான்தடை செய்வது தன்மமன்
றென்ன வெண்ணி யெனைவிடுத் தாரிள
மன்னர் நானிவ் வனத்தினி லுற்றனன். (110)

(இ.ள்) என்ன காரணமோ தெரியவில்லை. இதனை நான் கட்டி வைத்திருப்பது அறமல்ல என்று எண்ணி

பா. பே.: பாடல் 330. 1. குழைக றுப்பதெந் நாளென
2. அழுத றற்றினன் அன்னது கேட்டலும்

என்னை இளவரசன் விடுவித்தார். நான் இந்தக் காட்டினில் வந்து சேர்ந்து வாழ்ந்திருந்தேன்.'

332. என்று கூறி இரங்க விரணியன்
வென்றி வேடன் விரைந்து வருமுனம்
சென்று காலில் வலையைச் சிதைத்தலும்
கன்று மானுங் கடுகி நடந்ததே. (111)

(இ.ள்) என்று மான் கூறி வருந்த, இரணியன் வேடன் வருமுன் மானின் காலில் உள்ள வலையைச் சிதைத்தது. மானும் அங்கிருந்து விரைந்து நடந்தது.

333. தீமை வேடன் விரைந்துசென் றானெலி
பூமி வாவளை புக்கங் கொளித்தது
வாம மேவு கொடிமரத் தேறவே
ஆமை யார்நடை யால்முட்ட மானதே. (112)

(இ.ள்) தீயவனான வேடன் விரைந்து வர எலி சென்று பூமியில் உள்ள வளையொன்றில் புகுந்து ஒளிந்து கொண்டது. காகம் மரத்தின் மேல் ஏறிக்கொண்டது. ஆமையோ தன் மெதுவான நடையால் முடங்கியது.

334. வந்த வேடன் மனது மயங்கியே
அந்த மானின் அடிதொடுத் தோடலும்
முந்து மாமை முடங்கிக் கிடந்ததைப்
பந்த மார்வலைப் பையினிற் கட்டியே. (113)

(இ.ள்) வந்த வேடன் மனம் மயங்கி மானைப் பின் தொடர்ந்து ஓடுமுன் முடங்கிக் கிடந்த ஆமையை ஒருவலைப் பையில் கட்டி எடுத்துக்கொண்டு ஓடினான்.

335. மானின் மேல்மனம் வைத்து மயங்கியே
ஆன வேடுவன் ஆமைகொண் டோடவே
ஞான மார்கொடி கண்டு நண்பனைக்
கான நீங்குமுன் மீட்கக் கருதியே. (114)

(இ.ள்) மானின் மேல் எண்ணம் வைத்து வேடன் ஆமையை எடுத்துக்கொண்டு ஓடுவதை காகம் கண்டு, காட்டிலிருந்து நீங்குவதற்குமுன் தன் நண்பனை மீட்க எண்ணி..

336. ஆகு வேந்தனம் ஆமையைக் கொண்டவன்
போக நாம்கண் டிருத்தல்பொல் லாதுமுன்
ஏகி மானொடு கூடி யிதற்குவே
றுாக மெண்ணுவம் வாவென் றுரைத்ததே.* (115)

(இ.ள்) 'எலியரசே நம் ஆமையை எடுத்துக் கொண்டு அவன் போவதை கண்டு வாளாவிருத்தல் பொல்லாதது. நாம் விரைந்து சென்ற மானோடு சேர்ந்து இதற்கு ஒரு உபாயத்தைத் தீர்மானிப்போம்.'

337. என்று கூறலுங் கேட்டினிவ் வேடனை
வென்று நண்பன் இடர்விலக் காமலே
சென்று நாமுயிர் வாழ்வது தீதெனக்
கன்று மானினக் கலையு முரைத்ததே.[1] (116)

(இ.ள்) என்று கூறவும் இதைக் கேட்டு, '' இந்த வேடனை வென்று நம் நண்பனுடைய துன்பத்தினை நீக்காமல் நாம் சென்று உயிர் வாழ்வது தீதானது'' என்று மான் கூறியது.

---

* 115ஆம் பாடலும் 116ஆம் பாடலும் வரிசைமாறிச் சுவடியில் அமைந்துள்ளன. எனினும் பொருள்தொடர்பு கருதி இந்த வரிசையில் இவை வைக்கப்பட்டுள்ளன. அச்சுப் பிரதியிலும் இம்முறையிலேயே அமைந்துள்ளன.

பா. பே.: பாடல் 337.1. ஒன்று நண்பிற் கொடியு முரைத்ததே.

சுவடியில் இப்பாடல் மானின் கூற்றாக இருக்க, அச்சுப் பிரதியில் காகத்தின் கூற்றாகக் காணப்படுகிறது.

338. கோல மாரெலி நன்றெனக் கூறலும்
காலி னாலதை இடுக்கிக் கணத்தினிற்
சால வேபறந் தக்கலை தன்னுடன்
ஓல வேயொரு நன்மை யுரைசெயும்.[1] (117)

(இ.ள்) எலியும் அதுதான் சரி எனக் கூறவும், காலினால் எலியை இடுக்கிக்கொண்டு கண நேரத்தில் விரைந்து பறந்த காகம் மானிடத்தில் ஒரு கருத்தினைச் சொன்னது.

339. தத்து நீர்கரை தன்னில் விழுந்துநீ
செத்த தென்னவே கிடந்தா லுன்னைக்
கொத்து வேனது கொண்டவ னாமையை
வைத்து நின்னை எடுக்க வருவனே. (118)

(இ.ள்) 'அலைகளுடைய நீர்க் கரையில் நீ விழுந்து செத்ததுபோல் கிடந்தால் உன்னை நான் கொத்துவேன். அது கண்ட வேடன் ஆமையைக் கீழே வைத்துவிட்டு உன்னை எடுக்க வருவான்.

340. அந்த வேளை யிரணிய னாமையின்
பந்த நீக்கி வளைபுகும் பைம்புனல்
மந்த ரன்புகும் நான்பறப் பேனவன்
முந்த நீயும் ஒளித்திடு வாயென. (119)

(இ.ள்) அந்த நேரத்தில் இரணியன் ஆமையின் கட்டுகளை அறுத்தெறிந்துவிட்டு வளைக்குள் புகுந்து கொள்ளும். மந்தரன் நீருள் புகுந்து கொள்ளும். நான் பறப்பேன். அவன் உன்னைப் பிடிக்குமுன் நீயும் ஓடி ஒளிந்திடுவாய் எனக் காகம் கூறியது.

பா. பே.: பாடல் 338. 1. கூல வேந்தனை வேந்தன் கொடேகினான்

341. நல்ல சூழ்ச்சிசொன் னாயென நண்ணியே
மெல்ல நீர்க்கரை மான்கலை வீழ்ந்தது
புல்லு காகம்பு சிக்கவி ழுந்தபோல்
மெல்ல வேயதன் மீதில் விழுந்ததே. (120)

(இ.ள்) நல்ல தந்திரம் சொன்னாய் என்று சொல்லி, நீர்க்கரையில் மான் வீழ்ந்தது. அதையடைந்து காகம் மானை உண்ண விருப்பதுபோல் அதன் உடல்மேல் மெல்ல வந்தமர்ந்தது.

342. கண்டு வேடன் கலக்கந் தெளிந்திதை
கொண்டு போது மெனக்குறித் தாமையை
மண்டு நீர்கரை தன்னில்வைத் தோடினான்
பண்டு போலெலி பாசங் கடித் ததே. (121)

(இ.ள்) அதைப் பார்த்த வேடன் மனம் மகிழ்ந்து இதை எடுத்துப் போவோம் எனக் கருதி, ஆமையை நீர்க்ரையில் வைத்துக்கொண்டு மானிடம் ஓடினான். முன்போலவே எலி வலையைக் கடித்து அறுத்தது.

343. மானை வேடன் குறுகவம் மானொரு
கானில் வீழுந்தது காகம் பறந்தது
கூன லாமை குளத்தில் வீழுந்தது
ஞான மூடிகம் நல்வளை புக்கதே. (122)

(இ.ள்) மானை வேடன் நெருங்கியதும் மான் ஓடிப்போய்க் காட்டில் புகுந்தது. காகம் பறந்தோடிப் போனது. ஆமை குளத்தில் வீழ்ந்து மறைந்தது. எலியும் தன் வளையில் புகுந்தது.

344. வேட னோடி விடாய்த்தவன் மீண்டதைக்
கோடு லாவிய வாயசங் கூறவே
நாடி நன்குமங் கோரிடம் நண்ணியே
கூடி வாழ்ந்து குலாவி யிருந்தவே. (123)

(இ.ள்) வேடன் ஓடிக் களைத்துத் திரும்பியதைக் கிளையில் அமரும் காகம் கூறவே, அந்த நான்கும் ஓரிடத்தில் ஒன்றுகூடி வாழ்ந்து நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்தன.

345. ஆத லானல் லவர்க ளுறவு போல்
ஊதி யம்பிறி தில்லையு யிர்க்கென
வேதியன்சொல வேந்தன்கு மாரரும்
நீதி யாமென நேயம்வைத் தார்களே. (124)

(இ.ள்) எனவே, நல்லவர்களுடனான உறவு போன்று உயிர்க்கு ஊதியம் வேறொன்றும் இல்லை, என்று வேதியனான சோமசர்மா கூற வேந்தனுடைய மக்கள் நால்வரும் உண்மையே எனக் கூறி முன்னினும் வேதியன் மேல் அன்பு வைத்தனர்.

இரண்டாவது தந்திரம் சு கிரில்லாபம் முற்றும்

மூன்றாவது தந்திரம்

சந்தி விக்கிரகம்

(பகைவரை அடுத்து உறவுசெய்து வெல்லுதல்)

346. இளம்பிரை யரவு கங்கை
யிருநதி யாடி மண்ணில்
வளம்பெற ஆடும் எந்தை
மலரடி கருதி மேலோர்
உளம்புனை மித்ர பேதம்
உபாயநற் சுகிரில் லாபம்
விளம்பின மிப்பாற் சந்தி
விக்கிரங் கூறு வோமே. (1)

(இ.ள்) இளம்பிறை நிலவு, பாம்பு, கங்கை எனும் பெரிய நதி இவற்றை உடலில், தலையில் தாங்கி, மண்ணுலகில் வளம்பெறும்படியாக திருநடம் புரியும் எந்தையாம் சிவபெருமானின் மலர்த்திருவடிகளை மனத்துள் தியானித்து, சான்றோர்கள் உள்ளத்துள் புனைந்திருக்கின்ற மித்திரபேதம், உபாயமாகிய நல்ல சுகிரில்லாபம், ஆகியவற்றை முன்னர் கூறினோம். இனி சந்தி விக்கிரகம் கூறுவோம்.

347. அந்தணன் சுகிரில் லாபத்
தடைவெலா முரைப்ப வேந்தன்
மைந்தர்கள் வினவி மிக்க
மகிழ்வுட னிருந்து மூன்றாந்
தந்திர மென்று சொன்ன
சந்திவிக் கிரகம் யாது
புந்திகூர்ந் துரைக்க வென்று
புகலவே தியனு ரைப்பான். (2)

(இ.ள்) அந்தணனாகிய சோமசர்மா சுகிரில்லாபத்தின் பகுதியெல்லாம் எடுத்துக் கூறி முடிக்க, இளவரசர்கள் மிக்க மகிழ்வுடன் கேட்டிருந்து, பின் மூன்றாம் தந்திரம்

என்று சொன்ன சந்திவிக்கிரகம் யாது, அன்பு கூர்ந்து அதனை எடுத்துரைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ள, வேதியன் சொல்வான்.

348. சத்துரு வான பேர்கள்
சரணமென் றடைந்தா ரேனும்
மித்திரு வாக வெண்ணி
விரும்பிநட் பாக வொண்ணா
தெத்திற மென்னிற் காகம்
இளைத்தது போல வந்து
குத்திர மாகக் கோட்டான்
குலமெலா மழித்த தன்றே. (3)

(இ.ள்) பகைவர்கள் சரணம் என வந்து நம்மை அடைந்தார்களேனும், அவர்களை நண்பர்களாகக் கருதி அவர்களை விரும்பி நட்பாக ஏற்றுக்கொள்ளக் கூடாது. இஃது எவ்வாறெனின் காகம் காயம்பட்டு வருந்தியது போல வந்து வஞ்சகமாக கோட்டான் குலம் முழுவதையும் அழித்தது போலாம்.

காகம் கோட்டானை வென்ற கதை

349. என்னவக் கதையே தென்றார்
இருள்குடி கொண்ட கானடொன்
றன்னதிற் பெரிய தான
ஆலமா மரத்தி லென்றுந்
துன்னிய காக வேந்தன்
துகளறு மேக வண்ணன்
அன்னவன் சேனை கோடி
அமைச்சர்கள் ஐவர் தம்பேர். (4)

(இ.ள்) அதைக்கேட்ட அரச குமாரர்கள், என்ன அந்தக் கதை என்று கேட்டனர். சூரிய ஒளி புகமுடியாத இருள் குடிகொண்ட காடு ஒன்றிருந்தது. அக்காட்டில்

மிகப்பெரிய ஆலமரம் ஒன்றுண்டு. அதில் காகங்களின் அரசன் மேகவண்ணன். அதற்குச் சேனைகள் கோடிபேர். அமைச்சர்கள் ஐவர். அவர்கள்பெயர்.

350. திகழுமுத் தீபி தன்சந்
தீபிதன் தேச மெல்லாம்
புகழ்புரோத் தீபி தன்பின்
புகலுமாத் தீபி தன்மேல்
நிகழ்திரஞ் சீவி யென்பார்
நீதிமந் திரிகள் சூழ
மகபதி போல மேக
வண்ணன்வீற் றிருந்து வாழும்.[1] (5)

(இ.ள்) முத்தீபிதன், சந்தீபிதன், தேசமெல்லாம் புகழும் புரோத்திபிதன், சொல்லப்படும் மாத்தீபிதன், மேலும் திரஞ்சீவி என்பனவாகும். இந்த ஐந்து நீதி மந்திரிகள் சூழ இந்திரனைப்போல் வீற்றிருந்து மேகவண்ணன் வாழ்ந்திருந்தது.

351. அடுக்கவோர் மலைமு ழைஞ்சில்
அலகிலாக் கூகை சூழ
நடுக்கமொன் றானு மின்றி
நல்லமந் திரிகள் சூழ
இடுக்கணில் லாம லெங்கும்
இரவெலாம் வேட்டை யாடத்
தடுக்கலா உலூக வேந்தன்
தானுமங் கிருந்து வாழும். (6)

(இ.ள்) பக்கத்தில் ஒருமலைக் குகையில் அளவற்ற கூகைகள் சூழ நடுக்கமெதுவுமின்றி நல்ல மந்திரிகளின் துணையுடன் துன்பமின்றி இரவு நேரத்தில் வேட்டையாடி, எத்தடையுமின்றி ஆந்தைகளின் அரசன் வாழ்ந்து வந்தது.

பா. பே.: பாடல் 5. 1. மேகவண்ணன் வீற்றிருக்கு நாளில்

352. பகலெலாங் காகங் கூகை
பதைத்திட வடிக்குங் கூகை
இகலிரா முழுதுங் காகம்
எழும்பிடா தடிக்கும் இந்த
வகையிலே கிடந்து சிந்தை
வருந்துநாள் தன்னி லோர்நாள்
தகவிரா வதனில் யாமம்
தனிலமைச் சர்களை நோக்கி. (7)

(இ.ள்) பகல் நேரம் முழுவதும் காகங்கள் கூகைகளை மனம் பதைக்கும் வகையில் தாக்கியடிக்கும். ஆனால் இரவு நேரத்தில் கூகை காக்கையினம் எழமுடியாதபடி அடிக்கும். இவ்வாறு இரண்டும் மனம் வருந்தித் துன்புற்றிருக்கும் நாளில், ஒரு நாள் இரவில் நடுயாமத்தில் கூகையரசன் தன் அமைச்சர்களை நோக்கி ..

353. கதிரவ னெழுந்தா லந்தக்
காக்கையை வெல்லக் கூடா
திதுநல சமய மிந்த
இரவிலே வளைத்துக் கொண்டு
சதியினா லடித்துக் கொன்று
சத்துரு நாசம் செய்வோம்
மதியுடன் சேனை கூடி
வருகவென் றெழுந்த தம்மா. (8)

(இ.ள்)''சூரியன் உதித்தெழுந்தால் அந்தக் காக்கையை வெல்லுவதென்பது இயலாது. எனவே. இதுதான் நல்ல நேரம். இந்த இரவிலே காகங்களை வளைத்துக் கொண்டு நம் சூழ்ச்சியினால் அடித்துக் கொன்று பகையை அழித்து விடுவோம். எனவே சேனைகளைக் கூட்டி அழைத்து வருக'' என்றது.

354. நன்றென மகிழ்ந்த மைச்சர்
நமக்கிது வேளை தானே
வென்றிநாம் பெறுவோ மென்று
விரைவுடன் படைகள் கூட்டிச்
சென்றுபே ராலைச் சூழ்ந்து
சினத்துட னடித்துக் கொத்திக்
கொன்றுதான் வெற்றி கொண்டு
குகையைவந் தடைந்த தன்றே. (9)

(இ.ள்) இதைக்கேட்டு நன்று என மகிழ்ந்த அமைச்சர்கள், நமக்கு இதுவே உகந்த நேரம். நாம் வெற்றி பெறுவோம் என்று கூறி விரைவாகப் படைகளைச் சேர்த்துச் சென்று அந்தப் பெரிய ஆலமரத்தைச் சூழ்ந்து மிகுந்த கோபத்துடன் காகங்களை அடித்துக் கொத்திக் கொன்று காகங்கள் மீது கொண்ட வெற்றியுடன் குகையை வந்து அடைந்தன.

355. அழிந்தன காக சேனை
யாலெலாங் குருதி வெள்ளம்
வழிந்தது சிறகுங் காலும்
வயிற்றினில் குடரும் அற்று
விழுந்தன பிணம தற்குள்
வேந்தனும் விழுந்தொ ளித்தான்
ஒழிந்தது கங்குற் போதும்
உதித்தது பருதி மன்னோ. (10)

(இ.ள்) காகசேனை முழுதும் அழிந்தது. ஆலமரமெல்லாம் குருதி வெள்ளமாகக் காணப்பட்டது. காகங்களின் சிறகும் காலும் எங்கும் நிறைந்து வழிந்தன. வயிற்றிலிருக்கும் குடலும் அற்று பிணமாக விழுந்தன. அதற்குள் காகவேந்தன் மேகவண்ணனும் விழுந்து ஒளிந்து கொண்டது. மெல்ல இரவு மறைந்தது. கதிரவன் உதித்தது.

356. இருள்விடி வளவில் மன்ன
னெழுந்துதன் படைகள் பட்டுக்
கருமலை போற்கு விந்த
களமெலாம் பார்க்க வாங்கே
பெரியமந் திரிக ளைந்தும்
பிழைத்தன சிலகா கங்கள்
தருவொடு பிணத்தை யண்டித்
தப்பியே பிழைத்த வன்றே. (11)

(இ-ள்) இருள் நீங்கிப் பொழுது விடியும் நேரத்தில் மன்னனாகிய மேகவண்ணன் எழுந்து கூகைகளால் கொல்லப்பட்டுக் கருமலைபோல் குவிந்து கிடக்கும் களத்தினைப் பார்த்திருந்தது. அங்கே பெரிய மந்திரிகளான காகங்கள் ஐந்து பிழைத்திருந்தன. மேலும் சில காகங்கள் மரத்தையும் பிணத்தையும் அண்டி ஒளிந்து தப்பிப் பிழைத்திருந்தன.

357. பிழைத்தகா கங்க ளோட
பெரியமந் திரிகள் தம்மை
அழைத்துநம் காக மெல்லாம்
அழிந்திட வென்ன வேதன்
இழைத்தநா ளிதுவோ என்றங்
கிரங்கியே யழுது காயத்
துழைத்தகா கத்துக் கெல்லாம்
உற்றகா யங்கள் கட்டி. (12)

(இ-ள்) பிழைத்திருக்கும் காகங்களுடன் மந்திரிகள் ஐவரையும் அழைத்து, ''நம் காகக் கூட்டமெல்லாம் அழிவதற்கென்று இறைவன் வகுத்து வைத்த நாள் இதுவோ'' என்று கலங்கி அழுதது. பின் காயப்பட்ட காகங்களுக்கெல்லாம் மருந்திட்டுக் காயங்களைக் கட்ட ஏற்பாடு செய்தது.

358. செத்தகா கங்கட் கெல்லாஞ்
செய்யுமா றுரிமை செய்து
தத்துநீ ராடி வேறோர்
தருவினி லிருந்து வேந்தன்
துய்த்தலுந் துறந்து மிக்க
சூழ்ச்சிமந் திரிகா ளென்ன
புத்திநா முய்யு மாறு
புகலுமி னென்று கூற. (13)

(இ-ள்) இறந்துபட்ட காகங்களுக்கெல்லாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து, பின் நீராடி, வேறொரு மரத்தில் சென்றமர்ந்த காகங்களின் அரசன், உண்பதையும் மறந்து அமைச்சர்களைப் பார்த்து, ''அமைச்சர்களே நாம் உய்வதற்குரிய வழியினை எனக்குச் சொல்லுங்கள்'' என்று கூறியது.

359. சத்துரு வினுமிக் காரைச்
சார்ந்துசத் துருவைக் கொல்லல்
அத்தரங் கூடா தென்னில்
அவரையே தொழுது நிற்றல்
சித்தமங் கிரங்கா ராகில்
தேசம்விட் டப்பாற் போதல்
இத்திற முபாய மூன்றே
யென்றுமுத்தீ பிதன வின்றான். (14)

(இ-ள்) பகைவர்களிலும் வலிமை மிக்கவருடன் நட்புக்கொண்டு பகைவரைக் கொல்லுதல், அது இயலாவிடின் பகைவரைப் பணிந்துநிற்றல், அப்படியும் பகைவர் மனம் இரங்காவிடில் நாட்டைவிட்டு அப்பால் சென்றுவிடுதல் ஆகிய இவை மூன்றே உபாயங்கள் என்று முத்தீபிதன் சொன்னது.

360. தன்னிடத் திருக்கும் நாய்க்கும்
சவுரிய முண்டு சிங்கம்
என்னினுந் தானம் விட்டால்
எவருமங் கதையெண் ணார்கள்

துன்னுபாற் பசுவுந் தன்பால்
சுரந்திடா திடம்பே தித்தால்
மன்னிடத் திருந்தே வெல்லும்
வகைநினைத் திடுதல் நன்றே. (15)

(இ.ள்) ''தன் இடத்தில் இருக்கும் நாய்க்கும் எதிரியைத் தாக்கும் வல்லமை உண்டு. சிங்கமே யானாலும் அது தன்னிடமாகிய காட்டினைவிட்டு வெளியே வந்தால் யாரும் அதைக் கண்டு மிகுந்த அச்சம் கொள்ள மாட்டார்கள். பசுவும் தன்னுடைய வழக்கமான இடத்தை விட்டு மாறியிருந்தால்அது பால் சுரக்காது. எனவே நாம் நம்மிடத்திலிருந்தே எதிரியை வெல்லும் வகையைச் சிந்திப்போம்.''

361. என்றுசந் தீபி தன்றா
னியம்பலும் அதும றுத்து
நின்றுநற் குணமே தென்று
நிகழ்புரோத் தீபி தன்முன்
வென்றி கொண் டவர்கள்
நம்மை மேவியிங் கிருக்க வொட்டார்
இன்றினிச் சமாதா னத்தா
லிருப்பதே நல்ல தென்றான். (16)

(இ.ள்) எனச் சந்தீபிதன் சொல்ல, புரோதீபிதன் எழுந்து, சந்தீபிதனை மறுத்து, ''வெற்றி பெற்றவர்கள் இனிநம்மை இங்கே இருக்கவிட மாட்டார்கள். எனவே இனி நாம் சமாதானத்துடன் வாழ்வதே சிறந்தது'' என்றது.

362. வெங்கதிர்ப் பகலில் கண்கள்
விளங்குதல் குடிஞைக் கில்லை
கங்குலின் பொழுது கண்கள்
கருங்கொடிக் குலத்துக் கில்லை
எங்கினிச் சமாதா னத்தில்
இருப்பது கூகைக் கூட்டம்
மங்கலிப் பகலே சென்று
வளைந்துகொண் டடிப்போ மென்றே. (17)

(இ.ள்) ''வெம்மையான சூரிய ஒளி விளங்கும் பகலில் ஆந்தைகளுக்குக் கண்கள் தெரிவதில்லை. இரவு நேரத்தின்போது காகங்களுக்குக் கண்கள் தெரிவதில்லை. இனிச் சமாதானமாக இருப்பது எவ்விதம் கூகைக் கூட்டத்திற்குக் கண்கள் மங்கலாக இருக்கும் பகல் நேரத்தில் சென்று அவற்றை வளைத்துக் கொண்டடிப்போம்'' என்றது மாத்தீபிதன்.

363. ஓதுமாத் தீபி தன்முன்
உரைத்தமந் திரிகள் மூவர்
போதனை பலவுங் கேட்டே
புத்தியு முபாய முஞ்சொல்
நீதியும் விறலு மென்று
நிகழ்த்திரஞ் சீவி தன்னை
ஓதுநீ யென்று மன்னன்
உரைத்திட வுரைக்கு மன்றே. (18)

(இ.ள்) என மாத்தீபிதனும் முன்சொன்ன மூவரும் உரைத்த போதனைகள் போலவும் கேட்டுவிட்டு, அறிவும், உபாயமும், சொல்லும் நீதியும், ஆற்றலும் என்ற அனைத்தும் கொண்ட திரஞ்சீவியைப் பார்த்து, ''நீ உன் கருத்தினைச் சொல்க'' என மன்னனாகிய காகம் கூறியது.

364. வித்தொடு நல்ல மந்திரி
விசாரமும் நிகரே யந்த
வித்தையும் விதைத்தா லன்றி
விளைபயன் கொடாதவ் வாறு
புத்திமந் திரிகள் சொல்லும்
போதனை தனையும் நெஞ்சில்
வைத்திருந் தாலே யன்றி
மன்னர்தங் கருமமாகா. (19)

(இ.ள்) ''விதையும் நல்ல அமைச்சர்களுடனான ஆலோசனையும் ஒரே தன்மையுடையனவாகும். விதை

யையும் விதைத்தால்தான் விளைத்தலாகிய பலன் கிட்டும். அது போன்றே அறிவுடைய மந்திரிகள் சொல்லும் ஆலோசனைகளையும் மன்னர் தம் நெஞ்சினில் வைத்திருந்தாலேயன்றி மன்னருக்கும் காரியங்கள் நடைபெறுவதில்லை.''

365. கூடுவ தொன்று கூடிக்
குறைவறக் கெடுப்ப தொன்று
நாடுவிட் டேக லொன்று
நல்லரண் சேர்த லொன்று
வீடுவிட் டேகா தொன்று
மித்திர பேத மொன்று
நீடுசொல் வேந்தர் தம்பால்
நிகழ்குண மிருமூன் றாகும். (20)

(இ.ள்) '' பகைவரோடு கூடியிருத்தல் ஒன்று. அவருடன் கூடி முழுமையாக அழித்தல் ஒன்று. நாட்டை விட்டு வெளியேறிச் செல்லல் ஒன்று. பாதுகாப்பாக இருத்தல் ஒன்று. வீட்டைவிட்டு வெளியேறாமல் இருப்பது ஒன்று, எதிரிகளைப் பிரிக்கும் மித்திரபேதம் ஒன்று என நீடு சொல் வேந்தரிடம் காணப்பெறும் குணங்கள் ஆறு ஆகும்.''

366. காரிய முயற்சி பண்ணல்
காலமு மிடமும் ஓர்தல்
சீரிய தனமும் ஆளும்
தேடுதல் ஒருவன் செய்த
காரிய மதனுக் கொத்த
காரியம் தானும் செய்தல்
பாரிலே சமாதா னங்கள்
பண்ணலைந் தாகு மங்கம். (21)

(இ.ள்) ''செய்யவேண்டிய செயல்களை முயற்சித்தல், செய்யத் தக்கனவற்றிற்கான காலமும்

இடமும் ஆராய்தல், அதற்கான பொருளையும் ஆள்பலத்தையும் தேடுதல், எதிரி செய்த செயல்களுக்கு இணையான செயல்களைத் தானும் செய்தல், உலகில் சமாதானமாக வாழ்தல் என அங்கங்கள் ஐந்தாகும்.''

367. சாமமும் பேதந் தானும்
தானமும் தண்டந் தானும்
ஆமுபா யங்கள் நான்கே
அரியஉற் சாக மந்திரம்
பூமியில்பிர புத்துவ மென்று
புகன்றிடு சத்தி மூன்றே
சாமியிங் கிவைக ளெல்லாம்
தானறிந் தவனே வேந்தன். (22)

(இ.ள்) 367. '' சாம, பேத, தானம், தண்டம் என உபாயங்கள் நான்காகும். அரிய மனோவேகமாகிய உற்சாகம், ஆலோசனையாகிய மந்திரம், செல்வம் முதலானவாகிய பிரபுத்துவம் என்று சொல்லப்படும் சக்தி மூன்றாகும். ஐயா, இங்கு சொல்லப்பட்ட இவற்றை யெல்லாம் அறிந்தவனே வேந்தனாவான்.''

368. மூவிரு குணமு மங்கே
மொழிந்திடு மைந்தும் நெஞ்சின்
மேவிய உபாயம் நான்கு
மிக்கசத் திகளோர் மூன்றும்
ஓவற வீசாரித்தேற்ற
உசிதமா னவைக ளெல்லாம்
காவலன் கருத்தி லெண்ணிக்
கருமமங் கியற்று வானே. (23)

(இ.ள்) ''ஆறு குணங்கள், ஐந்து அங்கங்கள், மனத்தில் நிலைபெற்ற உபாயங்கள் நான்கு, மிகுந்த சக்திகளாகிய மூன்றும் ஆகிய இவையனைத்தும் குறைவுபடாமல் ஆராய்ந்து, இவற்றில் ஏற்றவைகளை யெல்லாம் அரசன் கருத்தில் கொண்டு செயலாற்றுவான்.''

369. பெலத்தவர் நம்மைச் சேரார்
பேசிய சமாதா னத்தால்
நலத்தக விருப்ப தில்லை
நாமினிப் பொரவு மாட்டோம்
சலத்தர்சே வகமு மாகாச்
சந்ததஞ் சிந்தை நீங்காக்
குலப்பகை நமக்கு மந்தக்
கூகைக்கு மென்று கூற. (24)

(இ.ள்) ''நம்மைவிட வலியவர்கள் நம்மோடு நட்புக் கொண்டு சேரமாட்டார்கள். பேசிச்சேரும் சமாதானத்தால் நன்மைகள் இருப்பதில்லை. நாம் இனிப் போரிடவும் மாட்டோம். இழிந்தவர்களுக்குப் பணிந்து சேவகம் செய்வதும் ஆகாது. என்றும் நீங்காத குலப் பகையே நமக்கும் அந்தக் கூகைக்கும் நிலைக்கும்'' என்று கூறியது.

370 என்னகா ரணத்தி னாலே
இருவரும் பகைத்த தென்ன
மன்னவா காக்கை யார்தம்
வாக்குதோ ஷத்தி னாலே
பன்னுநங் குலங்க ளந்தப்
பகையினாற் பட்ட பாடு
துன்னிய கழுதை வாக்குத்
தோஷத்தாற் பட்ட வாறே. (25)

(இ.ள்) ''என்ன காரணத்தினாலே இருவருக்கும் பகை ஏற்பட்டது'' என மன்னன் கேட்க, ''அரசே காக்கையரின் வாக்கு தோஷத்தினாலே. நம்முடைய குலங்கள் அந்தப் பகைவர்களால் பட்டபாடு, கழுதை தன் வாயால் கெட்டதைப் போன்றது'' என்றது.

வாய்க் குற்றத்தால் கழுதை கெட்ட கதை

371\. எனத்திரஞ் சீவி கூற
யாதந்தக் கதைசொல் லென்ன
மனக்கப டான வண்ணான்
வளர்த்ததோர் கழுதை மேலே
கனப்பொதி எடுத்து வாவிக்
கரையினில் தள்ளிப் பாசந்
தனைக்கொடு கட்டிப் போட்டு
தப்புவன் பகலைக் கெல்லாம். (26)

(இ.ள்) என்று திரஞ்சீவி கூற, அது என்ன கதை சொல் எனக் கேட்டது அரச காகம். ''கபட எண்ணம் கொண்ட வண்ணான் ஒரு கழுதை வளர்த்து வந்தான். அக்கழுதை மேலே கனமான பெரிய பொதியை ஏற்றி நீர்நிலைக்கு கொண்டுபோய்ப் பொதியை இறக்கிவிட்டுக் கழுதையின் கால்களைக் கயிறு கொண்டு கட்டிப் போட்டுவிட்டுப் பகலெல்லாம் துணிகளைத் துவைப்பான்.

372\. கங்குலிற் புலித்தோ லாலே
கழுதையை மறையப் போர்த்து
அங்கொரு பயிர்ப்பு னத்தில்
அனுதினம் விடுவன் மேய
தங்கிய செந்நெல் காப்பார்
தனிப்புலி எனப்ப யந்தே
அங்கொளித் தோடிப் போவார்
அதுவுமேய்ந் தோடிப் போமே. (27)

(இ.ள்) இரவு நேரத்தில் புலியின் தோலைக் கொண்டு கழுதை மேல் போர்த்திப் பயிர்கள் விளைந்திருக்கும் புனத்தினில் தினமும் மேய விட்டுவிடுவான். ஆனால் நெல் வயலின் காவலாளிகள்,

இது தனிப்புலியே என எண்ணிப் பயந்து அங்கிருந்து ஓடிப்போயினர். கழுதையும் தடையின்றி பயிர்களை மேய்ந்துவிட்டு ஓடிப்போகும்.

373. புலிமிகப் பசித்த தேனும்
புற்களைத் தின்னா தென்பார்
கலியினிற் புதுமை தானோ
கபடமோ வென்ன வெண்ணி
வலியவன் ஒருவன் கையில்
வல்லயந் தனையுங் கொண்டு
பொலிகரு கம்ப ளத்தாற்
பொதிந்துகொண் டொளித்தி ருந்தே. (28)

(இ.ள்) ''வலியவன் ஒருவன் இதைக் கண்டு, புலி மிகப் பசியுடையதாயினும் புல்லைத் தின்னாது என்று சொல்வார்கள். இங்குப் புலி பயிர்களைத் தின்னுவது என்பது கலிகாலத்தில் ஏற்படும் புதுமையோ அல்லது இது வஞ்சகம் தானோ ? என எண்ணிக் கையில் ஓர் ஈட்டியை எடுத்துக் கொண்டு கரிய கம்பளத்தால் தன் உடலை மறைத்துக் கொண்டு, வயற்புரத்தில் ஒளிந்திருந்தான்.

374. விரைவொடு கழுதை வந்த
வேளையில் எழுந்தி ருக்கக்
கரமது கண்டு பெட்டைக்
கழுதையென் றெண்ணிக் கொண்டு
குரல்முழக் கிடவே சத்தங்
குறித்திவர் கழுதை யாரோ
வரவர வென்று சொல்லி
வாட்டின னீட்டியாலே. (29)

(இ.ள்) ''வேகமாகக் கழுதை வருவதைப் பார்த்துக் காவலன் எழுந்திருக்க, கை போர்வைக்கு வெளியே நீட்டியிருப்பதைக் கண்டு அது பெட்டைக் கழுதை என்று

எண்ணிக்கொண்டு குரலெடுத்து முழங்கியது. அதன் சத்தத்தைக் கேட்டு, இது கழுதையோ என்று நிச்சயித்து அருகில் வர அதனை ஈட்டியால் குத்திக் கொன்றான்.''

காகம் கோட்டான் பகை உண்டான கதை

375. கழுதைதன் வாக்கி னாலே
கடுங்கொலை யுற்ற தீதே
முழுவதும் பறவை கூடி
முன்னமே கூகை தன்னைப்
பழுதறு மரசனாகப் பட்டமே
கட்டிக் கொண்டு
தொழுதினி வாழ்வோ மென்று
சூழ்ந்துவந் திருக்கும் போது. (30)

(இ.ள்) ''கழுதை தன் வாக்கினாலே கெட்ட கதை இதுவே. ஒரு சமயம் பறவைகள் எல்லாம் கூடி கூகையைப் பறவைகளின் அரசனாகப் பட்டம் கட்டி, அதற்குப் பணிந்து வாழ்வோம் எனத் தீர்மானித்துக் கூடி இருந்தன. அப்பொழுது

376. பலபல சாதி யான
பறவைகள் அனைத்துங் கூடி
நலமிது தானே யென்ன
நனிமுது காக மொன்று
குலமிது நல்ல தல்ல
குணங்களும் தீக்குணங்கள்
நிலமிசை கோட்டா னென்று
நிசிசர மெனுஞ்சொற் சொல்லும். (31)

(இ.ள்) பலவகை இனத்தைச் சேர்ந்த பறவைகள் எல்லாம் கூடி இதுவே நல்லது என்று கூற, முதிய காகம் ஒன்று, ''இந்தக் கூகைக் குலம் நல்ல குலமல்ல. இவற்றின் குணங்களும் தீய குணங்கள். உலகத்தில் கோட்டான் என்றும், நிசிசர (இரவில் இயங்குவது) என்றும் சொல்வர்.

377. பகற்கெ லாங் குருட்டுக் கண்கள்
பார்வைக்கும் பிடிப டாவாம்
முகத்திலே யழகு மில்லை
மொழியிலும் மதுர மில்லை
அகத்தினில் அறிவு மில்லை
யாருமிங் கதையெண் ணார்கள்
சகத்தினி லிதன்பேர் சொன்னால்
சத்துரு மிகுதி யாமே. (32)

(இ.ள்) ''இவற்றிற்குப் பகலிலெல்லாம் கண்கள் தெரியாது. இவற்றைப் பார்க்கவும் முடிவ தில்லை. முகத்திலே அழகும் இல்லை. இவற்றின் குரலிலும் இனிமை இல்லை. இதற்கு அறிவும் மிகுதியில்லை. யாரும் இதை விரும்பி நினைக்க மாட்டார்கள். உலகில் இதன் பெயரைச் சொன்னால் பகைவர் மிகுதியாவர்.''

378. பெரியவன் பேரைச் சொன்னால்
பெரும்பகை தனையும் வென்றே
உரியதன் இனமும் தானும்
உய்யலாம் அதற்குச் சாட்சி
அரியசந் திரன்பேர் சொல்லி
ஆனையின் படையை வென்றே
ஒருமுய லினங்க ளோடே
உகந்து வாழ்ந் திருந்த வென்றே. (33)

(இ.ள்) ''தம்மினும் பெரியவர்களின் பெயரைச் சொல்வதன் மூலம் பெருகிவரும் பகையையும் வெல்லலாம். தம் இனமும் தானும் உய்வடையலாம். அதற்குச் சான்று கூறவேண்டுமானால் அருமைமிகு சந்திரனின் பெயரைச் சொல்லி, யானைப் படையை வென்று, தன் இனத்தோடே ஒரு முயல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தது'' என்று கூறி....

முயல் யானையை வென்ற கதை

379. துன்னரு மடவி தன்னில்
தும்பிக ளனேகஞ் சூழப்
பன்னரு வேழ யூக
பதியெனு மரசன் வாழும்[1]
அன்னநாள் மழையி ல்லாமல்
அருஞ்சுனை யெல்லாம் வற்ற
உண்ணுநீர் எங்குண் டென்று
ஒற்றர்பார்த் தோடி வந்தே. (34)

(இ.ள்) அடர்ந்த காட்டினில் யானைகள் பலவும் சூழ வேழயூகபதி என்னும் யானைகளின் அரசன் வாழ்ந்து வந்தது. ஒரு சமயம் மழையில்லாமல் பெரிய சுனைகளெல்லாம் வற்றிவிட்டன. யானைகள் அருந்துவதற்குத் தண்ணீர் எங்கே உள்ளது என்று ஒற்றர் யானைகள் தேடிக்கொண்டு விரைந்து வந்தன.

380. சந்திர சரசு தண்ணீர்
ததும்பிட நிற்கு தென்ன
அந்தநற் சுனையை நாடி
ஆனைக ளனைத்துஞ் செல்ல
முந்துமச் சுனையைச் சூழு
முயற்சிலீ முகவேந் தஞ்சி
மந்திரி விசயன் தன்னை
வரவழைத் துரைக்கு மன்றே. (35)

(இ.ள்) ஒரு கானகத்தில் சந்திரசரசு என்னும் தடாகம் ஒன்று நீர் ததும்பி உள்ளது என்று ஒற்றர் யானைகள் வந்து சொல்ல, அந்தச் சுனையைத் தேடி எல்லா யானைகளும்

பா. பே.: பாடல் 379. 1. துன்னரு மடவி தன்னிற் றும்பிக ளனேகஞ் சூழப்
பன்னருஞ் சதுர தத்த னெனுமிறை பண்பின்
வாழ்நாள்

சென்றன. யானைகள் அனைத்தும் வந்து அந்தச் சுனையைச் சூழ்ந்தன. அப்பொழுது அங்கே வாழ்ந்த முயற்சிலிமுகன் என்னும் முயலரசன் அஞ்சி, தன் அமைச்சன் விசயனை அழைத்துச் சொன்னது.

381. இற்றைநாள் வரையும் நாமும்
இனமுமிச் சுனையைத் தானே
சுற்றியிங் கிருந்தோம் இந்தத்
தும்பிகள் வந்து புக்கால்
மற்றுநா மிருக்க லாகா
வனத்தில்வே றிடமு மில்லை
உற்றிவ ணிருக்கும் வாறோர்
உபாயம் நீ நினைப்பா யென்ன. (36)

(இ.ள்) ''இந்நாள் வரையும் நாமும் நம் இனமும் இச்சுனையைச் சுற்றித்தானே இங்கு வாழ்ந்திருந்தோம். இப்பொழுது இந்த யானைகள் வந்து புகுந்தால், நாம் இங்கு இருக்க இயலாது. நாம் செல்வதற்கு இந்த வனத்தில் வேறு இடமும் இல்லை. நாம் இங்கேயே இருக்கும் வகையில் ஒரு உபாயம் சிந்தித்துச் சொல்'' என்றது.

382. ஆனையை வெல்லு மாறிங்
கருமையோ விடைதா வென்ன
ஞானமந் திரவி சாரம்
நனிபெறு விசயன் கூறச்
சேனைகா வலனா மந்தச்
சிலீமுக னனுப்ப வேகிக்
கானில்வே ழக்கூட் டத்தைக்
கண்களாற் கண்டு நின்றே. (37)

(இ.ள்) ''இந்த யானைகளை வெல்வது அருமையோ? எனக்கு விடை தாருங்கள்'' என்று ஞான மந்திர ஆலோசனைகளைச் சிறப்பாகச் செய்யும் விசயன்

கூற, முயல் சேனைகளின் காவலனாகிய அந்தச் சிலீமுகன் அனுப்பியது. முயல் விசயனும் சென்று காட்டில் யானைக் கூட்டத்தைக் கண்களால் கண்டு நின்று...

383. நகைத்துடன் கொல்வர் வேந்தர்
நாக மோந் ததுபோற் கொல்லும்
பகைப்பினு மான மாவான்
பசுக்கள்நக் குவபோற் கொல்லும்
சுகப்பட உபசா ர ங்கள்
சொல்லியே கொல்வர் துட்டர்
அகப்படில் தொடுவ போல
ஆனையே கொல்லு மன்றே.[1] (38)

(இ.ள்) 'எதிரியைப் பார்த்து நகைத்து உடன் கொல்வர் அரசர்கள், நாகம் மோந்து பார்ப்பது போல் கொல்லும். பசுக்கள் நக்குவது போல் கொல்லும். மனம் மகிழும்படி உபசார வார்த்தைகள் சொல்லியே துட்டர்கள் கொல்வர். கிடைத்தால் தொடுவது போல் யானையோ கொல்லும்.'

384. என்றுதன் மனத்தி லெண்ணி
இதன்கையி லகப்ப டாமல்
நின்றுநாம் வெல்வோ மென்று
நினைத்தொரு வட்டி லேறித்

பா. பே.: பாடல் 383. 1. இப்பாட்ல் அச்சுப் பிரதியில் கீழ்காணுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

நகைத்துடன் கொல்வர் துட்டர்
நாமவர் நடுவிற் பட்டால்
வகைப்ப வோர்பா னின்றால்
வந்தடித் திருவர் மாறாய்
மிகைப்ப வவர்கள் கையில்
வீறுட னாமுஞ் சும்மா
அகப்படில் நம்மையந்த
வானைதான் கொல்ல மன்றே

என உள்ளது.

துன்றிய களிற்று வேந்தே
தும்பிகாள் சுகமோ வென்ன
வென்றிகொள் களிறுங் கண்டு
வியந்துநீ யாரோ வென்ன. (39)

(இ.ள்) என முயல் விசயன் தன் மனத்தில் சிந்தித்து இதன் கையில் அகப்படாமல் நின்று நாம் வெல்வோம் எனத் தீர்மானித்து ஒரு மேடான இடத்தில் ஏறி நின்று ''களிற்றின் வேந்தனே ! யானைகள் எல்லாம் சுகமோ என்றது'' முயல். யானை அதைக் கேட்டு வியந்து, ''நீ யாரோ?'' என்றது.

385. இசைநில வெறிக்குந் திங்கள்
ஏவிய தூத னென்பேர்
விசயனென் பார்கள் உன்பால்
விடுப்பவந் துற்றே னென்ன
அசைவில தாகி யந்த
யானையும் பயந்து நின்றே
விசயநீ வந்த தென்ன
விளம்பென விளம்பு மன்றே. (40)

(இ.ள்) ''புகழ் பெற்ற நிலவு ஒளி வீசும் சந்திரன் அனுப்பிய தூதன் யான். என் பெயர் விசயன் என்பதாகும். உன்பால் சந்திரன் அனுப்ப வந்தேன்.'' என்றது முயல். இதைக் கேட்ட யானை அசைவற்று பயந்து நின்று விசயனே நீ வந்த காரணம் யாது சொல் எனக் கூறியது. அதைக் கேட்ட முயல் கூறியது...

386. சந்திர சரசென் றெங்கள்
சசிபக வான்பே ராலே
இந்தவா ரணியந் தன்னி
லிருஞ்சுனை யொன்றுண் டாக்கி
அந்தநற் சுனையி லெங்கள்
ஐயனும் தேவி மாரும்
முந்திய சலக்கி ரீடை
முயங்கியே பகலைக் கெல்லாம். (41)

(இ.ள்) ''சந்திர பகவான் பெயரால் இந்த வனம் தன்னில் சந்திர சரசு என்ற ஒரு பெரிய சுனையை உண்டாக்கி, அந்த அழகிய சுனையில் எங்கள் தலைவராகிய சந்திரனும் அவர்தம் தேவியரும் சலக்கிரீடை செய்துவிட்டுப் பகலில் ...

387. தண்ணுறுஞ் சுனைக்குக் காவல்
தங்களை வைத்துப் போவான்
விண்ணவ ருலகர் தாமும்
விரும்பியும் தொடப்ப டாது
நண்ணிய சுனைநீ ருண்ண
நாடினை நீயென் றெங்கள்
அண்ணலார் அறிந்துன் பக்கல்
அனுப்பினார் தடுக்க வென்றே. (42)

(இ.ள்) ''குளிர்ச்சியான இந்தச் சுனைக்கு எங்களைக் காவலாக வைத்துவிட்டுப் போவான். விண்ணுலகத்தைச் சார்ந்த தேவர்களும் விரும்பினாலும் இதைத் தொடக்கூடாது. ஆனால் நீ இந்தச் சுனையில் நீரருந்த விரும்பி வருகிறாய் என்று எங்கள் அண்ணலாகிய சந்திரன் அறிந்து உன்னைத் தடுக்க என்னை அனுப்பினார்.''

388. தூதுசொல் வாரி யற்கை
துங்கவா ளுருவிக் கொண்டு
கோதமாய்க் கேட்பார் முன்னுங்
கூறுவ கூறல் வேண்டும்
யாதவர் கூறி னாலும்
இகலினர் தூத ரேனும்
மூதறி வரசர் தூதர்
முனியினும் முனியா ரன்றே. (43)

(இ.ள்) ''தூது சொல்பவர்தம் இயல்பு யாதெனில், கேட்போர் கொடிய வாளினை உருவிக்கொண்டு

சினத்துடன் கேட்பவராய் இருந்தாலும் அவர் முன் சொல்ல வேண்டியவற்றை அஞ்சாமல் சொல்ல வேண்டும். தூதர் என்ன கூறினாலும், அவர் பகைவரின் தூதரேயாயினும் அத்தூதர் கோபப்படினும் மூதறிவுடைய அரசர் சினம் கொள்ள மாட்டார்.''

389. தன்னுடல் பலத்தி னாலே
தான்பிற ரொடுப கைத்தால்
இன்னவர் பகையை வெல்லும்
பலந்தனக் கெண்ண வேண்டும்
அன்னதை நினையா மற்பின்
ஆனவா ராகு தென்று
முன்னரே பகைநி னைத்தார்
முடிக்குவ ராவி மன்னே.* (44)

(இ.ள்) ''தன் உடல் பலத்தினாலே ஒருவர் பிறரோடு பகை கொள்ளின், அப்பகையினை வெல்லும் வலிமை தனக்கு உள்ளதா என்று எண்ணி வலிமையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். பகைவரின் வலிமையை நினைத்துப் பார்க்காமல் பின்னர் ஆனபடி ஆகட்டும் என்று பகைவர் முன் எதிர்த்து நின்றால் பகை நினைத்த அவர் தன் உயிரைத் துறப்பார்.

390. மூவரில் முதல்வ ரான
முனைவனார் முடிமேல் வாழும்
தேவனை நீப கைக்கச்
சிந்தையில் நினைத்தல் தீதே

பா. பே.: * பாடல் 389. அச்சுப் பிரதியில் கீழ்க்காணுமாறு உள்ளது.
தன்னுடல் வலியினாலே
தான்பெரி யரைப்ப கைத்தால்
பின்னவர் சினந்து வெல்லப்
பெற்றுயிர் இழத்தல் வேண்டும்
அன்னதை நினையா மற்பின்
பவர்பகை நினைத்தா ரேனும்
முன்னரை வணங்கிப் போற்றின்
முடிவுறா ராவி மன்னே

மேவுதண் சுனையில் வைத்த
வேட்கையை விடுத்திந் நேரம்
போவதே கரும மென்று
புத்திகள் பலவுஞ் சொல்லி. (45)

(இ.ள்) தேவர் மூவரில் முதல்வரான சிவபெருமானின் முடிமேல் வாழும் தேவனான சந்திரனை நீ பகைக்க மனத்தில் நினைப்பது தீதே. விளங்கி நிற்கும் இந்தச் சுனையில் நீ வைத்த வேட்கையை விடுத்து, இங்கிருந்து உடனே போவதே நீ செய்யக் கூடிய செயல்'' எனப் பல வகையிலும் அறிவுரைகள் கூறி.

391. இங்கிவை யனைத்தும் நானே
இயம்பின னுன்னை வேண்டித்
திங்களம் பகவ னுன்மேல்
சினந்தது கொஞ்ச மல்ல
அங்கவன் சினமும் நானே
ஆற்றுவன் அவன்பாற் சென்று
வெங்கய யூதத் தோடே
மீள்கநீ யென்று சொல்ல. (46)

(இ.ள்) ''இங்கு நான் கூறிய அனைத்தும் உன் நலனுக்காகக் கூறியவையே. ஆனால் சந்திர பகவான் உன்மேல் கொண்ட கோபம் கொஞ்சமல்ல. நானே அவன்பாற் சென்று அவன் கோபத்தைத் தனித்து விடுகிறேன். நீ உடனே உன் யானைக் கூட்டத்துடன் திரும்பிச் சென்று விடு'' என்று, முயல் சொல்ல....

392. தந்தியின் அரசு மந்தச்
சசந்தனை நோக்கி நீ சொல்
சந்திர னெனுந்தே விந்தத்
தடந்தனில் குடைவ தெப்போ
தந்தவே ளையினில் வந்தங்
கவனடி போற்றி யானும்
உய்ந்துமீண் டேகு வேனென்
றோதலும் முயல்நன் றென்று. (47)

(இ.ள்) யானைகளின் அரசன் அந்த முயலைப் பார்த்து, சொல்லும், ''அந்தச் சந்திர பகவான் இந்தத் தடாகத்தில் நீராடுவது எப்பொழுது. அவன் நீராடும் அந்த நேரத்தில் நான் வந்து அவனுடைய திருவடிகளைப் போற்றி வணங்கி நானும் உய்வடைவேன்'' என்று கூறியவு: ன், முயல் நன்று என்று கூறி...

393. அன்றிர வுடன்கொண் டேகி
அலைபுனற் றடத்தில் தோன்றும்
துன்றுவெண் மதியின் சாயை
சுட்டிநீ காண்க வென்ன
நன்றதைக் கண்டு திங்கள்
நாதனே யென்றுஞ் சூழ்வுற்
றொன்றிய உடுக்க ளன்னோற்
குரியநன் மாத ரென்னும். (48)

(இ.ள்) அன்று இரவு யானையை உடன் அழைத்துச் சென்று அலைகளை உடைய தடாகத்தில் காணப்படும் நிலவின் நிழலைச் சுட்டிக் காட்டி, இதைப் பார்த்துக் கொள்க என்று சொல்ல, யானை அதை நன்கு பார்த்துக்கொண்டு, திங்கள் நாதனே என்று வணங்கும். திங்களைச் சூழ்ந்து ஒன்றி நிற்கும் விண்மீன்கள் அவனுடைய தேவியர் என்று சொல்லும் முயல்.

394. ஆனையும் நடுங்கி நெஞ்சம்
அழிந்துபின் தெளிந்து நின்று
நானிதை யறியே னெங்கள்
நாதனே பொறுக்க வென்று
வானுயர் மதியை நோக்கி
வணங்கியே மீண்டு போகக்
கானுறு முயல்க ளெல்லாம்
களித்துவாழ்ந் திருந்த வன்றே (49)

---

47 மற்றும் 48 ஆம் எண் பாடல்கள் சுவடியில் விடுபட்டுள்ளன. அச்சுப் பிரதியில் உள்ளன.

(இ.ள்) அதைக் கேட்ட யானை நடுநடுங்கி மனம் தடுமாறி, பின் தெளிவடைந்து, நான் இதை அறிந்தேனில்லை. தலைவனே. என்னை மன்னிக்க வேண்டும் என்று வானத்தில் தோன்றும் மதியை நோக்கி வணங்கித் திரும்பிப் போனது. காட்டில் உள்ள முயல்கள் எல்லாம் களிப்புடன் வாழ்ந்திருந்தன.

காகம் கோட்டான் பகை உண்டான கதை - தொடர்ச்சி

395. அப்படிப் போல நாமும்
அரசர்பேர் பெரிய தாகில்
செப்பிய பகைவந் தாலும்
செயிக்கலாம் அதுவு மில்லை
எப்படி யரசு நாட்டல்
இசைந்துநீர் முகூர்த்த மிட்டீர்
தப்பிது நினைத்தீ ரென்று
சாற்றியே பின்னுஞ் சொல்லும். (50)

(இ.ள்) அதுபோன்று நாமும் நம்முடைய அரசர் பெயரிலும் வலிமையிலும் பெரியவராயின், எத்தகு பகை வந்தாலும் அதை வெல்லலாம். நமக்கு அத்தகு வாய்ப்பும் இல்லை. இவ்வாறிருக்க நீர் பகையழித்து அரசை நிலைநாட்ட எப்படித் துணிந்தீர் என்று கூறிய அந்த காகம் மேலும் கூறும்.

396. பாவியர் மோனர் போலும்
பலவிர தியர்கள் போலும்
ஓவறு சகாயர் போலும்
உற்றசுற் றங்கள் போலும்
மேவுவ ரவரைச் சேரில்
மேன்மைய ரவரு மய்யார்
பூவையு முயலு முன்னோர்
பூனையைச் சேர்ந்த வாரே. (51)

(இ.ள்) மௌனமாக இருந்து தவம் புரிபவர் போலும், பலவகை விரதங்களைக் கடைப் பிடிப்பவர்கள் போலும், முடிவற்ற நண்பர்கள் போலும், உற்ற சுற்றத்தினர் போலும், நடித்துக் கொண்டிருக்கும் பாவியருடன் சேர்ந்தால் மேன்மையானவர்களும் உய்வடைய மாட்டார்கள். பூவையும் முயலும் முன்பொரு தடவை பூனையைச் சேர்ந்தது போலே.

பூவையும் முயலும் மோசம் போன கதை

397. என்னவக் கதையே தென்று
யியல்பற வைகளுங் கேட்க
முன்னமோர் மரத்தின் மேலே
முயங்கிநா னிருக்கும் போது
தன்னிகர் இன்றி வாழும்
தனிமுயல் ஒன்று வந்து
துன்னுமோர் பொதும்பிற் சேர்ந்தங்
குட்புகுந் திருந்த தன்றே.[1] (52)

(இ.ள்) அந்தக் கதை என்ன என்று பறவைக் கூட்டங்கள் கேட்க, காகம் சொன்னது, "முன்னொரு காலத்தில் ஒரு மரத்தின் மேல் நான் தங்கியிருந்தேன். அப்பொழுது தனக்கு நிகர் இல்லை என்னும்படி வாழ்ந்திருக்கும் ஒரு முயல் அங்கு வந்து அங்கிருந்த ஒரு மரப்பொந்தில் புகுந்து வாழ்ந்திருந்தது.

398. பூவையங் கொன்று வந்து
பொதும்புயா னிருக்கும் வீடு
நீவரு வானே னென்ன
நிழலொடு தருக்கள் சாலை

பா. பே.:

பாடல் 397. 1. தன்னிய தீரக் கண்ட
தனிமுய லொன்று வந்து
துன்னு மோர் பொதும்பர் சேரித்
தொடிக்கனார் கபிசலப்பேர்

வாவிநற் கூபம் செல்லும்
வழியினிற் றண்ணீர் பந்தல்
சாவடி இவைக ளெல்லாம்
சகலர்க்கும் பொதுவே யென்ன. (53)

(இ.ள்) அப்பொழுது ஒரு பூவை (மைனா) அங்குவந்து, ''இந்த இடம் நானிருக்கும் இடம். இங்கே நீ ஏன் வந்தாய்' என்று கேட்டது. அதற்கு அந்த முயல், ''நிழல், மரங்கள், மக்கள் செல்லும் சாலை, குளம், கிணறு, செல்லும் வழியில் தண்ணீர்ப் பந்தல், சாவடி ஆகிய இவை அனைத்தும் அனைவருக்கும் பொதுவாகும்'' என்று சொன்னது.

399. அங்கவை இரண்டுஞ் சண்டை
யாகியே மத்தி யத்தர்
தங்களைக் கேட்போ மென்று
தனிமுய லழைத்துப் போக
இங்குநாம் தூர வந்தோம்
இருந்தனை வழக்குஞ் சொல்லும்[1]
துங்கரார் என்று பூவை
சொல்லவே முயலுஞ் சொல்லும். (54)

(இ.ள்) இவ்வாறு அவை இரண்டும் சண்டையிட்டுக் கொண்டன. இறுதியில் இறுதியில், இருவருக்கும் பொதுவான நடுவர் ஒருவரை அணுகிக் கேட்போம் என்று கூறி முயல் மைனாவை அழைத்துப் போனது. நெடுந்தூரம் வந்தபின் மைனா முயலைப் பார்த்து ''இப்பொழுது நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம். நம்முடைய வழக்கிற்குத் தீர்ப்பு சொல்லும் நடுவர் யார்?'' எனக் கேட்டது. அதற்கு முயல் சொன்னது. ...

பா. பே.: பாடல் 399. 1. இங்கு நாம் வழக்காய் வந்தோம்
இருந்தலை வழக்குஞ் சொல்லும்

400. கருதிய யமுனை யாற்றின்
கரையிலே தபசு பண்ணும்
பொருவத திகண்ட பேரப்
பூனையர்[1] சொல்வா ரென்ன
வெருவியே பூனை பக்கல்
மேவி நாஞ் செல்வ தெவ்வா
றுரையெனத் தூர நின்றே
உரைப்பமென் றழைத்துப் போக. (55)

(இ.ள்) ''நினைக்கப்படும் யமுனை ஆற்றின் கரையிலே தவம் செய்து கொண்டிருக்கும் ததிகண்டம் எனும் பெயருடைய பூனையார் நமக்குத் தீர்ப்புச் சொல்லுவார்'' என்று முயல் கூற, அச்சம் கொண்ட மைனா ''நாம் அந்தப் பூனையின் அருகில் செல்வது எவ்வாறு சொல்'' என்று சொன்னது. அதற்கு முயல், நாம் தூரத்தில் நின்று வழக்கினைச் சொல்லலாம் எனச் சொல்லி அழைத்துப் போனது.

401. இருவரும் போனா ரந்த
இருடியர் தவசைக் கண்டார்
பெரியவர் இவர்தாம் நம்மைப்
பிடிப்பது செய்யா ரென்று
கருதினர் பணிந்தெ ழுந்தார்
கைகளுங் கட்டி நின்று
பரவினர் யோகம் நீங்கிப்
பார்த்தனர் பூனையாரும். (56)

(இ.ள்) இரண்டும் யமுனை நதிக்கரைக்குச் சென்றன. அங்கு பூனையாகிய ரிஷி தவம் செய்வதைக் கண்டன. இப்பெரியவர் நம்மைப் பிடிக்க மாட்டார் எனக் கருதின. பின்னர் பூனையைப் பணிந்தெழுந்தன.

பா. பே.: பாடல் 400. 3 பொருவில் கூர்ம் பல்லரென்னும் பூனையார்

இரண்டும் மரியாதையுடன் கைகளைக் கட்டி நின்று பூனையின் புகழ் பாடின. பூனை தவம் நீங்கி இவற்றைப் பார்த்து…

402. ஆரய்யா நீங்கள் நம்மை
யறிந்துநீ ரிங்கு வந்த
காரியம் சொல்லு மென்று
கபடனார் உரைக்கத் தங்கள்
பேரொடு வழக்குஞ் சொல்ல
பெருகிய மூப்பி னாலே
நீருரைப் பதுங்கே ளாது
நெருங்கிவந் துரைக்க வென்ன. (57)

(இ.ள்) '' நீங்கள் யார் ? எம்மை யறிந்து இங்கு வந்த காரியம் என்னவென்று சொல்லும்'' என்று வஞ்சகமான பூனை சொல்ல, இரண்டும் தத்தம் பெயரோடு தங்கள் வழக்கினையும் கூறின. பூனையோ, ''மிகுந்த வயதான காரணத்தால், நீங்கள் சொல்வது எனக்குக் கேட்காது. அருகில் வந்து சொல்க'' என்றது.

403. சற்றிடங் கிட்ட வந்து
சாற்றிய மாற்றங் காதில்
உற்றது போலும் பாதி
யுறாதது போலுங் கேட்டம்
மற்றினி பக்கம் வாரா
வழக்குநாம் உரைப்ப தில்லை
குற்றமங் கொருவர் மீதில்
கூறிடிற் கோப மாமே. (58)

(இ.ள்) பூவையும் முயலும் சற்று நெருங்கிவந்து சொல்ல, பாதி விழுந்தது, போலும் மீதி விழாதது போலும் கேட்டது. என்னருகில் வந்து கூறாத வழக்கிற்கு நாம் தீர்ப்பு சொல்வதில்லை. சரியாகக் கேட்காமல் ஒருவரைக் குற்றம் கூறின் மற்றவர்க்குக் கோபம் உண்டாகுமே.

404\. தன்மமே விரும்பு வாரைத்
தன்மமே விரும்பிக் காக்கும்
தன்மமே இகழு வாரைத்
தன்மமே இகழ்ந்து நிற்கும்
தன்மமே மெய்யாய் நின்று
சகலமும் செய்ய லாலே
தன்மமே சொல்வ தல்லால்
சற்றுநாம் பொய்சொல் லோமே. (59)

(இ.ள்) ''அறத்தையே விரும்புபவரை அறம் விரும்பிக் காக்கும். அறத்தினை இகழ்ந்து வாழ்வாரை அறம் இகழ்ந்து நிற்கும். அறமே உண்மை எனக் கொண்டு அனைத்தையும் நாம் செய்வதாலே, நல்லறத்தையே சொல்வதன்றி நாம் சிறிதும் பொய் சொல்வதில்லை.

405\. எண்ணிய விரத மெல்லா
மியற்றின மிவைக்கு மேலாம்
புண்ணிய விரத மென்பர்
பொய்சொலா விரத மொன்று
நண்ணிய உயிரைக் கொல்லா
நலந்தரும் விரத மொன்று
மண்ணினில் அனுட்டிப் போம்நாம்
வழக்கிலோ ரஞ்சொல் லோமே. (60)

(இ.ள்) ''நாம் நினைத்த விரதங்கள் அனைத்தையும் செய்தோம். இவற்றிற்கும் மேலான புண்ணிய விரதமாகிய பொய் சொல்லா விரதம் ஒன்று, நம்மை அணுகியவரைக் கொல்லா விரதம் ஒன்று என இவ்விரதங்களையும் இவ்வுலகில் நாம் கடைப் படிப்போம். நம்மிடம் வந்த வழக்கில் நாம் ஓரம் சொல்லோம்.

406. கிட்டநீர் வந்து சொன்னால்
கேட்குநங் காது நம்மை
விட்டுநீர் தூர நின்று
விளம்பினால் கேளா தென்று
துட்டனார் மாரி சத்தால்
துலங்கிய ததிகண் டப்பே
ரிட்டமார்ச் சாலர் சொல்ல
இரண்டுமங் கெய்திற் றம்மா. [1] (61)

(இ.ள்) "நீங்கள் அருகில் வந்து சொன்னால் நம் காது கேட்கும். என்னை விட்டுத் தூரத்தில் நின்று சொன்னால் என் காது கேட்காது" என்று துட்டனாகிய மாரீசன் போல் கயமையில் விளங்கிய ததிகண்டப்பேர் கொண்ட பூனை சொல்ல இரண்டும் அதை நெருங்கிச் சென்றன.

407. மெய்கள்போல்சொன்ன வெல்லாம்
விசுவசித் திரண்டுஞ் செல்ல
கைகளால் பிடித்து மென்னி
கடித்துரத் தங்கு டித்தே
செய்கப டான பூனை
செருக்கியங் கிருக்கச் சேர்ந்த
மொய்சிறைப் பூவை யோடே
முயலுமங் கிறந்த வாறே. (62)

(இ.ள்) உண்மை போல் நயமாகப் பூனை சொன்னவற்றை யெல்லாம் நம்பி பூவையும் முயலும் அருகில் செல்ல, அவற்றைத் தன் கைகளால் பிடித்து கழுத்தைக் கடித்து, அவற்றின் குருதியைக் குடித்துக்

பா. பே.:

பாடல் 61. 1. துட்டனார் மாரி சத்தாற்
றுலங்கு கூர்ம் பல்ல னென்பே
ரிட்டமாச் சாலன் சொல்ல
விவைதம துள்ளத் தெண்ணி

கொன்று கபடமான பூனை அங்குச் செருக்குடன் இருக்க, பூவையும் முயலும் இறந்துவிட்டன.

408. ஆகையாற் புல்லி யோரை
அடைந்திடிற் கெடுவ தல்லால்
ஓகைகூர்ந் திருப்ப தில்லை
உலகினில் நீதி யீதே
கூகையை அரசு நாட்டக்
குறித்தது தீதே யென்று
காகமுன் எழுந்து போகக்
கலைந்தது பறவைக் கூட்டம். (63)

(இ.ள்) எனவே இழிந்தவரைச் சேர்ந்து இருந்தால் கெடுவதன்றி, மகிழ்ச்சியுடன் இருப்ப தில்லை. இதுவே உலகின் நீதி எனவே கூகையை அரசுக் கட்டிலில் அமர்த்தத் தீர்மானித்தது தீமையானது'' என்று கூறிய காகம் முதலில் எழுந்து போக, பறவைக் கூட்டங்களும் கலைந்து சென்றன.

காகம் கோட்டானை வென்ற கதை - தொடர்ச்சி

409. அன்றுதொட் டின்று காறும்
அருங்கொடிக் குலத்தின் மேலே
துன்றிய கூகைக் கூட்டம்
துறுபகை வைத்த தென்று
மின்றிக ழமைச்சன் சொல்லை
வினவிய மேக வண்ணன்
இன்றுநா மறிந்தோ மிந்த
இகலென வறிந்து முன்னம். (64)

(இ.ள்) அன்று முதல் இன்று வரை அரிய காக்கைக் குலத்தின்மேல் கூகையினம் கொடிய பகைமையை ஏற்படுத்திக் கொண்டது என்று அமைச்சன் சொன்னதைக்

கேட்ட மேகவண்ணன் என்ற காக அரசன், இன்று இந்தப் பகை வந்த வரலாற்றினை நாம் அறிந்து கொண்டோம்.

410. **கூறிய நீதி யான**
கொள்கையு மறிந்து நெஞ்சம்
தேறிநீ யுரைத்த வெல்லாந்
தெளிந்தன னெனக்கொண் டேகி
வேறுமோ ரிடத்தில் வைகி
மேலினிச் செய்யு மாறு
கூறுக பெரியோ யென்னக்
குலவுமந் திரியுங் கூறும். (65)

(இ.ள்) நீர் கூறிய நீதி சார்ந்த கொள்கையையும் அறிந்து மனம் தேறி, நீர் சொன்னதெல்லாம் தெரிந்து கொண்டோம், என்று கூறி தன் இனக் காக்கையோடு வேறு ஓரிடத்தில் சென்று தங்கி, " இனிமேல் செய்யத் தக்கது என்னவென்று பெரியோயே கூறுக" என்று மேகவண்ணன் கேட்க, அமைச்சனான திரஞ்சீவியும் கூறும்.

411. **சந்திவிக் கிரகத் தாலே**
தரியல ரடங்கக் கொன்று
வந்துநான் சேரு மட்டும்
மற்றுமோ ரிடத்தி ருந்து
சிந்தையி லமைத்து வேறோர்
செவியுறா தடக்கி லிந்த
மந்திரம் பலிக்கு மென்று
வழுத்திநீர் செல்வீ ரென்ன.[1] (66)

பா. பே.:

பாடல் 411. 1. மந்திரம் பலிக்கு மென்று
வமைபடப் புகன்ற தன்றே

(இ.ள்) ''சந்தி விக்கிரகம் என்னும் உத்தியால் பகைவர்களை முழுவதும் கொன்று, நான் மீண்டும் வந்து சேரும் வரை, வேறோரிடத்தில் மறைவாக இருந்து நம் திட்டத்தைப் பிறர் அறியா வண்ணம் மனத்தில் அடக்கி, இந்தத் திட்டம் நிறைவேறும் என வாழ்த்திச் செல்லுங்கள்'' என்றது திரஞ்சீவி என்னும் காகம்.

412. ஆங்கது கேட்ட காக
வரசனா மவரை வெல்லப்
பாங்குள வுபாய மேது
பகரென வினாவ லோடும்
தீங்குள வஞ்சர் மூவர்
சேர்ந்தொரு மறையோ னாட்டைத்
தாங்கொளப் புரிந்த மோசந்
தனைச்செய்து வெல்வே னென்றான். (67)

(இ.ள்) அவ்வாறு சொல்லக் கேட்ட காகவரசன் மேகவண்ணன், ''நம் எதிரிகளாம் அவரை வெல்ல உன்னிடம் உள்ள உபாயம் என்ன சொல்'' என்று கேட்க, தீய எண்ணம் கொண்ட வஞ்சகர் மூவர் சேர்ந்து ஒரு வேதியன் கொண்டு செல்லும் ஆட்டைத் தாங்கள் அபகரித்துக்கொள்ளச் செய்த மோசந் தன்னைச் செய்து வெல்வேன்'' என்றது காகம்.

அந்தணனை வஞ்சித்த கதை

413. அக்கதை தெரியச் சொல்லென்
றறைதலு மமைச்சன் கூறும்
மிக்கதோர் வேள்விக் காக
வேதியன் வேற்றூர் சென்று

பாடல் எண் 412 முதல் 417 வரையான் ஆறு பாடல்கள் சுவடியில் காணப்படவில்லை. அச்சுப் பிரதியிலே உள்ளது.

தக்கநல் லாடு கொண்டு
தனதுதோள் மீது தாங்கித்
தொக்கவுண் மகிழ்வின் மீண்டு
தொல்பதிக் கேகும் போது. (68)

(இ.ள்) அந்தக் கதை என்னவென்று நாங்கள் அறியும்படிச் சொல்க எனக் கேட்டுக்கொள்ள அமைச்சன் திரஞ்சீவி கூறும், ''வேதியன் ஒருவன் பெரியதொரு வேள்வியைச் செய்வதற்காக வெளியூர் சென்று, வேள்வி முடித்தலின் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட நல்ல ஆடு ஒன்றினைத் தன் தோள்மீது சுமந்து கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் தன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

414. வஞ்சகர் மூவ ரந்த
மறையவ னாட்டை வௌவ
நெஞ்சிலே நினைந்தே யந்த
நெறியிடை யொருவன் முன்போய்
செஞ்சுடர்த் தீவ ளர்க்குஞ்
செல்வநீ நாயைத் தோள்கொண்
டஞ்சுத லின்றச் செல்வ
தாகாத தென்று கூற. (69)

(இ.ள்) ''அப்பொழுது மூன்று வஞ்சகர்கள் அந்த வேதியனுடைய ஆட்டினைக் கவர்ந்து கொள்ளும் எண்ணத்தினை மனத்திலே கொண்டனர். அதன்படி வேதியன் வரும் வழியில் அவனெதிரே சென்று, 'செஞ்சுடர்த் தீ வளர்த்து வேள்விகள் செய்யும் பெரியவனே நீ ஒரு நாயைத் தோளில் சுமந்துகொண்டு அஞ்சாமல் செல்வது தகுதியன்று' என்று கூறினான்.

415. துட்டனை நோக்கி யாகப்
பசுவினைச் சுணங்க னென்றாய்
கெட்டனை யோகண் ணென்று
கிளத்தியே மறையோன்சொல்ல

இட்டனே போலி ரண்டா
மிழிஞனங் கெய்தி மேலோய்
விட்டுயிர் போன கன்றை
மேற்கொளற் றகாதென் றோத. (70)

(இ.ள்) அந்த துட்டனைப் பார்த்து வேதியன், "யாகப் பசுவினை நாய் என்று கூறுகின்றாயே உன் கண் கெட்டதுவோ" என்று சொன்னான். பிறகு இரண்டாம் துட்டன் ஒரு நண்பன் போல் அருகில் வந்து, "பெரியவரே, உயிர் துறந்த இறந்த கன்றினைத் தோளில் சுமந்து கொண்டு பயணம் செய்வது தகுதியில்லை" என்றான்.

416. பழுதறு மறையோ னந்தப்
படியவன் றனையும் வைது
வழிதனி லேக மூன்றாம்
வஞ்சன்வந் தந்த ணாள
எழுதரு நூல்க ளெல்லாம்
இழிந்தசண் டாள மென்னும்
கழுதையைச் சுமந்து செல்லும்
காரியந் தகுமோ வென்றான். (71)

(இ.ள்) குற்றமற்ற மறையவன் இரண்டாமவனையும் முன்போலத் திட்டி மேலும் சென்றான். அப்பொழுது மூன்றாம் வஞ்சகன் வந்து, "அந்தனரே எழுதப்பெற்ற அரிய நூல்களெல்லாம் கற்றுணர்ந்த நீவிர் இழிவான சண்டாளம் எனத் தகும் கழுதையைச் சுமந்து செல்லும் செயல் சரியோ" என்றான்.

417. நாடியே மறையோன் இந்த
நரர்கள்வெவ் வேறு கூறக்
கூடிய வுருவெவ் வேறு
கொண்டுதோன் றிடுத லாலே
ஆடிராக் கதப்பி றப்போ
என்னுமை யத்தால் விட்டான்
நீடிய வஞ்சர் கொண்டார்
எனவுரை நிகழ்த்திற் றன்றே. (72)

(இ.ள்) இவற்றையெல்லாம் கேட்ட மறையவன், இந்த மனிதர்களுக்கெல்லாம் நாம் சுமந்து செல்லும் ஆடு வேறாகத் தோன்றுவதால், இந்த ஆடு உண்மையில் இராக்கதப் பேயோ என அஞ்சி அந்த ஆட்டை கீழே விட்டுவிட்டான். மறையவனிடமிருந்த வந்த ஆட்டினை வஞ்சகர்கள் மூவரும் கவர்ந்து கொண்டனர் எனக் கூறியது.

காகம் கோட்டானை வென்ற கதை - தொடர்ச்சி

418. மேக வண்ணனும் மகிழ்ந்து
மிகுந்தகா கங்க ளோடே
ஏகியோர் மலையி னுச்சி
யேறியங் கிருக்க வந்த
காகமந் திரியுங் கூகை
கணத்தைநாஞ் சேரு மாறங்
கேகுவோ மென்று முன்னே
இரவிபோய் மறைந்த தன்றே. (73)

(இ.ள்) மேகவண்ணனும் மனம் மகிழ்ந்து மீதம் உள்ள காகங்களுடனே சென்று ஒரு மலை உச்சிக்கு ஏறி அங்கிருந்தது. அந்த காக மந்திரியும் தான் கூகைக் கூட்டத்தைச் சென்று சேரும் வரையில் அங்கே செல்வோம் என்று நினைத்த நேரத்தில் சூரியன் மறைந்தது.

419. மாலையம் பொழுதே கண்கள்
மறைந்தன திரஞ்சீ விக்கும்
சாலவே கூகை மன்னன்
தன்படை முழுதுங் கூட்டி
நாலுதிக் கிலும்வ ளைந்து
நம்முடைக் கண்ணைத் தப்பி
ஆலின்மே லிருக்குங் காக்கை
அனைத்தையுங் கொல்வோ மென்று (74)

(இ.ள்) மாலைப்பொழுதில் திரஞ்சீவிக்கும் கண்ணின் பார்வை மறைந்தது. கூகை அரசனும் தன் பெரும் படை முழுவதையும் கூட்டி, ஆலமரத்தின் நான்கு திசைகளிலும் சுற்றி வளைத்துத் தங்கள் கண்ணுக்குத் தப்பிய காகம் ஏதும் உளதோ எனத் தேடி ஆலமரத்தில் இருக்கும் காகம் அனைத்தையும் கொல்வோம் என்று தீர்மானித்து வந்தது.

420. வந்தது காக்கை யொன்றும்
மரத்திலில் லாமை யாலே
மந்திரி மாரை நோக்கி
வாயசக் கூட்ட மான
இந்தவன் பகையை வென்றோம்
இனிநமக் கெதிரா ரென்றே
சிந்தையில் மகிழ்ச்சி யாலே
செருக்கியங் கிருக்கும் நாளில் [1] (75)

(இ.ள்) வந்த கூகை அரசன் மரத்தில் காகம் எதுவும் இல்லாததால் தன் மந்திரிமாரை நோக்கி, காக்கைகளின் கூட்டமான இந்த வலிய பகையை வென்றோம். இனி நமக்கு எதிரி யார் என்று மனத்தில் மகிழ்ச்சி கொண்டு செருக்குடன் இருந்தது.

421. கள்ளமாய் இகலை வெல்லக்
கருதியங் கிருக்குங் காகம்
வெள்ளமாய்ப் பரவி வந்த
மேவலர் படையைக் கண்டு
கொள்ளையாய் இறந்த காக்கைக்
குறையுமின் றழியு முன்னே
புள்ளினுக் கரசன் தப்பிப்
போனதே போது மென்று. (76)

பா. பே.: பாடல் 420. 1. செருக்கிலங் கிருக்கும் போது

(இ.ள்) அப்பொழுது வஞ்சகத்தால் பகையை வெல்லலாம் எனக் கருதி அங்கிருந்த காக அமைச்சன் வெள்ளமாகப் பெருகிவந்த பகைவரின் படையைக் கண்டு மிகுதியாக இறந்த காகம் போக மீதம் இருந்த காகமும் அழியும் முன் நம் காகங்களின் அரசன் தப்பிப் போனதே போதும் என்று எண்ணி...

422. **சிறகுகள் ஒடிந்தி ரத்தஞ்**
சிதறமெய் சோர்ந்து சாவு
குறுகின காலம் போலக்
கொடிப்பிணத் திரளுக்குள்ளே
மறைபடக் கிடந்து நெஞ்சில்
வருத்தமோ டவத்தை யாகி
முறையிடு வாரே போல
மொழிகளுந் தேய்ந்து கத்த. (77)

(இ.ள்) சிறகுகள் ஒடிந்து, இரத்தம் வழிய, உடல் சோர்ந்து சாகும் காலம் நெருங்கியது போன்று காக்கைப் பிணக் குவியலுக்குள் மறைவாகக் கிடந்து, நெஞ்சில் கொண்ட வருத்தத்தோடு துன்பப்பட்டு முறையிடுவது போன்று குரல் தேய்ந்து கத்தியது.

423. **கூகைமன் னவனு மந்த**
குரல்செவி யுறுத லாலே
காகமே தோ கிடந்து
கதறுகின் றதுபா ரென்ன
ஏகியே தூதன் பார்த்தங்
கெய்துகாக் கையைக் கொணர்ந்து
வாகுமன் னவன்முன் விட்டான்
மன்னனீ யாரோ வென்ன. (78)

(இ.ள்) கூகைகளுக்கு அரசனும், அந்தக் குரல் தன் காதில் விழக் கேட்டு, ''ஏதோ ஒரு காகம் கிடந்து கதறுகிறது. அதை என்னவென்று பார்'' என்று கூற, ஒரு

தூதன் சென்று பார்த்து, அங்குக் கிடந்த காகத்தைக் கண்டு, கொண்டுவந்து கூகை மன்னன் முன் விட்டது. மன்னனும் அதைப் பார்த்து '' நீ யார்'' என்று கேட்டது.

வேறு

424. என்னுடைப்பேர் திரஞ்சீவி என்பார்கள் மேகவண்ணன்
தன்னுடைய முப்பாட்டன் தலைமுறையுங் கண்டவனான்
சொன்னபுத்தி மறாமையினால் சுகமாக வீற்றிருந்தார்
அன்னவன்வா யிலிற்கொடிய வமைச்சர்வந்து
தலைப்பட்டார். (79)

(இ.ள்) அதற்கு அந்தக் காகம், ''என் பெயர் திரஞ்சீவி என்பார்கள். நான் மேகவண்ணனுடைய முப்பாட்டன் தலைமுறையும் கண்டவன். நான் சொன்ன புத்திமதிகளின்படி மாறாமல் நடந்தமையால் மேகவண்ணன் முதலான முந்தைய அரசர்கள் சுகமாக வீற்றிருந்தனர். இவ்வாறிருக்கச் சில கொடியவர்கள் மேகவண்ணனின் அவையில் அமைச்சர்களாக வந்து சேர்ந்தனர்.''

425. அங்கவர்கள் துன்மார்க்கம் அரசனுக்குப் போதித்தே
உங்கள்குலத் தோடுபொர ஒருமித்தார் அதையறிந்தே
இங்கிதுநீர் நினைத்தீரே லிடருறுவீர் எனமறுத்தேன்
தங்கள்மத வலியாலே தாம்பொருத வந்தார்கள். (80)

(இ.ள்) ''அந்த அமைச்சர்கள் அரசனுக்குத் தீய வழிகளைப் போதித்து உங்கள் குலத்தோடு போர்புரியத் தீர்மானித்தார்கள். அதையறிந்த நான் நீர் இவ்வாறு நினைத்தால் பின்னர் பெரிதும் துன்பம் அடைவீர் எனக் கூறி அவர்கள் திட்டத்தை மறுத்தேன். ஆனால் அவர்கள் தங்கள் ஆணவ வலிமையால் உங்களுடன் போரிட வந்தனர்.

426. இப்படியே சிலபகலில் இகல்புரிந்து வந்தென்னை
எப்படிநீ புத்திசொன்னாய் என்பார்கள் ஓரிரவில்
தப்பறவே வளைத்துக்கொண்டு சாடுவா ரவரென்றேன்
அப்படியே நென்னலிரா வடித்திழுத்துப் போட்டீரே. (81)

(இ.ள்) இப்படியே சில பகல் நேரத்தில் போர் புரிந்து வந்து என்னைப் பார்த்து நீ எப்படி புத்தி சொன்னாய் என்று என்னைக் குறை கூறுவர். நான் அவர்களைப் பார்த்து, ஒரு நாளிரவில் நாம் தப்ப வியலாமல் வளைத்துக்கொண்டு நம்மை அவர்கள் அடிப்பார்கள் என்றேன். அதன்படியே நேற்று இரவு நீங்கள் வந்து அடித்துப் போட்டு விட்டீர்கள்.

427. கால்வேறுந் தலைவேறுங் கருஞ்சிறகு வெவ்வேறும்
வால்வேறுங் குடர்வேறும் வாய்வேறுஞ் சுவல்வேறும்
தோள்வேறுந் தொடைவேறுந் துணித்துத்து ணித்திறந்தார்
நால்வேறு மந்திரியும் நானுமர சும்பிழைத்தோம். (82)

(இ.ள்) காகங்கள் எல்லாம் கால்வேறு தலை வேறு கரிய சிறகுகள் வெவ்வேறும், வால் தனியாகவும், குடல் தனியாகவும், வாய் தனியாகவும், பிடர் தனியாகவும், தோள் தனியாகவும், தொடை தனியாகவும் விழும்படித் துண்டுபட்டுத் துண்டுபட்டு இறந்தன. காகங்களின் அரசனும் வேறு நான்கு அமைச்சர்களும் நானும் தப்பிப் பிழைத்தோம்.

428. படுகளஞ்சோ தித்தார்கள் பட்டபிணத் திரனின்கீழ்
நடுநடுங்கி மறைகிடந்து நாற்பதுகா கம்பிழைத்த
கொடியரச னவையெல்லாம் கூட்டியினி நாம்செய்யும்
அடைவுசொலு மென்றுதன தமைச்சர்களைக்
கேட்டானே. (83)

(இ.ள்) ''படுகளத்தை அவர்கள் சோதித்துப் பார்க்கப் பிணக் குவியலுக்கிடையில் நடுங்கியபடி

மறைந்து கிடந்த நாற்பது காகங்கள் பிழைத்தன. காகவரசன் அவற்றையெல்லாம் கூட்டி, இனி நாம் செய்ய வேண்டியது என்னவென்று அமைச்சர்களைக் கேட்டான்.''

429. **பகற்பொழுதில் வளைந்துகொண்டு பழிவாங்கு**
வோமென்றும்
அகப்படுமோ தமக்கென்றும் அப்புறம்போ வோமென்றும்
விகற்பநமக் குள்ளிருக்க வெல்லும்வகை யேதென்றும்
வகைப்படநால் வருஞ்சொன்னார் மன்னவனுங்
கேட்டிருந்தான். (84)

(இ.ள்) ''பகலில் சென்று கூகைகளை வளைத்துத் தாக்குவோம் என்றும், அவை நமக்கு அகப்படா தென்றும், தப்பி அப்பால் செல்வோம் என்றும், நமக்குள் வேறுபாடு இருக்க நாம் வெல்லும் வகை ஏது என்றும் வேறுவேறு வகையில் நான்கமைச்சர்களும் சொல்ல அரசன் அதைக் கேட்டிருந்தான்.''

430. **இன்னமுமக் கறிவிலையே இகலொழிந்து நாம்கூகை**
மன்னவனைப் பணிந்திருந்து வாழ்வதுகா ரியமென்றேன்
சொன்னவுட னெனையடித்துத் துவைத்திழுத்துப் போட்டந்த
மன்னவனுந் தாங்களுமாய் மறைந்தெழுந்து போனாரே. (85)

(இ.ள்) ''அவர்களைப் பார்த்து நான் இன்னமும் உமக்கு அறிவில்லையே. நாம் பகையை ஒழித்து, கூகை அரசனைப் பணிந்து வாழ்வதே செய்யத் தக்க செயல் என்றேன். இவ்வாறு நான் சொன்னவுடன் என்னை அடித்து இழுத்துத் துவைத்துப் போட்டு அந்த மன்னனும் காகங்களும் எழுந்து ஓடி மறைந்து போயினர்.

431. செத்ததென்று போட்டுவைத்துச் சென்றார்கள்
நான்பிழைத்தேன்
உத்தமனே நின்பதத்தில் ஓடிவந்து விழவென்றால்
மெத்தவடி பட்டதனால் மெலிந்துகிடந் தேனினியுன்
சித்தமென்பாக் கியமென்றே திரஞ்சீவி வணங்கலுமே. (86)

(இ.ள்) "நான் இறந்து விட்டேன் என்று நினைத்துப் போட்டுவிட்டுச் சென்றனர். ஆனால் நான் பிழைத்துக் கொண்டேன். உத்தமனாகிய கூகையரசனே, நான் ஓடிவந்து உன் பாதத்தில் விழலாமென்றால், மிகுந்த அடிபட்ட காரணத்தால் உடல் சோர்ந்து கிடந்தேன். உன் சித்தம் என் பாக்கியம்" என்று கூறி திரஞ்சீவி வணங்கியது.

432. மனமிரங்கி யரசனுந்தன் மந்திரிகள் தனைக்கேட்க
சினமிகுந்த புலிவலையிற் சிக்கியதை விடலாமோ
எனமொழிந்தான் குகாக்ஷன் எனுமமைச்சன் தனைக்கேட்கத்[1]
தனையடைந்தார் தமைக் கொன்றால் தன்மமல
வென்றானே. (87)

(இ.ள்) திரஞ்சீவி சொன்னதைக் கேட்டு மனம் இரங்கிய கூகையரசன் தன் மந்திரிகளைக் கேட்டான். அவர்களுள் ஒருவன் சினம் மிகுந்த புலி வலையில் சிக்கியுள்ளது. அதைக் கொல்லாமல் விடலாமோ? கூடாது என்றான். குகாக்ஷன் எனும் அமைச்சனைக் கேட்க, அவன், நம்மை அடைக்கலமாக அடைந்தவர் தம்மைக் கொல்வது அறமாகாது என்றான்.

பா. பே.: பாடல் 432. 1. எனமொழிந்தாரிவர்தம்மில்
குருதிக்கண னுமெண்ணித்

433. தீத்தாட்சன் தனைக்கேட்கச் சேரவந் தடைந்தாலும்[1]
மூத்தார்கள் மனுநீதி முறையுரைத்த விதிப்படியே
காத்தாரைக் கண்டதல்லால் கடுங்கொலைசெய்
தவர்தமையும்
நீத்தாருங் கண்டதில்லை நீணிலத்தி லென்றானே. (88)

(இ-ள்) அடுத்துத் தீத்தாட்சன் என்னும் அமைச்சனைக் கேட்க, அது, "பகைவர் நம்மை வந்து அடைக்கலமாகச் சேர்ந்தால் நம் முன்னோர்கள் மனுநீதி முறைப்படி அவர்களை காத்தார்கள் என்றுதான் கண்டுள்ளோம். மாறாக அவர்களைக் கடுங்கொலை செய்து அழித்தவர்களை இவ்வுலகில் கண்டதில்லை" என்றது.

434. வத்திரக போதனெனும் மந்திரியைக் கேட்டலுமே
சத்துருவா னாலும்வந்து தனக்கினிமை உரைத்தடைந்தால்
உத்மரா னவர்வரிசை யுதவியவர் உயிர்காப்பார்
மெத்தபுக ழோடுலகில் மேவியினி வாழ்வாரே. (89)

(இ-ள்) தொடர்ந்து வத்திரபோதன் எனும் அமைச்சனைக் கேட்டதும், அது, "பகைவனானாலும் நம்மிடம் வந்து நமக்குவப்பாக இனிய சொற்களைச் சொல்லியிருந்தால் உத்தமமானவர்கள் அப்பகைவர் களுக்கு உதவி, உயிர் காத்தும் பெரும்புகழோடு இனிது வாழ்வர்" என்றது.

பா. பே.: பாடல் 433. 1. தீத்தொழிலன் கொடுங்கண்ணன்
தனைவினவத் தெவ்வர்வரின்
பெயர்கள் அச்சுப்பிரதியில் குருதிக் கண்ணன் என்றும், கொடுங்கண்ணன் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

கோமுட்டிக்குக் கள்ளன் உதவிய கதை

435\. திருடவந்த கள்ளனுக்குத் திரவியவான் கோமுட்டி
கருணையுடன் உபசரிக்கக் கள்ளனுமோர் உதவிசெய்த
ஒருகதையுண் டக்கதையே துரையெனவே ஒரூரிற்
பெருநிதிப டைத்தவன்கு பேரமித்திர னெனுமொருவன்.[1] (90)

(இ.ள்) திருடவந்த திருடனுக்கு செல்வந்தனான கோமுட்டி அன்புடன் உபசரிக்க, அத்திருடனும் அவனுக்கு ஓர் உதவி செய்தான் என்றொரு கதை உண்டு என ஒரு கூகை கூற, அக்கதை என்ன என்று பிற கூகைகள் கேட்டன. அதற்கு அக்கூகை, ''ஒரூரில் குபேரமித்திரன் என்பவன் பெருஞ்செல்வத்தோடு வாழ்ந்திருந்தான்.

436\. வெண்ணரையன் திரைகவுளன் வீதிருடம்பன் ஒசிநோக்கன்
பெண்ணமுத மடவார்க்குப் பிரியமிலா முதிர்மூப்பன்
வண்ணமனை யாளொருத்தி மாரனிர தியைப்போல்வாள்
நண்ணிலளங் கவனைநெஞ்சில் நாடியவள் தீண்டாளே. (91)

(இ.ள்) ''முகம் வெண்மையாக நரைத்த தலையுடையவன், உடல் சுருக்கங்கொண்டவன், நடுங்கும் உடலுடையவன். மாறுகண் பார்வையினன். அமுதம் போன்ற அழகிய பெண்களுக்கு விருப்பமற்ற முதிர்ந்தவன். அவன் மனைவியோ அழகானவள். மாரனின் இரதியைப் போன்ற எழிலுடையவள். அவள் இந்தக் கோமுட்டியை விரும்பவில்லை. மனத்தாலும் அவள் அவனைத் தீண்டாதவள் ஆவாள்.

437\. எள்ளளவு மவன்மீதில் இச்சையிலாள் ஒரிரவில்
கள்ளன்வர நடுநடுங்கிக் கணவனைப்போய் தழுவுதலும்
உள்ளமகிழ்ந் துன்னாலே யுற்றவின்பம் பெற்றனனே
வெள்ளநிதி கிடக்குதுநீ வேண்டுவகொண் டேகென்றான்.(92)

பா. பே.:

பாடல் 435. 1. பெரு நிதி படைத்தவன்கு பேரமித்திர னெனுமொருவன்

(இ.ள்) ''எள்ளளவும் கணவன் மேல் இச்சை யில்லாது இருந்தவள், ஒருநாள் திருடன் வரவே உள்ளம் நடுங்கி கணவனைப் போய் கட்டித் தழுவிக் கொண்டாள். உடன் மனம் மகிழ்ந்த கோமுட்டி கள்ளனைப் பார்த்து, 'உன்னாலே எனக்கு இந்த இன்பம் கிடைத்து. வீட்டில் வெள்ளம் போல் நிதி கிடக்கிறது. நீ போய் வேண்டியதை எடுத்துக்கொள்' என்றான்.

438. கள்ளனுமங் குளமகிழ்ந்து கன்னியுனைத் தழுவியதே
வெள்ளநிதி இன்றெனக்கு வீட்டில்வந்து விழுந்ததொக்கும்
உள்ளமகிழ்ந் தென்னாளும் உனையிவள்வந் தணையாமல்
எள்ளியிருந் தால்வருவேன் எனைநினைப்பா
யெனப்போனான். (93)

(இ.ள்) ''அதைக்கேட்டு மகிழ்ந்த திருடன் 'இக்கன்னி இன்று உன்னைத் தழுவியதே எனக்கு வெள்ளநிதி கிடைத்தது போலாகும். எந்நாளும் உள்ளம் மகிழ்ந்து, இவள் வந்து அணையாமல் இகழ்ந்து இருந்தால் எனை நினைத்துக்கொள். நான் வருவேன்' என்று கூறினான்.

439. அன்றிரவு முதலாக அவள்பயந்து நடுங்கிமனம்
ஒன்றியவ னொடுங்கூடி யுறங்கவவன் சுகமடைந்தான்
என்றுகதை சொலியிவனுக் கிதஞ்செய்தா லிதம்பெறலாம்
கொன்றதனா லேதுபயன் கொடும்பழியா மெனக்
கேட்டே. (94)

(இ.ள்) '' அன்றிரவு முதலாக அவள் பயந்து நடுங்கி மனம் ஒன்றித் தன் கணவனுடன் கூடிக் கலந்து உறங்க அவன் சுகமடைந்தான் என்று கதை சொல்லி, இக்காகத்திற்கு உதவி செய்தால் நாமும் உதவி பெறலாம். இதைக் கொல்வதனால் என்ன பயன். கொன்றால் கொடிய பழிதான் வந்துசேரும் என்றது.''

440. பகனெனுமந் திரிதனையும் பார்த்தென்னை நீசொலென[1]
இகலினரா கிலுமடைந்தே இதஞ்சொல்வார் தமைக்காப்பார்
நிகரில்பிரா மணப்பேய்க்கும் நெடுஞ்சோரன் தனக்குமுன்னாள்
அகமகிழ்ந்து வெகுமானம் அந்தணன்செய் தானெனவே.(95)

(இ.ள்) அடுத்துப் பகன் என்னும் அமைச்சனைப் பார்த்து, நீ சொல்வதென்ன எனக் கேட்க, அவன், ''பகைவரானாலும் தம்மை அடைந்து இதமான சொற்களைச் சொல்பவரைக் காப்பாற்றுவதே மரபு. நிகரற்ற பிராமணப் பேய்க்கும் பெரிய திருடனுக்கும், முன்னொருநாள் ஓர் அந்தணன் மனமகிழ்ந்து பரிசில் களைத் தந்தான்'' எனச் சொன்னது.

பிரம்மராக்கதனும் திருட னும் வந்த கதை

441. தெள்ளுகதை யேதெனவோர் திருநகரில் ஒருமறையோன்
உள்ளமகிழ் வொடுவளர்த்த உயர்காம தேனுவினைக்
கள்ளனொரு வன்கருதிக் களவுகொள்வோ மெனவந்த
நள்ளிருளில் ஓர்பிரம்ம ராக்கதனுங் கண்டானே. (96)

(இ.ள்) அந்தக் கதை என்னவென்று கேட்க, ''ஒரு அழகிய நகரத்தில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் அன்போடு ஒரு பசுவினை வளர்த்து வந்தான். அந்த உயர் ரகப் பசுவைத் திருடிச் செல்லத் திருடன் ஒருவன் துணிந்து வந்தான். அந்த நள்ளிரவில் ஒரு பிரம்மராக்கதன் அவனைக் கண்டான்.

442. கண்டவன்நீ யாரென்னக் கள்ளனும்நீ யாரென்றான்
எண்டிசையெண் ணும்பிரம ராக்கதனா னெனவவனும்
மண்டுபொருள் கன்னமிடும் மாசோரன் நானென்றான்
என்றவுநள் ளிருளிரவி லிங்குவந்த தேதென்றான். (97)

பா. பே.: பாடல்440. 1. தகவுபெறு குருரநா டன்றன்னைநீ சொல்லென்ன

(இ.ள்) கண்ட இராக்கதன் திருடனைப் பார்த்து நீ யார்? எனக் கேட்க, திருடனும் நீ யார்? என்றான். உடன் இராக்கதன், எட்டுத் திசையும் எண்ணும் பிரம்மராக்கதன் நான் என்றதும், அவனும் பெரும் பொருள்களைகக் களவாடும் திருடன் நான் என்றான். என்றதும் அவனைப் பார்த்து நள்ளிரவில் இங்கு வந்தது ஏன்? என்றது.

443. சோரனும்நீ வந்ததென்னச் சொல்லெனவே யிந்தமனை
ஆரணவே தியனுயிரை யருந்தவந்தோ மெனச்சோர
தீரனுமிங் கிவன்பசுவைத் திருடவந்தே னெனவிரண்டு
பேருமொரு மித்துடனே பெரியவன்முன் றினில்நடந்தார்.(98)

(இ.ள்) திருடனும் இராக்கதனைப் பார்த்து, நீ வந்த காரணம் என்ன என்று கேட்டான். அதற்கு இராக்கதன், இந்த வீட்டிலுள்ள வேதம் ஓதும் வேதியனை உண்ண வந்தேன் என்றது. திருடனும், இங்கு இவன் பசுவைத் திருட வந்தேன் என்று சொல்ல, இருவரும் ஒன்றாக அந்தணனுடைய வீட்டின் முன்றிலை அடைந்தனர்.

444. வந்தவிரு வோருமவன் வாசலிலே நின்று கொண்டு
அந்தணனா ருயிரைமுந்தி யருந்திடுவே னானென்றும்
பந்தமுடன் நிற்குமிந்தப் பசுவைமுந்தி விடுவனென்றும்
இந்தவகை தங்களிலே யிகலுமொலி கேட்டலுமே. (99)

(இ.ள்) இருவரும் அந்தணனின் வாசலில் நின்று கொண்டு, அந்தணனின் உயிரை முதலில் நான் குடிப்பேன் என இராக்கதனும் இவன் பசுவை முதலில் நான் திருடுவேன் எனத் திருடனும் போட்டியிட்டனர். இவ்வாறு இருவரும் சண்டையிட்ட ஒலியைக் கேட்ட அந்தணன் ...

445. மிக்கமறை யோனுமிவர் விவகாரந் தனையறிந்தே
மக்களுந்தா னுங்கூடி வன்றடிகள் கைக்கொண்டு
புக்கவிரு வோருயிரும் பொன்றவடிப் போமென்று
துக்கெனவா சற்கதவைத் திறந்துபுறப் பட்டாரே. (100)

(இ.ள்) அந்தணன் இவர்களுடைய விவகாரங்களை அறிந்து தன் மக்களோடு சேர்ந்து பெரிய தடிகளை எடுத்துக்கொண்டு, வந்த இருவருடைய உயிரும் பிரியும்படி அடிப்போம் எனத் தீர்மானித்துத் திடீரென வாசல் கதவைத் திறந்து வந்தார்.

446. மறையவனே உன்னுயிரை வதைக்கவந்தா னிவனென்றும்
குறைவருநின் பசுக்களவு கொள்ளவந்தா னிவனென்றும்
முறைமுறையே இருவரிகல் மொழிந்துநின்றா ரதுகண்டு
நிறைசுருதி மாதவனும் நெஞ்சுகளி கூர்ந்தானே. (101)

(இ.ள்) உடன் திருடன், அந்தணனே இவன் உன் உயிரை வாங்க வந்தவன் என்றும், பிரம்மராக்கதன், இவன் நின் பசுவைத் திருட வந்தவனென்றும் முறையே இருவரும் சண்டையிட்டு நின்றனர். அது கண்டு நிறைந்த வேதங்களை உணர்ந்த அந்தணன் மனம் மகிழ்ந்தான்.

447. அன்றுமுத லிருவோரு மந்தணரு முறவாகித்
தன்றுணைவர் தமைப்போலே சகாயிகளா யிருந்தார்கள்
இன்றிவனுக் குபகாரம் யாமுஞ்செய் வோமாகில்
நன்றியல்லால் தீதுமல்ல நமக்கிவனும் துணை
யென்றான். (102)

(இ.ள்) அன்று முதல் இராக்கதனும், திருடனும் அந்தணனுமாகிய மூவரும் உறவாகி, தமக்கு துணைவர் களாக நட்பு கொண்டு இருந்தனர். அதுபோல், இன்று நாம் இவனுக்கு உபகாரம் செய்தோமானால் நன்மையே யல்லாது தீமையில்லை. இவன் நமக்குத் துணையாக இருப்பான்'' என்றது.

448. இவர்மூவர் கருத்துமறிந் திரத்தாட்சன் தனைக்கேட்க[1]
அவன்மாடப் புறாவுக்கா யருந்தசையைத் துலையிட்ட
சிவிராசன் எனவுலகோர் செப்புவதும் அறியாயோ
தவறாமல் அபயமெனிற் தற்காத்தல் நெறியென்றே. (103)

(இ.ள்) அந்த மூன்று அமைச்சர்களின் கருத்தும் அறிந்து திரத்தாட்சன் என்னும் அமைச்சனைக் கேட்க, அவன் கூறினான். மாடப் புறாவிற்காகத் தனது தசையை அறுத்துத் தராசில் இட்ட சிவி ராஜன் என உலகத்தினர் சொல்வதை நீ கேட்டதில்லையோ ? எனவே அபயம் என்று வந்தவரைக் காப்பதே நெறி'' என்றான்.

தச்சன் கதை

449. தச்சன்றன் தேவியையும் சக்களவன் றனையுமெடுத்[2]
துச்சிதமாய்த் தலையினில்வைத் தூரெங்கும் கூத்தாடி
மெச்சியதோர் கதையெனநீ விளம்புகவக் கதையென்ன
மச்சுலவு மாளிகைசூழ் வளநகரொன் றதிலொருவன். (104)

(இ.ள்) ''தச்சன் ஒருவன் தன் மனைவியையும் அவளுடைய கள்ளக் காதலனையும், எடுத்து தன் தலையில் வைத்து ஊரெங்கும் கூத்தாடி மகிழ்ந்து மெச்சிய கதை ஒன்று உண்டு என்று சொல்ல அக்கதையினை நீ சொல் எனக் கேட்டனர். அதற்கு, மேகங்கள் சூழும் உயர்ந்த மாளிகைகள் சூழ்ந்திருக்கும் வளநகர் ஒன்று உண்டு அதில்.,,.

பா. பே.:

பாடல் 448 1. இவையுரைத்து மன்னவகே ளிடருழந்து
தனையடைந்த
சவிமாடப் புறாவுக்கா ....

பாடல் 449. 2. தச்சனொரு வன்மனைவி தன்னொடுசோ
ரனையுமெடுத்து

450. பேரிரதக் காரனெனும் பெருந்தச்ச னவன்தேவி
சோரனொரு வனைக் கூடிச் சுகங்காணத் தச்சன்வந்து
சேரிலவன் மீதிலன்பு சிறிதுமிலா ளீதென்ன
காரணமென் றாசாரி[3] கருதிவிசா ரித்திருந்தே. (105)

(இ.ள்) பேரிரதக்காரனெனும் பெயருடைய பெருந்தச்சன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவனுடைய மனைவி தன் கள்ளக் காதலனுடன் கூடிச் சுகம் கண்டிருந்தாள். அதே சமயம் தச்சன் வந்த வேளையில் அவனிடம் சிறிதும் அன்பிலாதவளாய் இருந்தாள். தன் மேல் அன்பிலாததற்கு என்ன காரணம் என்று தச்சன் ஆலோசித்து....

451. வேறொருவன் தோணசையை விரும்பிநமைக் கண்டளவிற்
சீறுதலாற் சுரதநலஞ் சிறிதுமிலை யெனத் தச்சன்
தேறியதைச் சோதிக்கச் சிந்தித்தே யோரூர்க்குப்
போறவன்போற் புறப்பட்டுப் போயிரவில்
மீண்டுவந்தான். (106)

(இ.ள்) இவள் வேறொருவனுடைய தழுவலை விரும்பி நம்மிடம் கண்டபோது சீறுவதால் நம்மிடத்தில் கலவி இன்பம் கொண்டாளில்லை எனத் தீர்மானித்துத் தான் அதைச் சோதித்துப் பார்க்க நினைத்து, வேற்றூருக்குப் போவதுபோல் புறப்பட்டுப் போய் இரவில் திரும்பி வந்தான்.

452. கட்டிலின்கீழ் ஒளித்திருந்தான் காரிகையுஞ் சோரனுக்காள்
விட்டவனை யழைத்துவந்து மேவதலு மவள் கால்கள்
பட்டனதச் சன்மீதிற் பாவையது கண்டஞ்சி
நெட்டுயிர்த்து விசாரமிட நேரிழைதன் முகநோக்கி. (107)

பா. பே.: பாடல் 450. 3. காரணமென் றாங்கவனுட்

(இ.ள்) வந்தவன் மனைவியறியாமல் கட்டிலின் கீழ் ஒளிந்திருந்தான். அவளும் தன் காதலனுக்கு ஆளனுப்பி அவனை அழைத்து வந்து அவனைச் சேரக் கட்டிலை அடைந்தாள். அப்பொழுது அவள் கால்கள் தச்சன் மீது பட்டன. அது கண்டு கணவனென அஞ்சிப் பெருமூச்சு விட்டு துன்புற்றவளாக இருந்தாள். அவளுடைய முகத்தைப் பார்த்து,

453. உனக்குமன மென்மேலா உன்கணவன் தன்மேலா
எனக்கழற அவள்முனிந்தே யெவ்வனதோ சத்தாலென்
மனத்தையின்று பெண்புத்தி மயக்கவந்த தொருபாவம்
எனக்கவனே தெய்வமவன் இறக்கிலிறப் பேனென்றாள்.(108)

(இ.ள்) காதலன், உனக்கு விருப்பம் என் மீதா ? உன் கணவன் மீதா ? என்று கேட்க, அவள் சினந்து, இளமைப் பருவ தோசத்தால் என் மனத்தைப் பெண்புத்தி மயக்க இன்று இந்தப் பாபம் வந்தது. எனக்கு என் கணவனே தெய்வம். அவன் இறந்தால் நானும் இறப்பேன் என்றாள்.

454. அந்தமொழி கேட்டலுமே யகமகிழ்ந்து ரதக்காரன்
முந்தநினைத் ததுந்தனது முன்னவனைக் கூடினதும்
சிந்தையிலெண் ணாமலவர் சேருமஞ்சத் துடனெடுத்து
வந்துதலை மீதிலவன் வைத்துக்கொண் டாடினானே. (109)

(இ.ள்) அவள் சொன்னதைக் கேட்டதும் மனம் மகிழ்ந்த பேரிரதக்காரன், தான் முன் நினைத்ததும் , தன்முன் அவள் அவனைக் கூடியதும் ஆகிய எதையும் எண்ணாமல் அவர்கள் சேர்ந்திருந்த மஞ்சத்துடன் எடுத்து வந்து தன் தலை மீதில் வைத்துக் கொண்டாடினான்.

455. கண்ணார அவளியற்றுங் கருமமெலாங் கண்டுமதை
எண்ணாமல் ஒருவார்த்தை இதஞ்சொன்னா ளென்றலவோ
பண்ணாருந் தேர்த்தச்சன் பரிவுற்றான் இவன்மனதில்
நண்ணாரைப் பகைத்துவந்தான் நமக்கிவனே யுறவென்றான்.(110)

(இ.ள்) தன் மனைவி செய்ததைக் கண்ணால் கண்டும் அதைச் சிறிதும் நினைத்துப் பார்க்காமல், இதமாக ஒரு சொல் சொன்னாள் என்பதற்காகத் தச்சன் அவள்மேல் அன்பு கொண்டான். இவனோ நம் எதிரியைப் ப[illegible]த்து வந்தான். நமக்கு இவனே உறவு'' என்றான்.

456. என்றுசொலப் பிரகார நாசனைப்பார்த் தினியுரைப்பாய்
நன்றுனது கருத்தையென நல்லவர்போ லெய்திடினும்
துன்றுபகை யுற்றவர்க்கு ரகசியந்தோன் றாதடக்கல்
ஒன்றுதிறற் செய்கையென்றே ஒருகதைநன்
குரைசெய்யும். (111)

(இ.ள்) என்று திரத்தாட்சன் சொல்ல, மன்னன் பிரகாரநாசனைப் பார்த்து இனி நீ உன் கருத்தைக் கூறுவாய். என்று சொல்ல அவன் கூறுவான். பகைவன் நல்லவன் போல் வந்து சேர்ந்தாலும், பகைமை கொண்டவர்களுக்கு நம் இரகசியம் தெரியாமல் மறைத்தலே திறமுடைய செயல் என்று ஒரு கதை நன்கு உணர்த்தும் என்று சொல்லிக் கதையைக் கூறினான்.

இரகசியம் விட்டுப் பாம்புகளிறந்த கதை

457. விண்டுவன்ம னென்னுமொரு வேந்தன்வயிற் றுறுநோயால்
கொண்டுதுய ருடல்மெலிந்தே யாத்திரையிற்
குறிப்பினைவைத்
தெண்டிசையி னுந்திரிந்தே எம்பிரான் கோயிலொன்று
கண்டதனில் வசித்திட்டான் கடவுளடி யுளங்கொண்டே.(112)

(இ.ள்) விண்டுவன்மன் என்னும் பெயருடைய மன்னன் ஒருவன் வயிற்று நோயால் பெரிதும் துன்பப்பட்டு உடல் மெலிந்து, யாத்திரை செய்யும் எண்ணம் கொண்டு எட்டுத் திசைகளிலும் சுற்றித் திரிந்தான். இறுதியில் சிவாலயம் ஒன்றைக் கண்டு

பாடல் எண் 456முதல் 476 வரையிலான 21 பாடல்கள் சுவடியில் இல்லை. அச்சுப் பிரதியில் உள்ளன.

இறைவன் திருவடியைச் சேரும் எண்ணத்துடன் அங்கேயே தங்கி வசித்து வந்தான்.

458. அப்பதியி லிருந்துலகை யளிக்குமிறை பலியென்பான்
ஒப்பருதன் புத்திரியர் இருவரிலங் கொருத்திதனைச்
செப்பியதீ துளத்தெண்ணிச் செயிர்த்தந்த விண்டுவன்மன்
கைப்படநீர் விடுத்தளித்தான் காரிகைகற்
புடைமையினால். (113)

(இ.ள்) அந்நகரத்திலிருந்து நாடாளும் பலி என்னும் மன்னன் ஒப்பற்ற தன் இருமகள்களில் ஒருத்தி மீது சோதிடர் சொன்ன தீமையை மனத்தில் எண்ணிச் சினம் கொண்டு விண்டுவன்மன் கையில் நீர் வார்த்து அவளை மணமுடித்துக் கொடுத்துவிட்டான். அப்பெண்ணும் தன் கற்புத் திறத்தினால்...

459. கணவனே தெய்வமெனக் கருதியவன் றனக்கிசைந்த
பணிபுரிந்து பரதேசம் படரும்போ தொருநாளில்
உணவடலுக் குபகரணம் ஊர்ப்புகுந்து கொளப் போனாள்
பிணியுடையான் கண்ணுறங்கப் பெரும்பாம்பொன்
றங்கொலிக்க. (114)

(இ.ள்) கணவனே தெய்வம் எனக் கருதி அவனுக்கு மனத்திற்கு இசைந்தபடி பணி செய்து வாழ்ந்தாள். பின் வேற்றூர் செல்லும் பொழுது ஒரு நாள் உணவு சமைப்பதற்குத் தேவையான பொருள்களை வாங்க ஊருக்குள் சென்றாள். வயிற்று நோயுடைய விண்டுவன்மன் கண்ணுறங்கினான். அப்பொழுது பெரிய பாம்பொன்று சீறி வந்தது.

460. அவ்வொலிகேட் டவன்வயிற்றி னரவு மொலித்திட விரண்டும்
வெவ்வியவா தம்புரிந்து மேவுதலு மப்போது
நவ்விவிழி இவன் துணைவி நண்ணியொளித் ததுகேட்கக்
கவ்விவயிற் றரவினொடு புற்றரவு கழறுமால். (115)

(இ.ள்) அந்தவொலி கேட்டு அவன் வயிற்றிலிருந்த பாம்பும் சீறியது. இதனால் இரண்டிற்கும் சண்டை ஏற்பட்டது. இரண்டும் வாதம் செய்யும் பொழுது, வெளியே சென்றவள் வந்து சேர்ந்தாள். இவை சண்டையிடும் ஒலியை ஒளிந்திருந்து கேட்டாள். அப்பொழுது வயிற்றரவிடம் புற்றரவு கூறியது...

461. பாவிநீ யிவ்வரச புத்திரனைப் படர்செய்யும்
தீவினையென் னெனவுணவு செறிந்தகுடர் தனிற்சேர்ந்த
தாவறுமென் றனைநிந்தித் திடுவதென்னென் றதுசாற்ற
ஓவறுபுற் றரவமவன் கடுகுதின்றால் ஒழிகுவைநீ. (116)

(இ.ள்) ''பாவியே நீ இந்த அரசகுமாரனுக்குத் துன்பம் செய்வதற்கு அவன் செய்த தீவினை என்ன'' என்று கேட்க, ''உணவு செறிந்த குடலில்சேர்ந்த குற்றமற்ற என்னை நிந்தித்தது ஏன்'' என்று வயிற்றரவு கேட்டது. உடன் புற்றரவு, ''இவன் கடுகு தின்றால் நீ ஒழிந்திடுவாய்.

462. சுகமடைவா னரசனென்றுஞ் சொல்லவயிற் றரவுவெகுண்
டுகுவைநீ வெந்நீரால் எனவுரைக்க இவ்விரண்டும்
பகர்தருநன் மொழிகேட்டே பாவையுமவ் வாறுசெய
மிகைசெயுமவ் வரவிறக்க வேந்தனுமந் நோய்தீர்ந்தே. (117)

(இ.ள்) அரசன் சுகமடைவான்'' என்று சொன்னது. இதைக் கேட்ட வயிற்றரவு சினம்கொண்டு, ''நீ வெந்நீரால் அழிவாய்'' என்றுரைத்தது. இவ்விரண்டும் கூறிய நல்ல சொற்களைக் கேட்ட இளவரசி அவ்வாறே செய்ய நோய்க்குக் காரணமான அந்தப் பாம்பும் இறந்தது, மன்னனின் நோயும் தீர்ந்தது.

463. தன்னகரந் தனைச்சேர்ந்து தகவுபெறு மனைவியொடும்
இந்நிலத்தை யாண்டிருந்தான் ஆதலினா லிரகசியம்
அன்னியர்தேர்ந் திடப்புகலில் அதனாலுந் துன்பமுறும்
என்னவிசைத் தொருவேடன் கதைபின்னு மியம்புமால்.(118)

(இ.ள்) மன்னன் தன் நகரம் சென்று சேர்ந்து கற்புடைய தன் மனைவியுடன் சேர்ந்து தன் நாட்டை சிறப்பாக ஆண்டிருந்தான். ''எனவே நம் இரகசியத்தை அந்நியர் அறிந்து கொள்ளும் வகையில் சொன்னால் அதனாலும் துன்பம் நேரிடும்'' என்று கூறி மேலும் ஒரு வேடன் கதையையும் சொல்லிற்று.

வேடன் கதை

464. வனமொன்றில் ஒருவேடன் வளர்குருவிக் கூட்டினொடும்
இனமொன்று வேட்டைக்கரு விகளுமெடுத் தேதிரியக்
கனமிருண்டு மழைபெய்யக் காற்றெழும்ப வனநடுங்கி
மனமருண்டோர் மரத்தின்கீழ் வந்திருந்தா னப்போது. (119)

(இ.ள்) ஒரு கானகத்தில் வேடன் ஒருவன் ஒரு குருவிக் கூட்டையும் வேட்டைக் கருவிகளையும் எடுத்துக் கொண்டு திரிந்திருந்தான். அப்பொழுது வானம் இருண்டு மழை பொழிந்தது. காற்றும் எழுந்து சுழன்று அடித்தது கானகமே நடுநடுங்கியது. வேடன் அச்சம்கொண்டு ஒரு மரத்தின் கீழ் வந்து தங்கினான். அப்போது

465. தங்குமதன் மேலிருந்த புறாவொன்று தன்பேட்டை
எங்ககன்ற தோவனத்தில் யாரேனும் பிடித்தாரோ
மங்கியதோ வெனப்புகல அதுகேட்டு வனசரன்றன்
அங்கையுறு கூட்டினுற்ற பெண்புறா வழுதுசொலும். (120)

(இ.ள்) வேடன் தங்கியிருந்த மரத்தின் மேலிருந்து புறா ஒன்று, தனது பெண்புறா எங்குச் சென்றதோ, காட்டில் யாரேனும் அதைப் பிடித்தாரோ, வர வழியின்றி மயங்கியதோ என வருந்திக் கூறியது. அது கேட்ட வேடன் கைக் கூட்டிலிருந்த பெண்புறா அழுது சொல்லும்.

466. முன்வினையா லிதுபெற்றேன் ஆயினுநின் முனமடைந்த
இன்னவனுக் குபசாரம் புரியெனவும் எரிகொளுவி
அன்னவனை யழைத்துடலின் குளிர்போக்கி யாகாரம்
என்னைநீ யருந்தென்று வீழ்ந்திறக்க இவன்நோக்கி. (121)

(இ.ள்) ''நான் என் முன் வினைப் பயனால் இக்கூட்டினுள் அடைபட்டேன். எனினும் உன்முன் வந்தடைந்த இவனுக்கு நீ உபகாரம் செய்'' என்றது. அதுகேட்ட ஆண் புறா நெருப்பு மூட்டி வேடரை அழைத்து அவனுடைய குளிரினைப் போக்கியதோடு, உன் பசிக்கு உணவாக என்னையே நீ அருந்து என்று கூறி அந்த நெருப்பில் வீழ்ந்து உயிரை விட்டது. அதைக் கண்ட வேடன்.

467. அன்பினால் நம்பொருட்டு வீழ்ந்தவிதை அருந்தியிடில்
துன்பம்வரு மெனப்பேட்டை விடுத்திடலுஞ் சூழ்ந்ததுவும்
தன்புருஷன் பிரிவதனால் வீழ்ந்திறக்கத் தகுமிரண்டும்
இன்பமுறு தெய்வவுரு வெய்திவா னுலகடைந்த. (122)

(இ.ள்) அன்பு உள்ளத்தால் நமக்காக நெருப்பில் வீழ்ந்து உயிர்விட்ட இந்தப் புறாவை அருந்தினால் பெரும் துன்பம் நேரிடும் எனக்கூறி கூட்டிலுள்ள பெண் புறாவை விடுவித்தான். விடுதலை பெற்ற பெண்புறா, தன் கணவன் பிரிவால் வருந்தி நெருப்பில் வீழ்ந்து உயிர் துறந்தது. பெருமை மிக்க இவ்விரண்டும் இன்பமான தெய்வவுருவம் பெற்று வானுலகம் அடைந்தன.

468. இரக்கமொடு வேடுவனும் எரிவீழ்ந்து கதியடைந்தான்
தரைக்குளுளந் தளர்ந்துசர ணார்த்தியென்று சார்ந்தார்க்கும்
புரக்கவருள் செயிற்றாமே பொன்வரி னும்வருமென்
றுரைத்துப்பொன் எச்சமிடும் பறவைகதை யோதுமால்.(123)

(இ.ள்) இது கண்டு இரக்கம் கொண்ட வேடனும் நெருப்பில் வீழ்ந்து நற்கதியடைந்தான். உலகில் சோர்வுற்று அடைக்கலம் என வந்து சேர்ந்தாருக்கும் ஆதரவு தந்து காத்தால் தாமே பொன் கிட்டினும் கிட்டும் என்று கூறி பொன்னெச்சமிடும் பறவை கதையைச் சொல்லும்.

பொன்னெச்சமிடும் பறவை கதை

469. பொன்னாக வெச்சமிடும் ஒருபறவை பொருப்பின்மேல்
பன்னாளு முறக்கண்டு பயில்வேட னதைப்பிடித்து
மன்னாவா னிதைக்காணில் வாங்குவனென் னுயிருமெனப்
பின்னாய்ந்து வேந்தனுக்குப் பெருமைசொலி
யளித்தனனால். (124)

(இ.ள்) பொன்னாக எச்சமிடும் பறவை ஒன்று பல காலம் மலைப் பகுதியில் இருக்கக் கண்ட வேடன் அதைப் பிடித்தான். பின் இதை அரசன் கண்டால் என் உயிரைப் போக்கிடுவான். எனச் சிந்தித்து, இதன் பெருமையைச் சொல்லி அரசனிடம் கொடுத்து விட்டான்.

470. அவன்மணிக்கூட் டிடைவளர்க்க அமைச்சனுமங்
கதுநோக்கி
புவியிலசம் பாவிதமாம் பொருள்கேட்டிப் படிபுரிதல்
நவையுறும்விட் டிடுதியென நயந்துரைக்க நரபதியும்
கவலையுற விடுத்திட்டான் நீங்கியவக் கடும்புள்ளும்.(125)

(இ.ள்) மன்னன் ஒரு மணிக் கூட்டைச் செய்து அதில் அப்பறவையை வைத்து வளர்ந்தான். அது கண்ட அமைச்சன். உலகில் இப்படி அசம்பாவிதமாகப் பொருளைப் பெற இவ்வாறு செய்தல் குற்றமாகும். எனவே இதை விட்டுவிடுங்கள் என நயமாகக் கூற, மன்னனும் கவலையுற்று அதனை விடுத்திட்டான். அப்பறவையும் பறந்து சென்றது.

471. புரவலன்றன் மலைச்சிகரம் பொருந்தியநான் முதல்மூடன்
விரவுமிரண் டாமூடன் வில்வேடன் இவ்வரசன்
மருவுமூன் றாமூடன் மந்திரிநான் காமூடன்
சரதமென வுரைத்தந்தத் தனிப்பறவை நீங்கியதே. (126)

(இ.ள்) அப்பொழுது அப்பறவை சொன்னது, மன்னனுடைய நாட்டு மலை உச்சியைச் சார்ந்த நான் முதல் மூடன். வேடன் இரண்டாம் மூடன். இந்த அரசன் மூன்றாம் மூடன். அமைச்சன் நான்காம் மூடன். இது உண்மை எனக் கூறிய அப்பறவை பறந்து சென்றது.

472. ஆதலாற் பகைவரென வறிந்தபின்னே நம்புவோன்
சாதலா கும்மிகழ்வு தானடைவா னென்றுரைப்பர்
ஈதெலா முளங்கொள்ளா தரசனிருந் திடம்நோக்கித்
தீதிலா வக்கூகை சிந்தைதிகைத் தேயுரைக்கும். (127)

(இ.ள்) எனவே பகைவன் என்று அறிந்த பின்பும் அவனை நம்புபவன். சாதல் என்னும் இழிவை அடைவான் என்று கூறுவர். இதையெல்லாம் மனத்தில் எண்ணிப் பாராது அரசன் இருக்கும் இடம் நோக்கிக் குற்றமற்ற அந்தக் கூகை மனம் திகைத்து உரைக்கும்.

473. இற்றைநாள் காறுமிந்த வரசனிடத் தினிதிருந்தேன்
பற்றியினி யொருமலையில் பயின்றிருத்தல் வேண்டுகிறேன்
மற்றதுவே னெனிற்குகையைக் கூப்பிட்டோர் வன்னரிதான்
பெற்றசுகம் போலென்றா னக்கதையென் பேசெனலும். 128)

(இ.ள்) இது நாள் வரை இந்த அரசனிடத்தி லிருந்தேன். ஆனால் இனி ஒரு மலை+யில் தங்கி வாழ விரும்புகிறேன். இது ஏனெனில் குகையைக் கூப்பிட்ட ஒரு நரி அடைந்த சுகம் போல் என்றது. அக்கதை என்ன என்று சொல்லவும் என்றது அரச கூகை.

நரி சிங்கத்தின் மோசமறிந்த கதை

474. இரைதேடு மொருசிங்க மிக்குகையி னொளித்திருப்பின்
விரவினின்வந் தொடுங்குமது தனையுண்டு மிகுபசிதீர்ந்
துரமடைவோ மெனக்கருதி யுற்றிடலும் நரிவந்து
பரவுசிங்கக் காற்சுவடு பார்த்துசோ திக்கவெண்ணி. (129)

(இ.ள்) இரை தேடித்திரிந்த ஒரு சிங்கம் ஒரு குகையைக் கண்டு, இக்குகையில் ஒளிந்திருப்பின் இங்கு இரவில் வந்து தங்கும் விலங்குதனை உண்டு, மிகுகின்ற பசியைத் தீர்த்து வலிமை பெறுவோம் என்று கருதி அக்குகையில் தங்கியது. மாலையில் திரும்பி வந்த நரி சிங்கத்தின் காலடிச் சுவடு பார்த்து அதனைச் சோதித்துப் பார்க்க எண்ணி...

475. குகையதனை யிருமுறைதான் கூப்பிடலும் அதுபேசா
வகைகண்டு நமக்கஞ்சி வாய்விடா திருந்ததெனப்
பகையுறுகே சரிநினைந்து பன்னுகுரல் வேறாகத்
தகையினொடு மேனென்னச் சம்புவுமங் குண்ணடுங்கி. (130)

(இ.ள்) நரி இருமுறை குகையைக் கூப்பிட, அக்குகை எதுவும் போசாதிருந்தது. தனக்கு அஞ்சியே குகை வாய் திறக்கவில்லை என்று பகைகொண்ட சிங்கம் நினைத்துத் தன் குரலை மாற்றித் 'தகைமையுடன் உள்ளே வா' என்று சொல்ல, அது கேட்டு அந்த நரியும் மனம் நடுங்கி..

476. அப்பாநான் பிழைத்தேனென் றகன்றோடிற் றாதலினால்
எப்பலா ராயினுநன் காராய்த லியல்பென்னத்
துப்பான மித்திரர்க்குச் சொல்லியைந்தா மந்திரியும்
இப்பாரி லுறுந்தேய நோக்குவனென் றேகிற்றே. (131)

(இ.ள்) அப்பா, நான் பிழைத்தேன் என்று அங்கிருந்து விலகி ஓடியது. எனவே எப்படிப்பட்டவ ராயினும்நன்கு ஆராய்தல் இயல்பு என்று நண்பர்களுக்குச் சொல்லி ஐந்தாவது அமைச்சன் இவ்வுலகில் தங்குதற்குரிய இடம் தேடுவேன் என்று கூறிச் சென்றது.

477. அரசனுமங் கவன்மீதி லன்புவைத்தே தனதருகில்[1]
வருகவென வழைத்துவெகு மானங்கள் மிகச்செய்து
திரமுடைய மந்திரிநீ திரஞ்சீவி யென்றுபல
கருமமுமன் னவன்வசமாய்க் கட்டளையிட்
டருளினனே. (132)

(இ.ள்) கூகை அரசனும் திரஞ்சீவிமேல் அன்பு வைத்துத் தன்னருகில் வருகவென அழைத்து, பணிகளையும் அதன் வசமாய் ஒப்படைக்கக் கட்டளை இட்டது.

478. அப்பொழுது காக்கையினா லடிபட்ட திரஞ்சீவி
எப்படிநான் வைத்திருப்பேன் இவ்வுடம்பை தீயிலிட்டே
செப்பமொடு கூகையெனச் ஜென்மித்துக் காக்கையெல்லாந்
தப்பறவே யடிப்பனென்று சாற்றவர சனுஞ் சொல்வான்.(133)

(இ.ள்) அப்பொழுது காக்கையினால் அடிபட்ட திரஞ்சீவி, கூகை அரசனிடம், நான் எப்படி இந்த உடம்பை வைத்திருப்பேன். நான் என்னுடைய இந்த உடலைத் தீயிலிட்டுப் பொசுக்கித் திருத்தமாகக் கூகைப் பிறவி எடுத்துக் காக்கைகளையெல்லாம் தப்ப விடாமல் அடிப்பேன் என்றது. அது கேட்ட கூகையரசன் சொல்லும்..

எலிக்கதை

479. இந்தமொழி சம்மதமென் னென்றுரைத்தாய் திரஞ்சீவி
முந்தியயோ னியைமாற்ற முடியாதிங் கியாவர்க்கும்
அந்தவகை சொல்லுதுங்கே ளருந்தவமா முனியொருவன்
சிந்தையினில் நிஷ்டையொடு சேர்ந்தொருநீ
ழலிலிருந்தான். (134)

பா. பே.:

பாடல் 131 வரை சுவடியில் இல்லை. அச்சுப் பிரதியில் காணப்படுகின்றன. அதன் தொடர்ச்சியாக அச்சுப் பிரதியில்,

"அரசனவன் போனபின்னே யடைந்தகா கத்தினையே"

எனக் காணப்படுகிறது.

(இ.ள்) நீ கூறும் இந்த சொல் எவ்வாறு இயைபுடையது என்று கூறினாய். இவ்வுலகில் எவர்க்கும் தான் பிறந்த பிறவியை மாற்றி வேறு பிறவி எடுப்பதென்பது இயலாது. அதன் விபரத்தைச் சொல்லுகிறேன் கேள். முன்பு ஒரு முறை அருந்தவம் செய்யும் முனிவன் ஒருவன் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கி ஒரு மர நிழலில் வீற்றிருந்தான்.

480. பருந்தெடுத்த பெண்ணெலியே பருந்தின வாய் தப்பியங்கே
இருந்தமுனி கரத்தில்விழ ஏதெனவே நோக்கியவன்
அருந்தவத்தாற் பெண்பிள்ளை யாக்கிமனை யாள்கையிற்
பொருந்தவள ரெனக் கொடுத்தான் பூவையுமங்
கதைவளர்த்தாள்.(135)

(இ.ள்) அப்பொழுது ஒரு பருந்து ஒரு பெண்ணெலியை எடுத்துப் பறந்துவர அதனிடமிருந்து தப்பித்த எலி மரத்தடியிலிருந்த முனிவனின் கைகளில் வந்து வீழ்ந்தது. தன் கரத்தில் விழுந்தது என்னவென்று பார்த்துத் தனது தவ வலிமையால் அந்த எலியைப் பெண்ணாக மாற்றி அதைத் தன் மனைவியிடம் கொடுத்து இந்தப் பெண்பிள்ளையை வளர்த்துவா எனக் கூறினான்.

481. அந்தமின்னைப் பலவானுக் களித்திடுவோ மெனமுனிவன்
சிந்தையிலெண் ணிக்கொண்டு செங்கதிரோன் தனையழைத்து
இந்தமின்னை நீகொளென விரவியறிந் தெனைமறைக்கும்
முந்தியமே கம்பலவான் முனிவனவன் கைக்கொடென. (136)

(இ.ள்) அந்தப் பெண்ணைப் பேராற்றல் உடையவனுக்கே மணமுடித்துக் கொடுக்க விரும்பிய முனிவன் கதிரவனை அழைத்து, 'இந்தப் பெண்ணை நீ மணமுடித்துக்கொள்' என கேட்டுக் கொண்டான். அதற்குச் சூரியன், 'எங்கும் பரந்து என்னை மறைக்கும் மேகமே என்னினும் வலியன். அவனுக்கே மணமுடித்துக் கொடு' என்றது.

482\. மேகத்தை யழைத்திவளை விரும்புகநீ யெனமுனிவன்
தாகத்தோ டுரைக்கவன் தானுமறிந் தெனைத்துகளாய்
மாகாற்றி லடிக்குமந்த வாயுபகவா னேபலவான்
மோகத்தோ டவற்களித்தால் முனிவரநன் றென்னலுமே.(137)

(இ.ள்) முனிவன் மேகத்தை அழைத்து, ''நீ இவளை விரும்பி ஏற்றுக்கொள்'' எனக் கேட்டுக் கொண்டான். அதற்கு மேகம் எலிப்பெண்ணை உணர்ந்து கொண்டு, ''என்னைச் சிறு துகள்களாகக் காற்றில் அடிக்கும் வாயு பகவானே பலவான். எனவே நீ இவளை அவனுக்குக் கொடுப்பதே நன்று'' என்றது.

483\. வாயுவைவயு மழைத்திவளை மணம்புணர்க நீயென்று
நேயமுடன் இருடிசொல நிறைந்திடுமா ருதமறிந்தே
தூயவனே யெனை மறிக்குந் துங்கவரை யேபலவான்
சேயிழையே யவற்கருளிச் செய்கவெனச் செப்பிடவே. (138)

(இ.ள்) முனிவன் வாயுவை அன்புடன் அழைத்து. ''நீ இந்தப் பெண்ணை மணமுடித்துக் கொள்'' என்று சொல்ல, வாயுவும், ''தூய முனிவரனே என்னை மறித்து நிறுத்தும் மலையே என்னைவிட வலியவன் அவனுக்கே உன் மகளை மணமுடித்துக் கொடு'' என்றது.

484\. மலையரையன் றனையழைத்திம் மங்கைமணம்
புணர்கவென
குலவரையு மறிந்துகொண்டே கூறுமுனி தனைநோக்கி
நிலவழியி லெனையறுக்க நினைக்குமந்த மூடிகமே
பலமுடைய ததற்களித்தல் பெருமையென வரைகூற. (139)

(இ.ள்) முனிவனும் மலையரசனை அழைத்து, ''இந்தப் பெண்ணை மணமுடித்துக் கொள்க '' எனக்

கேட்க, மலையும் உண்மையை அறிந்து கொண்டு, முனிவனைப் பார்த்து, ''பூமியைக் குடைந்து என்னை துளைக்க நினைக்கும் அந்த எலியே என்னைவிட வலிமையானது அதற்கு மணமுடித்துக் கொடுப்பதே பெருமை'' என்று கூறியது.

485. எலியரசன் தனையுமழைத் திவளைமணம் புணர்கவென
நலதிவளென் வளையில்வரில் நாடிமணம் புணர்வனென
முலைமகளைத் தவமுனிவன் முன்னிருந்த படிதானே
எலியுருவ மாக்கிவிட்டான் எலியரசன் கொடுபோனான்.(140)

(இ.ள்) அதுகேட்ட முனிவன் எலியரசனை அழைத்து, '' இவளை மணமுடித்துக்கொள்க'' எனக் கேட்டான். எலியும், ''நல்லது, இவள் என் வளைக்குள் வந்தால்'' நான் மணமுடித்துக் கொள்கிறேன்'' என்றது. எனவே முனிவன் அந்தப் பெண்ணை முன்னிருந்தபடி எலி உருவமாக்கி விட்டான். அந்தப் பெண்ணெலியை எலியரசன் தன்னுடன் அழைத்துப் போனது.

காகம் கோட்டானை வென்ற கதை - தொடர்ச்சி

486. ஆகையினால் யோனிதனை யாருமொழித் திடமாட்டார்
காகவடி வொழித்துனது கருத்தினில் நினைத்திடுமாறு
கூகைவடி வெடுக்கவுன்னால் கூடாது நாமுனது
சோகமெலாந் தவிர்த்திடுவோம் சுகமடைந்தே
யிருக்கவென்றான்.(141)

(இ.ள்) ''எனவே யாரும் தான் எடுத்த பிறப்பின் பணியை ஒழித்திட இயலாது. நீ நினைத்தபடி உன் காக வடிவினை ஒழித்துக் கூகை வடிவம் எடுக்க உன்னால் முடியாது. நாம் உன்னுடைய துன்பத்தை யெல்லாம் நீக்கிடுவோம். நீ இங்குச் சுகமாக இருக்கலாம்'' என்றது.

487. அவன்மனது வரநடந்தே யமைச்சர்களின் மேலாகிக்
கவடறவே குகைவாயில் தன்வசமாக் கிக்கொண்டோர்[1]
திவசமதில் அமைச்சரொடுஞ் சேனையொடுந் தானுறங்கக்
கவடுசெய்தே குகைவாசற் கடையினிற்றீக்
கொளுத்திவிட்டான். (142)

(இ.ள்) திரஞ்சீவியும், கூகையரசன் மனம் போல் நடந்து அவனுடைய அமைச்சர்களைவிடத் தான் மேலாகி, தன் வஞ்சத்தை அவர்கள் அறியாவண்ணம் குகை வாயிலைத் தன் வசமாக்கிக் கொண்டது. பின் ஒரு நாள் கூகையரசன் தன் அமைச்சர்கள் மற்றும் சேனையுடன் குகையினுள் உறங்கும்போது, வஞ்சகத்துடன் குகை வாயிலில் தீயைக் கொளுத்தி விட்டது.

488. புகையுடனே தீச்சூழப் பொருகூகைத் திரளெல்லாம்
குகையினுள்ளே முடிந்தனமுன் கொடிகூகை மேல்வைத்த
பகைமுடித்துத் திரஞ்சீவி பறந்துசிங்க மலையிருக்கும்
இகல்மேக வண்ணனொடு மினத்தோடு சேர்ந்தனனே. (143)

(இ.ள்) புகையுடன் தீ சூழ்ந்து கொள்ள உள்ளிருந்த கூகைக் கூட்டமெல்லாம் குகைக்கு உள்ளேயே மடிந்தன. முன்பு காகம் கூகையினத்தின் மேல் வைத்த பகையை முடித்த திரஞ்சீவி அங்கிருந்து பறந்து சென்று சிங்க மலையிலிருக்கும் காகவரசன் மேகவண்ணனொடும் பிற காகங்களோடும் சேர்ந்தது.

489. கண்டவுடன் மேகவண்ணன் கருத்திலடங் காமகிழ்ச்சி
கொண்டனன்மந் திரிகளுடன் கொடிக்குலமுந் தொழுதுநின்று
பண்டுபழி காரருடன் வைகியிந்நா ளென்மனதில்
கொண்டபழி தீர்த்தாயே கொடிக்கரசே எனச்சிறகால். (144)

பா. பேட: பாடல் 142. 1. கவடறவே கூகையரசன் றன்வசமாக்கிக்
கொண்டோர்

(இ.ள்) திரஞ்சீவியைக் கண்டவுடன் மேகவண்ணன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தது. மந்திரிகளும் காக்கைக் கூட்டமும் திரஞ்சீவியைத் தொழுது நின்றன. மேகவண்ணன், ''நம் பழைய பழிகாரருடன் சேர்ந்து வாழ்ந்து, என் மனதில் கொண்டிருந்த பழியை இன்று தீர்த்தாயே காக்கைக் குலத்தின் அரசே'' எனப் புகழ்ந்து தன் சிறகால்...

490. புல்லிமுகத் தோடுமுகம் பொருந்தவைத்து
மோந்துகொண்டு
எல்லையிலாக் களிப்பினொடு மிருந்தவனை யருகிருத்திச்
சொல்லிமுடி யாதபெருந் தோத்திரங்கள் பலவழுத்திப்
புல்லியராம் பகைஞரொடு பொருந்தியவா றரிதெனவே.(145)

(இ.ள்) ..அணைத்து முகத்தோடு முகம் பொருத்தி வைத்து உச்சி மோந்து எல்லையற்ற மகிழ்ச்சியினொடும் அந்தத் திரஞ்சீவியைத் தன்னருகில் அமர்த்திக்கொண்டது. சொல்லிலடங்காப் பல வாழ்த்துரைகளைச் சொல்லிப் பாராட்டி, '' நம் எதிரிகளாம் பகைவரைச் சென்றுசேர்ந்த வகை என்ன'' எனக் கேட்டது.

491. செப்பரிய தம்பியருஞ் சேனைகளும் புடைசூழ
ஒப்பிலரி யணையிலிருந் துலகாளுந் தருமருந்தான்
தப்பிவரு நாளறிந்து சன்யாசி வடிவெடுத்து
மெய்பொடுதன் னேவல்செயும் விராடனிடத் திருந்திலரோ.(146)

(இ.ள்) சொல்லற்கரிய ஆற்றலுடைய தம்பியரும், சேனைகளும் புடைசூழ ஒப்பற்ற அரியணையிலிருந்து உலகை ஆண்ட தருமனும், தான் தப்பி வரக்கூடிய நாளினை உணர்ந்து, சந்நியாசி வடிவெடுத்து விராட நாட்டு அரசனிடத்தில் சென்று ஏவலனாகத் தங்கியிருந்தானல்லவா?

492\. புசபலத்தால் உவமையிலாப் புயன்மைந்த னெனும்வீமன்
வகையரச னடுக்களையில் மடையனென விருந்திலனோ
விசையனுநா டகசாலை மின்னாரை யாட்டுவிக்கும்
திசைபெறுநட் டுவனாகிச் சிகண்டியென விருந்திலனோ. (147)

(இ.ள்) தோள் வலிமையில் தனக்கு இணையற்ற வாயு மைந்தன் பீமன் விராட மன்னனின் அடுக்களையில் சமையல்காரனாக இருந்தானல்லவா? வில் வீரன் அர்ச்சுனனும் நாடகசாலையில் நடனமாடும் பெண்களை ஆட்டுவிக்கும் நட்டுவனாகி பேடியுருக் கொண்டு இருந்தானல்லவா?

493\. நகுலனுமங் கவன்குதிரை நடைபழக்கு வானாகி
தலகைமையெலா மொடுங்கியவன் தனைசேவித் திருந்திலனோ
புகழொடுமுக் காலமறிப் புனிதனெனுஞ் சகாதேவன்
நிகழுமவன் பசுமேய்க்கும் இடையனென இருந்திலனோ. (148)

(இ.ள்) நகுலன் அங்கே குதிரைகளைப் பழக்குபவனாகி, தன் இயல்பெல்லாம் ஒடுங்கி அம்மன்னனைப்பணிந்து பணியாற்றியிருந்தானே. புகழொடு முக்காலமும் அறிந்து கூறும் ஆற்றலுடைய சகாதேவன் விராடனுடைய பசுக்களை மேய்க்கும் இடையனாக இருந்தானே.

494\. எரிதழலில் அவதரித்தே இரவிகுலத் தினில் வளர்ந்து
விரிநிலவின் குலம்புகுந்த மின்னனையாள் பாஞ்சாலி
வரிவளைக்கை யுத்தரிக்கும் மாலினியாய் இருந்திலனோ
கருமமுற்று மளவுமவர் கருத்தடங்கி யிருப்ப ரென்றே. (149)

(இ.ள்) யாக நெருப்பில் பிறந்து சூரிய குலத்தில் வளர்ந்து சந்திர குலமான பாண்டவர்களின் மனைவியாகப் புகுந்து எழிலுடைய பாஞ்சாலி அழகிய வளையல்களை அணிந்த உத்தரிக்கு அலங்காரம் செய்யும் பெண்ணாக

இருந்தாளன்றோ. தன் காரியம் முடியுமளவு காலம் வரை, தன் கருத்தினை அடக்கி வெளிப்படாத வகையில் மறைந்திருந்தனரே'' என்று,

495. மேகவண்ணன் சலிப்பாற்ற மீண்டுமவன் வாள்முனையில்
யோகமிருந் தவர்போலும் ஓங்கெரிபுக் கவர்போலும்
நாகவளை யுட்புகுந்து நண்ணினவர் போலுமுன்றன்
ஆகம்வருந் தினையோவென் றரற்றிடலுந் திரஞ்சீவி. (150)

(இ.ள்) திரஞ்சீவி, மேகவண்ணனின் வருத்தம் தீர்க்க, மீண்டும், ''வாள்முனையில் இருந்து யோகம் பயில்பவர் போலும், ஓங்கி எரியும் நெருப்பில் புகுந்தவர் போலும், நாகம் வாழும் புற்றினுள் புகுந்து வாழ்ந்திருப்பவர் போன்றும், உன்னுயை உடலை வருத்திக் கொண்டனயோ'' என மன்னன் மேகவண்ணன் அரற்றியது. அதுகேட்ட திரஞ்சீவி,

496. தேவநின தருளாலே தீவினையெ லாங்கடந்தேன்
நீவிரவி யிருந்ததலம் நீத்துவன வாசத்தின்
மேவியுந்தன் திருமேனி மெலிந்ததெலாம் நான்செய்த
பாவமன்றோ வெனக்கூறிப் பரிவடைந்தங் கிருந்தலுமே.(151)

(இ.ள்) அரசே, மன்னரருளாலே எல்லாத் தீவினைகளையும் கடந்தேன். ஆனால் நீவிர் சொந்தமாக இருந்து வாழ்ந்த இடத்தை நீங்கி வனவாசம் மேற்கொண்டு உன் அழகிய உடல் மெலிந்தது நான் செய்த பாவமல்லவா? எனக் கூறி அங்கேயே இருந்தது.

497. ஆண்டொருநாள் தானிருந்த அயோத்திவிட்டு வனவாசம்
வேண்டினது மவர்தேவி மிக்கசிறை புக்கதுவும்
தீண்டரிய ராவணனைச் செற்றதுவும் தேவிசிறை
மீண்டதுவும் இராகவனார் வினைப்பயனன்
றோவென்னும். (152)

(இ.ள்) முன்னொரு நாளில் தான் வாழ்ந்திருந்த அயோத்தியைவிட்டு இராமன் வனவாசம்மேற்கொண்டதும், அவன் மனைவி சீதை சிறை வைக்கப் பட்டதும், யாராலும் வெல்ல முடியாத இராவணனைக் கொன்றதும், தேவி சீதை சிறைப் பட்டதும், சிறையிலிருந்து விடுபட்டதும், ஆகிய அனைத்தும் இராமனுடைய வினைப் பயனேயாகும்.

498. துங்கநள னரசிழந்து தோகைதம யந்திதனைக்
கங்குலிலே துகிலுரிந்து கானில்விட்டுப் போனதுவும்
வெங்கணர வந்தீண்ட மேனிபழு தானதுவும் தங்கரிய
தீவினையால் தான்நினைந்த வாறென்றான். (153)

(இ.ள்) வெற்றியை உடைய நளன் தன் அரசினை இழந்து தன் மனைவியான தமயந்தியை இரவிலே தூங்கும்போது ஆடையில் பாதியைப் பறித்துக் கொண்டு காட்டில் தனித்து விட்டுப் போனதும், பின் கொடிய கண்களை உடைய பாம்பு தீண்ட, தன் மேனி கரிய நிறம் பெற்றதும், தன்னுடைய தீயவினைகளின் பயனாலேயே நிகழ்ந்தது என்றது.

499. பாண்டவர்சூ தாடினதும் பாரிழந்து நின்றதுவும்
மூண்டதழ லிற்பிறந்தாள் முலைகுலைச்ச லானதுவும்
நீண்டபெருங் கானத்தில் நிலைகுலைந்து திரிந்ததுவும்
ஈண்டியதீ வினையாலே இயன்றதல வோயென்றும். (154)

(இ.ள்) பாண்டவர்கள் சூதாடியதும் அதனால் நாடிழந்து நின்றதும், யாகத்தழலில் பிறந்த திரௌபதி சபையில் மானபங்கப் படுத்தப்பட்டதும், பெரிய கானகத்தில் நிலை தடுமாறித் திரிந்ததும், அவர்கள் செய்த தீவினையாலே நடந்தவையன்றோ,

500. பொன்னிழந்து நாடிழந்து பொருவில் குமார னையிழந்தும்
பண்ணருந்தே வியையிழந்தும் பறையனுக்கூ ழியஞ்செய்து
தன்னுடம்பு தான்விற்றும் சத்தியவரிச் சந்திரனார்
மன்னியதீ வினையாலே மாழ்கினனன் றோவென்றும். (156)

(இ.ள்) சத்திரிய குலத்தில் பிறந்த அரிச்சந்திரன், பொன் பொருள் இழந்தும், நாட்டினை இழந்தும், தன் ஒரே மகனை இழந்தும், மனைவியை இழந்து, மயானத்தில் பறைவனுக்கு ஊழியம் செய்து தன்னையே தான் விற்றும் வாடியது அவனது தீ வினையாலேயன்றோ ?

501. ஆகையினால் வினைப்பயனை யார்கடந்தார் நாமுமிந்த
கூகையினால் நம்முடைய குலமிழந்தும் தலமிழந்தும்
போகமிழந் தும்மலையிற் புக்கொளித்தோ மென்றுமிதை
நீகருதி நங்குலத்தை நிறுத்தினையென் றும் புகழ்ந்தான். (156)

(இ.ள்) எனவே வினைப்பயனைக் கடந்தவர் யார் ? நாமும் இந்த கூகைகளால், நம்முடைய குலத்தினரை இழந்து, தங்கியிருந்த இடத்தினை இழந்து, சுக வாழ்க்கை இழந்து, மலையில் வந்து புகுந்து ஒளிந்து வாழ்ந்தோம். நீ இதையெல்லாம் கருதிக் கூகைகளைக் கொன்று நம் குலத்தை மீண்டும் நிலை நிறுத்தினாயன்றோ என்றும் பலவாறு திரஞ்சீவியைப் புகழ்ந்தது மேகவண்ணன்.

502. சத்துருவை யொருவேளை தலைமேலுந் தோள்மேலும்
வைத்திருந்து சமயம்வந்தால் வதைத்திடவே வேணுமுன்போர்
துத்திவிரிக் கும்நாகம் தோள்மேலும் தலைமேலும்
வைத்திருந்து தவளைகளை வதைத்தகதை
போலவென்றான். (157)

(இ.ள்) முன்பு படமெடுத்தாடும் நாகம் ஒன்று தன் தோள் மீதும் தலை மீதும் தவளைகளைச் சுமந்திருந்து பின் அவற்றைக் கொன்று தின்றது போன்று, நம் எதிரிகளை ஒரு நேரத்தில் நம் தலை மீதும் தோள் மீதும் தூக்கி வைத்திருந்து கொண்டாடிப் பின் உரிய நேரம் வாய்க்கும் போது அவரைக் கொன்றிட வேண்டும் என்றது.

பாம்பு தவளையைச் சுமந்த கதை

503. வழுத்துகதை ஏதெனவோர் மந்தவிட னெனுநாகம்
கொழுத்ததவ ளைக்குலத்தைக் கொன்றுதின்ன வெனக்கருதி
முழுத்ததவ ளைக்கூட்டம் முயங்கியவோ டைக்குமேல்
எழுத்தைநினைந் திருப்பவர்போல் இருந்துதுய
ரப்படவே. (158)

(இ.ள்) கூறப்பட்ட அந்த கதை என்னவென்று பிறர் கேட்க, மந்தவிடன் என்றும் நாகம் ஒன்று ஓடையில் கொழுத்துத் திரியும் தவளைகளைக் கொன்று தின்றிட எண்ணம் கொண்டது. எனவே அது முழுத்தவளைக் கூட்டமும் சேர்ந்திருக்கக் கூடிய ஓடைக் கரையில் தன் தலையெழுத்தை நினைத்து வருந்துவது போல் அமர்ந்து துயரத்துடன் காணப்பட்டது.

504. சாலபத னென்கின்ற தவளையர சனுமங்கோர்
கோலவரித் தவளையெனுங் குதிரைவா கனமேறி
நாலுவகை சேனைகளும் நல்லமைச்ச ருஞ்சூழ
சீலமொடு மேளவகை சிலதவளை சேவிக்க. (159)

(இ.ள்) அப்பொழுது சாலபதனன் என்னும் பெயருடைய தவளையரசனும் அங்கே ஒரு கோலவரித் தவளை என்னும் குதிரை வாகனம்ஏறி, நால்வகைச் சேனகளும் நல்ல அமைச்சர்களும் தன்னைச் சூழ வர மேள வகைகள் உரிய முறைப்படி முழங்க, சில தவளைகள் கட்டியம் கூற,

505. பவனிவரும் வேளையிலே பாம்பரச னொருகரைமேல்
கவலையுட னிருப்பவவன் கண்டொருதூ தனையனுப்பி
இவனிருக்கும் வகையேதிங் கென்றறிந்து வருகவென
அவனருகிற் சென்றிவணீ யாரிருப்ப தேதெனவே. (160)

(இ.ள்) பவனி வரும் வேளையில் பாம்பரசன் ஓடைக் கரையில் கவலையுடன் இருக்கக் கண்டு ஒரு தூதரை அனுப்பி இப் பாம்பு இங்கே இவ்வாறு இருக்கும் காரணம் யாதென்று அறிந்துவரச் சொல்லி அனுப்ப, அது பாம்பின் அருகில் சென்று, இவ்விடத்தில் யார் இருப்பது, ஏன் என்று கேட்டது.

506. நாகராசன் நானென்பேர் நல்லமந்த விடனென்பார்
போகிபல சூழவொரு புற்றிலிருந் தரசாள்வேன்
யோகிதனைத் தீண்டிவிட்டேன் யோகிதவ ளையைச்சுமப்பாய்
ஆகியது தரவிரையும் அருந்துநீ யெனச் சபித்தான். (161)

(இ.ள்) ''நான் பாம்புகளின் அரசனான நாகராஜன். என் பெயர் மந்தவிடன் என்பதாகும். நான் பணியாள் பலர் சூழ ஒரு புற்றிலிருந்து அரசாண்டு இருந்தேன். ஒரு சமயம் ஒரு யோகியைத் தீண்டியதால், யோகி சினம் கொண்டு, 'தவளையைச் சுமந்திருந்து அந்த தவளை தரும் உணவினை உண்டிருப்பாய்' எனச் சபித்து விட்டான்.

507. சாபத்தி னாலெனது தலையில்விதி தனைநினைந்தேன்
ஆபத்து நீங்கஉங்கள் அரசனைநான் சுமக்கவந்த
சோபத்தா லிங்கிருந்தேன் தூதவரசற் குரைத்தென்
ஆபத்து நீக்கிலுமக் கடிமையெனத் திரிவேனே. (162)

(இ.ள்) சாபத்தால் எனது தலைவிதியை நினைத்து எனக்கு வந்த சாபமாகிய ஆபத்து நீங்க உங்கள் அரசனை நான் சுமக்க வந்த துயரத்தால் இங்கிருந்தேன். தூதனே, நீ உன் அரசனுக்குக் கூறி, என் ஆபத்து நீக்கினால் நான் உங்கள் அடிமை'' எனக் கூறியது.

508. எனவுரைத்தான் தூதனும்போய் இவ்வாறு சொலமகிழ்ந்து
தனதமைச்சர் தனையழைத்துச் சாலபதன் கேட்கவவன்
சினமிகுந்த பணியரசன் தினமுநமைச் சுமந்தால்நம்
இனம்மிகர்த்த சாதியில்லை என்றுலகம் புகழுமென்றார் (163)

(இ.ள்) பாம்பு அவ்வாறு கூறியதும் தூதனும் போய் அரசனிடம் அதன்படிச் சொல்ல, அரசன் மகிழ்ந்து, தன் அமைச்சர்களை அழைத்து ஆலோசனை கேட்டது. அதற்குஅமைச்சுத் தவளைகள், ''அதுவோ சினமிகுந்த பாம்பரசன். அது தினமும் நம்மைச் சுமந்தால் நம் இனத்தை மிஞ்சிய இனம் வேறு இல்லை என உலகம் புகழும்'' என்றன.

509. அப்பொழுது சாலபதன் அரவரசன் தனையழைத்தே
எப்பொழுதும் நமைச்சுமந்தால் இரையுனக்குத் தினமொன்று
தப்பறவே தருவமென்று சாலபதன் கூறலுமே
மெய்ப்புடனே மந்தவிடன் மிகக்குனிந்தன் நன்றெனவே.(164)

(இ.ள்) அப்பொழுது சாலபதனன் பாம்புகளின் அரசன் மந்தவிடனை அழைத்து, எப்பொழுது நீ என்னைச் சுமந்தாலும் உனக்குத் தினமும் ஒரு இரை நான் தவறாமல் தருவேன் என்று சொன்னது. உடனே மந்தவிடன் நல்லது என்று கூறி நன்றாகக் குனிந்தது.

510. ஏறினான் சாலபதன் ஏற்றிநின்றான் மந்தவிடன்
தேறினான் இவரையினித் தின்னலா மெனவெண்ணிச்
சாறினா னுனைப்பிரியேன் சாலபத னேயென்று
கூறினான் மனமகிழ்ந்து கொடுத்தானங் கொருதவளை. (165)

(இ.ள்) உடன் சாலபதனன் என்னும் தவளை மந்தவிடன் தலையில் ஏறியது. மந்தவிடன் சாலபதனனைச் சுமந்து நின்றது. இனி இந்தத் தவளைகளைத் தின்னலாம் என மனம் தேறி, சாலபதனனிடம் இனி உன்னைப்

பிரியேன் என்று கூறியது. உடன் சாலபதனன் மனமகிழ்ந்து ஒரு தவளையை இரையாகக் கொடுத்தது.

511. இவ்வாறு தினம்தினமும் இதஞ்சொல்லி இதஞ்சொல்லி
அவ்வாறு தவளையெல்லா மடங்கலுமே விழுங்கிவிட்டான்
ஒவ்வாது சாலபத னொருவனுமே தனித்துநின்று
எவ்வாறு மோசம் வந்த தெனக்கருதி நின்றானே. (166)

(இ.ள்) இவ்வாறு மந்தவிடன் சாலபதனனிடம் தினமும் இதமான சொற்களால் பேசி, அங்கிருந்த தவளைகளையெல்லாம் முழுவதுமாக விழுங்கிவிட்டது. சாலபதனன் மட்டும் தனித்து நின்று இந்த மோசமான நிலை எப்படி வந்தது எனச் சிந்தித்து நின்றது.

512. மந்தவிட னாருமவர் மனக்கவலை தனையறிந்தே
முந்தியதன் வளைவாயின் முகத்தில்மெள்ள விடுத்தலுமே
குந்தியவர் வளைபுகுந்தார் கொடியமந்த விடனாரும்
புந்திமகிழ்ந் தவர்தமையும் புசித்துட்டா ரெனக்கூறி. (167)

(இ.ள்) மந்தவிடனும் சாலபதனனின் மனக் கவலையை அறிந்து, தன் வளை வாயிலில் கொண்டு வந்து தவளையை மெல்ல விடுத்தலும், தவளை மெள்ள வளையுள் புகுந்தது. கொடிய மந்தவிடனும் மனமகிழ்ந்து சாலபதனன் என்னும் தவளையையும் விழுங்கிவிட்டது.

காகம் கோட்டானை வென்ற கதை - தொடர்ச்சி

513. ஆகையினா லரசர்களு மமைச்சர்களு மறிவுடையோ
ராகியிருந் தாலன்றி யவிவேக ராயிருந்தால்
கூகையினம் போலுமந்தக் குறுந்வளை இனம்போலும்
ஆகுமெனத் திரஞ்சீவி அறைந்தனன்வேந்
தனுமகிழ்ந்தான். (168)

(இ.ள்) எனவே அரசர்களும் அமைச்சர்களும் அறிவுடையவர்களாக இல்லாததுடன் விவேகமற்றவ ராகவும் இருந்தால், கூகை இனம் போலும், அந்தக் குறுந்தவளை இனம் போலும் அழிந்துபோகும் எனத் திரஞ்சீவி கூறியது. அரசனும் மிகவும் மனமகிழ்ந்தது.

514. புத்தியினா லும்மனதிற் பொறுமையினா லுங்கருமம்
சித்திகளா வதுபோலச் சேனைகளால் திரவியத்தால்
வைத்திடுமோ மங்களினால் மானத்தால் தன்மனதிற்
சத்தியினால் ஒருகருமந் தானுமுடி யாதென்றான். (169)

(இ.ள்) தன் புத்தி சாதுரியத்தாலும் மனப் பொறுமையாலும் காரியம் சித்தியாவதல்லாமல், சேனைகளால், தன்மான உணர்ச்சியால், தன் மன ஆற்றலால் ஒரு காரியம் முடியாது என்றது.

515. சொல்லியந்த மேகவண்ணன் சூழ்ச்சிபல மந்திரங்கள்
வல்லதிரஞ் சீவியொடும் மற்றுமுள்ள வமைச்சரொடும்
நல்லகொடிக் குலங்களொடும் நாடிமுன்பு தாமிருந்த
தொல்லைவட மரமடைந்து சுகமாக விருந்தானே. (170)

(இ.ள்) இவ்வாறு சொன்ன மேகவண்ணன், சூழ்ச்சிகளும் தந்திரங்களும் நிறைந்த ஆற்றலுடைய திரஞ்சீவியொடும். மற்றும் உள்ள அமைச்சர்களோடும் தன் காக்கைக் குலத்தோடும், ஒன்று சேர்ந்து தாம் முன்னிருந்த தொன்மையான ஆலமரத்தை அடைந்து சுகமாக இருந்தது.

மூன்றாவது தந்திரம் சந்திவிக்கிரகம் முற்றும்

நான்காவது தந்திரம்

லத்த நாசம் *

அல்லது

அர்த்த நாசம்

(தன்கையில் கிடைத்த பொருளை இழத்தல்)

516. இந்துசே கரராம் தில்லை
இறைவர்தம் அருளி னாலே
முந்திய மித்திர பேதம்
முழங்கிய சுகிரில் லாபம்
சந்திவிக் கிரக மூன்றுஞ்
சாற்றினம் அர்த்த நாசம்
செந்தமிழ்க் கவிதை யாலே
சிறிதுநாம் புகல லுற்றோம். (1)

(இ.ள்) சந்திரனைத் தலையில் தாங்கிய சந்திரசேகரராம் தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவனின் அருளினாலே முன் மித்திரபேதம், சுகிரில்லாபம், சந்திவிக்கிரகம் ஆகிய மூன்று தந்திரங்களையும் கூறினோம். இனி அர்த்தநாசம் என்னும் நான்காம் தந்திரத்தைச் செந்தமிழ்க் கவிதையாலே நாம் சிறிது கூறுவோம்.

517. ஆதிதந் திரங்க ளைந்தி
லாதியோர் மூன்றுஞ் சொல்ல
நீதிகொண் டவனி யாளும்
நிருபன்றன் குமாரர் கேட்டே

---

*அச்சுப் பிரதியில் லப்த ஹாநி அல்லது அர்த்த நாசம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மூல சமஸ்கிருத பாடத்தில் லப்த பிரநாசம் எனக் காணப்படுகிறது. எனவே சுவடியில் காணப்படும் லத்த நாசம் என்னும் தலைப்பே இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஓதியவி லத்த நாசம்
உரைத்திடும் பெரியோ யென்ன
வேதியர் சோம சன்மா
விருப்புட னுரைக்க லுற்றார். (2)

(இ.ள்) பழமையான தந்திரங்கள் ஐந்தனுள் முதலில் உள்ள மூன்றும் சோமசர்மா கூற, நீதியால் அரசை ஆளும் வேந்தனின் மைந்தர் நால்வரும்கேட்டு மகிழ்ந்து, சொல்லப்பட்ட இலத்த நாசம் என்னும் தந்திரத்தையும் சொல்ல வேண்டும் பெரியவரே என்றுகேட்க, வேதியராம் சோமசர்மா விருப்பத்துடன் அதையும் கூறலுற்றார்.

518. எவ்வள வாகி லுந்தா
னியற்றிய பொருள்கள் வந்து
கைவச மாகில் வேறோர்
கருத்தினால் விடுக்க லாகா
எவ்வம்வந் தடையு முன்னோ
ரிருங்கரா உபாயத் தாலே
வவ்விய குரங்கை விட்டு
மாழ்கிய கதைபோ லென்றான். (3)

(இ.ள்) தான் தேடிச் சேர்த்த பொருள் எவ்வளவு ஆனாலும் அப்பொருள் நம் கைவசமானால் அதனை வேறொரு கருத்தினால் இழந்துவிடக் கூடாது. அவ்வாறு விடுவதென்பது, முன் ஒரு பெரிய முதலை ஒரு தந்திரத்தால் கைப்பற்றிய குரங்கினை இழந்து விட்டு மயங்கியது போல துன்பம் வந்தடையும் என்றான் சோமசர்மா.

முதலை குரங்கை விட்டு நாணமடைந்த கதை

519. அக்கதை யேதோ வென்ன
ஆழிசூழ் கருங்க லாற்றின்
பக்கமோர் மரத்தின் மீது
பழம்பறித் தருந்தி வாழும்

மர்க்கட வேந்தன் என்னும்
வரும்பெலி வாத னன்னான்
கைக்குளாம் பழங்கள் தப்பிக்
களகளென் றாற்றில் வீழ்த்த. (4)

(இ.ள்) அந்தக் கதை என்னவென்று வேந்தன் மக்கள் கேட்டனர். சோமசர்மா தொடர்ந்தான். கடல் சூழ்ந்த உலகில் கருங்கலாறு என்னும் ஆற்றின் பக்கத்தில் ஒரு மரத்தின் மீது இருந்து பழம் பறித்து உண்டு வாழும் குரங்குகளின் அரசனாகிய வரும்பெலிவாதன் என்னும் குரங்கு பறித்து கையில் வைத்திருந்த பழங்கள் கை தவறி ஆற்றில் களகளவென விழுந்தன.

520. மற்றுமோர் கொம்பிற் பாய்ந்து
வளைத்தசைத் துலுக்கக் கொம்பில்
உற்றிடுங் கனிக ளெல்லாம்
உதிர்ந்தன களக ளென்ன
நித்தமும் விளையாட் டாக
நிறைகனிக் கொம்பு தன்னை
பற்றியங் குதிர்த்து திர்த்துப்
பரிவுட னிருந்த தன்றே. (5)

(இ.ள்) குரங்கு மற்றுமொரு கிளையில் தாவி அதை வளைத்து அசைத்து உலுக்கியது. அதனால் கிளையில் உள்ள பழங்கலெல்லாம் களகளவென்று நதியில் உதிர்ந்தன. இவ்வாறு தினமும் விளையாட்டாக கனிகள் நிறைந்த கிளையைப் பற்றிக் கனிகளை உதிர்த்து உதிர்த்து விளையாடி இருந்தது.

521. இப்படி யிருக்கும் நாளில்
ஆற்றினுக் கரச னாகச்
செப்பரு முதலை வேந்தன்
சிஞ்சுமா ரனுமங் கெய்தி

துப்புறு கனியைத் துய்த்துச்
சுவையதன் விருப்பி னாலே
அப்புறம் போக மாட்டா
தவ்விடத் திருந்து கொண்டே. (6)

(இ.ள்) இவ்வாறு இருக்கும் நாளில் ஆற்றினுக்கு அரசனான சிஞ்சுமாரன் என்னும் முதலை அரசன் அங்கு வந்துசேர்ந்து இனிய கனிகளைச் சுவைத்து உண்டு, அதன் மிகுந்த சுவையினால் ஏற்பட்ட விருப்பத்தின் காரணமாக, அவ்விடத்தை விட்டுப் போக மனமின்றி அந்த இடத்திலேயே இருந்துகொண்டது.

522. வானர வரசன் றன்னை
வன்கரா வரசன் நோக்கி
நானுனைப் பிரிய மாட்டேன்
நண்பனே யென்ன வந்த
வானர வேந்தன் தானும்
மனமகிழ்ந் தினிய கூறித்
தேனுறு கனிய ளிப்பத்
தின்றுகொண் டிருந்த தன்றே. (7)

(இ.ள்) வானரவரசன்தன்னை முதலையரசன் பார்த்து, 'நான் உன்னைப் பிரியமாட்டேன் நண்பனே' என்று கூறியது. வானர வேந்தனும் அது கேட்டு மனமகிழ்ந்து இனிய சொற்களைப் பேசி, தேன் போன்று இனிய கனிகளைக் கொடுக்க, முதலை அதைத் தின்று கொண்டு அங்கேயே இருந்தது.

523. இப்படி யனேக நாளங்
கிருந்தனன் சிஞ்சு மாரன்
கைப்புறு தேவி[1] யந்தக்
கணவன்மேல் மோகத் தாலே

பா. பே.: பாடல் 523 1. கற்புறு தேவி

வெப்புநோய் கொண்டு தூது
விடுத்தனள் தாதி வந்து
செப்பினன் தேவி நோவு
தீரநீர் வருக வென்றான். (8)

(இ.ள்) இப்படியாகச் சிஞ்சுமாரன் பல நாள்கள் அங்கேயே இருந்தது. இதனால் மனம் கசப்புற்ற அந்த முதலையின் மனைவி, தன் கணவன் மேல் வைத்த மோகத்தால் வெப்புநோய் கொண்டு, தன் கணவன்பால் தூது விடுத்தது. வேலைக்கார முதலை சிஞ்சுமாரனிடம் வந்து தேவியின் வெப்பு நோய் தீர்வதற்கு நீங்கள் வரவேண்டும் என்றது.

524. ஊகவேந் தனைநான் கூடி
உறவுகொண் டிருந்தோ மின்னாள்
மோகமாய் நமது தேவி
முயங்கிமால் கொண்டா ளென்றாய்
போகவுங் காலெ ழாது
பூவைதன் நோவுங் கேட்டே
சோகமும் மிகுதி யானேன்
தூதிநான் செய்வ தென்ன. (9)

(இ.ள்) அதற்குச் சிஞ்சுமாரன் கூறியது, ''குரங்கு வேந்தனும் நானும் கூடி உறவு கொண்டிருந்தோம். இன்று மோகமுற்ற நம் தேவி என்மேல் கொண்ட விருப்பத்தால் மயக்கம் கொண்டாள் என்றாய். அதைக்கேட்ட எனக்கு அவளிடத்திற்குப் போகவும் கால் எழவில்லை. மனைவியின் நோய்கேட்டுச் சோகமும் மிகுதியானேன். தூதியே நான் என்ன செய்வது'' என்றது.

525. என்றனன் சிஞ்சு மாரன்
இதையவன் தானுங் கேட்டே
இன்றிவன் குரங்கை விட்டங்
கேகிலன் குரங்கை மெள்ளக்

கொன்றுநாங் கொணர்வோ மென்று
குறித்துநின் தேவி வீழ்ந்த
அன்றுதொட் டின்று காறும்
அவுஷதங் கொடுத்தோ மந்நோய். (10)

(இ-ள்) சிஞ்சுமாரன் கூறியதைக் கேட்ட தூதி, இன்று இவன் குரங்கை விட்டு அங்கு மனைவியிடம் வரவில்லை. எனவே நாம் குரங்கைக் கொன்றுவிட்டு முதலையரசனை அழைத்துச் செல்வோம் என்று நினைத்து, ''உன் மனைவி நோய்வாய்ப்பட்டு விழுந்த நாள் முதல் இன்றுவரை பல மருந்துகளும் கொடுத்தும் அந்தநோய்..

526. தீரவு மில்லை யென்ன
செய்குவம் வான ரத்தின்
ஈரல்வந் தாலே யன்றி
இவளுயிர் பிழையா தென்றார்
பாரியை யிழந்த பேர்க்குப்
பகர்குடிப் பேரு மில்லை
காரியம் கண்டு சொன்னோம்
கடுகிநீர் வருக வென்றாள். (11)

(இ-ள்) ...தீரவுமில்லை. என்ன செய்வோம். மருத்துவரும் குரங்கின் ஈரல் வந்தாலன்றி இவள் உயிர் பிழைக்கமாட்டாள் என்றார். மனைவியை இழந்தவர்களுக்குச் சொல்லப்படும் குலப் பெருமையும் இல்லை. நிலையைக் கண்டு சொன்னோம். விரைந்து வருக'' என்றது தூதாக வந்த முதலை.

527. தூதிசொற் கேட்டு நெஞ்சந்
துளங்கியே குரங்கின் ஈரல்
ஏதினி யிதுவே யல்லால்
இவனையே வதைத்தோ மாகில்

பாதகம் தேவி செத்தால்
பழிவரும் குடியும் கேடாம்
ஆதலால் தேவி தானே
அதிகமென் றிதயத் தெண்ணி. (12)

(இ.ள்) தூதி சொன்னதைக் கேட்ட நெஞ்சம் கலங்கிய சிஞ்சுமாரன், குரங்கின் ஈரலுக்கு என்ன செய்வது. அதுவன்றி இக்குரங்கரசனைக் கொன்றோ மானால் பெரும்பாவம். ஆனால் மனைவி இறந்தால் பெரும் பழி வந்து சேரும். குடியும் அழியும். எனவே மனைவியே இரண்டிலும் முக்கியம் என்று எண்ணி...

528. பயப்பய நடந்திம் மாற்றம்
பகரவும் கூசி நிற்க
வயப்படு தோழன் கண்டு
வருகநின் கருத்தே தென்ன
வியப்படு நினது நட்பால்
மேவியே அனேக காலம்
நயப்புற விருந்தேன் சற்றே
நாடினேன் தேவி தன்னை. (13)

(இ.ள்) சிஞ்சுமாரன் மெல்லமெல்ல நடந்து வந்து தன் மனமாற்றத்தைக் கூற கூச்சம் கொண்டு நிற்க, மனம் வசப்பட்ட தோழன் குரங்கு வேந்தன் கண்டு, ''வருக நண்பனே உன் கருத்து என்ன'' என்று கேட்க, ''வியப்பிற்குரிய நட்பால் இங்கேயே பலகாலம் விருப்பத்துடன் இருந்தேன். இன்று சிறிது என் மனைவியின் நலனையும் நாடினேன்.

529. என்னலும் போய்வா வென்று
இசைத்தனன் யூக வேந்தன்
மன்னநின் தன்னை விட்டு
வாழ்வதங் கொருநாள் உண்டோ

என்னுடன் நீயும் வந்தால்
ஏகியென் வீடுங் காட்டி
உன்னுடன் வருவே னென்ன
உரைத்தனன் முதலை வேந்தன். (14)

(இ.ள்) .. என்று சிஞ்சுமாரன் கூறவும், ''சரி நீ போய் வா'' என்றது குரங்கரசன், முதலையும் ''மன்னனே உன்னை விட்டு நான் அங்கு ஒரு நாளும் வாழ்வேனோ, என்னுடன் நீயும் வந்தால் உன்னை அழைத்துச் சென்று என் வீட்டையும் காட்டி உன்னுடனேயே திரும்பி வருவேன்'' என்று கூறியது.

530. நீரினுள் மூழ்கிச் செல்லும்
நின்னைநான் கரையில் வந்து
சேருமா றெவ்வா றென்று
செப்பும்வா னரத்தைச் சிஞ்சு
மாரனென் முதுகி லேறி
வருகவென் றுரைக்க நல்ல
கரியஞ் சொன்னா யென்று
கடுகியே முதுகி லேற. (15)

(இ.ள்) ''நீரில் செல்லும் உன்னுடன் வந்து நான் மீண்டும் கரை வந்து சேருவது எவ்வாறு'' என்று குரங்கு கேட்க, சிஞ்சுமாரன், '' என் முதுகில் ஏறி வருக'' என்று கூறியது. குரங்கும் நல்ல காரியம் சொன்னாய் என்று கூறி விரைந்து சென்று முதலையின் முதுகில் ஏறிக்கொண்டது.

531. கொண்டுபோய்த் தனது வீடு
குறுகிடக் கல்லி னாலே
மண்டுபொன் காண்பர் வாக்கால்
மனிதரைக் காண்பர் தூர்த்த

மிண்டரால் சாது வான
மேன்மையர் தம்மைக் காண்பர்
பெண்டுகள் மனத்தைக் காணப்
பிறிதிலை யெனநி னைத்தே. (16)

(இ.ள்) குரங்கைக் கொண்டுபோன முதலை தன் வீடு நெருங்கியதும், ''உரைகல்லைக் கொண்டு தங்கத்தின் தரத்தினைக் காண்பர், சொல்லும் சொல்லைக் கொண்டு மனிதனின் தரத்தினை அறிந்து கொள்வர். தீய இழிவானவர்களால் உயர்ந்த சாதுவானவர்களை அறிந்து கொள்வர். ஆனால் பெண்களின் மனத்தை அறிந்து கொள்ள வேறொரு உபாயமும் இல்லை ' என நினைத்து,

532. இவனைநாம் கொல்ல வென்று
எண்ணினோம் தேவி செய்த
கவடமோ தூதிதானே கவடுசெய்
தனளோ வென்று
மவுனமாய் நினைக்க வந்த
வானரம் நண்பா நெஞ்சில்
கவலையே தென்ன வொன்றுங்
கவலையிங் கில்லை யென்ன. (17)

(இ.ள்) 'இந்த குரங்கு நண்பனைக் கொல்வோம் என்று எண்ணினோம். இது என் மனைவி செய்த கபடமோ, அல்லது தூதிதான் வஞ்சம் செய்தாளோ' என்று சிந்தித்து மௌனமாய் இருக்க, அதைப் பார்த்த குரங்கு, ''நண்பனே உன் மனத்தில் உள்ள கவலைதான் என்ன?'' என்று கேட்டது. முதலையும் இங்கொன்றும் கவலை இல்லை என்றது.

533. வீட்டினில் மனையா ளுற்ற
வேதனை யாதே னுந்தான்
கேட்டது முண்டோ வென்று
கேட்கநா னேது சொல்வேன்

வாட்டிய நோவு கொண்டாள்
வானர வீர லாலே
கூட்டின மருந்து கொண்டால்
குற்றுயிர் பிழைப்பா ளென்றாள். (18)

(இ.ள்) ''வீட்டில் மனையாள் உற்ற வேதனைதான் என்ன என்று ஏதேனும் கேட்டதுண்டோ'' என்று குரங்கு கேட்டது. முதலையும், ''நான் என்ன சொல்வேன். மனைவியை வாட்டிய நோவிற்குக் குரங்கு ஈரலாலே கூட்டிய மருந்து உண்டால் அவள் உயிர் பிழைப்பாள் என்று தூதி சொன்னாள்.

534. வானர வீர லெங்கே
வருநமக் கென்று மந்த
ஞானமொன் றல்லால் வேறு
ஞானமொன் றில்லை யென்ன
வானர மறிந்து கொண்டு
வானர வீரல் நூறு
தானமை யாதோ வென்று
சாற்றிட முதலை வேந்தன். (19)

(இ.ள்) வானர ஈரல் நமக்கு எவ்வாறு கிடைக்கும் என்ற கவலையன்றி வேறு கவலை எனக்கில்லை'' என்று முதலை கூற, முதலையின் வஞ்சகத்தை அறிந்து கொண்ட குரங்கு வானர ஈரல் நூறு நமக்குக் கிட்டாதோ என்று குரங்கு கூற, உடனே முதலை வேந்தன் சிஞ்சுமாரன் ..

535. ஒன்றுதான் போது மென்று
உரைத்திட வந்தோ வந்தோ
துன்றுபா லத்தின் மீதே
தூக்கிநூ றிருக்கக் கண்டும்

இன்றுநீ எனக்குச் சொல்லா
தித்தனை தூரம் வந்தாய்
சென்றுநாம் எடுத்துக் கொண்டு
திரும்புவோம் திரும்பென் றோத. (20)

(இ.ள்) ஒரே ஒரு ஈரல் போதும் என்று கூறிட, குரங்கு, ''அந்தோ ! அந்தோ ! அங்கு கரையின் மீது நூறு ஈரல் இருப்பதைக் கண்டும், எனக்கு உண்மை ஏதும் சொல்லாமல் இவ்வளவு தூரம் வந்துவிட்டாயே, உடனே நாம் சென்று அதை எடுத்துக்கொண்டு திரும்புவோம். கரைக்குத் திரும்பு என்று'' கூறியது.

536. அல்லது வெறுங்கை யோடு
நாமனைக் கேக லாமோ
நல்லது சொன்னாய் ஈரல்
நமக்குவேண் டியதுங் கொண்டு
சொல்லருங் கனியுங் கொண்டு
தோழியைக் காண நாமும்
செல்லுவோம் வருக வென்னத்
திரும்பினார் முதலை யாரும். (21)

(இ.ள்) மேலும் ''வெறுங்கையோடு நாம் வீட்டிற்குச் செல்லலாமோ, நல்லவேளை நீ இப்பொழுது சொன்னாய். நாம் சென்றுவேண்டிய அளவு ஈரல் எடுத்துக்கொண்டு, சொல்லற்கரிய இனிய கனிகளையும் எடுத்துக்கொண்டு, தோழியைக் காண நாம் செல்வோம் வருக'' என்று குரங்கு சொல்ல, முதலை கரைக்குத் திரும்பியது.

537. விரைந்துபோய்க குரங்கி னீரல்
வேண்டுவ தெடுத்து வந்தால்
மருந்துமாம் மதனி யார்க்கும்
மற்றுள இனத்துக் கெல்லாம்

விருந்துமாம் செல்க வென்ன
மெய்யெனத் திரும்பிச் சென்று
பரிந்துதான் இதங்கள் பேசிப்
பாலத்தி னருகில் செல்ல. (22)

(இ.ள்) " நாம் விரைந்து சென்று வேண்டிய மட்டும் குரங்கின் ஈரல் எடுத்து வந்தால் மதனியாருக்கு மருந்தும் ஆகும். மேலும் மற்றுமுள்ள முதலை இனத்துக்கும் விருந்தாகவும் ஆகும். விரைந்து செல்க" என குரங்கு சொல்ல, உண்மையே என்று கருதி முதலை திரும்பிச் சென்று இனிய பல மொழிகள் பேசி, கரையின் அருகில் சென்றது.

538. மரத்தினை யடுக்கங் கொண்டு
வந்துதான் விடுத்த லோடும்
சரத்தினும் விரைவில் பாய்ந்து
மரத்தின்மேல் ஏறிக் கொண்டாங்
கிருத்தலும் முதலை யாரங்
கிருந்துவா னரத்தின் ஈரல்
குரக்கினுக் கரச னேநீ
கொண்டுவா வென்று கூற. (23)

(இ.ள்) கரையில் மரத்தின் அருகில் கொண்டு வந்துவிட அம்பைவிட வேகமாகப் பாய்ந்து குரங்கு மரத்தின் மேல் ஏறிக்கொண்டு அங்கேயே இருந்துகொண்டது. முதலையும் ஆற்றினுள் இருந்து "வானரத்தின் அரசே நீ குரங்கின் ஈரல் விரைந்து கொண்டு வா" என்று கூறியது.

539. இன்னமேன் ஆசை வைத்திங்
கிருந்தனை முதலை யேநீ
மன்னிய பசியால் நட்பின்
நம்பிக்கை வைத்தாற் பாம்பால்

முன்னுமோர் மண்டூ கந்தான்
ஒழித்திடு முறைமை போலாம்
என்னலும் அஃதென் னென்ன
இயம்புவான் குரங்கு வேந்தன். (24)

(இ.ள்) அதைக் கேட்டு, ''முதலை வேந்தே நீ இன்னும் ஏன் ஆசை வைத்து இங்கு இருக்கிறாய். மிகுந்த பசியின் காரணமாக, நட்பில் நம்பிக்கை வைத்ததால் முன்னர் பாம்பால் ஒரு தவளை அழிந்தது போலாகும்'' என்று கூறியது. முதலையும், அஃது என்ன கதை என்று கேட்க, குரங்கரசனும் கூறத் தொடங்கியது.

தவளை பாம்பை வஞ்சித்த கதை
வேறு

540. தன்னை மற்றத் தவளைகள் வாட்டலால்
இன்ன லுற்றோர் தவளை எழுந்தொரு
பன்ன கத்தைச் சினேகித்துப் பையுள்செய்
என்னி னத்தை விழுங்கென் றிசைத்ததே.* (25)

(இ.ள்) தவளை இனத்துள் ஒரு தவளையை மற்ற தவளைகள் துன்புறுத்தியதால் வாட்டமுற்ற அந்தத் தவளை, ஒரு பாம்புடன் நட்புக்கொண்டு, எனக்குத் துன்பம் செய்த என் இனத்தை நீ விழுங்கு என்று கூறியது.

541. நாகங் கேட்டுப் பன்னாளு மகிழ்ந்திரை
யாக வுண்ட தன்பின் எனக்கிரை
ஈக வென்னத் தவளை யிலையென்ற
தாக நாகம் அழன்றுரை செய்யுமால். (26)

(இ.ள்) அதுகேட்ட நாகம் பல நாளும் மகிழ்ச்சியுடன் தவளைகளை இரையாகக் கொண்டு விழுங்கியபின்,

*பாடல் எண் 540 முதல் 543 வரை உள்ள பாடல்கள் சுவடியில் காணப்படவில்லை. அச்சுப்பிரதியிலேயே உள்ளன.

இறுதியில் தவளையிடம் எனக்கு இரை தருக என்று கேட்க, தவளையும் இன்னும் இரை இல்லை என்று இயம்பியது. அது கேட்ட நாகம் சினம்கொண்டு சொன்னது...

542. வந்து நீசொன்ன வார்த்தையி னெய்தினேன்
எந்த நாளும் இரையளி யாயெனில்
புந்தி யில்லோய் நினையும் புசிப்பலென்
றுந்தி யன்னதின் மக்களை யுண்டதே. (27)

(இ.ள்) ''தவளையே நீ வந்து சொன்னதால் நான் இங்கு வந்தேன். நீ எந்த நாளும் எனக்கு இரை அளிக்க மாட்டாயெனில், அறிவற்றவனே நான் உன்னையும் புசிப்பேன்'' என்று விரைந்து அத்தவளையின் மக்களையும் உண்டது.

543. தவளை யன்னது கண்டுதன் தாரமோ
டிவனை வென்றற் கருந்துய ரெய்தியே
துவளு நெஞ்சொடு துண்ணென நீங்கியோர்
உவள கத்தை யடைந்தின்ப முற்றதே. (28)

(இ.ள்) அதைக் கண்ட தவளை, இந்த நாகத்தை வெல்வதற்குரிய வழியாதென்று அருந்துயருற்று துவண்ட நெஞ்சத்ததாய் தன் தாரமொடு துண்ணெனத் தாவி நீங்கி ஓர் பாதுகாப்பான இடத்தை அடைந்து இன்பமாய் வாழ்ந்தது.

கழுதை இறந்த கதை
வேறு

544. அல்லவோ உமக்கிங் கின்ன
மாசையேன் போம்போ மந்த
புல்லிய கழுதை முந்திப்
போய்திரும் பியதும் ஓரி

சொல்லிய புத்தி கேட்டுத்
துஞ்சிய கழுதை யும்போல்
அல்லவென் றுரைக்க ஆற்றிற்
கரசனக் கதையே தென்ன.* (29)

(இ.ள்) ''உமக்கு இங்கு இன்னமும் ஆசை ஏன்? போ போ, முன்பு கழுதை ஒன்று ஓரியின் சொற்கேட்டுச் சென்று திரும்பியது. பின்னர் ஓரி சொன்ன புத்திமதி கேட்டுத் திரும்பிச் சென்று மாண்டது. அந்தக் கழுதை போல் நான் அல்லன் என்று குரங்கு கூற, ஆற்றிற்கு அரசனான முதலை அந்தக் கதை என்னவென்று கேட்டது,

545. துன்னிய காடொன் றங்கே
துரைத்தனம் பண்ணும் சிங்க
மன்னவன் வாயி லுக்கு
மந்திரி ஓரி யொன்றங்
கன்னவன் வயிற்று நோவாய்
அமைச்சனே கழுதை ஈரல்
உண்ணவே கொடுவா வென்ன
ஓரியோ ரூரை நாடி. (30)

(இ.ள்) அடர்ந்ததொரு காட்டில் அரசாளும் சிங்கம் ஒன்றிருந்தது. அச்சிங்க மன்னின் அமைச்சனாக நரி ஒன்று இருந்தது. அச்சிங்க மன்னன் ஒரு சமயம் வயிற்று நோயால் துன்பப்பட்டு 'அமைச்சனே நான் உண்ணுவதற்குக் கழுதை ஈரல் கொண்டவா' என்று சொன்னது. நரியும் ஓர் ஊரை நாடிச் சென்றது.

---

*பாடல் எண் 544 க்குப் பதிலாக அச்சுப் பிரதியில் கீழ்க்காணும் பாடல் உள்ளது.

முன்ன மோர்நரி மோசம் புரிதலால்
மின்னு புத்தியில் லாவொரு வேசரி
துன்னு மாவி தொலைந்தது கேளெனப்
பின்னு மோர்கதை பேசுங் குரங்கரே.

546. சென்றொரு வண்ணான் தப்பும்
செழும்புனல் சுனையின் பக்கல்
நின்றது பொதியைத் தள்ளி
நெடுங்கயிற் றாலே காலை
ஒன்றிடத் தளைந்து வண்ணான்
ஓட்டினான் கழுதை தன்னை
வென்றிகொள் ஓரி சேர்ந்துன்
மேனியே னிளைத்தா யென்று. (31)

(இ.ள்) சென்ற அந்த நரி ஒரு வண்ணான் துணிகளைத் துவைக்கும் நீர்ச்சுனையின் பக்கம் வந்து நின்றது. அப்பொழுது அந்த வண்ணான் கழுதை மீதிருந்த பொதியைக் கீழே தள்ளி, நீண்டதொரு கயிற்றால் கழுதையின் கால்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி ஓட்டி விட்டான். வெற்றியையுடைய நரியும் கழுதையை அணுகி. உன்மேனி ஏன் இளைத்தது என்று..

547. கூறவே கழுதை வண்ணான்
கொண்டநாள் முதலெந் நேரஞ்
சீறியே யடித்த லாலும்
தீனிபோ டாமை யாலும்
ஏறியே பொதியு மென்மேல்
ஏற்றியே தள்ளிப் பின்னை
மாறுகால் பிணைத்த லாலும்
வருந்திநா னிளைத்தே னென்றான். (32)

(இ.ள்) கூறவே கழுதை நரியைப் பார்த்து, வண்ணான் தன்னை ஏற்றுக்கொண்ட நாள் முதலாய் எந்த நேரமும் சினம் கொண்டு அடிப்பதாலும், சரியாகத் தீனி போடாததாலும், மேலும் மேலும் முதுகில் பொதியை ஏற்றி இறக்கிப் பின் மாறுகால்களைக் கயிற்றால் கட்டுவதாலும் வருந்தி மெலிந்ததாகக் கூறியது.

548. அந்தவோ ரியுந்தான் கேட்டே
ஐயநீ வந்தா யாகில்
சிந்தையுண் மகிழ்ந்தே எங்கள்
சிங்கமன் னவன்றன் வாசல்
மந்திரி யாக உன்னை
வைத்தர சாள்வன் நீயும்
சுந்தர வமைச்ச னாகிச்
சுகத்துட னிருப்பா யென்ன. (33)

(இ.ள்) அதைக் கேட்ட நரி, 'நீ என்னுடன் வந்தால் எங்கள் சிங்க மன்னன் மனம் மகிழ்ந்து, தன் சபையின் அமைச்சனாக உன்னை வைத்து அரசாள்வான். நீயும் நல்ல அமைச்சனாகிச் சுகத்துடன் இருப்பாய்'' என்று சொன்னது.

549. சிங்கமோ விலங்கை யெல்லாம்
தின்னுமே என்ன ஓகோ
எங்களை யெல்லாம் வைத்து
இரட்சைசெய் திலனோ மன்னன்
வெங்களிற் றானை யல்லால்
வேறொரு விலங்கைத் தீண்டான்
அங்கவன் றனாணை தப்பான்
அதற்குநான் பிணையே என்ன. (34)

(இ.ள்) ''சிங்கமோ விலங்குகளை யெல்லாம் கொன்று தின்னுமே'' என்று கழுதை சொல்ல, ''ஓகோ, சிங்க மன்னன் எங்களையெல்லாம் வைத்துக் காப்பாற்ற வில்லையா. மன்னன் யானையைத் தவிர வேறொரு விலங்கினைத் தொடாது. அரச சிங்கம் தான் கொடுத்த ஆணையை மீறாது. அதற்கு நானே பிணை'' என்றது.

550. கழுதையும் நல்ல தென்னக்
காலினில் தனைத்தி ருந்த
பழுதையை ஓரி மெல்லப்
பல்லினால் கடித்து விட்டே

வழிசொலி யழைத்துப் போய்த்தன்
மன்னவன் முன்வி டுப்பப்
பழிபடு மன்னன் தானும்
பதறியே பிடிக்க வந்தான். (35)

(இ.ள்) அதைக்கேட்ட கழுதையும் நல்லது வருகிறேன். என்று சொல்ல, கழுதையின் காலில் கட்டியிருந்த கயிற்றை மெல்லப் பல்லால் கடித்து அறுத்து விட்டு கழுதைக்கு வழி சொல்ல அழைத்துப் போய்த் தன் மன்னனான சிங்கத்தின் முன் கொண்டு விட்டது. உடன் பழிச்செயல் புரியும் சிங்க மன்னன் அவசரமாகப் பாய்ந்து பிடிக்க வந்தது.

551. கண்டது கழுதை தானும்
கதறியே திரும்பி ஒட்டங்
கொண்டது சிங்கம் நோவு
கொண்டதால் ஓட மாட்டா
தண்டையில் நின்ற ஓரி
அய்யநீ பதறி விட்டாய்
கொண்டுநான் வந்துக் கையில்
கொடுத்தபின் வதைக்கொ ணாதோ. (36)

(இ.ள்) அதைக் கண்ட கழுதையும் அஞ்சி அலறித் திரும்பி ஓடியது. சிங்கம் நோயுற்றிருந்ததால் அது தொடர்ந்து ஓட முடியவில்லை. பக்கத்தில் நின்ற நரியோ, ''ஐயா நீர் அவசரப்பட்டு விட்டீர், நான் கழுதையைக் கொண்டு வந்து, கொடுத்த பின்பு அதைக் கொல்லலாமே'' என்றது.

552. பின்னையும் ஓரி சென்று
பேதையா யிருந்தா யந்தோ
மன்னவன் உன்னைக் கண்ட
மகிழ்ச்சியால் தழுவி மோந்து

தன்னரு கிருத்திக் கொண்டு
தனக்குனை அமைச்ச னாக
உன்னியே வந்தால் நீயே
ஓடியிங் குற்றா யென்னும். (37)

(இ.ள்) பின்னரும் நரி கழுதையிடம் சென்று ''பேதையாய் இருக்கிறாயே. மன்னன் உன்னைக் கண்ட மகிழ்ச்சியில் உன்னைத் தழுவி உச்சி மோந்து தன்னருகில் அமர்த்திக்கொண்டு உன்னைத் தனக்கு அமைச்சனாக்கிக் கொள்ளும் எண்ணத்துடனேயே வந்தது. நீயோ அச்சத்துடன் இங்கு ஓடி வந்துவிட்டாய்'' என்றது.

553. கணக்கிலாப் பாவம் செய்து
கழுதையாய்ப் பிறந்து வண்ணான்
பிணக்கினா லடியும் பட்டுப்
பெருஞ்சுமை சுமந்தாய் நல்ல
இணக்கநான் செய்தே னந்த
இணக்கநீ யறியாய் மூட
குணத்தினால் பயந்தா யென்றுங்
கூறிடக் கழுதை கேட்டே. (38)

(இ.ள்) நீயோ கணக்கற்ற பாவங்கள் செய்து கழுதையாய்ப் பிறந்து வண்ணானின் இணக்கமற்ற மனத்தால் அடியும் பட்டுப் பெருஞ்சுமையும் சுமந்தாய். உன் துன்பத்தைக் கண்டு உனக்கு நல்ல நட்பினை நான் தேடித் தந்தேன். அந்த இணக்கத்தினை நீ அறியாமல் உன்னுடைய மூடத்தனத்தினால் பயந்து விட்டாய் என்று நரி கூறிட அதைக் கேட்ட கழுதை...

554. உன்னுடை பேச்சை நம்பி
யுற்றனன் கிட்டு முன்னே
மன்னிய சிங்கம் கொல்ல
வந்தது தப்பி வந்தேன்

பின்னமேன் வந்தாய் என்ன
விருநிலம் தொட்ட கையால்
தன்னிரு காது மூடி
சத்தியஞ் சொல்லு மாப்போல். (39)

(இ.ள்) ''நரியே உன்னுடைய பேச்சினை நம்பி உன்னுடன் நான் வந்தேன். நான் அருகில்செல்லும் முன்பே அந்தச் சிங்கம் என்னைக் கொல்ல வந்தது. நான் தம்பி ஓடி வந்து விட்டேன். இனியும் நீ ஏன் இங்கு வந்தாய்?'' என்று கேட்க, நரி தரையைத் தொட்ட தனது கையைத் தூக்கித் தன் இரு காதுகளையும் மூடிக்கொண்டு சத்தியம் பேசுவது போல் பேசியது.

555. ஐயையோ பாவம் பாவம்
அரசனப் படிச்செய் வானோ
பொய்யுரை சொல்ல வேண்டாம்
போடுநீ இந்தப் பேச்சை
வையகம் போற்றும் சிங்க
மன்னவன் வார்த்தை தப்பான்
மெய்யது தானே யென்று
வேந்தன்மே லாணை யிட்டே. (40)

(இ.ள்) ''ஐயையோ பாவம் பாவம். அரசன் அப்படிப்பட்ட பாதகம் செய்வானா ? நீ பொய்யுரை பேச வேண்டாம். இந்தப் பேச்சினை விட்டுத் தள்ளு. உலகமே போற்றும் சிங்க மன்னன் தான் கொடுத்த வாக்கைத் தட்ட மாட்டான். இதுவே உண்மை'' என்று மன்னன் மேல் ஆணையிட்டுக் கூறியது.

556. தன்னிலே வருஞ்செல் வத்தைத்
தள்ளுவா ரொருவர் காணேன்
உன்னையே கண்டே னிப்போ
துன்தலை விதியோ வென்றே

என்னிலே யதிச யித்தே
னினியதை விட்டு நீநான்
சொன்னது கேட்டு வந்தால்
சுகமெலாம் வருமு னக்கே. (41)

(இ.ள்) மேலும், ''தானே வரும்செல்வத்தை ஒருவர் மறுத்துத் தள்ளுவாரோ ? இந்த உலகத்தில்அத்தகைய ஒருவரை இதுவரை நான் பார்த்ததில்லை. ஆனால் இன்று அத்தகைய ஒருவனாக உன்னைக் கண்டேன். இது உன் தலைவிதிதானே என்று எண்ணி எனக்குள்ளே வியந்துபோனேன். இனி இதையெல்லாம் விட்டு, நீ நான் சொன்னதைக் கேட்டு வந்தால் உனக்கு எல்லா சுகமும் தேடிவரும்.

557. இருவராய் நாமே கூடி
இருந்தன மாகில் வேறாங்
கொருவரா லாவ துண்டோ
உலகெலாம் நமதே யென்ன
வெருவிய கழுதை யாரும்
விரும்பியே யதன்பின் செல்லக்
கருதிய ஓரி யுஞ்சிங்
கத்தின்முன் விட்ட தம்மா. (42)

(இ.ள்) ''நாம் இருவரும் சேர்ந்து ஒற்றுமையாய் இருந்தோமென்றால் வேறு ஒருவர் நம்மை என்ன செய்துவிட முடியும். பின் இந்த உலகம் முழுவதும் நம்முடையதே'' என்று நரி கூறக் கேட்டக் கழுதை, தன் அச்சத்தை நீக்கி விருப்பத்துடன் அதன் பின்னால் சென்றது. நரியும் கழுதையை அழைத்துச் சென்று சிங்கத்தின்முன் விட்டது.

558. கழுதையார் தம்மைச் சிங்கங்
கண்டுதான் கைக ளாரத்
தழுவியே மோந்து மென்னி
தன்னையு முறித்துப் போட்டே

பழுதுநாம் செய்தோம் சந்தி
பண்ணியும் மருந்தைக் கொள்வோம்
கழுதையைப் பதன மாகக்
காத்துநீ யிருப்பா யென்ன. (43)

(இ.ள்) கழுதையைக் கண்ட சிங்கம் அன்புடன் அணைப்பது போன்று தன் கைகளால் ஆரத் தழுவி அதன் கழுத்தை முறித்துக் கொன்றது. பின் நரியைப் பார்த்து, ''நாம் பாபம் செய்துவிட்டோம். இதற்கு நாம் சந்தி செய்து இந்த உணவாகிய மருந்தினைக் கொள்வோம். நீ இந்தக் கழுதையைப் பத்திரமாகப் பாதுகாத்து இருப்பாய்'' என்று...

559. ஓரியைக் காவல் வைத்தே
ஒருசுனை யருகில் சென்று
பாரிய சிங்கஞ் சந்தி
பண்ணியங் கேகு முன்னே
ஓரியு மருந்தோ வென்றங்
குற்றதன் கண்ணுங் காதும்
ஈரிரண் டுறுப்புந் தின்றே
இருந்தது பயந்து தூர. (44)

(இ.ள்) ...நரியைக் காவல் வைத்துவிட்டு, ஒரு சுனையருகில் சென்று, கொலை செய்த சிங்கம் அங்கு சந்தி செய்து திரும்பி வருமுன், நரியும் கழுதையின் இரண்டு கண்களையும், இரண்டு காதுகளையும் தின்றுவிட்டு அச்சத்துடன் தூரத் தள்ளி நின்று கொண்டது.

560. சிங்கமும் சந்தி பண்ணிச்
சென்றதன் கண்க ளெங்கே
இங்கிதன் காது மெங்கே
என்றுதான் முடுகிக் கேட்க

அங்கமெல் லாமுண் டாகில்
அகப்பட்டுத் திரும்பிப் போய்பின்
மங்கிட விறக்க விங்கே
வரநினைத் திடுமோ வென்ன. (45)

இ.ள்) சிங்கமும் சந்தியாவந்தனம் முடித்து வந்து கழுதையைப் பார்த்துக் கழுதையின் கண்களும் காதுகளும் இல்லாததைக் கண்டு, அவை எங்கே என்று சினத்துடன் நரியைக் கேட்டது. நரியும், ''ஐயா அதற்குரிய எல்லா உறுப்புகளும் இருந்திருந்தால் நம்மிடம் அகப்பட்டுத் தப்பிச் சென்று மீண்டும் இறப்பதற்காக இங்கே திரும்பிவர நினைத்திருக்குமா?'' என்றது.

561. சிங்கமும் கழுதை யீரல்
தின்னவு மில்லை வீணே
அங்கொரு நரிதா னேய்த்து
அழைத்துப்போய்க் கொல்லு வித்துத்
தங்குல ஓரிக் கெல்லாந்
தானிரை கொடுத்த தன்றே[1]
புங்கமா யறிவில் லாமற்
பட்டது கழுதை தானே. (46)

(இ.ள்) சிங்கமும் முன் தான் நினைத்ததுபோல் கழுதையின் ஈரலையும் தின்னாமல் போனது. வீணாகக் கழுதையை ஒரு நரி சிங்கத்தின் பெயரைச் சொல்லி அழைத்து வந்து சிங்கத்தால் அதைக் கொல்லுவித்துத் தன் குல நரிக்கெல்லாம் இரையாகக் கொடுத்தது. கழுதையும் அறிவில்லாமல் சென்று இறந்துபட்டது.

562. அப்படி நீயுமென்னை
அழைக்கிலுன் வார்த்தை கேட்டே
மெய்ப்பட வான ரந்தான்
வியந்ததோர் கழுதை யல்ல

பா. பே.: பாடல் 561. 1. பங்கிய மக்கள் கூட்டம் பாருளார் சம்புவென்று
தங்கிய ஓரிக் கெல்லாம் தானிரை கொடுத்ததன்றே.

இப்பழந் தானுந் தாரேன்
என்றுதங் கிலற்றே நாசம்
கைப்படு குரங்கை விட்டுக்
கராவும்போய் மாழ்கிற் றம்மா. (47)

(இ.ள்) அதுபோன்று நீ என்னை மீண்டும் அழைத்தால் உன் சொல்லைக் கேட்டு உன்னுடன் வருவதற்கு நான் அந்தக் கழுதையல்லன், வானரம். இனி உனக்கு இந்தப் பழமும் தரமாட்டேன். இனித் தங்கில் அது உனக்குக் கேடாம் என்றது. கையில் கிடைத்த குரங்கை தப்பவிட்டு அந்த முதலையும் வருந்தித் திரும்பிச் சென்றது.

இப்பாடலுடன் சுவடியில் அர்த்த நாசம் என்னும் நான்காம் தந்திரம் முடிவடைகிறது. ஆனால் இப்பாடலுக்குப் பதிலாக இவ்விடத்தில் அச்சுப் பிரதியில் கீழ்க்காணும் பாடல் காணப்படுவதுடன் மேலும் சில கதைகள் தொடர்கின்றன.

562a. அப்படி நீயு மென்னை
யழைக்கிலுன் வார்த்தை கேட்டே
மெய்ப்பட வாரேன் வந்தால்
விரைந்துநீ கொல்லு தற்குத்
தப்பிலை இதுதான் நிற்க
தன்னுண்மை தன்னைச் சொல்லித்
துப்புறு குலாலன் கெட்ட
கதையொன்று சொல்லக் கேளாய். (47a)

(இ.ள்) "அதுபோல நீயும் என்னை அழைத்தால் உன் வார்த்தையைக் கேட்டு, நான் நிச்சயமாக வரமாட்டேன். வந்தால் நீ விரைந்து என்னைக் கொல்லாது விடமாட்டாய். இது நிற்க, தன் உண்மையைச் சொல்லி குலாலன் கெட்ட கதையைச் சொல்கிறேன் கேள்" என்று கூறியது.

குயவன் கெட்ட கதை

வேறு

563\. உதிட்டிர னெனுமொரு குயவ னோர்சிறு
பதிக்கணே யுறைந்துமட் பாண்டஞ் செய்குவோன்
பிதிர்க்குமோ டொன்றுமுன் பீற லாலின
மதிப்பின வெனவடு வயங்கு நெற்றியான். (48)

(இ.ள்) ஓர் ஊரில் உதிட்டிரன் என்னும் குயவன் ஒருவன் மண்பாண்டங்கள் செய்து விற்று வாழ்ந்து வந்தான். ஒரு சமயம் உடைந்து தெறித்த ஓடு ஒன்று அவன் நெற்றியில் கீறிவிட பிறை நிலவு போன்ற ஒரு வடு ஏற்பட்ட நெற்றியை உடைவனானான்.

564\. கார்வளங் குன்றியே காணும் பஞ்சத்தால்
சீர்வள மொன்றுமோர் தேயத் தெய்தினான்
போர்வள மொன்றுமந் நாட்டின் பூபதி
வார்வள மொன்றிவன் வடுவைக் கண்டனன். (49)

(இ.ள்) குயவனின் ஊரில் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டது. எனவே தான் வாழ்ந்து வந்த ஊரைவிட்டு வளமானதொரு நாட்டிற்குச் சென்று சேர்ந்தான். போரில் மிக்க ஆர்வமுடைய அந்நாட்டு மன்னன் குயவனின் நெற்றியில் இருந்த வடுவைக் கண்டான்.

565\. கன்றிய போரின்முன் காயம் பட்டவன்
என்றுசே னாபதி தலைமை யீந்தனன்
வன்றிறல் வேந்தனார் வைகல் யார்பொரு
தொன்றிய வாளின்வெட் டுரையென்றோதினான்.(50)

(இ.ள்) இவன் பெரிய போரின் கண் ஏற்பட்ட வடுவையுடையவனாக உள்ளான். எனக் கருதி அவனுக்குச் சேனாதிபதி பதவியை அளித்தான். பின்பு குயவனைப் பார்த்து வலிமை பொருந்திய வேந்தன், ''இது யாருடன் போரிட்டபோது வாளால் வெட்டப் பட்ட வடு என்று சொல்'' எனக் கேட்க, குயவன் சொன்னான்...

566. இழித்திடு குயவன்யான் இதுவுமோ வுறை
கழித்தவாள் வெட்டன்று கடத்தி னோடுமுன்
கிழித்ததென் றிடவுள நாணிக் கீழ்மையோய்
பழித்தல்செய் வாரெனைப் பாரின் வேந்தரே (51)

(இ.ள்) '' நானோ சாதாரண குயவன் இந்த வடுவும் உறையிலிருந்து நீக்கப்பட்ட வாளால் வெட்டுண்ட வடுவன்று. பானையின் ஓடு முன்பு கிழித்ததால் ஏற்பட்ட வடு'' என்று கூறினான். மன்னனும் மனம் வெட்கி, ''கீழான இயல்பினை உடையவனே, உன்னால் என்னை உலக மன்னர்கள் யாவரும் பழித்தல் செய்வார்கள்.

567. தீதுறு நின்குலந் தெரிவ தற்குமுன்
போதுக வென்றிறை புகலப் போரினில்
யாதினு மெனைவெல் வாரிலை யாதலால்
நீதியன் றென்னை நீநீக்க லென்றனன் (52)

(இ.ள்) கீழ்மையான உன் குலம் பிறருக்குத் தெரியுமுன் இங்கிருந்து சென்று விடுக'' என்று மன்னன் கூற, ''போரில் எதனாலும் எவரும் என்னை வெல்பவர் இல்லையாதலால் என்னைப் பதவியிலிருந்து நீக்குவது நீதியில்லை'' என்று குயவன் கூறினான்.

568. நின்குலம் போரினில் நேர்வ தன்றுநீ
கொன்படு சிறுநரிக் குட்டி போற்றுளேல்
என்பய னென்னவக் கதையென் னென்னலும்
வன்புறு வேந்தனும் வகுத்துச் சொல்லுவான் (53)

(இ.ள்) ''உன் குலம் போரிடும் குலமன்று. நீ கொல்லப்படும் சிறு நரிக் குட்டி போன்றுளாய்' என்று கூற, அந்தக் கதை என்ன. அதன் பயன் என்ன ? என்று கேட்க, மன்னனும் அக்கதையைக் கூறுவான்..

நரிக்குட்டிக் கதை

569. குட்டிக ளிரண்டுடைக் கொடிய கேசரி
பெட்டையை நோக்கியுன் பிள்ளை கட்குணாத்
தட்டற வீகுவேன் தனிவி டாதுநீ
மட்டறு மன்பினால் வளர்த்தி யாலென்றே (54)

(இ.ள்) இரண்டு குட்டிகளையுடைய சிங்கம் ஒன்று தன் பெண் சிங்கத்தைப் பார்த்து, உன் பிள்ளைகளுக்கு நான் தடையின்றி உணவு வழங்குவேன். நீ அவற்றைத் தனியே விடாது, அளவற்ற அன்புடன் வளர்த்து வா என்று கூறி...

570. உறுமுண வ ளித்துவாழ் நாளி லோர்தினம்
சிறுநரிக் குட்டியைப் பற்றிச் சென்றிதைக்
கறியெனக் கொள்கவென் றளிப்பக் கண்டிது
பெறுமழ குடைத்தெனப் பெட்டை யெண்ணியே. (55)

(இ.ள்) தேவையான உணவைத் தந்து வாழும் நாளில், ஒரு நாள், சிறிய நரிக்குட்டி ஒன்றைப் பற்றி எடுத்துச் சென்று இதை உணவாகக் கொள்க எனக் கொடுக்க, அதைப் பார்த்த பெண் சிங்கம் இது மிகவும் அழகாக இருக்கிறது என்று எண்ணி ...

571. குறியதங் குட்டிக ளோடுங் கூட்டியே
நறியவூ ணுணவினைத் தந்து நாடொறும்
பிறிதற வளர்த்திட வளர்ந்தபின் னோர்நாள்
அறிவுறு மூன்றுமங் கடவி புக்கவே. (56)

(இ.ள்) ...தன் குட்டிகளுடன் சேர்த்து நாள்தோறும் சுவையான உணவினைத் தந்து வேற்றுமையின்றி வளர்த்தது. நரிக்குட்டி வளர்ந்தபின் ஒருநாள் மூன்று குட்டிகளும் காட்டிற்குள் சென்றன.

572. நண்ணியோர் கரிதனை நரியின் குட்டிதான்
கண்ணுற நோக்கியே யோடக் கண்டிடம்
அண்ணிமற் றிரண்டும்பின் னதனை நோக்கியே
ஒண்ணுமோ ஓடுதல் உனக்கென் றேசலும். (57)

(இ.ள்) சென்ற அவை ஒரு யானையைப் பார்த்தன. நரிக்குட்டி அதைப் பார்த்து அஞ்சி ஓடிட, அதைக் கண்ட இரண்டு சிங்கக் குட்டிகளும் நீ ஓடுதல் உனக்குத் தகுமோ என்று ஏசின.

573. **நரிபெறு குட்டியும் வலியி னான்மிகப்**
பெரியனென் றுறுகலாம் புரியப் பின்பதைப்
பரிவொடு வளர்த்தபெண் சிங்கம் பார்த்திது
தெரிவிலா துரைத்தனை செய்தி கேளெனா. (58)

(இ.ள்) நரிக்குட்டி அதற்கு, வலிமையினால் மிகப் பெரியது இது என வாதம் புரிந்தது. அதைப் பரிவுடன் வளர்த்த பெண் சிங்கம் அதைப் பார்த்து, '' நீ தெரியாமல் சொன்னாய் உண்மையைக் கேள்'' என்று சொல்லி,

574. **நீயொரு சம்புவின் குட்டி நின்னைநான்**
மாய்விலென் குட்டிக ளோடும் வளர்த்தனன்
தீயநின் குலந்தனைத் தெரியி னென்மகார்
காய்வரென் றுரைத்தலுங் கடிதி னீங்கிற்றே. (59)

(இ.ள்) '' நீ ஒரு நரியின் குட்டி. உன்னை நான் என் குட்டிகளுடன் சேர்த்து வளர்த்தேன். உன்னுடைய தீய குலத்தினை என் மக்கள் அறிந்தால் என்மீதுசினம் கொள்வர்'' என்று கூறவும், நரிக்குட்டி அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டது.

575. **களிப்புற வேந்திதைக் கழறி நின்குலம்**
வெளிப்படா முன்னர்நீ விரைந்து போகென
ஒளிப்பொடு குலாலனு மோடி னானென
நளிப்புனன் முதலைதான் நவின்ற தென்பவே. (60)

(இ.ள்) மன்னன் இக்கதையைக் கூறி, உன் குலம் யாருக்கும் வெளிப்படுமுன் இங்கிருந்து விரைந்து போய்விடு என்று கூற, குயவனும் அங்கிருந்து ஓடி மறைந்தான் என குளிர்ந்த நீரில் வாழ் முதலை கூறியது.*

---

* குரங்கு சொல்வதாகத் தொடங்கிய கதை, முதலை சொல்வதாக முடிகிறது. ஆனால் முதலைக்குக் கூறியது என இருப்பதே பொருந்தும்.

576. சொன்னவம் முதலைக்குச் சுமுக வானரம்
கன்னியர் கிருத்திர மத்தைக் காணரி
தென்னலும் யாதினா லிசைக்கின் றாயென
இன்னதா லென்றொரு கதையி சைக்குமால். (61)

(இ.ள்) இவ்வாறு சொன்ன அந்த முதலைக்குக் குரங்கு, 'பெண்களின் கிருத்திருமத்தைக் கண்டுணர்தல் அரிது' என்று கூறவும், ''எதனால் அப்படிக் கூறுகிறாய்'' என்று முதலை கூறவும், இதனால்தான் என்று கூறி ஒரு கதையைச் சொன்னது.

முடவனை விரும்பிக் கணவனை வஞ்சித்த காரிகை கதை

வேறு

577. மிக்கதா ராவனத்தின் மேவுஞ் சத்ய
வீரதனாம் பார்ப்பானுக் குரிய தேவி
தொக்கபெருஞ் சண்டையிட்டுக் குடும்பந் தன்னைத்
தூறுபுரி வாளவள்மே லாசை கொண்ட
தக்கபெரு வேதியனும் அவள்மோ கத்தால்
சஞ்சாரஞ் செயநினைந்தோர் கானில் சென்றான்
மைக்கணியும் நடையாலும் வெய்யி லாலும்
வருந்திநீர் வேண்டுமென வாய்வீண் டாளே. (62)

(இ.ள்) தாராவனம் என்னும் ஊரில் சத்தியவிரதன் என்னும் பெயருடைய பார்ப்பனன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி பெருஞ் சண்டையிட்டுக் குடும்பத்தில் துன்பம் விளைவித்துக் கொண்டே இருப்பாள். அவள்மேல் கொண்ட ஆசையின் காரணமாக வேதியன் தேசசஞ்சாரம் செய்யும் எண்ணத்துடன் அவளுடன் புறப்பட்டு ஒரு காட்டு வழியில் சென்றான். மை பூசிய கண்ணை உடையவளும், வெய்யிலில் நடந்த களைப்பின் காரணமாக வருத்தமுற்று, தாகம்கொண்டுத் தண்ணீர் வேண்டும் என்று கூறினாள்.

578. பேதைநீ இங்கிருவென் றுரைத்துப் பார்ப்பான்
பெயர்ந்தனன்நீர் கொண்டுவரு முன்னேல மாது
சாதலும்விண் வாணிநின்றன் வயதிற் பாதி
தருதியேல் உய்வளெனச் சாற்றக் கேட்டே
ஈதலுமங் கவள்பிழைத்தே யேகும் போதோர்
இசைபாடும் முடவனைக்கண் டிச்சைவைத்து
வேதியநீ தனிவிட்டுப் போம்போ தெல்லாம்
வெருவேனிம் முடந்துணையாய் மேவி
னென்றாள். (63)

(இ.ள்) 'பெண்ணே நீ இங்கு இரு' என்று சொல்லிப் பார்ப்பனன் சென்று தண்ணீர் கொண்டு வருமுன் அப்பெண் இறந்துவிட்டாள். அவனுடைய துன்பத்தைக் கண்டு ஆகாயவாணி, உன் வயதில் பாதியை இவளுக்குக் கொடுத்தால் இவள் பிழைப்பாள் என்று கூறக் கேட்டு அதன்படித் தன் வயதில் பாதியை அவளுக்குக் கொடுக்க அவள் உயிர்பிழைத்தாள். தொடர்ந்து அவர்கள் போகும் போது வழியில் இசைபாடும் முடவன் ஒருவனைக் கண்டு, அவன்மேல் ஆசைகொண்ட அவள், தன் கணவனிடம், ''வேதியனே, நீ என்னைத் தனியாக விட்டுச் செல்லும்போது இம்முடவன் துணையாக இருப்பான் நான் அஞ்சமாட்டேன்'' என்றாள்.

579. இவள்கருத்தை யறியாவே தியனும் நன்றென்
றிம்முடவன் றனக்குஞ்சோ றீந்து வந்தான்
அவளொருநா ளரவோரத் திளைப்பாய்த் தூங்கும்
அந்தணனை யதனில்விழத் தள்ளி யிந்தப்
பவமுடவன் றனையெடுத்துக் கொண்டோர் நாட்டில்
படர்ந்தனளந் நாட்டிறைவன் இவளைப் பார்த்துக்
கவலையில ளாய்முடமாம் புருடன் றன்னைக்
காக்கின்றாள் கற்பின்மிக்கா ளெனவி யந்தான். (64)

(இ.ள்) இவளுடைய உள்ளக் கருத்தினை அறியாத வேதியன் அந்த முடவனுக்கும் உணவு தந்து காத்து வந்தான். ஒரு நாள் ஒரு கிணற்றோரத்தில் அவன் தூங்கும் போது அவனை அதில் தள்ளிவிட்டு விட்டு, இந்த முடவனை எடுத்துச் சுமந்து கொண்டு ஒரு நாட்டிற்குச் சென்று சேர்ந்தாள். அந்த நாட்டு மன்னனும் இவளைப் பார்த்து, இந்த முடமான கணவனைக் கவலையின்றி இவள் காப்பாற்றுகிறாள். இவளே கற்பில் மிக்கவள் எனக் கூறி வியந்தான்.

580. தங்கையிவ ளெனமுறைகொண் டுடையுஞ் சோறும்
தானளித்து வேந்திருக்க மறையோ னுய்ந்தே
அங்குவரல் கண்டவவள் இறையை நோக்கி
யவனெனது புருடனுக்குப் பகைஞ னென்ன
இங்கிவனைச் சிறையிடுமி னென்ன வேந்தன்
இயம்புதலும் மறையவன்முன் நிகழ்ந்த தோதத்
திங்கணெடுங் குடைவேந்த னுண்மை தேர்ந்து
தெரிவைக்குத் தக்கதண்டஞ் செய்திட் டானே. (65)

(இ.ள்) இவளைத் தன் தங்கை என முறை கொண்டாடி, உடையும் சோறும் கொடுத்து மன்னன் ஆதரித்தான். அந்நாட்டிற்கு அவளுடைய கணவனான வேதியன் வர, அவனைக் கண்ட அப்பெண் அரசனிடம், இவன் என் கணவனுக்குப் பகைவன் என்று கூறினாள். மன்னனும் வேதியனைச் சிறையிலிட ஆணையிட்டான். உடனே வேதியன் முன் நிகழ்ந்த நிகழ்வுகள் அனைத்தையும் எடுத்துக்கூற, நிலவு போன்ற நெடிய வெண்கொற்றக் குடையுடைய வேந்தனும் உண்மையை உணர்ந்து அப்பெண்ணிற்கு உரிய தண்டனையை விதித்து ஆணையிட்டான்.

வேறு

581. அங்கவ்வே தியனைப் போக்கி
யரசனு மிருந்தான் வஞ்ச
நங்கையர் தம்பேச் சுக்கு
நற்செவி கொடுக்க லாகா

தங்கவர் சொற்குக் காது
கொடுத்தர சனும மைச்சும்
பங்கமுற் றனர்க ளென்று
பகர்ந்தனன் குரங்கு வேந்தன். (66)

(இ.ள்) பின் அந்த வேதியனை விடுவித்து அனுப்பினான் அரசன். வஞ்சகமான மனம் கொண்ட பெண்களின் பேச்சை நாம் காது கொடுத்துக் கேட்கக் கூடாது. அப்படி அத்தகைய பெண்களின் பேச்சுக்குக் காது கொடுத்த அரசனும் அமைச்சனும் அவமானப்பட்டார்கள் என்று கூறியது குரங்கு.

மகளிர் சொற்கேட்டு மானமிழந்த கதை

582. முதலையக் கதையென் னென்ன
முன்புநந் தனனென் வேந்தன்
இதமுறு மனையாள் ஊட
வெத்திறச் சமாதா னத்தும்
சிதைவில ளாய்நீ வாயில்
திகழ்கடி வாளங் கொண்டுன்
முதுகின்மே லெனையெ டுத்து
முற்படக் கனைத்தா யானால். (67)

(இ.ள்) அக்கதை என்ன என்று முதலை கேட்க, குரங்கு சொல்லத் தொடங்கியது. ''முன்னொரு காலத்தில் நந்தன் என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். ஒரு சமயம் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஊடல் கொண்டாள். அவளுடைய ஊடலைத் தணிக்க எப்படிச் சமாதானப்படுத்தியும் அவள் மனம் இணங்கவில்லை. மாறாக ''உன் வாயில் கடிவாளத்தைக் கௌவிக்கொண்டு, என்னை முதுகின்மேல் சுமந்து கொண்டு கனைத்தால்,

583. உன்னுரை தனக்குக் காது
கொடுப்பனென் றோத வப்போ
தன்னவன் அவன்மோ கத்தால்
அப்படி செய்யக் கேட்டுத்

தன்னிக ரமைச்ச னில்லும்
பிணங்கிநீ தலைம ழித்துப்
பின்னிடம் வலஞ்செய் தென்னைப்
பெரிதுறுப் பெட்டு மைந்தும். (68)

(இ.ள்) உன் சொல்லுக்குக் காது கொடுப்பேன்'' என்று கூறினாள். அப்போது அவன் மனைவி மேல் கொண்ட மோகத்தால் அவ்வாறே செய்து ஊடல் தணித்தான். இதைக் கேட்டு வரருசி என்னும் அமைச்சன் மனைவியும் ஊடல் கொண்டு, ''தன் கணவனிடம், நீ தலையை மொட்டை யடித்துக் கொண்டு என்னை வலம் செய்து வந்து உன்னுடைய எட்டுறுப்புகளும் ஐந்து உறுப்புகளும்

584. பரிவுடன் நிலத்தில் தோயப்
பணிவையேல் உனக்கென் இன்பம்
தருவனென் றிடவ மைச்சன்
சாற்றிய வண்ணஞ் செய்தான்
வரருசி யென்னு மன்னோன்
மறுதினஞ் சபையி னெய்த
அரசநீ முண்டி யாயிங்
கடுத்ததென் னென்று கேட்டான். (69)

(இ.ள்) ..இணக்கத்துடன் நிலத்தில் தோயப் பணிந்தால் உனக்கு என்னிடத்தில் இன்பம் தருவேன்'' என்று கூறினாள். அதுகேட்டு வரருசி என்னும் அமைச்சனும் அப்படியே செய்தான். மறுநாள் அமைச்சன் அரசவைக்கு வந்தபோது அரசன் அமைச்சனிடம் தலை மொட்டையடித்துக்கொண்டு இங்கு வரக்காரணம் என்ன என்று கேட்டான்.

585. மந்திரி யரச னேநீர்
வாசிபோற் கனைத்த தாலே
இந்தமுண் டிதமெ னக்கும்
எய்திய தென்று கூற

அந்தநற் சபையி லுள்ளோர்
யாருமிவ் வாறு தேர்ந்து
புந்தியள் நகைகொண் டார்கள்
புரவலன் நாணங் கொண்டான். (70)

(இ.ள்) அமைச்சன் "அரசே நீர் கழுதை போல் கனைத்ததால் இந்த மொட்டைத் தலை எனக்கும் வாய்த்தது" என்று கூறினான். அவையில் உள்ள அனைவரும் இதுகேட்டு உண்மையை உணர்ந்து கொண்டு மனத்திற்குள் சிரித்துக் கொண்டனர். அரசன் நாணமடைந்தான்.

முதலை குரங்கை விட்டு நாணமடைந்த கதை-தொடர்ச்சி

586. மாதர்க ளுடனே வீணாய்ப்
பேசினும் மருவும் பாவம்
ஆதலால் இல்லாட் காநீ
அடுத்தெனை கொலைநீ னைத்தாய்
தீதது வென்னும் போது
செத்தனள் மனைவி யென்று
கோதறு வண்மீ னொன்று
குறுகிநின் றுரைத்த தன்றே. (71)

(இ.ள்) எனவே மாதர்களுடன் வீணாய்ப் பேசினாலும் பாவம் வந்து சேரும். ஆதலால் உன் மனைவிக்காக என்னை நீ கொல்ல நினைத்தாய் அது தீயது" என்று கூறும் போது ஒரு மீன் வந்து உன் மனைவி செத்தனள் என்று கூறியது.

587. தன்பரி வாலி றந்தாள்
தாரமென் றுரைக்கக் கேட்ட
வன்கராக் குரங்கைப் பார்த்து
வானர வேந்தே நானும்
புன்மையே னாத லாலே
பொல்லாங்கு மடைந்தே னுன்னை
இன்மைசெய் திடநி னைத்தே
இட்டனல் லேனு மானேன். (72)

(இ.ள்) தன்மேல் கொண்ட அன்பால் தன் மனைவி இறந்தாள் எனக் கேட்ட முதலை குரங்கைப் பார்த்து, ''வானர வேந்தனே, நான் புன்மையான மனத்தினனாதலால் துன்பம் அடைந்தேன். உனக்குத் தீங்கு செய்ய நினைத்தேன். உன் நட்பையும் இழந்தேன்''

588. **என்றிடக் குரங்கு சொல்லும்**
எனைக்கொல நினக்குச் சொன்ன
துன்றுநின் மனைவி துட்டை
யாதலால் துயரங் கொள்ளேல்
அன்றெனில் பிறர்க்கு டம்பட்
டிருந்தவோர் அரிவை தன்னை
நன்றுமுன் னரிசி ரித்த
நற்கதை போலா மென்ன. (73)

588. என்று முதலை கூறவும், குரங்கு, ''என்னைக் கொல்லும்படி உனக்குச் சொன்ன உன் மனைவி கொடியவள். ஆதலால் அவள் மரணத்திற்குத் துயரம் கொள்ளாதே. இல்லையெனில் மாற்றானுக்கு உடன்பட்டு வாழ்ந்த ஒரு பெண்ணைப் பார்த்து நரி சிரித்த கதை போலாகும்'' என்றது.

நரி சிரித்த கதை

589. **சம்புதான் எவளைப் பார்த்துத்**
தானகைத் திட்ட தென்ன
சம்பகா வதியென் றோதுந்
தக்கசீர்ப் பட்ட ணத்தில்
சம்பமில் கிழவன் தேவ
தத்தனாஞ் சாவு காரி
கம்பகக் குழலி யன்னான்
தாரஞ்சோ ரஞ்செய் வாளே. (74)

(இ.ள்) நரி யாரைப் பார்த்துச் சிரித்தது என்று முதலை கேட்க, சம்பகாவதி என்னும் அழகிய பட்டணத்தில் தேவதத்தன் என்னும் சாவுகாரி ஒருவன் இருந்தான் அவன் மனைவி கணவனுக்குத் துரோகம் இழைத்துச் சோரம் போனாள்.

590. பெண்டிழந் திடுமோர் தூர்த்தன்
பெரிதுந்தன் னிடத்தி னேசங்
கொண்டதை யறிந்தாள் வீட்டில்
கொட்டிவைத் திருந்த பொன்னைக்
கண்டெடுத் தவனைத் தேயங்
காணவே யழைத்துக் கொண்டு
வண்டிமிர் குழலாள் சென்றாள்
வழியிலோர் ஆறு கண்டார். (75)

(இ.ள்) மனைவியை இழந்த தூர்த்தன் ஒருவன் தன்னிடத்தில் பெரிதும் நேசம் கொண்டிருப்பதை அவள் அறிந்தாள். தன் வீட்டில் மிகுதியாகக் கிடந்த பொன்னை எடுத்துக் கொண்டு தன் காதலனுடன் வேறு ஊருக்குச் செல்லும் எண்ணத்துடன் அவனை அழைத்துக் கொண்டு சென்றாள் அப்பெண். அவர்கள் செல்லும் வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது.

591. பொருளைமாத் திரந்தான் கொண்டு
போகவே யவனி னைந்தே
அரிவைநீ கட்டிக் கொண்ட
ஆடைமுன் னாக வெல்லாம்
வெருவுறா தளிப்பை யாகில்
மிகுந்தநீ ராற்றைத் தாண்டி
மருவவைத் திட்டு நின்னை
வந்துபின் னழைத்துப் போவேன். (76)

(இ.ள்) அவள் மீது உண்மையான அன்பின்றி அவளுடைய பொருளை மாத்திரம் கொண்டு போக எண்ணிய அவன், ''பெண்ணே நீ கட்டிக் கொண்டிருக்கும் ஆடை உட்பட எல்லாவற்றையும் தயங்காமல் கொடுத்தால், மிகுந்த வெள்ளம் வரும் இந்த ஆற்றைக் கடந்து அக்கரையில் அவற்றை வைத்துவிட்டு மீண்டும் வந்து உன்னை அழைத்துப் போகிறேன்''

592. என்னவப் படிசெய் யென்றாள்
எடுத்துக்கொண் டோடிப் போனான்
பின்னவள் நாணத் தாலே
பெரிதரை யமிழ்ந்து நீரில்
மன்னிநின் றனளப் போதோர்
வனநரி யிறைச்சி தன்னை
அந்நதி யருகே வைத்தங்
கடுத்தமீன் தன்னைக் கௌவ. (77)

(இ.ள்) என்று கூற, ''அப்படியே செய்'' என்று உடன் பட்டாள். அவன் அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். பின்பு அவள் தன் நிலைக்கு நாணம் கொண்டு, தன் உடல் நீரில் மூழ்கியிருக்கும்படி நின்றிருந்தாள். அப்பொழுது ஒரு நரி வாயில் இறைச்சித் துண்டைக் கௌவிக்கொண்டு வந்து அதனை நதிக்கரையில் வைத்துவிட்டு அப்பக்கமாக வந்த மீனைப் பிடிக்க முயற்சித்தது.

593. மீனமுந் தப்பித் தந்த
இறைச்சியை மேவி யோர்புள்
தானெடுத் தாகா யத்தில்
பறந்தது சம்பு கந்தான்
வானினைப் பார்க்க மங்கை
வானைப்பார் தாவ தென்ன
ஈனமி னரியா ரேயென்
றிசைக்கவந் நரிதான் பார்த்தே. (78)

(இ.ள்) ஆனால் மின் தப்பிச் சென்றது. அந்த இறைச்சித் துண்டையும் ஒரு பறவை எடுத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்து சென்றது. நரி ஏமாற்றத்துடன் ஆகாயத்தைப் பார்த்து நின்றது. அப்பொழுது அந்தப் பெண், நரியைப் பார்த்து, ''வானைப் பார்த்து ஆவது என்ன நரியாரே'' என்று கூறினாள். அதற்கு அந்த நரி அவளைப் பார்த்து,

594. சோரனை நம்பி யேநின்
கணவனைத் துறந்த தேபோல்
நாரியே எனக்கும் வந்த
தென்றது நகைப்ப விவ்வா
றோருமிங் கிவர்கள் வாக்கு
வாதஞ்செய் துறுங்கால் சாவு
காரியு மறிந்து மாதைக்
கண்டித்துத் தள்ளி விட்டான். (79)

(இ.ள்) ''கள்ளக் காதலனை நம்பி உன் கணவனை நீ துறந்து வந்தது போல் பெண்ணே எனக்கும் நிகழ்ந்தது'' என்று கூறி அவனைப் பார்த்து நகைத்தது. இவ்வாறு இவர்கள் இருவரும் இங்கு வாக்குவாதம் செய்து கொண்டிருக்க, சாவுகாரியும் தன் மனைவியின் துரோகத்தை அறிந்து அவளைக் கண்டித்துத் தன் வாழ்விலிருந்து தள்ளி வைத்துவிட்டான்.

595. ஆகையால் இல்லாள் சாகைக்
கல்லல்நீ யுறாம லுன்றன்
சாகைசே ரெனக்க ராவும்
தன்னிடம் சென்று பார்க்க
வாகைசேர் முதலை யொன்று
மருவிடப் பார்த்து மீண்டே
ஓகைசேர் குரங்கே யானும்
உறைவிடந் தனக்குச் சென்றேன். (80)

(இ.ள்) எனவே உன் மனைவி இறந்ததற்கு நீ வருத்தப் படாமல் உன் வீட்டிற்குச் சென்று சேர் என்று குரங்கு சொல்ல, முதலையும் தன் வீட்டிற்குச் சென்று பார்த்தது. அங்கு வெற்றியையுடைய முதலை ஒன்று இதன் வீட்டைக் கைப்பற்றிக் கொண்டதை அறிந்து மீண்டும் வந்து, ''உவகை சேர் குரங்கே நானும் என்னிடத்திற்குச் சென்றேன்.

596. **வன்மைசெய் முதலை யொன்று**
வந்ததி லிருந்த தையா
இன்மைசெய் ததனை தள்ள
வியம்புவா யுபாய மென்ன
நன்மைசெய் கமுகன் சொல்லும்
நன்றியைக் கொன்ற பாவி
புன்மைசெய் மூட னுக்குப்
போதித்தா லன்ன வன்றான். **(81)**

(இ.ள்) அடாவடியான முதலை ஒன்று வந்து என் வீட்டில் தங்கியுள்ளது. அதனை அடித்துத் துரத்த உகந்த உபாயம் என்ன என்று சொல்லுவாய்'' என்று கேட்க, பிறருக்கு நன்மையே சிந்திக்கும் இயல்புடைய குரங்கு சொல்லும், ''நன்றிகொன்ற பாவியே, தீங்கு செய்யும் மூடனுக்கு அறிவுரை கூறினால் அவனோ,

குரங்கு குருவிக்கூட்டைக் கலைத்த கதை

597. **வீடுடை யவனை வீட்டை**
யிழந்திடச் செய்வா னென்ன
நாடுறு முதலை யந்த
நற்கதை யுரைப்பா யென்ன
நீடுறு குரங்கு சொல்லும்
நெடியதோர் பழும ரத்தில்
கூடுகொண் டனவி ரண்டு
தூக்கணாங் குருவி தாமே **(82)**

(இ.ள்) வீடுடையவனை வீட்டை இடிக்கச் செய்வான்'' என்று கூற, முதலை அந்தக் கதை என்ன என்று சொல்வாய் எனக் குரங்கைக் கேட்டுக் கொண்டது. குரங்கு அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கியது. ''உயர்ந்த பழ மரத்தில் இரண்டு தூக்கணாங் குருவிகள் கூடு கட்டி வாழ்ந்தன.

598. குளிரினால் நடுங்கி வானக்
கொடுமழை யால்ந னைந்து
நளிர்சுரத் தோடு தேகம்
நடுங்கியே பற்கள் கிட்டி
வளமறு குருங்கொன் றங்கு
வந்தது குருவி பார்த்தே
இளகிய மனத்தி னாலே
இன்சொலா லொன்று சொல்லும். (83)

(இ.ள்) ஒரு நாள் பெரிய மழை பெய்தது. மழையில் நனைந்து காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உடல் நடுங்கி, பற்கள் கிட்டிய நிலையில் குரங்கு ஒன்று அங்கு வந்தது. அதைப் பார்த்த தூக்கணாங் குருவி இளகிய மனத்தோடு இனிய சொற்களால் பேசத் தொடங்கியது.

599. கைகள்கா லிருந்து மிந்தக்
கன்மத்தை யனுப விக்கும்
செய்தியேனென்ன வூசி
மூஞ்சிகொள் சிறிய மூடா
வைதுநீ புத்தி சொல்ல
வல்லையோ வெனக்கோ பித்து
நெய்திடு மதன்றன் கூட்டை
நெடுங்கையாற் பிய்த்த தன்றே. (84)

(இ.ள்) ''ஐயா, உமக்குக் கைகளும் கால்களும் இருந்தும் ஒரு வீடு கட்டிக் கொள்ளாமல் இந்தத் துன்பத்தை அனுபவிப்பது ஏன்'' என்றது. உடனே

குரங்கு, ''ஊசி மூஞ்சி மூடனே சிறியவனாகிய நீ எனக்குப் புத்தி சொல்லும் தகுதி உடையவனோ'' எனச் சினந்து அக்குருவியின் கூட்டைத் தன் நீண்ட கைகளால் பிய்த்து எறிந்தது.

600. ஆதலால் கீழா னோர்கட்
காருப தேச்தி தாலும்
தீதுறு மென்று சொல்லச்
சிஞ்சுமா ரனுமு ரைக்கும்
கோதுடை யேனா னேனுங்
கூறுவா யோரு பாயம்
நீதியோ வென்ன சொல்லு
நெடியவா னரத்தின் வேந்தே. (85)

(இ.ள்) எனவே கீழானோர்க்கு யார் உபதேசித்தாலும் தீமையே வந்து சேரும் என்று குரங்கு சொல்ல, முதலை, ''குரங்குகளின் அரசே, நான் குற்றமுடையவனே யானாலும் எனக்குத் தற்போது நீதியான ஒரு உபாயத்தைச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டது.

601. நின்பகை யொடுபோர் செய்து
நீயிறந் திடிற்சு வர்க்கம்
பின்பவன் பொருதி றந்தாற்
பெரிதுநின் னிடங்கி டைக்கும்
முன்பொரு புத்தி சாலி
முறைமையி னாலு பேர்க்கும்
இன்பொடு செய்தாற் போல
வியற்றிட வேண்டு மென்றான். (86)

(இ.ள்) அது கேட்ட குரங்கு, ''உன் பகைவனோடு நீ போர் செய்து இறந்தால் உனக்குச் சுவர்க்கம் கிட்டும். அன்றி உன் போர்த்திறத்தால் வெற்றியடைந்தால் உனக்கு

உன் இடம் கிடைக்கும். முன்பு ஒரு புத்திசாலி நால்வர்க்கு முறைமையோடு சொன்னது போல் நீ செயல்பட வேண்டும்'' என்றது.

நரி நால்வர்க்கும் நான்குபாயஞ் செய்த கதை

வேறு

602. இறந்த யானையைத் தின்னவோ ரிகலனங் கெய்தச்
சிறந்த சிங்கமொன் றடைந்துநீ யாரெனச் சிறியேன்
மறங்கொள் நீ கொன்ற யானையைக் காத்திங்கு வதிந்தேன்
அறந்த வாச்சிங்க வரசனே யென்றதந் நரியே. (87)

(இ.ள்) காட்டில் இறந்த யானையைத் தின்பதற்குக் கிழ நரி ஒன்று அங்கு வந்தது. அப்பொழுது ஒரு சிங்கம் அங்கு வந்து 'யார் நீர்' எனக் கேட்டது. நரியோ, ''அறம் பிறழாச் சிங்க அரசனே சிறியவனான நான் வீரம் மிக்க தாங்கள் கொன்ற யானைக்கு காவல் செய்து இங்கு உள்ளேன். என்றது.

603. ஈது நான்கொன்ற தன்றுநீ கொள்கவென் றிசைத்துப்
போத மற்றொரு புலிவந்து யாரென நரியார்
மாது லாவிதை மடித்தகே சரியொன்றங் குளதால்
ஓது வேங்கையிங் குறிலெனக் குரையென வொளித்தே. (88)

(இ.ள்) சிங்கம், ''இது நான் கொன்றதன்று. நீயே இதனைக் கொள்க'' என்று கூறிவிட்டுச் சென்றது. அப்பொழுது ஒரு புலி அங்கு வந்து நீ யார்'' எனக் கேட்க, நரி, ''மாமா இதைக் கொன்ற சிங்கம் ஒன்று இங்கு உள்ளது. புலி இங்கு வந்தால் எனக்குச் சொல்'' என்று கூறி ஒளிந்துள்ளது.

604. என்ன காரண மதற்கெனில் வேங்கையொன் றெய்தி
முன்னோர் யானையைக் கொன்றுதான் மூழ்கப்போங் காலைத்
துன்னி யெச்சிலாக் கியதெனச் சொல்லும் வேங்கை
பின்ன ரெண்ணியே மருமக னேநினாற் பிழைத்தேன். (89)

(இ.ள்) ''என்ன காரணமென்றால் முன்பொருமுறை சிங்கம் ஒரு யானையைக் கொன்றுவிட்டு நீராடி வரச் சென்றபோது ஒரு வேங்கை அங்கு வந்து உணவை எச்சிலாக்கிச் சென்றது'' என்று கூறியது. அதைக் கேட்ட வேங்கை சிந்தித்துப்பார்த்து, ''மருமகனே இன்று உன்னால் நான் பிழைத்தேன்''

605. என்று சொல்லிமுன் னோடிய திதன் பினோர் குரங்கு
துன்ற நோக்கியிக் கரியினைத் துன்னெனக் கிழித்துத்
தின்று போவெனக் குரங்கதைக் கிழித்தது சிங்கம்
நன்று வந்ததென் றுரைத்திட நடுங்கியோ டியதே. (90)

(இ.ள்) ..என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டது. அதன் பின்னர், ஒரு குரங்கு அங்குவர, அதை அச்சத்துடன் பார்ப்பதுபோல் பார்த்து, ''இந்த யானையைக் கிழித்துத் தின்று போ'' என்று கூற, குரங்கு அதன் தோலைக் கிழித்தது. உடனே நரி, ''சிங்கம் வந்துவிட்டது'' என்று கூறியது. குரங்கு அஞ்சி நடுங்கி ஓடிவிட்டது.

606. பக்கு வஞ்செய்து குரங்குபோ தலுநரி பார்த்துத்
தக்க தென்றுணப் போம்பொழு தொருநரி சார்ந்து
கைக்கொ ளற்கென வதையடித் தோட்டியே கடிதில்
தொக்க வெம்பசி தொலைந்திட வுண்பது நெடுநாள். (91)

(இ.ள்) யானையை உண்பதற்கு ஏற்ற வகையில் பக்குவம் செய்துவிட்டு குரங்கு போகவும். நரி இதுவே உண்ணத்தக்க நேரம் என்று உண்ணத் தொடங்கியது. அப்பொழுது ஒரு நரி வந்து அந்த யானையைக் கைப்பற்ற முயற்சி செய்தது. அந்த நரியைக் கிழநரி அடித்து விரட்டிவிட்டது. பிறகு தன் பசி தீரும்படியாக அதை நெடுநாள் உண்டு வாழ்ந்தது.

607. **சாம பேதநற் றானதண் டஞ்செய்த சம்பு**
தீமை நீங்கிய தென்னநின் பகைவர்க்குச் செய்து
நீமு யங்கிடத் திருந்திடு வேறிட நிற்கில்
நாம வெந்துயர் நணுகுமென் றிசைத்தது குரங்கு. (92)

(இ.ள்) சாம, பேத, தான, தண்டத்தால் நரி தீமையை நீக்கியது போல் நீ உன் பகைவரை வென்று உன்னிடத்தில் இருந்திடு. தவிர நீ வேரிடத்தில் இருப்பாயாகில் கொடிய துன்பம் உனக்கு நேரிடும்'' என்று கூறியது குரங்கு.

வேற்றூர் சென்று கடிபட்ட நாயின் கதை

608.சிஞ்சு மாரனும் யாதினா லதுதெரித் திடுகென்
றஞ்சி யோதலும் அயோத்தியி லிருக்குமோர் சுணங்கன்
பஞ்ச மெய்தலால் வேறொரு தேசத்திற் படர்ந்து
துஞ்சி னீங்கியோர் மாதுதான் சோறிட விருந்தே. (93)

(இ.ள்) ''எதனால் இவ்வாறு கூறுகிறாய் எனக்குத் தெரிவித்திடுக'' என்று சிஞ்சுமாறன் அஞ்சியபடி கேட்க, குரங்கு தொடர்ந்தது. ''அயோத்தியில் இருக்கும் ஒரு நாய், அங்குப் பஞ்சம் ஏற்படவே, அவ்விடத்தை விட்டு வேறோர் ஊருக்குச் சென்று, அங்கு ஒரு பெண் சோறிட உண்டு அங்கேயே இருந்தது.

609. **சிறிது நாட்சென்ற பின்பந்த திருமனை விடுத்து**
மறுகி னூற்றிட மற்றைநா யாவுமேல் விழுந்தே
இறுதி வந்தெனக் கடித்தலும் எழுந்தது வோடி
மறுவி லாததன் னகரிடை நொடியில்வந் ததுவே. (94)

(இ.ள்) சிலநாள் சென்றபின் அந்த வீட்டை விட்டு வெளியே வர, அத்தெரு நாய்கள் எல்லாம் அதன்மேல்

விழுந்து சாகும்படிக் கடித்தன. அஞ்சிய அந்நாய் அங்கிருந்து விரைந்து ஓடித் தன் நகரத்திற்கு வந்து சேர்ந்தது.

610. வந்த பின்னரவ் வூரிடை மருவிய நாய்கள்
அந்த தேயநற் றேயமோ வெனவகல் புவியுள்
எந்த தேயத்து நல்லதத் தேயநம் மினத்தில்
பந்த வொற்றுமை யின்மையால் பலித்ததிவ் விடரே. (95)

(இ.ள்) தன் ஊருக்கு வந்தபின் அந்த ஊரில் இருந்த நாய்கள், அந்த ஊர் நல்ல ஊர்தானா என வினவின. பரந்துபட்ட இந்த உலகில் எந்த ஊரைவிடவும் அது நல்ல ஊர்தான். ஆனால் நம் இனத்திடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் இந்தத் துன்பம் வந்தது'' என்றது அந்த நாய்.

611. ஆத லாற்றன திடத்தினி லமர்ந்திட லினிதாம்
நீதி யாலந்த முதலையை நீவெற்றி கொள்வாய்
போதி யென்றது முதலையும் போய்ப்பொரு ததனை
வீதல் செய்துதன் னிடத்தினில் மேவிவாழ்ந் ததுவே. (96)

(இ.ள்) எனவே தனதிடத்தில் இருப்பதே இனியது ஆகும். நீ அந்த முதலையை போரிட்டு வெல்வாய். போய் வா'' என்றது குரங்கு. முதலையும் அங்கிருந்து சென்று தன்னிடத்தைக் கைப்பற்றிய முதலையுடன் போரிட்டு அதனைக் கொன்று விட்டுத் தன்னிடத்திலேயே தங்கி வாழ்ந்து வந்தது.

நான்காவது தந்திரம் லத்த நாசம் முற்றும்

ஐந்தாவது தந்திரம்

அசம்பிரேட்சிய காரித்துவம்

(காரியத்தைத் தீர விசாரியாமல் செய்தல்)

612. சுருதியந் தத்துந் தில்லைத்
தொல்லமன் றத்து மன்பர்
உருகுநெஞ் சத்து மாடல்
உகந்தபே ரொளியைப் போற்றி
மருவிய பஞ்ச தந்திர
வகையின்முன் னான்கும் சொன்னேன்
கருதிய சம்பி ரேட்சிய
காரித்து வஞ்சொல் வோமே. (1)

இ.ள்) மறைகளின் முடிவிலும், தொன்மையான தில்லை மன்றத்துள்ளும் அன்பர்களின் உருகும் நெஞ்சத்திலும் ஆடியருளும் பேரொளியாகிய சிவபெருமானைப் போற்றிச் செய்து, பஞ்சதந்திரத்தின் முதல் நான்கு தந்திரத்தையும் சொன்னேன். இனி அசம்பிரேட்சியகாரித்துவம் என்னும் தந்திரத்தையும் சொல்வோம்.

613. ஐவகை தந்தி ரத்தி
லந்தியோர் நான்கு மந்த
மெய்வகை மறையோன் சொல்ல
வேந்தர்தம் மைந்த ராய்ந்தே
செய்வகை உபாய னீதித்
திறமெலா மறிந்தோம் மேலோய்
கைவருஞ் சம்பி ரேட்சிய
காரித்து வஞ்சொல் லென்றார். (2)

(இ.ள்) ஐந்துவகை தந்திரத்தில் முதல் நான்கு தந்திரங்களின் தன்மைகளை மறையோனாகிய சோமசன்மா கூற, வேந்தனின் மக்கள் அவற்றை நன்கு உணர்ந்தவராய், ''செய்யக்கூடிய உபாயங்களின் நீதிகளின்

திறத்தையெல்லாம் அறிந்தோம். மேலானவரே, இறுதியில் வரும் அசம்பிரேட்சிய காரித்துவமும் சொல்ல வேண்டும்'' என்றனர்.

614. அரசனார் குமாரர் கேட்க
யாதொரு கரும மேனும்
திரமொடு விசாரி யாமல்
செய்யவொண் ணாது செய்தால்
வரமிகு கீரி தன்னை
வதைத்ததைக் கொன்று பின்னர்
தரணியில் மறையோன் வீழ்ந்து
தவித்தபோ லாமென் றானே. (3)

(இ.ள்) மன்னன் மக்கள் இவ்வாறு கேட்க, சோமசன்மா கூறுவான், எந்தவொரு செயலானாலும், தீர விசாரியாமல் செய்யக் கூடாது. அப்படித் செய்தால் வரமாக வந்த கீரியைக் கொன்ற பின்னர் மறையோன் தரையில் வீழ்ந்து தவித்தது போலாகும் என்றான்.

கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை

615. என்னவக் கதையே தென்றார்
எழில்பெறு கௌட தேசம்
மன்னவன் தனக்கு நித்தம்
மருவுபஞ் சாங்கஞ் சொல்வோன்
தன்னுடை தேவீ கர்ப்பந்
தரித்தில எதனாற் பிள்ளை
என்னவோர் கீரி தன்னை
எடுத்தவன் வளர்த்தான் மன்னோ. (4)

(இ.ள்) அந்தக் கதை என்னவென்று அரசகுமாரர் கேட்க, மறையோன் சொல்வான், அழகிய கௌட தேசம் என்னும் நாட்டை ஆண்ட மன்னனின் அவையில் நாளும் பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லும் அந்தணனுடைய

மனைவி கருவுறாமல் பிள்ளையின்றி இருந்ததால் அவன் ஒரு கீரியைப் பிள்ளை போல் எடுத்து வளர்த்து வந்தான்.

616. புத்திர வாஞ்சை யாலே
புல்குவன் மடிமேல் வைப்பன
முத்தமு மிட்டுக் கொள்வன்
முந்தியே பாலுஞ் சோறும்
துய்த்திட வளிப்பன் மார்பில்
தூங்கவும் படுத்திக் கொள்வான்
மெத்தவுங் களித்து நெஞ்சில்
விருப்புடன் வளர்த்தான் பின்னர். (5)

(இ.ள்) அந்தக் கீரியைப் பிள்ளைப் பாசத்தால் எடுத்து அணைப்பான். மடிமேல் வைத்துக் கொள்வான். முத்தமிடுவான். அதற்கு உணவாகப் பாலும் சோறும் அளிப்பான். அதனைத் தன் மார்பில் போட்டுத் தூங்கவைப்பான். அதனை மிகுந்த மனமகிழ்வுடன் வளர்த்து வந்தான்.

617. மனையவள் யாக சேனி
வயிற்றினில் கருப்பங் கண்டே
சுனைவளர் குவளை யுண்கட்
டோகைநல் லாளே நீயோர்
தனையனைப் பெறுவா யன்னான்
சதுர்மறைக் குரிய னாவான்
நினையுநம் குலமும் காப்பான்
நிதியமும் படைத்து வாழ்வன். (6)

(இ.ள்) பின்னர் ஒரு சமயம் அவன் மனைவி யாகசேனி கருவுற்றாள். அதைக் கண்டறிந்த அந்தணன் அவளைப் பார்த்து, ''சுனையில் வளர்ந்திருக்கும் அழகிய குவளை மலர் போன்ற கண்களை உடைய தோகை நல்லாளே, நீ ஓர் ஆண் மகவைப் பெறுவாய். அவன்

நான்கு வேதங்களுக்கும் உரியவனாவான். உன்னையும் நம் குலத்தையும் காப்பவனாவான். பெருஞ்செல்வமும் படைத்து வாழ்வான்.

618. வயதொரு நூறி ருப்பன்
மன்னவன் சித்தம் மெச்ச
நயப்புரோ கிதமுஞ் சொல்லி
நலங்களும் பெறுவ னென்றே
துயவொடு தேவ சன்மா
சாற்றலும் தேவி யான
கயல்நெடுங் கண்ணா ளென்ன
காரியஞ் சொன்னீ ரென்றாள். (7)

(இ.ள்) அவன் நூறுவயது வரை வாழ்வான். மன்னன் மனமகிழ்ந்து பாராட்ட நயமுடன் தினமும் புரோகிதமும் சொல்லிப் பல நலன்களும் பெறுவான்'' என்று தேவசன்மா என்னும் அந்தணன் கூறினான். அது கேட்ட கயல் போன்ற நீண்ட கண்களை உடைய அவன் மனைவி, ''என்ன காரியம் சொன்னீர்

619. காணுமுன் கேட்கு முன்னே
காரியங் களைநி னைந்து
வீணிலே பூமி யின்மேல்
விழுந்துருண் டழுது நெஞ்சம்
நாணினன் பிரம சாரி
நாடிலங் கதுபோல் நீயும்
பூணணி மார்பா வீணே
புகலவொண் ணாதென் றாளே. (8)

(இ.ள்) எதையும் பார்ப்பதற்கு முன்னும் அதைப் பற்றிக் கேட்பதற்கு முன்னும் அதைப்பற்றிய செயல்களைக் கற்பனையால் நினைத்துப் பின் அது வாய்க்காமல், வீணாக பூமியின் மேல் விழுந்து உருண்டு புரண்டு அழுது நெஞ்சம் நாணமுற்ற பிரமச்சாரி

ஒருவனைப் போல், பூணூலணிந்த மார்பனே வீணான வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்'' என்றாள்.

பொரிமாத் தோண்டியை யுடைத்த பிரமச்சாரி கதை

620. உரைத்திடு கதையே தென்ன
வோதுமோர் நகரந் தன்னில்
தரித்திரன் பிரம சாரி
சார்ந்துமோர் மனையி லுண்டான்
அரைத்திடு பொரிமாத் தோண்டி
அவற்கொரு மறையோ னீந்தான்
தரித்திரன் பருப்புஞ் சோறும்
தின்றதோர் மயக்கத் தாலே. (9)

(இ.ள்) அது கேட்ட அந்தணன் தேவசன்மா, அக்கதை என்ன என்று கேட்க, அவள் சொல்லத் தொடங்கினாள். ஒரு நகரத்தில் மிக்க வறுமையில் வாடும் பிரமச்சாரி ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் ஒரு வீட்டில் உணவு உண்டான். அவனுக்கு ஒரு பிராமணன் பொரிமா நிறைந்த ஒரு தோண்டியைக் கொடுத்தான். பருப்பும் சோறும் உண்ட மயக்கத்தால் அந்த பிரம்மச்சாரி...

621. மற்றொரு நகர்க்குச் செல்லும்
வழியிலோர் மணற்ற டத்தில்
சற்றொரு கணப்போ தங்கே
தனித்தவன் இருக்கும் போது
உற்றகா ரியங்கள் கோடி
யுன்னிநா னிந்த மாவை
விற்றுநாம் ஆடு கொண்டு
மேய்க்க வோரிரண்டு குட்டி. (10)

(இ.ள்) .. வேறொரு நகரத்திற்குச் செல்லும் வழியில் ஒரு மணல் மேட்டில் சற்றுநேரம் தனித்து ஓய்வெடுக்கும்போது, தன் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு கோடி கற்பனையில் ஆழ்ந்தான். அதில் அவன், 'நான்

இந்த மாவை விற்று ஒரு ஆடு வாங்கி வளர்த்தால் அது இரண்டு குட்டிகள் போடும்.

622. போடுமவ் விரண்டி லொன்று
பொலிகடா தன்னை விற்று
நாடுபெண் ணாடி ரண்டு
நயவிலை யாகக் கொள்வோம்
ஆடொரு நாலா மந்த
ஆடுக ளிரண்டி ரண்டாய்ப்
போடுமக் குட்டி யோடே
பொருந்துபன் னிரண்டா டாமே. (11)

(இ.ள்) அந்த இரண்டில் ஒன்று பொலிகடாவாக அதனை விற்று பெண்ணாடு இரண்டு விலைக்கு வாங்கலாம். அப்பொழுது மொத்தம் நான்கு ஆடுகள் ஆகும். அந்த நான்கு ஆடுகளும் இரண்டிரண்டு குட்டிகள்போட மொத்தம் பன்னிரண்டு ஆடுகள் ஆகும்.

623. பன்னிரண் டாட்டை விற்றுப்
பசுக்களோ ரிரண்டு கொள்வோம்
தன்னிலே பட்டி மேய்ந்து
தருக்கியே இரண்டு மீனும்
மன்னுபால் நெய்யும் விற்று
மற்றிமிரு பசுவுங் கொள்வோம்
அன்னவப் பசுக்க ளாறும்
ஆறுசெங் கன்று போடும். (12)

(இ.ள்) அந்த பன்னிரண்டு ஆடுகளை விற்று இரண்டு பசுக்களை வாங்கலாம். அவை தானாக மேய்ந்து இரண்டு குட்டிகளை ஈனும். அதனால் பாலும் நெய்யும் விற்று மேலும் இரண்டு பசுக்களை வாங்குவோம். அந்த ஆறு பசுக்களும் ஆறு ஆண் குட்டிகளை ஈனும்.

624. மூவணை யேருங் கட்டி
முன்னுள நிலங்க ளெல்லாம்
ஓவற வளங்க ளாக
உழுதுநாம் பயிரு மிட்டே
மேவுதா னியங்க ளெல்லாம்
விலைகளும் குறைய விற்றுக்
காவல னறிக்கை பண்ணிக்
கனக்கவோர் வீடுங் கட்டி. (13)

(இ.ள்) அந்த ஆறு கன்றுகளை வளர்த்து மூன்று ஏர் பூட்டி நிலத்தை எல்லாம் உழுது பயிரிட்டால் கிடைக்கும் தானியங்களைக் குறைந்த விலைக்கு விற்று அரசனுக்குரிய வரி கட்டி நல்லதோர் வீடும் கட்டி....

625. இருந்துநாம் பணமுங் காசும்
ஏரொடு பாருந் தேடி
பொருந்திய பிரா ணர்க்குப்
போசன மிடுவோம் இட்டால்
வருந்தியே நமக்குப் பெண்ணும்
வலியவே கொடுப்பா ரந்த
திருந்திழை யாளும் நாமும்
செருக்கியங் கிருக்கும் நாளில். (14)

(இ.ள்) அந்த வீட்டில் வாழ்ந்து பணமும் காசும் ஏரும் பாரும் தேடிச் சேர்த்து பிராமணர்களுக்கு அன்னதானம் செய்வோம். அவ்வாறு செய்தால், நமக்குப் பெண் கொடுக்க வலிய வந்து வேண்டுவர். நாமும் அந்த அழகிய பெண்ணை மணந்து சேர்ந்து வாழ்ந்திருக்கலாம்.

626. மாரனும் ரதியும் போலே
மருவியே வாழும் போது
சேருவோம் சேர்ந்து நல்ல
சேயையும் பெற்றெ டுப்போம்

ஏர்பெறும் சோமசன்மா
என்றுபே ரிட்டவ் வூரில்
காரகத் தனமாய் வாழ்வு
கனம்பெற விருப்போ மென்றும். (15)

(இ.ள்) மன்மதனும் ரதியும் போல் சேர்ந்து வாழ்ந்து வரும் நாளில் இருவரும் இணைவதால் நல்லதொரு குழந்தையையும் பெற்றெடுப்போம். அக்குழந்தைக்கு சோமசன்மா என்று அழகிய பெயரிட்டு, இவ்வூரில் செயலதிகாரியாய் மதிப்புமிக்க வாழ்வு வாழ்ந்திருப்போம்.

627. அப்படி இருக்கும் நாளிலி
அந்தியிற் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணாள் போவாள்
குழந்தையு மழும்நா மோடி
இப்படி யடிப்போ மென்று
எடுத்தொரு தடியி னாலே
செப்பிய பொரிமாத் தோண்டி
சிதறிட வடித்து விட்டான். (16)

(இ.ள்) அப்படி பெருமையான வாழ்வு வாழும் நாளில் மாலை நேரத்தில் பசுக்களைக் கட்ட மனைவி போவாள். அப்பொழுது குழந்தை அழும். நாம் ஓடிப்போய் இப்படி அடிப்போம்' என்று எண்ணிக் கொண்டு ஒரு தடியை எடுத்து பொரிமாத் தோண்டியை உடையும்படி அடித்துவிட்டான்.

628. கலங்கினன் பிரம சாரி
காரகஸ் தங்க ளெல்லாம்
துலங்கிய பொரிமா வைத்த
தோண்டியோ டிழந்தோ மென்று

மலங்குகண் ணீர்கள் சோர

வயிற்றினி லடித்துக் கொண்டே

நிலந்தனில் புரண்டு வீழ்ந்து

நெடுந்துய ரடைந்தா னன்றே. (17)

(இ.ள்) பொரிமாத் தோண்டி உடைந்ததால் பிரமச்சாரி மனம் கலங்கினான். தன்னுடைய தனங்களெல்லாம் பொரிமா வைத்த தோண்டியோடு இழந்து விட்டோம் என்று கண்களில் நீர் வழிய வயிற்றினில் அடித்திக்கொண்டு மண்ணில் விழுந்து புரண்டு பெருந்துயருடன் அழுதான்.

கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை - தொடர்ச்சி

629. ஆதலால் காணு முன்னே

அகத்தினும் நினைக்கொண் ணாதென்

றோதிய யாக சேனி

யுடனவ னிருக்கும் நாளில்

தீதிலா முகூர்த்தந் தன்னில்

சேயனும் பிறந்தா னந்த

சூதகம் கழிக்கும் நாளோர்

சுனையினில் மூழ்கப் போனாள். (18)

(இ.ள்) எனவே எதையும் கண்டடையுமுன் அதைப் பற்றி மனத்தால் நினைக்கவும் கூடாது, என்று கூறிய யாகசேனி அவனுடன் வாழ்ந்திருக்கும் நாளில் ஒரு குற்றமற்ற நல்ல முகூர்த்தத்தில் மகனும் பிறந்தான். அக்குழந்தையைப் பெற்றபின் ஒரு மாதத்தில் தீட்டுக் கழிப்பதற்கான நாளில் சுனையில் மூழ்கிக் குளிக்கச் சென்றாள்.

630. ஆயிழை போன பின்பு

ஆரணம் முழுதும் வல்லோன்

சேயினைக் காத்தி ருந்தான்

சிராத்தமென் றரசர் தூதர்

நீயவண் வருக வென்றார்
நேரமுஞ் சென்று போனால்
போயதை யெல்லாம் மற்றப்
புரோகிதர் கொண்டு போவார். (19)

(இ.ள்) அவள் சென்றபின் வேதம் முழுதும் கற்ற அந்தப் பிராமணன் குழந்தைக்குக் காவலாக இருந்தான். அப்பொழுது அரசனின் தூதர்கள் அரண்மனையில் சிரார்த்தம் செய்வதற்கு வரவேண்டும். வருக என்று அழைத்தனர் அரசன் அழைத்தபோது போகாமல் காலம் தாழ்த்திச் சென்றால் மற்ற புரோகிதர்கள் சென்று புரோகிதம் செய்வதற்கான பொருளினைப் பெற்றுச்சென்று விடுவர்.

631. என்றுதன் மனதி லெண்ணி
இன்பமாய் வளர்த்த கீரி
தன்னையே துணையா யந்தத்
தனையன்முன் வைத்து நீங்கிச்
சென்றன னரசன் வீட்டில்
சிராத்தமும் முடித்துப் பெற்ற
பொன்றுகி லரிசி யெல்லாம்
பொதிகளி லெடுத்துக் கொண்டே. (20)

(இ.ள்) .. என்று மனத்தில் நினைத்து, மகிழ்வுடன் வளர்த்த கீரியைக் குழந்தைக்குத் துணையாய் குழந்தைக்கு முன் வைத்துவிட்டுப் புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றான். அரசன் வீட்டில் சிரார்த்தம் முடித்துப் பெற்ற பொன், துகில், அரிசி முதலான அனைத்தையும் பொதிகளாய்க் கட்டி எடுத்துக்கொண்டு..

632. வருமுன்னே சேயைக் கிட்டி
வந்தது நாக மந்த
கரியநா கத்தைக் கீரி
கடித்திரு துண்டாய்ப் போட்டு

குருதிவா யெங்கு மாக்கிக்
கொண்டுசந் தோசங் காட்ட
அருமறை யோன்முன் செல்ல
அய்யோகெடுத் தாயே வென்றே. (21)

(இ.ள்) வீட்டிற்கு வருமுன்னே, வீட்டில் அந்தக் குழந்தையை நெருங்கி ஒரு நாகம் வந்தது. அந்தக் கரிய நாகத்தைக் கண்ட கீரி அதனைக் கடித்து இரண்டு துண்டுகளாக ஆக்கியது. அதனால் அதன் வாயெல்லாம் குருதியாக்கிக்கொண்டு தன் மகிழ்ச்சியைக் காட்ட ஓடி வந்தது. அதைக் கண்ட அந்தணன் தன் குழந்தையைக் கடித்தது என எண்ணிக் கொண்டு 'ஐயோ கெடுத்தாயே' என்று கூறிக்கொண்டு,

633. தண்டினா லடித்துக் கொன்றான்
தளர்வொடு வீட்டில் வந்தான்
கண்டனன் பிள்ளை தன்னைக்
கரியநா கத்தை ரெண்டு
துண்டமாய்க் கடித்துப் போட்டுத்
தூரவே கிடக்கக் கண்டான்
மண்டிய துயரங் கொண்டு
வயிற்றினி லடித்துக் கொண்டான். (22)

(இ.ள்) கையிலிருந்த தண்டினால் அக்கீரியை அடித்தக் கொன்றான். மனம் தளர்ந்தவனாய் வீட்டினுள் வந்த அவன் பிள்ளையையும் இரு துண்டுகளாய் கடித்துப் போடப்பட்ட நாகத்தையும் கண்டான்.கீரியைக் கொன்ற துயரத்தினால் வயிற்றில் அடித்துக் கொண்டான்.

634. வாயிலு மடித்துக் கொண்டான்
மண்ணையும் போட்டுக் கொண்டான்
சேயிலு மதிக மான
சேயைநான் கொன்றே னென்றான்

நீயெனக் கெதிரே வந்து
நின்றெனைக் கெடுத்தா யென்றான்
போயதன் மேல்வி ழுந்து
புரண்டுருண் டரற்றி னானே. (23)

(இ.ள்) வாயில் அடித்துக் கொண்டான், மண்ணையும் அள்ளிப் போட்டுக்கொண்டான். பெற்ற குழந்தையைவிட மேலான குழந்தையை நானே கொன்றேன் என்றான். என் எதிரே வந்து எல்லாவற்றையும் கெடுத்தாயே என்றான். ஆற்றாமல் அதன் மேல் விழுந்து புரண்டு உருண்டு அரற்றினான்.

635. தேவியும் முழுகி வந்து
தேவசன் மாவை நோக்கி
பாவியே ஏது கீரிப்
பாலனிங் கிறந்த தென்ன
ஓவென அலறி நின்றான்
உற்றவா றவனுஞ் சொன்னான்
கவியங் கண்ணி தானும்
கனலிடு மெழுகொத் தாளே. (24)

(இ.ள்) அவனுடைய மனைவி யாகசேனியும் நீராடிவிட்டுத் திரும்பி வந்து தேவசன்மாவை நோக்கி, ''பாவியே என்ன இது? நம் கீரி மகன் இறந்தது எவ்வாறு?'' என்று கேட்க, தேவசன்மா ஓவென்று அலறினான். நடந்ததை அவளிடம் விபரமாகச் சொன்னான். சிவந்த அழகிய கண்ணையுடைய யாகசேனி அனலில் இட்ட மெழுகு போல் உருகினாள்.

636. அய்யகோ விசாரி யாமல்
அவகேடும் வந்த தேநான்
செய்யும்வா றென்ன வென்று
தேவசன் மாவை நோக்கி

கையற விசாரி யாமல்
கண்டது கொண்ட டித்து
நையவே யிறந்து போன
நாவிதன் கதைபோ லென்றாள். (25)

(இ.ள்) அய்யகோ எதையும் தீர விசாரியாமல் செய்த செயலால் நமக்குக் கேடு வந்ததே. நான் என்ன செய்வேன் என்று புலம்பிய அவள் தேவசன்மாவை நோக்கித் தீர விசாரிக்காமல் கையில் கிடைத்ததைக் கொண்டு அடித்து இறந்து போன நாவிதன் கதை போலாயிற்றே என்றாள்.

நாவிதன் இறந்த கதை

637. **நாவிதன் கதையே தென்ன**
நகரமொன் றதிலோர் செட்டி
தேவியோர் பிள்ளை பெற்றாள்
தீயநாள் முகூர்த்தத் தாலே
சாவார்தாய் தந்தை யன்னான்
தரித்திர னாகிப் பின்பு
மேவுநன் செல்வ மென்று
விளம்பினர் கணித நூலோர். (26)

(இ.ள்) உடன், நாவிதன் கதை என்னவென்று தேவசன்மா கேட்க யாகசேனி கூறுவாள். ''ஒரு நகரத்தில் வணிகன் ஒருவனின் மனைவி ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அக்குழந்தை பிறந்த தீய நேரத்தின் பலனாலே, அதன் தாய் தந்தை இறப்பர். சிறுவனும் வறுமையால் பெரிதும் வாடுவான். பின்னர் ஒரு காலத்தில் பெருஞ்செல்வம் அவனுக்குச் சேரும் எனச் சோதிடர் கூறினார்.

638. **பயந்துதான் வணிக னந்தப்**
பாலனை எறிந்து போட்டான்
அயர்ந்தவன் தேவி மூர்ச்சை
ஆகியே விழுந்து விட்டாள்

நயந்தரு தேவி போனாள்
நமக்கினி வாழ்வே தென்று
சயந்தரு வணிக னாவி
தானாகப் போக்கிக் கொண்டான். (27)

(இ-ள்) அதைக் கேட்டு அஞ்சிய அந்த வணிகன் குழந்தையைத் தூக்கி எறிந்து விட்டான். அதைப் பார்த்த அவன் மனைவி மயங்கி வீழ்ந்து இறந்தாள். தன் அருமை மனைவி இறந்தபின், இனித் தனக்கு வாழ்வு ஏது என்று எண்ணி அந்த வணிகனும் தற்கொலை செய்து கொண்டான்.

639. இப்படி இவர்கள் செத்தார்
இவையெலாம் அரசன் கேட்டுத்
தப்பற வணிக னீட்டுந்
தனமெலாம் எடுத்துப் போனான்
முப்பழி யாமோ வென்று
முதியளோர் தாதி யந்தக்
குப்பைமே லெறிந்து போட்ட
குழந்தையை எடுத்துப் பார்த்தாள். (28)

(இ-ள்) இவர்கள் இவ்வாறு இறந்ததைக் கேட்ட அரசன், வணிகன் வீட்டுச் செல்வத்தைத் தானே எடுத்துக் கொண்டான். மூன்று உயிர்களும் இறந்துவிடுமோ என்று எண்ணிய முதியவள் ஒருத்தி குப்பைமேல் எறிந்து போட்ட குழந்தையை எடுத்துப் பார்த்தாள்.

640. இழைத்தநாள் வராமை யாலே
எத்தனை சிறுமைப் பட்டும்
பிழைத்தது கிடப்ப வந்தப்
பிள்ளையை எடுத்துப் போய்த்தான்
இழைத்ததன் கூலி யாலே
ஒருத்தியை முலை கொடுக்க
அழைத்துவந் தவள்மு லைப்பால்
அருத்துவித் தவள் வளர்த்தாள். (29)

(இ.ள்) அக்குழந்தை இறப்பதற்குக் குறித்த நாள் வராததால், எத்தனை சிறுமைப் படுத்தப்பட்டுத் தூக்கி எறியப்பட்டாலும் பிழைத்திருந்தது. அந்தக் குழந்தையை எடுத்துப் போய் தான் உழைத்து ஈட்டிய பொருளை ஒருத்திக்குக் கொடுத்து தாய்ப்பால் ஊட்டச் செய்தாள். அப்பெண் முலைப்பால் கொடுக்கச் செய்து அக்குழந்தையை வளர்த்தாள்.

641. வளர்ந்தனன் செட்டி பாலன்
வயதொரு பதினா றாயும்
இளந்தலைப் பட்டுக் கொண்டே
இருந்தனன் தரித்திர த்தால்
உளந்தடு மாறி யோர்நாள்
உறங்கிய கனாவி லாங்கோர்
வளந்தரு சித்தன் வந்து
வருந்தல்நீ வருந்த வேண்டாம். (30)

(இ.ள்) வணிகன் மகன் வளர்ந்தான். பதினாறு வயதான இளம் பருவத்திலும் வறுமையால் துன்பப் பட்டுக்கொண்டிருந்தான். ஒரு நாள் மனத்துன்பத்துடன் அவன் உறங்கும்போது கனவில் ஒரு சித்தர் வந்து, 'நீ வருத்தப்பட வேண்டாம்.

642. விடியுமுன் னெழுந்தி ருந்து
வீடெலாஞ் சுத்தி பண்ணி
முடிமயி ரிறக்கிக் கொண்டு
மூழ்கிவெண் ணீறு பூசி
தடியுமொன் றெடுத்துக் கொண்டு
தன்மனை முன்றில் தன்னில்
கடிகைமூ வைந்து மட்டுங்
காத்துநீ யிருக்கி லங்கே. (31)

(இ.ள்) பொழுது விடியுமுன் எழுந்து வீடெல்லாம் சுத்தம் செய்து முடிமயிரை மழித்து நீரில் மூழ்கி எழுந்து

திருநீறு பூசிக்கொண்டு ஒரு தடியை எடுத்துக்கொண்டு உன் வீட்டின் முன் பதினைந்து நாழிகை காலம் காத்திருந்தால்,

643. மதியமாம் வேளை தன்னில்
வருவர்பிச் சைக்கு மூவர்
பதறிநீ எழுந்திருந் திருந்து
பார்த்துநீ யவரை மூளை
சிதறிட வடித்தா லந்த
சித்தர்கள் மூவர் மூன்று
நிதிகளா யிருந்து நெஞ்சில்
நினைத்தது தருவா ரென்றார். (32)

(இ-ள்) மதியமாகிய உச்சி வேளையில் மூவர் பிச்சைக்கு வருவர். அப்பொழுது நீ எழுந்து அவர்களைத் தடிகொண்டு மூளை சிதற அடித்தால் அந்தச் சித்தர்கள் மூவரும் மூன்று நிதிகளாக மாறி இருந்து நீ நெஞ்சில் நினைத்ததை நடத்திக் கொடுப்பர்'' என்றார்.

644. விழித்தன னவரைக் காணான்
வீடெலாஞ் சுத்தி பண்ணி
அழைத்துநா விதன்கை யாலே
அவன் பணி கொண்டு மூழ்கிக்
குழைத்துவெண் ணீறு பூசிக்
கூறிய நேரம் மட்டாய்க்
கழைத்தடி கையில் கொண்டு
காத்தவ னிருந்தான் மன்னோ. (33)

(இ-ள்) கனவு கண்டு விழித்தவன் சித்தரைக் காணவில்லை எனினும் கனவில் கூறியது போல் வீட்டைச் சுத்தம் செய்து நாவிதனிடம் சென்று முடிமயிரை மழித்து, நீரில் மூழ்கி, திருநீற்றைக் குழைத்துப் பூசிக் கொண்டு, கனவில் சித்தர் சொன்ன காலம் வரை கையில் தடியுடன் காத்திருந்தான்.

645. அப்படித் தானே மூவர்
அந்தவே ளையதனில் வந்தார்
கொப்பெனத் தடியி னாலே
கொண்டவன் அடித்த போது
கப்பரை சிதறி யங்கே
கனகமாய்க் கிடக்கக் கண்டான்
அப்புறம் அவரைக் காணான்
அவருமுந் நிதிய மானார்.[1] (34)

(இ.ள்) கனவில் கூறியபடி அந்நேரத்தில் மூவர் வந்தனர். உடனே தடியை எடுத்து அவர்களை அவன் அடித்த போது அவர்கள் தலை சிதறிப் பொன்னாக மாறிக் கிடக்கக் கண்டான். அதன் பிறகு அவர்களைக் காணவில்லை. மாறாக மூன்று நிதியங்களாக ஆகிவிட்டனர்.

646. கண்டனன் நாவி தன்தான்
கருதியவ் வாறு தானும்
முண்டித னாகி வந்த
மூவரைத் தடியி னாலே
கொண்டனன் மூவர் கூடிக்
கூவினர் காவ லாளர்
கண்டனர் அவனை வெட்டிக்
கழுவிலே போட்டு விட்டார். (35)

(இ.ள்) இதனைக் கண்டான் நாவிதன். தானும் அவ்வாறு செய்து பெரிய செல்வத்தைச் சேர்த்துக் கொள்ளலாம் எனக் கருதி தலை மழித்துக் காத்திருந்து வந்த மூவரைத் தடியினால் அடித்தான். மூவரும் அலறினர். காவலர்கள் இதைக் கண்டு, அந்த நாவிதனை வெட்டிக் கழுவில் ஏற்றினர்.

பா. பே.: பாடல் 645. 1. தப்பற வவரு மங்கே
தமனிய மாகக் கண்டான்
செப்பிய வாறெ டுத்துத்
திருமனை தனில்வைத் தானே

647. தீரவே விசாரி யாமல்
செய்யுமோர் கருமத் தாலே
பாரிய மனைவி யாதி
பற்றிடு முயிருங் கேடாம்
காரியந் தப்பி னாலுங்
கருதியோர் குறிப்பி னாலே
தேருவார்க் கின்ப மெய்துஞ்
செட்டியார் கதைபோ லென்றாள். (36)

(இ.ள்) எனவே எதையும் தீர விசாரிக்காமல் செய்யும் செயலாலே, தன் மனைவி முதலாக அனைத்தும் இழப்பதோடு தன்னுயிரையும் இழக்க நேரலாம். செயல்களைத் தவறிச் செய்தாலும் கிடைக்கும் குறிப்பினாலே தவறைத் திருத்திக் கொள்வோர்க்கு இன்பம் எய்தும், செட்டியார் கதை போன்று'' என்று சொன்னாள் யாகசேனி.

செட்டி கதை

648. செட்டியார் கதையே தென்ன
திருந்துமோர் பட்ட ணத்திலே
மட்டிலாச் செல்வ னாவன்
வணிகனார் குபேர தத்தன்
கட்டழ குடைய தேவி
காமசஞ் சீவி யந்த
மட்டுலாங் கோதை யீன்ற
மைந்தனு மனங்க மித்திரன். (37)

(இ.ள்) செட்டியார் கதை என்ன என்று தேவசன்மா கேட்க, யாகசேனி கூறுவாள். ஓர் அழகிய பட்டனத்தில் குறைவற்ற செல்வம் கொண்ட வணிகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் குபேரதத்தன். அவனுடைய அழகிய மனைவியின் பெயர் காமசஞ்சீவி. காமசஞ்சீவி பெற்றடுத்த மகன் அனங்கமித்திரன்.

649\. தேவியும் வணிகன் றானும்
சேயனுஞ் செருக்கி வாழ்ந்து
மேவியங் கிருக்கும் நாளில்
விரிகடல் கப்ப லேறிப்
போவது கரும மாகப்
புத்தியில் வணிகன் ஏறிக்
காவியங் கண்ணி யுந்தன்
கற்புநீ விடாதே யென்றும். (38)

(இ.ள்) வணிகன் தன்மனைவியுடனும் மகனுடனும் பெருமையோடு வாழ்ந்து வந்தபோது ஒருநாள் பரந்து விரிந்த கடலில் கப்பலேறி வெளிநாடு சென்று வணிகம் செய்யும் எண்ணம் கொண்டான். எனவே அவன் சிவந்த அழகிய கண்களையுடைய தன் மனைவியை நோக்கி, நான் பிரிந்து செல்லும் நாளில் உன் கற்பொழுக்கத்தை விட்டுவிடாமல் வாழ்ந்திரு என்றும்..

650\. சேயனை அபூர்வங் காணில்
சேர்ந்திடில் விடாதே செம்பொன்
ஆயிரங் கழஞ்சா னாலும்
அளித்ததைக் கொள்வா யென்றும்
போயினன் கப்ப லேறிப்
புயலினால் திசை கடந்தோர்[1]
மாயிருந் தீவு சேர்ந்து
வாணிபம் செய்தி ருந்தான். (39)

(இ.ள்) தன் மகனைப் பார்த்து, அபூர்வமான பொருளைப் பார்த்தாலும், அது உன்னை வந்தடைந்தாலும் அதை விட்டுவிடாதே. அதை ஆயிரம் கழஞ்சுப் பொன் கொடுத்தாலும் வாங்கிக் கொள் என்றும் கூறிவிட்டுக் கப்பலேறிச் சென்றான். செல்லும் வழியில்

பா. பே.: பாடல் 650. 1. புசலினால் திசை புரண்டோர்.

புயலினால் கப்பல் திசைமாறிச் செல்ல, ஒரு தீவையடைந்து அங்கே வாணிபம் செய்து வாழ்ந்திருந்தான்.

651. அங்கவன் மீண்டு செல்ல
அனேகநாள் சென்ற தந்தப்
பைங்கொடி ஈன்ற பாலன்
படித்தனள் கலைக ளெல்லாம்
இங்கிது நிற்க வேறோர்
எழில்நக ரத்தில் வாழும்
துங்கமா மறையோன் பாலன்
சோமசன் மாவென் பானும். (40)

(இ-ள்) வணிகன் தன் தாய் நாடு திரும்பாமல் பல ஆண்டுகள் அங்கேயே இருந்து விட்டான். இங்கே அவன் மகன் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். இது இவ்வாறிருக்க, மற்றொரு அழகிய நகரத்தில் வேதங்கள் கற்றுணர்ந்த அந்தணன் வாழ்ந்திருந்தான். அவன் மகன் சோமசன்மா என்பவன்.

652. ஓதினான் கலைக ளெல்லாம்
உலகெலாம் புகழ நித்தம்
தாதையங் கவனைச் சீறத்
தாய்தனை நோக்கி யானும்
போதுவன் பரதே சத்தில்
புகலுநின் கணவற் கென்று
கோதமாய்ச் சொன்னான் பின்னுங்
கொடுந்தொழில் நினைத்து மீண்டான். (41)

(இ-ள்) சோமசன்மா எல்லாக் கலைகளையும் கற்று உலகெலாம் புகழ வாழ்ந்தான். ஆனால் அவனுடைய தந்தை சோமசன்மாவிடம் கோபம் கொண்டு வசைபாட, அவன் தாயை நோக்கி, நான் இனி இங்கே இருக்க மாட்டேன். பரதேசம் செல்கிறேன். உன் கணவனிடம்

சொல்லிவிடு என்று சினம்கொண்டு சொன்னான். சென்றவன் ஒரு கொடிய செயலை மனத்தில் கொண்டு திரும்பி வந்தான்.

653. இவனைநாம் கொல்வோ மென்று
எண்ணியே கல்லுங் கொண்டு
கவடமாய்ப் பரணி லேறிக்
காத்தனன் தாயுங் காணாள்
தவளநூல் மார்பன் வந்து
தனையனுண் டானோ வென்றான்
அவனைநாம் எங்கே காண்போம்
அவன்பர தேசம் போனான். (42)

(இ.ள்) தன் தந்தையைக் கொல்லவேண்டும் என்ற எண்ணம் கொண்டு பெரிய கல் ஒன்றையும் கையில் எடுத்துக் கொண்டு, வஞ்சகமாய்த் தாய் அறியாதவாறு பரணில் ஏறி மறைந்து காத்திருந்தான். அவன் வந்ததைத் தாயும் கவனிக்கவில்லை. வெண்மையான பூணூலணிந்த மார்பினையுடைய அந்தணன் வீடு திரும்பித் தன் மகன் சாப்பிட்டானா என்று மனைவியிடம் கேட்டான். அவளோ, அவனை நாம் இனி எங்கே காணப் போகிறோம். அவனோ பரதேசம் போய்விட்டானே என்றாள்.

654. என்னவே கலங்கி மைந்தன்
ஏதினாற் போனா னென்று
தன்னிரு கண்கள் சோரத்
தருமறை யோனுங் கேட்டான்
அன்னவன் அழவே தேவி
அருங்கலை கற்ற பிள்ளை
தன்னையெந் நேரஞ் சீறத்
தயங்கியே போனா னென்றாள். (43)

(இ.ள்) அவள் கூறியதைக் கேட்டு, அவன் மனம் கலங்கி, தன் மகன் எதற்காகப் பரதேசம் போனான் என்று கண்களில் நீர் வழியக் கேட்டான். அவன் அழுவதைப் பார்த்து, ''அரிய கலைகளைக் கற்ற நம் பிள்ளையை எப்பொழுதும் கோபித்து பேசுவதைப் பொறாது சென்றுவிட்டான்'' என்று அவனுடைய மனைவி சொன்னாள்.

655. பேதையே நாம்பு கழ்ந்தால்
பிள்ளைதான் செருக்க டைந்து
போதனை மறப்பா னென்று
புத்திநாம் சொன்னோ மென்றான்
பாதகம் நினைத்தோ மென்று
பரணிலு மிறங்கி வந்து
தாதைபா தத்தில் வீழ்ந்தான்
தனையனைத் தழுவிக் கொண்டான். (44)

(இ.ள்) பெண்ணே அவனை நாம் புகழ்ந்தால் அவன் ஆணவம் கொண்டு தன் கல்வியை மறப்பான் என்றுதான் அவனுக்கு புத்தி சொன்னேன் என்றான் அந்தணன். இதைக் கேட்டு, நம் தந்தைக்குப் பாதகம் நினைத்தோமே என வருந்திப் பரணியிலிருந்து இறங்கி வந்து தந்தையின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினான். தந்தை அவனைத் தழுவிக் கொண்டான்.

656. மைந்தனு மையா உன்னை
வதைத்திட நினைத்த பாவம்
எந்தமா தவத்தால் நீங்கும்
எனக்கருள் செய்வா யென்ன
அந்தண னுனக்கு வேட்ட
வகத்திலே சிலநா ளுற்றால்
சிந்தையில் நினைத்த பாவம்
தீரும்நீ செல்க வென்றான். (45)

(இ.ள்) மகன் தந்தையை பார்த்து, ''ஐயா உங்களைக் கொல்ல நினைத்த பாவம் எந்தத் தவத்தால் நீங்கும் என்று எனக்குச் சொல்லியருள வேண்டும்'' எனக் கேட்டான். அதற்கு அந்தணன் ''நீ உன் மாமனார் வீட்டில் சென்று சிலநாள் தங்கியிருந்தால் நீ மனத்தால் நினைத்த இந்த பாவம் தீரும். நீ செல்க'' என்றான்.

657. ஏகினான் சோம சன்மா
எதிர்கொடு வந்தா ரந்த
மாகவே தியர்கள் எங்கள்
மாப்பிள்ளை வந்தா ரென்றே
பாகுபால் பருப்பு நெய்தேன்
பாயசம் பணியா ரங்கள்
ஓகையா லருந்து வித்தார்
உண்டுகொண் டவனி ருந்தான். (46)

(இ.ள்) அவன் தன் மாமனார் வீட்டிற்குச் சென்றவுடன் அவர்கள், மாப்பிள்ளை வந்தார் என மகிழ்ந்து எதிர்கொண்டு வரவேற்று, வெல்லப்பாகு, பால், பருப்பு, நெய், தேன், பாயசம் பணியாரங்கள் என்று மகிழ்ச்சியுடன் விருந்து வைத்தனர். அவனும் அவற்றை உண்டுகொண்டு அங்கிருந்தான்.

658. தினமொரு நீதிப் பாட்டு
சீட்டினி லெழுதிக் கட்டி
தனதுமஞ் சத்தின் மேலே
தலையணை கீழே வைத்தான்
பினையவர் மிகவெ றுத்துப்
பேசின ரன்னா ரோர்நாள்
மனைவியை யழைத்து நீதான்
வழுத்தவொண் ணாதோ வென்றார். [1] (47)

பாடல் 658. 1. பினைவர வரவெறுத்துப் பேசினா ரொருநா ளன்னான்
மனைவியை யழைத்து நீதான் வகுக்கவெண் ணாதோ
வென்றார்.

(இ.ள்) அவனும் அங்கிருந்து கொண்டு தினமும் ஒரு நீதிப் பாட்டு ஓலையில் எழுதிக் கட்டித் தன் மஞ்சத்தில் தலையணையின் கீழே வைத்தான். சில நாளில் அவர்கள் மனம் வெறுத்துப் பேசத் தொடங்கினர். ஒருநாள் அவனுடைய மனைவியை அழைத்து நீண்ட நாள் இங்கு அவன் தங்கியுள்ளானே. நீயாவது அவனுக்குச் சொல்லக் கூடாதா? என்று கேட்டனர்.

659. என்னநான் சொல்வ தென்றாள்
இப்படி நீரி ருந்தால்
பொன்னிலை செலவுக் கென்று
புகலுநீ யெனச்சொன் னார்கள்
மின்னுமவ் வாறு சொன்னாள்
வேதியன் சீட்டி லொன்றை
அன்னவள் கையி லீந்து
ஆயிரம் பொன்னென் றானே. (48)

(இ.ள்) அவளும் நான் என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டாள். நீ அவனிடம் சென்று செலவுக்குப் பணம் இல்லை என்று சொல் என்றனர். அவளும் தன் கணவனிடம் சென்று அவ்வாறே கூறினாள். அந்த வேதியனும் தான் எழுதி வைத்திருந்த சீட்டில் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்து ''இதன் விலை ஆயிரம் பொன். இதை விற்றுப் பொருள் கொள்க'' என்றான்.

660. தையலுஞ் சீட்டை வாங்கித்
தமையனார் கையி லீந்தே
மெய்விலை ஆயி ரம்பொன்
விற்றுநீ வருக வென்றாள்
கையிலே சீட்டை வாங்கிக்
கவிதையை வாசித் தந்த
ஐயனீ தாயி ரம்பொன்
அதிகமும் பெறுமே யென்று. (49)

(இ.ள்) அவளும் அந்தச் சீட்டை வாங்கித் தன் தமையனார் கையில் கொடுத்து, ''இதன் விலை ஆயிரம் பொன்னாகும். இதனை நீ விற்று வருக'' என்றாள். அவனும் அதை வாங்கி வாசித்துப் பார்த்தான். இது ஆயிரம் பொன்னை விட அதிக மதிப்புள்ளது என்று கூறிக்கொண்டு சென்றான்.

661. போயினன் பட்ட ணத்தில்
புகுந்தனன் சீட்டைக் காட்டி
ஆயிரம் பொன்னீ தென்றான்
அவரவர் வாங்கிப் பார்த்து
பேயனே போபோ வென்றார்
பின்னுமோர் தெருவிற் சென்று
வாயிலில் வருபோ தந்த
வணிகனார் மைந்தன் கண்டான். (50)

(இ.ள்) அவன் பட்டணத்திற்குச் சென்று அந்தச் சீட்டைக் காட்டி இதன் விலை ஆயிரம் பொன் என்றான். அவரவரும் அதை வாங்கிப் பார்த்து ''பைத்தியமே போ போ'' என்று விரட்டினர். பின்னர் ஒரு தெருவில் சென்று, ஒரு வீட்டு வாசலில் வரும்போது அந்த வணிகனின் மகன் அதனைப் பார்த்தான்.

662. சீட்டிது விலைசொல் என்றான்
செம்பொனா யிரங்க ழஞ்சு
காட்டியார் கொள்வா ரென்றான்
தமனியம் நிறுத்து நல்கி[1]
சீட்டினை வாங்கிக் கொண்டோர்
செய்யப்பட் டாலே சூழ்ந்து
வீட்டிலே தூங்கு மஞ்ச
மேலுறத் தூக்கி வைத்தான். (51)

பா. பே.: பாடல் 662. 1. சீட்டிது விலைசொல் லென்றான் செம்பொனா
யிரமாமீது
தாட்டிகர் கொள்வா ரென்றான் தானவை எண்ணி நல்கி

(இ.ள்) அவன் சீட்டைப் பார்த்து இதன் விலையைச் சொல் என்று கேட்டான். அந்தணன் 'இதன் விலை ஆயிரம் பொற் கழஞ்சு. இதனை யார் வாங்குவார்கள்' என்றான். வணிகன் மகனும் ஆயிரம் பொன் கழஞ்சுகள் நிறுத்துக் கொடுத்து அந்தச் சீட்டை வாங்கி, அதனை ஒரு பட்டுத்துணியில் சுற்றிக் கட்டி தன் படுக்கைக்கு மேலே கட்டித் தொங்கவிட்டான்.

663. செட்டியு மீரைந் தாண்டு
சென்றபின் திரும்பி வந்து
பட்டணக் கரைகண் டேறிப்
பாய்களு மிறக்கி நாவாய்
விட்டொரு படகி லேறி
வீட்டினிற் கருமம் பார்க்கத்
தொட்டியே பாதி நேரத்
தொளித்துவந் தகத்தில் புக்கான்[1] (52)

(இ.ள்) வியாபாரத்திற்குக் கடல் கடந்து சென்ற வணிகன் பத்தாண்டுகளுக்குப் பின் தன் நாடு திரும்பி வந்தான். தன் ஊர்க் கரையில் கப்பலை நிறுத்திப் பாய்களை இறக்கி கப்பலிலிருந்து இறங்கி ஒரு படகில் ஏறி, கரை வந்து, தன் வீட்டின் நிலையைப் பார்க்க எண்ணி, பகலில் வெளியே இருந்துவிட்டு, நள்ளிரவில் யாரும் அறியாமல் வீட்டினிற் புகுந்தான்.

664. அன்னையு மைந்தன் கூடி
அருகினில் தூங்கு மஞ்சந்
தன்னிலே உறங்கக் கண்டு
தானிவன் சோர னென்று

பா. பே.:
பாடல் 663. 1. ஒட்டியே பாதியல்லில் தொளித்துவந் தகத்தில் புக்கான்

மின்னுவா ளுறைக ழற்றி
வெட்டுவோ மென்ற வாளிற்
மன்னிய சீட்டு தொங்க
மற்றிதே தென்று பார்த்தான். (53)

(இ.ள்) வீட்டில் தாயும் மகனும் அருகருகே படுக்கையில் உறங்குவதைக் கண்டு, இவன் இவளுடைய காதலனோ என்று எண்ணி வாளினை உருவி இவனை வெட்டுவோமென்று ஓங்க, வாளில் வணிகன் மகன் படுக்கையில் கட்டித் தொங்கவிட்ட சீட்டு பட்டது. வணிகனும் அது என்னவென்று பார்த்தான்.

665. பட்டினால் சூழ்ந்து கட்டிப்
பதவமா யிருந்த சீட்டை
வீட்டுவா சித்தா னொன்றை
விசாரியா மற்செய் தோர்கள்
கெட்டுமாய்ந் திடுவர் தீரக்
கேடற விசாரித் தோர்கள்
மட்டிலாக் களிப்பி னோடே
வாழ்வரென் றிருந்த தன்றே. (54)

(இ.ள்) பட்டினால் பக்குவமாய்ச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த சீட்டை அவிழ்த்து வாசித்துப் பார்த்தான். அதில், ''எதையும் தீர விசாரிக்காமல் செய்பவர்கள் கெட்டழிந்து விடுவர். குற்றமற விசாரித்து அறிபவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்'' என்று எழுதப்பட்டிருந்தது.

666. சீட்டைமுன் போலே வைத்துச்
சென்றனன் விடிந்த பின்பு
வீட்டினில் வந்தா னந்த
மென்கொடி பணிந்து நின்றாள்

தாட்டிக மகனும் வந்து
தாளிலே வீழ்ந்த னன்பெண்
டாட்டியை யிவனா ரென்றான்
அனங்கமித் திரனென் றாளே. (55)

(இ.ள்) வணிகன் அந்தச் சீட்டை முன் போலவே கட்டி வைத்துவிட்டுச் சென்று விட்டான். பின்பு விடிந்தபின் அவன் வீட்டிற்கு வந்தான். அவன் மனைவி அவனைப் பணிந்து வணங்கினாள். நன்கு வளர்ந்த மகனும் வந்து அவன் கால்களில் விழுந்து வணங்கினான். வணிகன் தன் மனைவியிடம் இவன் யாரென்று கேட்க, அவளும் இவன் நம் மகன் அனங்கமித்ரன் என்று சொன்னாள்.

667. புல்லினான் மோந்து கொண்டான்
புதல்வனை யங்கி ருத்தி
மெல்லியல் முகத்தை நோக்கி
வெட்டவே நினைந்தே னிந்த
நல்லசீட் டாற்பி ழைத்தான்
நம்பியென் றவனை நோக்கிச்
சொல்லிதே தென்று கேட்டான்
சொல்லுவான் நிகழ்ந்த வண்ணம். (56)

(இ.ள்) வணிகன் மனம் மகிழ்ந்து அவனை எடுத்து அணைத்து உச்சி மோந்தான். தன் மகனைத் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு, 'இவனை நான் கொல்ல நினைத்தேன். இந்த நல்ல சீட்டினால் நம் மகன் பிழைத்தான்' என்று தன் மனைவியை நோக்கிக் கூறினான். பின் மகனைப் பார்த்து இந்தச் சீட்டு ஏது என்று கேட்க அவனும் நடந்ததைக் கூறினான்.

668. நீயெனக் குரைத்துப் போன
நீதியை நினைந்து கொண்டேன்
ஆயிரங் கழஞ்சு செம்பொன்
அளித்திதைக் கொண்டே னென்றான்

சேயினைத் தழுவிக் கொண்டு
செம்பொனோர் கோடி யன்றோ
நீயெனக் கென்று கூறி
நேயமாய் வாழ்ந்தி ருந்தான்.

(இ.ள்) தந்தையே ''நீங்கள் எனக்குக் கூறிச்சென்ற நீதியை நினைத்துக் கொண்டேன். அதன்படி ஆயிரம் கழஞ்சு பொன் கொடுத்து இதை வாங்கினேன்'' என்றான் தந்தையும் மகிழ்ந்து அவனைத் தழுவிக் கொண்டு 'நீ எனக்கு ஒரு கோடிகழஞ்சுப் பொன்னுக் கிணையன்றோ' என்று கூறி அவனுடன் அன்பாக வாழ்ந்திருந்தான்.

669. கண்ணினால் காணா முன்னர்க்
கருத்தினால் விசாரி யாமல்
பண்ணுமோர் கருமத்தாலே
பாவமும் பழியும் வந்து
நண்ணிடும் உயிர்க்குங்
கேடாம் நாடியேதுஞ் செய்தால்
புண்ணிய கீர்த்தி மிக்க
பொருளும்வந் தடையு மன்றே.* (58)

(இ.ள்) எதையும் கண்ணால் காணுமுன்பும், அதைத் தீர விசாரிக்காமலும் செய்யும் ஒரு காரியத்தால் பாவமும் பழியும் வந்து சேரும். உயிருக்கும் அது கேடு

* இந்தப் பாடலைத் தொடர்ந்து நூலை முடிக்கும் வகையில் இரு பாடல்கள் உள்ளன. இத்துடன் பஞ்சதந்திர நூல் ஓலைச் சுவடியில முடிவடைகிறது. ஆனால் அச்சுப் பிரதியில் மேலும் சில கதைகள் உள்ளன. அக்கதைகள் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடியில் காணப்படவில்லையெனினும் உரைநடை நூலில் அக்கதைகள் உள்ளனவாதலாலும் அவையும் பஞ்சதந்திரக் கதைகளே யாதலாலும் இந்நூலில் அக்கதைப் பாடல்கள் சேர்க்கப் பட்டுள்ளன. நூலின் இறுதியில் சுவடியில் உள்ள இறுதி இரு பாடல்கள் தரப்பட்டுள்ளன.

விளைவிக்கும். எதையும் தீர விசாரித்துச் செய்தால் புண்ணியமும், சுகமும், மிகுந்த பொருளும் வந்து சேரும்.

கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை - தொடர்ச்சி

670. பின்னும்வே தியனை நோக்கிப்
பேசுவாள் யாக சேனி
மன்னுமென் கருப்பங் கண்டு
மகிழ்ந்துநீ உரைத்த தெல்லாம்
நன்னெறி யல்ல வீணாய்
நகைக்கிட மாகு மென்று
முன்னமே சொன்னே னின்று
முடிந்ததீ வினைபா ரென்றே. (59)

(இ.ள்) தன் கணவன் தேவசன்மாவைப் பார்த்து யாகசேனி மேலும் கூறுவாள், " என் வயிற்றில் நிலைத்த கர்ப்பத்தைக் கண்டு நீ முன்பு மகிழ்ச்சியோடு கூறிய தெல்லாம் நன்மைக்கல்ல" வீணாய் பிறர் நகைப்பதற்கு இடமாகிவிடும் என்று நான் முன்னரே கூறினேன். இன்று நடந்து முடிந்த தீமையைப்பார்.

671. ஆர்க்கும்பே ராசை யாகா
தந்தணன் ஒருவன் முன்னாள்
தீர்க்கரும் வறுமை தன்னைத்
தீர்க்குநாள் வந்த போது
போர்க்கும்பே ராசை கொண்டு
பொருந்தினன் துயர மென்றாள்
தார்க்குழலா ளதுசொல் என்னத்
தையலுஞ் சொல்ல லுற்றாள். (60)

(இ.ள்) " யாருக்கும் பேராசை ஆகாது. முன்னொரு காலத்தில் அந்தணன் ஒருவன் தனக்குற்ற தீர்கரிய வறுமை

தீரும் நாள் வந்தபோது, பேராசை கொண்டதால் பெருந்துயரகத்தை அடைந்தான் '' எனறாள் மலர் சூடிய கூந்தலாளே அது என்னவென்றுசொல் என அந்தனன் கேட்க அவள் கூறினாள்.

பேராசை கொண்டு பேதுற்ற கதை

வேறு

672. மன்னு மமரா வதிமேவும்
மறையோர் நால்வர் வறுமையினால்
இன்ன லடைந்தோர் யோகிதனை
எய்தி இதனைத் தீர்த்தருள்நீ
என்ன வேண்ட வவன்றானீ
ரிரண்டு சித்தி தமையெண்ணி
பன்னு மவர்தம் தலைமீது
பரிந்தொவ் வொருவர்த் தியைவைத்தே (61)

(இ.ள்) அமராவதி என்னும் நகரில் வாழ்ந்து வந்த அந்தணர் நால்வர் வறுமையால் பெரிதும் துன்பப்பட்டிருந்தனர். அவர்கள் ஒரு சமயம் ஒரு யோகியைச் சென்றடைந்து தங்கள் வறுமையைத் தீர்த்தருள வேண்டும் என வேண்டினர். அவரும் தன்னுடைய தவ ஆற்றலால் நான்கு சித்திகளை அவர்களுக்குத் தர எண்ணி ஒவ்வொருவர் தலைமீதும் ஒரு வர்த்தியை வைத்தார்.

673. நீவி ரிமய மலைநோக்கி
நெடுந்தூ ரஞ்சென் றிடினெவன்மேல்
மேவு வர்த்தி விழுகின்ற
தவனுக் கங்கே வேண்டுநிதி

பூவி னிருக்குங் கொள்கவெனப்
போனார் போகும் வழிநடுவே
தாவி லொருவன் வார்த்திவிழ
கண்டா னங்குத் தாமிரமே. (62)

(இ-ள்) ''நீங்கள் நால்வரும் இமயமலையை நோக்கி நெடுந்தூரம் செல்க. வழியில் எவனுடைய தலை மேல் வைத்த வர்த்தி விழுகின்றதோ அவனுக்கு அங்கே அவன் வேண்டுமளவு நிதி பூமியில் இருக்கும். அதை எடுத்துக்கொள்க'' என்று கூறினார். அவர்கள் நால்வரும் அதன்படிச் செல்ல, போகும் வழியில் ஒருவன் தலையிலிருந்த வர்த்தி விழ, அங்குத் தாமிரம் இருக்கக் கண்டான்.

674. மூவர் தமக்குங் காட்டியிதை
முறையாய் வாரிக் கொள்வமெனக்
கூவ நீயே கொள்கவிதிற்
கூடும் பயனென் னெனவவனும்
தேவ நமக்குத் தந்ததிது
வென்னக் கொண்டு சென்றனன்பின்
ஆவ லுறுமூ வரும் போம்போ
தங்கே வீழ்ந்த தொருவனுக்கே. (63)

(இ-ள்) உடனே அவன் மற்ற மூவரையும் அழைத்துக் காட்டி, இதை நாம் நால்வரும் வாரி எடுத்துக்கொள்வோம் என்று கூறினான். ஆனால் அவர்கள் 'இதை நீயே வைத்துக்கொள் இதனால் ஆகும் பயன் என்ன' என்று கூறினர். எனவே அவன் இறைவன் தனக்குத் தந்தது இது என்று கருதி, அதை எடுத்துக்கொண்டு திரும்பினான். பின்பு ஆசை கொண்ட அவர்கள் மேலும் செல்ல, சற்று தூரத்தில் மற்றொருவன் தலை மீது இருந்த வர்த்தி வீழ்ந்தது.

675. வெள்ளி தனைக்கண் டவனுமவ்வா
றுரைக்க மேலும் ஆசையுற்றார்
உள்ள துனக்கே யிதுவென்ன
உரைத்தா றுற்றா னவன்கொண்டு

மெள்ளச் செலவங் கொருவற்கு
　　　　வீழத் திரிபொன் னுறல்கண்டு
கொள்ளு வாமீ திருவருமென்
　　　　றோதக் கொளும்பே ராசையால். (64)

(இ.ள்) அங்கே வெள்ளி இருக்கக் கண்ட அவன் முன்னவன் கூறியது போன்று கூற, மற்ற இருவரும் மேலும் ஆசைகொண்டு இது உனக்கே உரியது என்று சொல்ல, அவன் அதை எடுத்துக் கொண்டு திரும்பினான். மற்ற இருவரும் தொடர்ந்து செல்ல, மற்றொருவன் தலையிலிருந்த திரி வீழ்ந்தது. அங்கே தங்கம் இருக்கக்கண்டு இதை இருவரும் எடுத்துக்கொள்வோம் என்றான் . ஆனால் பேராசை கொண்ட நான்காமவன்....

676. நீயே கொள்கென் றுரைத்தொருவன்
　　　　நீங்க நீயும் வந்தபின்பு
தூயோ யூர்க்குச் செல்வமெனச்
　　　　சொல்ல விரைவின் வந்திடுவன்
தாயே யனையாய் இருவென்று
　　　　சாற்றிப் போனா னவ்விடத்துச்
சாயா தொருசக் கரமொருவன்
　　　　தலையில் சுழலக் கண்டனனால். (65)

(இ.ள்) இதை நீயே கொள்க என உரைத்தான். மேலும் நடந்தான். ஆனால் மூன்றாமவன் நீயும் வந்த பின் சேர்ந்து நாம் திரும்பலாம் என்றிருந்தான். விரைவில் வருவேன் இங்கேயே இரு எனச் சொல்லிச் சென்றான். வழியில் ஒருவன் தலையில் சக்கரம் சுழலுவதைக் கண்டான்.

677. கண்டு நீயார் உன்மேற்சக்
　　　　கரந்தான் சுழலுங் காரணமென்
விண்டு புகலென் றிடவவனை
　　　　விட்டுக் கேட்ட விவன்றலைமேல்

பண்டு சுழன்ற தெனச்சுழலப்
பயந்தீ தென்னோ கிணறுவெட்ட
மிண்டு பூதம் புறப்பட்டாற்
போல விளைந்த வேதனையே. (66)

(இ.ள்) அதைப் பார்த்த இவன். அவனைப் பார்த்து " நீ யார் உன் தலை மேல் சக்கரம் சுழல்வதன் காரணம் என்ன? எனக்குச் சொல்'' எனக்கேட்க அந்தச் சக்கரம் அவன் தலையை விட்டு இவன் தலை மேல் வந்து சுழன்றது. அதனால் பயந்த அவன், ''ஈதென்ன கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது போலாயிற்றே இதென்ன வேதனை....''

678. என்னக் கவலை யுடனவனைக்
கேட்க வவனு மியம்புவான்
முன்னைக் குபேரன் சாபத்தால்
என்மேல் சுழன்ற முனையாழி
உன்னைக் கண்டால் தீருமென
உரைத்தா னன்னோ வவ்வாறே
நின்னைக் கண்ட வெனைவிடுத்த
தெனலும் வர்த்தி நெடுந்தலையன். (67)

(இ.ள்) என்று கவலையுடன் அவனைக் கேட்க, அவன் " முன்பு எனக்குக் குபேரன் இட்ட சாபத்தால் என்மேல் சுழன்ற இந்தச்சக்கரம், உன்னை நான் கண்டால் தீரும் எனக் குபேரன் முன் உரைத்திருந்தான். அவ்வாறே நான் உன்னைப்பார்க்க என் சாபம் தீர்ந்தது'' என்று கூறினான், அதுகேட்ட திரிகொண்ட தலையன்...

679. வருந்திப் பிள்ளை யார்பிடிக்கக்
குரங்காய் முடிந்த வாறதுபோல்
பொருந்திற் றென்று துன்புற்றுப்
புகலா யிங்கெத் தனைநாளாய்

இருந்திட் டனையென் றிடக்காலம்
எனக்குத் தெரியா சீராமன்
திருந்தப் புவியாள் காலமென்று
செப்பி னான்முன் றிகிரிதரன். (68)

(இ.ள்) மனம் வருந்தி பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது போல ஆயிற்று எனத் துன்புற்று, நீ இங்கு எவ்வளவு காலம் இருந்தாய் எனச் சொல் எனக்கேட்க, ''அது எனக்குத் தெரியாது. ஆனால் ஸ்ரீராமன் இந்த உலகத்தை கண்ட காலம் முதல் இருக்கிறேன்'' என்று கூறினான் சக்கரத்தலையன்.

680. தருவார் நீர்சோ றா ரென்னத்
தாகம் பசியிங் கில்லையெனத்
திருவார் குபேரன் நிதிகவரச்
சேர்வார் தம்மை யச்சுறுக்கப்
பெரிதா வைத்த ஆழியென்றுப்
பேசிப் போயினன் பின்முன்பு
பரிவாய்க் காத்த சுவர்ணசித்திப்
பார்த்துப் பார்த்துக் கண்பூத்தே. (69)

(இ.ள்) ''அப்படியானால் நீரும் சோரும் யார்தருவார் '' என்று திரித்தலையன் கேட்க, '' தாகம் பசி இரண்டும் இங்கு இல்லை. குபேரனுடைய செல்வத்தைக் கவர வருவோரை அச்சுறுத்துவதற்காக வைக்கப்பட்ட சக்கரம் இது'' என்று கூறிவிட்டுச் சென்றான். பின்பு, முன்பு சுவர்ண சித்தி பெற்றவன் (தங்கம் பெற்றவன்) இவனுக்காகப் பார்த்திருந்து பார்த்திருந்து கண் பூத்தவனாய்...

681. தேடி வருங்காற் சக்கரந்தான்
சிரமேற் சுழல வவனிருத்தல்
நாடி யிதுவென் னெனக் கேட்க
நண்பா பேரா சையின்வந்த

பாடென் றுரைக்கச் சுவர்ணசித்திப்
பயந்து பிள்ளை வரந்தேடிக்
கூடு புருஷன் றனைப்பறிதான்
கொடுத்தாற் போலா யிற்றென்றே. (70)

(இ.ள்) இவனைத் தேடி வரும் பொழுது, இவன் தலையில் சக்கரம் சுழல இருக்கக் கண்டு, '' இது என்ன'' என்று கேட்டான். இவன் '' நண்பா இது பேராசையால் வந்த துன்பம் '' என்று கூறினான், அதுகேட்ட சுவர்ணசித்தி பயந்து, '' பிள்ளை வரம் தேடிச்சென்று கணவனைப் பறிகொடுத்தது போல் ஆயிற்றே'' என்று...

682\. சற்றே கலங்கிப் பின்தெளிந்து
சாற்றும் வெள்ளைப் புத்தியினார்
மற்றோர் அறிவைக் கேளாமல்
மாண்ட சிங்கம் உயச்செய்து
கற்றே யுறுமந் திரவலியைக்
காட்டுங் கதைபோ லானதென்றான்
மற்றே ததுசொல் லெனக் கேட்க
வகுப்பான் சுவர்ண சித்தியே. (71)

(இ.ள்) ...மனம் கலங்கி பின்தெளிந்து, ''அறிவற்றவர்கள் மற்றவர் சொல்வதைக் கேளாமல் இறந்த சிங்கத்தை உயிர்பெறச் செய்து, தாம் கற்ற மந்திர வலிமையைக் காட்டிய கதை போல் ஆயிற்று'' என்றான். அது என்ன கதை சொல் என்று கேட்க சுவர்ணசித்தி கூறுவான்...

சிங்கத்தைப் பிழைப்பித்துச் செத்த கதை

683\. துளசா புரத்தில் நால்வரொரு
தொடர்பாய்க் கல்வி பயின்றோர்கள்
வளமா ரவரின் ஒருமூவர்
மந்தி ரத்தின் மிக்கமையால்

தளமா ரரசன் றனைக்கண்டு
தங்கள் வித்தைத் திறங்காட்டி
ஒளியார் தனங்கள் மிகவீட்டற்
குன்னித் தம்முட் கூறுவார். (72)

(இ.ள்) துளசாபுரம் என்னும் நகரில் ஒன்றாகக் கல்வி பயின்ற நால்வருள் மூவர் மந்திர ஆற்றல் மிக்கவராக இருந்ததால், அரசனைக் கண்டு, தங்கள் வித்தைகளைக் காட்டிப் பெரும் செல்வம் சேர்த்து வரலாம் எனத் தமக்குள் தீர்மானித்தப் பின்...

684. இவன்றான் மிக்க கல்வியிலன்
எனினும் நம்மோ டிருந்துபடித்
தவனா தலினாம் ஒருபங்கு
தருவோ மென்றங் குடனழைத்துப்
புவியா ளரச னிடைப்போகும்
போதி லந்த வழியினிடைச்
சவமாம் சிங்கந் தனைக்கண்டு
தம்மந் திரஞ்சோ திக்கவெண்ணி. (73)

(இ.ள்) ''இவன் (நான்காமவன்) நம்போல் மிகுந்த கல்வியறிவற்றவன் எனினும் இவன் நம்மோடு இருந்து படித்தவன் என்பதால் நாம் இவனுக்கும் பங்கு தருவோம்'' என்று கூறித் தம்முடன் அழைத்துக் கொண்டு அரசனிடம் செல்லும் வழியில் இறந்த சிங்கத்தைக் கண்டு தங்கள் மந்திர ஆற்றலைச் சோதிக்க நினைத்து,

685. கற்ற வித்தை யாற்செத்த
கண்மீ ரவத்தை எழுப்புவேன்
மற்றை யவர்க்குச் சம்மதமோ
வென்ன மந்தி ரந்தெரியா
துற்ற வொருவன் எழுப்பிலது
கொல்லு மென்ன உரைத்திடலும்
பற்றி யவனைத் தள்ளவவன்
பயந்தோர் மரத்தில் ஏறினான். (74)

(இ.ள்) இறந்து போன இந்தச் சிங்கத்தைத் தாங்கள் கற்ற மந்திர வித்தையால் எழுப்புவோம், மற்றவர்களுக்கும் சம்மதமா என்று கேட்க, மந்திரம் தெரியாத நான்காமவன், சிங்கத்தை எழுப்பினால் அது நம்மைக் கொல்லும் என்றான். ஆனால் மற்ற மூவரும் அவன் பேச்சைத் தள்ளினர். அவன் பயந்து அங்கிருந்த ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான்.

686. எழுப்பி னார்பின் பதுகொல்ல
இறந்தா ரம்மூ வருமிதனால்
இழுக்கி லாத கல்வியினும்
அறிவே பெரிதென் றிசைத்திடலும்
ஒழுக்க மறுநே மித்தலைய
னூழே பெரிதென் றொருகதைதான்
பழுத்த செம்பொன் பெற்றோற்குப்
பரிவ தாகப் புகல்வானே. (75)

(இ.ள்) மற்ற மூவரும் சிங்கத்தை எழுப்ப, அது அவர்களைக் கொன்றது. குற்றமற்ற கல்வியை விட அறிவே பெரியது என்று சுவர்ணசித்தி கூற, சக்கரத்தலையன், 'விதியே பெரியது' என்று கூறி சுவர்ணசித்திக்கு ஒரு கதையைப் பரிசாகச் சொல்வான்.

அறிவின் மிக்க மீன்கள் இறந்த கதை

687. மறுவின் மகத தேயத்து
மலர்ப்பொய் கையினில் வீற்றிருக்கும்
அறிவா யிரத்தன் நூற்றறிவன்
எனுமீன் இரண்டோ டங்கிருக்கப்
பெருமோ ரறிவ னெனுந்தவளை
பிரியா துறைந்த தத்தவளை
உறுகால் வலைஞன் ஒருநாளங்
குற்றுப் பேசு முரைகேட்டே. (76)

(இ.ள்) மகத தேசத்தில் ஒரு மலர்ப் பொய்கையில் அறிவாயிரத்தான், நூற்றறிவன் என்று இரண்டு மீன்கள் இருந்தன. அவற்றுடன் ஓரறிவன் என்னும் தவளை இணைபிரியாது இருந்து வந்தது. ஒரு நாள் வலைஞர் ஒருவன் அங்கு வந்து பேசும் பேச்சினைக் கேட்டு...

688. இருமீன் களையுந் தானோக்கி
இங்கு நாளை வலைஞன்வந்து
பெருமீ னெல்லாம் பிடிப்பனென்று
பேசி னான்யா மிப்போதே
ஒருநீர்த் தடத்துக் கேகுவது
நன்மை யென்ன வுரைத்திடலும்
அருநீர் நடையின் மிகவல்லேன்
என்றான் அறிவா யிரத்தானே. (77)

(இ.ள்) தன் நண்பர்களான இரண்டு மீன்களையும் பார்த்து, இங்கு நாளை வலைஞன் வந்து பெரிய மீன்களையெல்லாம் பிடிக்கப் போவதாகப் பேசினான். எனவே நாம் இப்பொழுதுதே வேறொரு நீர்த் தடத்திற்குச் செல்வதே நல்லது என்றுரைத்தது. உடனே அறிவாயிரத்தான், நான் நீரில் விரைந்து நீந்தித் தப்பும் ஆற்றலுடையவன் என்றது.

689. நிலையிற் பெயர லாகாதென்
றுரைத்தா னிகழு நூற்றறிவன்
அலையிற் றிகழும் தவளைநான்
அகல்வ னெனப்போ தலும்பின்னாள்
வலைஞன் மீனங் களையெல்லாம்
வாரிக் கொண்டு போம்போது
கொலையிற் படுதன் நட்பினரைக்
குலவோ ரறிவன் கண்டனனே. (78)

(இ.ள்) நூற்றறிவன், 'நம்மிடத்தை விட்டுப் பெயர்ந்து செல்லலாகாது' என்று கூறியது. ஆனால் தவளை 'நான் செல்வேன்' என்று கூறிச்சென்றது. மறுநாள் வலைஞன் வந்து மீன்களையெல்லாம் வாரிக்கொண்டு சென்றான். அப்பொழுது கொல்லப்பட்ட தன் நண்பர்களை ஓரறிவன் என்னும் தவளை பார்த்தது.

690. பெட்டை தனக்கு மதுகாட்டிப்
பேசும் என்றன் சொல்கேளா
மட்டி யறிவா யிரத்தனொடு
வளர்நூற் றறிவன் சுற்றமொடு
பட்ட பாடு மெனதிருப்பும்
பாரென் றுரைத்த ததனாலே
தட்டின் மிக்க அறிவனையும்
தீயூழ் வந்து தடுக்குமென்றான். (79)

(இ.ள்) அது தன் மனைவிக்கு மீன்களைக் காட்டி, ''நான் சொன்ன சொல்லைக் கேட்காமல் மட்டி அறிவாயிரத்தவனும், நூற்றறிவனும் தங்கள் சுற்றத்தினரோடு பட்ட துன்பத்தையும் எனது நிலையையும் பார்'' என்று உரைத்தது. அதனால் மிக்க அறிவினரையும் தீயூழ் வந்து தடுத்து விடும் என்றான்.

இசைபாடிக் கழுதை இடருற்ற கதை

691. பரிதி தானிவ் வாறுரைக்கப்
பைம்பொன் பெற்றோன் இசைபாடி
ஒருபுன் கழுதைக் குற்றதுபோல்
உனக்கிவ் விடர்தான் உற்றதெனத்
தெரிய வதுகூ றென்னநெடுஞ்
செவிய னென்னும் ஒருகழுதை
பொருவில் சுமதி நரியினொடு
புலத்திற் பயிர்மேய்ந் துறுநாளில். (80)

(இ.ள்) இவ்வாறு சக்கரத்தான் கூற பொன் பெற்றோன் அதுகேட்டு, இசைபாடிய கழுதை உற்ற துன்பம் போல் உனக்கு இந்தத் துன்பம் ஏற்பட்டதே என்று கூற, அது என்ன கதை என்று இவன் கேட்க, சுவர்ணசித்தி கூறுவான், நெடுஞ்செவியன் என்னும் கழுதை ஒன்று சுமதி என்னும் நரியுடன் சேர்ந்து பயிர்ப் புலத்தில் பயிரை மேய்ந்து வரும் பொழுது,

692. மேவு மொருநாள் விலாப்புடைகள்
வீங்க மேய்ந்து தேக்கெறிந்து
தாவில் கழுதை நிலவெறிக்குந்
தண்ணா ரிரவி னிற்பொழுது
போவ தற்குச் சங்கீதம்
புகல்வேன் நீகே ளெனநரியும்
ஏவு முனது குரல்கேட்டால்
கொல்வார் பயிர்காத் திடுவாரே. (81)

(இ.ள்) ஒரு நாள் கழுதை தன் விலா புடைக்கப் பயிரை மேய்ந்து மகிழ்ச்சி மிகக்கொண்டு, நரியைப் பார்த்து, ''நிலவு காயும் இந்த இரவு நேரத்தின் பொழுது போவதற்கு நான் சங்கீதம் பாடுவேன் நீ கேள்'' என்று கூற, ''உன் குரலைக் கேட்கும் பயிர்க்காவலர் உன்னைக் கொல்வார் ''

693. என்று சொல்லக் கேளாமல்
இராகம் பாடக் குரல்கேட்டே
ஒன்று கழுதை எனவுழவர்
உடம்பு நுறுங்கப் புடைத்திட்டார்
அன்று நரிதான் மாமாவென்
பேச்சைக் கேளா வகந்தையினால்
இன்று பட்டா யெனவேகிற்
றென்றான் பொன்பேற் றன்றானே. (82)

(இ.ள்) ...என்று சொன்னது. அதைக் கேட்காமல் கழுதை பாட, அந்தக் குரல் கேட்ட உழவர்கள் கழுதை பயிரை மேய்கிறது என்று வந்து உடல் எலும்பு முறிய அடித்திட்டனர். அன்று நரி கழுதையைப் பார்த்து, '' மாமா என் பேச்சைக் கேளாத ஆணவத்தால் இத்துன்பம் வாய்த்ததே'' என்று கூறியது என்றான் பொன் பெற்றோன்.

தகா வரம் பெற்றுச் சாலியன் இறந்த கதை
வேறு

694. நிந்தையில் சுவர்ண சித்தி
நிகழ்த்திய கதையைக் கேட்டே
இந்தநற் கதைகே ளென்றே
இயம்புமச் கரத ரன்றான்
நந்துறு தடங்கள் சூழ
நாரண புரத்தில் வாழும்
மந்தர நாமன் றந்து
வாயன்வத் திரங்கள் நெய்வோன். (83)

(இ.ள்) சுவர்ணசித்தி சொன்ன கதையைக் கேட்ட சக்கரத்தலையன் இந்த நற்கதையைக் கேள் என்று சொல்லிக் கதையைக் கூறினான். '' நத்தைகள் நிறைந்த நீர்த் தடாகங்கள் நிறைந்த நாரணபுரத்தில் வாழும் ஆடைகள் நெய்யக்கூடிய மந்தரநாமன் என்னும் தந்துவாயன் ஒருவன் இருந்தான்.

வேறு

695. தறிமரம் முறித லாலே
தக்கநன் மரம்வெட் டற்குச்
செறிவனம் தன்னிற் சென்று
திரிந்தொரு வாகை கண்டு

முறிபட வெட்டு தற்கு
முயலும்போ ததன்மேல் நின்ற
அறிவுறு மியக்கன் நோக்கி
அவனொடும் ஒன்று சொல்வான். (84)

(இ-ள்) ஒரு சமயம் அவனுடைய தறிமரம் முறிந்ததால் அதைச் சரிசெய்வதற்குத் தக்க மரம் ஒன்றை வெட்டி வருவதற்கு அடர்ந்த காட்டினுள் சென்றான். அங்கு அவன் பல மரங்களையும் பார்த்துத் திரிந்து இறுதியாக ஒரு மரத்தைக் கண்டு தேர்ந்து அதை வெட்டுவதற்கு முயலும் போது, அதன்மேல் தங்கியுள்ள இயக்கன் இவனைப் பார்த்து அவனிடத்தில் ஒரு செய்தியைச் சொன்னான்.

696. இந்தவென் இடத்தை வெட்டாய்
என்னிநீ இச்சை கொண்டு
வந்தநல் வரமீ வேன்நான்
என்றனன் மகிழ்ந்து மீண்டு
நந்தலின் நட்பா யுள்ள
நாவிதன் தன்னைக் கேட்க
மந்திரி யாவேன் நாண்நீ
அரசனாம் வரங்கேள் என்றான். (85)

(இ-ள்) "இந்த என்னுடைய மரத்தை வெட்டாமல் விடுவாயானால், நீ விரும்பிக் கேட்டுக் கொள்ளும் நல்ல வரத்தை நான் உனக்குத் தருவேன்" என்றான் இயக்கன். அதைக் கேட்டு மகிழ்ந்த நெசவாளி மனம் மகிழ்ந்து திரும்பி வந்து தன் நண்பனாகிய நாவிதனைக் கேட்க, அவன் நீ அரசனாக வரம் கேள். நான் அமைச்சனாவேன் என்றான்.

697. மனைவியோ டிதையு ரைக்க
மற்றவ ளரசு பெற்றால்
கனவிடை யூறு மேவும்
ஆதலால் காத லாநீ

இனமொரு தலையுங் கைகள்
இரண்டும்பெற் றுற்றா யானால்
தினமிரு தறிவி ரித்துச்
செய்யலாம் வேலை யென்றாள். (86)

(இ.ள்) அவன் இதைத் தன் மனைவியிடம் சொல்ல, அதற்கு அவள், அரசனாக வரம் கேட்டு அரசனாகி விட்டால், கனவிலும் துன்பமும், ஆபத்தும் தொடரும். எனவே என் அன்பரே, நீங்கள் இன்னும் ஒரு தலையும் மேலும் இரண்டு கைகளும் பெற்றீரானால் தினமும் இன்னொரு தறியை ஆரம்பித்துத் தொழில் செய்யலாம் என்றான்.

698. மாலையங் குழலாள் சொன்ன
வார்த்தையே நல்ல தென்று
சாலியன் சென்று பெற்றுத்
தன்னகர் உற்றான் கண்டோர்
ஆலநே ரரக்க னாமென்
றாளுக்கோர் கல்லைக் கொண்டு
மேலுற வெறிந்தார் செத்தான்
மெய்விகா ரங்கொண் டோனே. (87)

(இ.ள்) மாலையணிந்த குழலையுடையவளான தன் மனைவி சொன்னதே நல்லது என்று சென்று அதுபோல் வரம்பெற்றுக் கொண்டு தன் நகரத்திற்கு வந்தான். அவனைப் பார்த்த ஊரார் ஆலகாலம் போன்று துன்பம் தரத்தக்க அரக்கனே இவன் எனக்கருதி, ஆளுக்கொரு கல்லைக்கொண்டு அவன்மேல் எறிந்தனர். வித்தியாசமான உடல் கொண்ட அந்த நெசவாளி கல்லெறி தாங்காமல் இறந்தான்.

699. சக்கர தரனிவ் வாறு
சாற்றிய கதையைக் கேட்டே
இக்குவ லயத்தொ ருத்தற்
கிதமொழித் தகிதஞ் செய்தால்

துக்கமே அடைவ ரென்று
சுவர்ணசித் தியுமு ரைக்க
அக்கதை சொல்லு கென்ன
அவன்றனக் கறைய லுற்றான். (88)

(இ.ள்) சக்கரத்தலையன் இவ்வாறு சொன்ன கதையைக் கேட்டு, இந்த உலகத்தில் ஒருவருக்கு நன்மையை விட்டுத் தீமையைச் செய்தால் அவர் துன்பத்தையே அடைவர் என்று சுவர்ணசித்தி கூறினான். அதைக் கேட்ட சக்கரத்தலையன் அந்தக் கதை என்னவென்று சொல்க எனக் கேட்க சுவர்ணசித்தி அவனுக்கு அக்கதையைக் கூறலானான்.

குரங்கு பழிவாங்கிய கதை

700. தவமிகும் அயோத்தி யாளும்
சந்திர சேனன் றன்சேய்
கவிகளி னாடல் காணும்
கருத்தறிந் தொருசா லைக்கண்
சவிபெறு குரங்க னேகம்
தான்வளர்த் திடுமந் நாளில்
புவிபுக ழரச னேவல்
புரிபவர் சண்டை யிட்டார். (89)

(இ.ள்) செய்தவப்பலன் மிகுந்த அயோத்தி நகரத்தை ஆண்டு வந்த சந்திரசேனன் என்னும் அரசன், தன் மகன் குரங்குகளின் விளையாட்டினைக் காணும் ஆர்வத்துடன் இருப்பதறிந்து ஒரு சாலையில் ஏராளமான குரங்குகளை வளர்த்து வந்தான். அந்நாளில் அரசனின் ஏவலாளர்கள் தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கினர்.

701. ஒருகுரங் கதுகேட் டுத்தன்
உறவினர்க் குரைக்கு மிப்போர்
பெருகுறிற் றீதாம் மற்றோர்
வனத்தினாம் பெயர்வோ மென்ன

உரைசெயக் கிழநின் சொற்கேட்
டுண்பதை யறோமென் றேவா
னரமெலாம் இகழ்ந்து பேச
நடுங்கியங் கவரை விட்டே. (90)

(இ.ள்) அதையறிந்த ஒரு குரங்கு தன் உறவினர்களிடத்தில், இந்தச் சண்டை பெருகினால் நமக்குத் தீமையாகும். எனவே நாம் மற்றொரு வனத்திற்குச் செல்வோம் என்று கூறியது. அதைக் கேட்ட மற்ற குரங்குகள் கிழவனே உன் பேச்சைக் கேட்டு நல்ல உணவை இழக்க மாட்டோம் என்று இகழ்ந்து பேசின. அது கேட்ட அக்குரங்கு மனம் நடுங்கி அவற்றைவிட்டு ...

702. தன்குடும் பத்தி னோடோர்
கானிடைச் சார்ந்த தப்பால்
பின்பொரு நாளச் சண்டை
பெரிதுற வவரி லேயோர்
வன்பினன் கொள்ளிக் கட்டை
மற்றவன் மேலே வீச
முன்புறு குதிரைச் சாலை
மேலது மூண்ட தன்றே. (91)

(இ.ள்) ...தன் குடும்பத்தோடு வேறு ஒரு காட்டினை அடைந்து வாழ்ந்தது. பின்பு ஏவலர் களிடையே சண்டை வலுத்தது. அவர்களில் ஒருவன் கொள்ளிக்கட்டையை எடுத்து மற்றவன் மீது வீச அது குதிரைகளின் சாலைகளில் விழ அது தீப்பற்றியது.

703. சாலையு மெரிய வாசி
தாஞ்சில விறந்த வெண்ணில்
கோலவெம் புரவி தீயிற்
கொண்டன காயம் மன்னன்

பாலடைந் ததனைக் காப்போர்
பகர்தலு மந்நோய் தீர்க்கும்
சீலனை யழைத்து மாக்கள்
தீயினோய் நீக்கு கென்றான். (92)

(இ.ள்) சாலை தீப்பற்றி எரிய குதிரைகளில் சில இறந்தன. எண்ணற்ற அழகிய குதிரைகள் தீக்காயம் கொண்டன. பணியாட்கள் இச்செய்தியை அரசனிடத்தில் கூற, அவன் மருத்துவரை அழைத்து குதிரைகளின் தீப்புண்ணைக் குணமாக்கும்படிக் கூறினான்.

704. மருத்துவன் குரங்கு நெய்யால்
அன்றிநோய் மாயா தென்றான்
செருத்தொழில் இறைவன் சாலை
சேர்ந்துள குரங்கை யெல்லாம்
வருத்தியந் நெய்யைக் கொண்டு
வாசிநோய் வாசி யாக்கென்
றுரைத்தன னவ்வா றேநோய்
ஒழித்தனர் மருத்து நூலோர். (93)

(இ.ள்) மருத்துவன் குதிரைகளின் தீப்புண்ணை ஆற்றுவதற்குக் குரங்கின் கொழுப்பு தான் வேண்டும் எனக் கேட்டார். அரசன் குரங்குச் சாலையில் உள்ள குரங்குகளையெல்லாம் கொன்று அவற்றின் கொழுப்பைக் கொண்டு குதிரைகளின் நோயைக் குணப்படுத்தும்படிக் கூற, மருத்துவரும் அவ்வாறே செய்து குதிரைகளைக் குணப்படுத்தினார்.

705. இப்பழி இறையி டத்தே
வாங்குவேன் என்று முன்போய்த்
தப்பிய கிழக்கு ரங்கு
தன்மனம் பதைத்தே யெண்ணி

ஒப்பிலாப் பெருங்கா னத்தில்
ஒருகுளம் இருக்கக் கண்டு
வெப்பறு பேயொன் றிங்கு
மேவவே வேண்டு மென்று. (94)

(இ.ள்) முன்பு தப்பிச்சென்ற குரங்கு இதையறிந்து மனம்பதைத்து, இதற்கு அரசனைப் பழிவாங்குவேன் என்று எண்ணியது. அந்தக் காட்டில் ஒரு குளம் இருந்தது. அதில் ஒரு பேய் இருக்க வேண்டும் என்று கருதிய அந்தக் குரங்கு ...

706. எண்ணியக் குளத்திற் கஞ்சத்
தாளினா லிருநீ ருண்ண
நண்ணிய பேய்கண் டங்கு
நணுகிநின் பெருமை கண்டுன்
கண்ணெதிர்ப் பட்டே னென்று
கழுத்துறு மாலை தன்னைத்
துண்ணென வெடுத்து நல்க
வாங்கியே சொலுங்கு ரங்கே. (95)

(இ.ள்) தூரத்திலிருந்து தாமரைத் தண்டினால் நீரை உறிஞ்சிக் குடித்தது. இதனைக் கண்ட அந்தப்பேய் மகிழ்ந்து '' உன் பெருமை கண்டு உன் கண்ணெதிரே தோன்றினேன்'' என்று கூறித் தன் கழுத்திலிருந்த முத்து மாலையை எடுத்து அதனிடம் கொடுத்தது. அதைப் பெற்றுக் கொண்ட குரங்கு ...

707. எவ்வள விந்த நீரில்
உனக்குள வலிமை யென்னச்
செவ்வியோய் இந்த நீரில்
ஆயிரம் பேர்சேர்ந் தாலும்

கைவலித் துண்டற் கான
சக்தியென் கண்ணுண் டென்ன
இவ்விடம் புசிப்பு னக்கே
யான்கொடு வருவ னென்றே. (96)

(இ.ள்) இந்த நீரில் உனக்குள்ள வலிமை எவ்வளவு எனக் கேட்டது. அதற்கு அந்தப்பேய், ' இந்த நீரில் ஆயிரம் பேர் இறங்கினாலும் அவரையெல்லாம் பிடித்து உண்ணக் கூடிய ஆற்றல் எனக்கு உண்டு' என்று கூறியது. உடனே குரங்கு, '' நீ உண்பதற்கான உணவை நான் கொண்டு வருவேன்'' என்று கூறிக்கொண்டு ...

708. மாலையைக் கழுத்திற் பூண்டு
வானர மகன்று வேந்தன்
பாலடைந் திடவ வன்றான்
பார்த்திந்த மணியின் மாலை
சீலனே எங்குச் சம்பா
தித்தனை யெனக்கு ரங்கு
கோலமா ரொருகா னத்தில்
குளந்தானொன் றுளது மன்னா. (97)

(இ.ள்) அந்த மாலையைத் தன் கழுத்தில் அணிந்து கொண்டு அந்தக் குரங்கு அவ்விடத்தை விட்டுச் சென்று அரசனைச் சென்றடைந்தது. அரசன் குரங்கின் கழுத்திலுள்ள மாலையைப் பார்த்து, ''நல்லொழுக்க முள்ள குரங்கு, நீ இந்த மாலையை எங்கு பெற்றனை'' என்று கேட்டான். உடன் குரங்கு, ''அழகிய ஒரு காட்டில் ஒரு குளம் உள்ளது மன்னா,

709. அக்குளந் தன்னிற் காலை
அடைந்துமுன் குதிப்போர்க் கெல்லாம்
இக்கதிர் மணிக ளெய்தும்
எனச்சொல யானு மெய்தித்

திக்கொளி விரிக்குஞ் சோதிச்
செழுமணி பெறுவே னென்று
புக்குவக் குரங்கி னோடும்
போயினன் சேனை சூழ. (98)

(இ.ள்) அந்தக் குளத்தில் காலை நேரத்தில் சென்று குதிப்போர்க்கெல்லாம் இந்தக் கதிர்மணிகள் கிட்டும்'' என்று குரங்கு சொல்ல, மன்னனும், 'இத்தகு ஒளிவீசும் செம்மணி பெறுவேன்' என்று புறப்பட்டுச் சேனைகள் புடைசூழ, குரங்கினோடு சென்றான்.

710. போனபின் இதுவே காலம்
புகுந்தநின் சேனை யெல்லாம்
கானவிர் மலர்த்த டத்திற்
களிப்பொடு குதித்துத் தங்கட்
கானநன் மணிகள் கொண்ட
பின்னரே யரச நீயும்
நானுமொண் மணிகள் கொள்வேம்
என்றதந் நாகந் தானே. (99)

(இ.ள்) அவ்வாறு சென்று குளத்தை அடைந்ததும், '' மணிகள் பெறுவதற்கு இதுவே காலம். அரசே உன் சேனைகள் எல்லாம் இக்கானகத்து மலர்த்தடத்தில் குதித்து தங்களுக்குள்ள மணிகளைப் பெற்ற பின்னரே நீயும் நானும் குதித்து மணிகள் பெறுவோம்'' என்று அந்தக் குரங்கு சொன்னது.

711. அப்படி யாக வென்றே
அரசனுஞ் சேனை யோரைக்
குப்புறு கென்ன வோதக்
குதித்தலு மவரைப் பற்றித்
துப்புறு பூதந் தானும்
தொடர்ந்திழுத் துண்ட தங்கே
தப்புறு வேந்தன் தானும்
தடத்திடைக் காத்தி ருந்தான். (100)

(இ.ள்) அரசனும், '' அவ்வாறே ஆகட்டும் என்று கூறித் தன் படையினரைக் குளத்தில் குதிக்கச் சொன்னான். அவர்களும் குளத்தில் குதிக்க, அதிலிருந்த வலிமையான பூதம் அவர்களைப் பற்றி இழுத்து உண்டது. மன்னனும் குளக்கரையில் காத்திருந்தான்.

712. நெடும்பொழு தங்குக் காத்து
நீரிடைக் குதித்த சேனை
அடங்கலும் வராமை கண்டே
அரசனக் குரங்கை நோக்கித்
தடந்தனில் குதித்த சேனை
சார்ந்தில தென்னே யென்றான்
நடந்தொரு மரத்தின் கொம்பில்
நாகமுன் னேறிச் சொல்லும். (101)

(இ.ள்) நீண்ட நேரம் காத்திருந்தும் நீரில் குதித்த சேனைகள் முழுவதும் வராததைக் கண்ட அரசன் அந்தக் குரங்கை நோக்கி, '' குளத்தில் சேனை வராதது ஏன்?'' என்று கேட்டான். உடன் குரங்கு அங்கிருந்து அகன்று ஒரு மரத்தின் மேல் ஏறிக்கொண்டு சொன்னது.

713. கொழிபுகழ் வேந்த னேயெங்
குலத்தையெல் லாம்நீ கொன்ற
பழிதனை வாங்க வந்தேன்
முடித்தனன் பண்டு நின்சோ
றழிபசிக் குண்டேன் ஆத
லாலுனை விடுத்தே னென்று
மொழிதர விரங்கி வேந்தன்
முந்துதன் நகர்புக் கானே. (102)

(இ.ள்) '' பெரும் புகழுடைய வேந்தனே எங்கள் குலத்தையெல்லாம் நீ கொன்றதற்குப் பழி வாங்கவே நான் வந்தேன். பழி முடித்தேன். முன் நீ தந்த சோற்றினை நான்

உண்டு என் பசியைத் தீர்த்துக் கொண்டதால் உன்னை விடுத்தேன்'' என்று குரங்கு சொன்னதும் மன்னன் மனம் வருந்தித் தன் நகருக்குச் சென்றடைந்தான்.

714. அத்தகு கருமஞ் செய்தாய்
ஆதலின் நினக்கித் துன்பம்
சித்தியா யினதென் றோதிப்
புரைவிடஞ் செல்வே னென்றான்
பத்திநீத் தென்னை விட்டுப்
போகுதல் பண்போ யென்ன
இத்தைநீ கேட்டி யென்றே
இயம்புவான் சுவர்ண சித்தி. (103)

(இ.ள்) நீ அத்தகைய செயலைச் செய்தாய். அந்த வினைப் பயனால் உனக்கு இந்தத் துன்பம் கிட்டியது என்று கூறி, நான் வீட்டிற்குச் செல்வேன் என்றான் சுவர்ணசித்தி. அதற்குச் சக்கரத்தலையன் என்மீது அன்பை நீக்கி என்னை விட்டுப் போவது பண்போ என்று கேட்க, நண்பா இதனை நீ கேள் என்று கூறிச் சொல்லத் தொடங்கினான் சுவர்ணசித்தி.

குரங்கு துன்புற்ற கதை

715. பன்னு மதுரை வாழ்வோன்
பத்திர சேன வேந்தன்
அன்னவன் புதல்வி ரத்தி
னாவதி அழகின் மிக்காள்
தன்னையோ தரக்கன் பற்றச்
சார்ந்ததைத் தோழிக் கோதச்
சொன்னதை யரக்கன் கேட்டுச்
துணுக்கமுற் றெண்ணு வானால். (104)

(இ.ள்) நிலைபெற்ற மதுரையில் பத்திரசேனன் என்னும் மன்னன் வாழ்ந்திருந்தான். அவன் மகள் இரத்தினாவதி சிறந்த அழகி. அவளை ஓர் அரக்கன் பிடிக்க

வந்தான். அவள் அதைத் தன் தோழிக்குச் சொன்னாள். அரக்கன் அதைக் கேட்டுத் தவறாகப் புரிந்து கொண்டு அச்சமுற்று கலங்கினான்.

716. நம்மினும் வலியோன் இந்த
நாட்டமுற் றிவணி ருந்தால்
அம்மநான் என்செய் வேனென்
றச்சமுற் றரச னில்வாழ்
செம்மைசேர் குதிரைப் பந்தி
சேர்ந்தொரு குதிரை யாகி
விம்மலுற் றிருந்தா னந்த
வேளையோர் கள்வன் வந்தான். (105)

(இ.ள்) 'நம்மை விட வலிய ஒருவன் இவளைக் கைப்பற்ற எண்ணம் கொண்டு இங்கு வந்திருந்தால் ஐயோ நான் என்ன செய்வேன்' என்று அச்சம் சொண்டவனாக அரசனிடத்திலிருக்கும் குதிரைகளின் இடத்திற்குச் சென்று தானும் ஒரு குதிரையாகிக் கலங்கியிருந்தான். அந்த நேரத்தில் ஒரு கள்வன் அரண்மனையில் திருடுவதற்காக அங்கே வந்தான்.

717. அரக்கனாங் குதிரை தன்னைக்
கவர்ந்ததன் மேலே யேறிச்
செருக்கொடு நடத்த நேரே
செல்லுறா மையின் அடிக்கத்
தருக்கழிந் தோடல் கண்டு
தழைந்தவோ ராலின் வீழை
வெருக்கொடு பற்றி யேறி
மீதுசென் றனனக் கள்வன். (106)

(இ.ள்) கள்வன் அரக்கனாகிய குதிரையைத் திருடி, அதன் மேலே ஏறி அதைச் செலுத்தினான். அக்குதிரை ஒழுங்காகச் செல்லாததால் அதனை அடித்தான். குதிரை

அஞ்சி மிக விரைவாக ஓடியது. அச்சமுற்ற கள்வன் வழியில் தாழ்வாக இருந்த ஒரு ஆலமரத்தின் விழுதைப் பற்றி மரத்தின் மேல் ஏறிக்கொண்டான்.

718. குதிரையும் வெருவி யோடக்
குரங்கொன்று கூவிச் சொல்லும்
பொருவிலா வரக்க னான
புரவியே மனித னுக்கு
வெருவுதல் என்னே யென்ன
விளம்பலும் சோரன் கேட்டுப்
பரிவொடு குரங்கின் வாலைப்
பற்றியே வருத்தி னானே. (107)

(இ.ள்) அச்சமுற்ற குதிரை தொடர்ந்து ஓட, அதைக் கண்ட குரங்கு ஒன்று அதைக் கூவியழைத்து, ''யாராலும் வெல்ல இயலாத அரக்கனான குதிரையே, ஒரு மனிதனுக்கு அஞ்சுவது ஏன்?'' என்று சொன்னது. இதைக்கேட்ட கள்வன் அந்தகக் குரங்கின் வாலைப் பற்றியிழுத்துத் துன்புறுத்தினான்.

719. நீடுறு குரங்கு வஞ்ச
முடைத்தென நினைத்த ரக்கன்
ஓடினன் அக்கு ரங்குக்
குறுதுயர் எனக்கும் எய்தும்
ஆடுறு சக்க ரத்துக்
கஞ்சினேன் நானென் றோத
ஈடிலூழ்க் கதையொன் றோதும்
இடறுற்றோன் பொன்னுற் றோற்கே. (108)

(இ.ள்) குரங்குக்கு நேர்வதைப் பார்த்த அரக்கன் இந்தக் குரங்கு வஞ்ச மனத்தைக் கொண்டது. நாம் இங்கிருந்தால் இந்தக் குரங்குக்கு ஏற்பட்ட துன்பம் நமக்கும் நேரும் என்று அஞ்சி ஓடிவிட்டான். அதுபோல்

நான் இந்தச் சக்கரத்திற்கு அஞ்சினேன் என்று பொன் பெற்றோன் கூற, இணையற்ற ஊழ்வலிமை பற்றிய கதையொன்றை சக்கரத் தலையன், சுவர்ணசித்திக்கு கூறினான்.

குருடன் முதல் மூவர் குணப்பட்ட கதை

வேறு

720. மதுவூர் தனக்குக் காவலனாம்
மதுசூ தனற்கு மும்முலைப்பெண்
புதுமை யாகப் பிறந்திடலாற்
புரைதீர் சோதி டனையழைத்து
முதுமை யுடையீ ரிதற்குநான்
முயல்வ தென்னே யென்னவவன்
இதுநன் காய்ந்து சொலவேண்டும்
ஆரா யாமல் இசைத்திட்டால். (109)

(இ-ள்) மதுவூர் என்னும் நகரத்தின் அரசனான மதுசூதனனுக்கு மூன்று மார்பகங்களுடன் ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. இதனால் கவலையுற்ற அரசன் சோதிடனை அழைத்து, '' பெரியவரே இதற்கு நான் செய்ய வேண்டியது என்ன?'' என்று வினவினான். அதற்கு அந்தச் சோதிடன், '' அரசே இதை நான் நன்கு ஆராய்ந்து சொல்ல வேண்டும் ஆராயமல் சொன்னால் ...

அரக்கனிடமிருந்து தப்பிய அந்தணன் கதை

721. சண்ட கருமன் செயல்போலாம்
தலைவ னென்ன அவன்யாது
பண்டு புரிந்தான் எனவவன்றான்
பரவும் தண்ட காரணியத்
தண்டி யுறைவா னரக்கனவன்
அங்குற் றிடுமோர் பூசுரன்மேல்
மிண்டி யேறி நடத்திவரும்
நாளில் ஒருநாள் வேதியனும். (110)

(இ.ள்) ...சண்டகருமனின் செயல்போல் ஆகிவிடும் என்றான். அது கேட்ட அரசன் ''அது என்ன, அவன் என்ன செய்தான்'' என்று கேட்டான். சோதிடன் கதையைக் கூறினான். ''தண்டகாரணியம் என்னும் வனத்தை அண்டி வாழந்திருந்த ஓர் அரக்கன் அங்கிருந்த ஓர் அந்தணனைப் பற்றிக் கொண்டு அவன் மேல் ஏறியமர்ந்து கொண்டு அவனைச் செலுத்திக் கொண்டிருந்தான். அவ்வாறிருக்க ஒரு நாள் அந்தணன் அரக்கனிடத்தில் ...

722. பாத முனக்கு மெல்லியவாய்
இருக்கும் பரிசு புகலென்னப்
பேத வரக்கன் நீராடி
ஈரம் புலர்ந்த பின்செல்வேன்
ஆத லாலிவ் வாறிருந்த
தென்ன ஒருநாள் அவ்வரக்கன்
சீத நீரில் குளிக்கும்போ
தோடி னானச் செழுமறையோன். (111)

(இ.ள்) உன் பாதம் மென்மையாக இருப்பதன் காரணத்தைக் கூற வேண்டும் எனக் கேட்டான். அதற்கு அரக்கன், நீராடி விட்டுக் காலில் ஈரம் காய்ந்த பின்னரே நடப்பேன் அதனால் அவ்வாறுள்ளது என்றான். ஒரு நாள் அரக்கன் குளிர்ந்த நீரில் குளித்துக் கொண்டிருந்த போது அவனிடமிருந்து தப்பி ஓடினான் அந்தனன்.

723. அடியி னீரம் புலர்வதன்முன்
அப்பால் நடப்ப திலையென்ற
படியா லன்றோ நமைப்பிடிக்க
மாட்டா னென்று பார்ப்பானும்
நொடியி னகன்றான் எனவரக்கன்
நொந்தங் கிருந்தா னாதலினால்
நெடிதா ராய்ந்து சொல்லுதலே
நீதி யென்றான் சோதிடனும். (112)

(இ.ள்) 'பாதத்தின் ஈரம் காய்வற்கு முன் நடப்பதில்லை என்று சொன்னதால்தானே இவன் நம்மைப் பிடிக்க மாட்டான்' என்று பார்ப்பனன் வேகமாகத் தப்பி ஓடிவிட்டான், என்று அரக்கன் மனம் நொந்து இருந்தான். எனவே எதையும் நன்கு ஆராய்ந்து சொல்வதே நீதியாகும் என்றான் சோதிடன்.

குருடன் முதல் மூவர் குணப்பட்ட கதை - தொடர்ச்சி

724. பன்னு லாய்ந்து புரவலனைப்
பார்த்து நீநின் மகளெதிரே
துன்ன லாகா மையின்வேறோர்
துலங்கு மாடந் தனில்வைப்பாய்
என்ன அவ்வா றவன்வைத்தே
இருக்கும் நாளில் அவ்வனிதை
உன்னு மங்கைப் பருவமதை
உற்றாள் எனக்கேட் டரசனுமே. (113)

(இ.ள்) சோதிடனும் பல நூல்களையும் நன்கு ஆராய்ந்து, அரசனைப் பார்த்து, '' அரசே நீ உன் மகளோடு சேர்ந்திருத்தல் கூடாது. எனவே அவளை வேறோரிடத்தில் தனி மாளிகையில் வைப்பாய் '' என்று கூறினான். மன்னனும் அவ்வாறே செய்தான். காலம் உருண்டோடியது. அக்குழந்தை வளர்ந்து பருவம் எய்தியது. அவள் மங்கைப் பருவம் எய்தியதைக் கேட்ட அரசன்...

725. இந்த மாது தனைக்கொள்வார்க்
களவில் நிதியோ டீவனென
அந்த மொழிகேட் டொருகுருடன்
கூனன் மிசையூர்ந் தடுத்தரச

தந்தி டென்ன வக்கணமே
தந்தான் குருடற் கவ்வூர்விட்
டெந்த நாட்டி னாயினும்நீர்
ஏகு மென்ன அவர்போனார். (114)

(இ.ள்) இந்தப் பெண்ணை மணந்து கொள்வோருக்கு அளவற்ற செல்வத்துடன் இவளைக் கொடுப்பேன் என அறிவித்தான். அதைக் கேட்ட ஒரு குருடன் ஒரு கூனன் மேல் ஏறிக்கொண்டு அரசனிடம் வந்து அந்தப் பெண்ணை எனக்குத் தா என்றான். அக்கணமே அரசன் அவளை அவனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். அத்தோடு அந்த நாட்டை விட்டு வேறு எங்காவது சென்று விடும்படிக் கூறினான்.

726. மற்றோர் நாட்டில் மூவரும்போய்
வைகும் நாளில் கூனன்மிசை
உற்ற வாசை மிகக்குருடன்
உயிரைப் போக்க உபாயமிது
கற்றே செத்த பாம்பொன்றைக்
கறியாக் கிடுதற் கடுப்பேற்றிச்
சற்றே தீயூட் டெனக்குருடன்
தானும் விறகிட் டெரித்திட்டான். (115)

(இ.ள்) வேறொரு நாட்டில் அவர்கள் சென்று வாழ்ந்து வரும் நாளில் கூனன் மேல் கொண்ட ஆசை மிகுதியால் குருடனைக் கொல்லும் வழி இதுதான் எனச் சிந்தித்து இறந்த பாம்பு ஒன்றை எடுத்து அதைக்கறி சமைப்பதற்காக அடுப்பில் ஏற்றி, குருடனிடம் சற்று நேரம் அடுப்பை எரிக்கும்படிக் கேட்டுக் கொள்ள, குருடனும் விறகிட்டு எரித்திட்டான்.

727. வேகும் பாம்பின் ஆவியவன்
விழியின் மேலே தாக்குதலால்
போகும் விழிகள் தெரிந்தனதூ
ரத்திற் போகிக் குலாவுமவர்

மோகங் கண்டு போய்வளைந்த
முதுகன் தனையீர்த் தெடுத்தவள
தாகம் தன்னி லெறியநடு
முலையு மறைந்த தப்பொழுதே. (116)

(இ.ள்) அடுப்பில் வேகும் பாம்பின் ஆவி அக்குருடனின் கண்ணில் பட அவனுடைய குருட்டுத் தன்மை நீங்கிப் பார்வை பெற்றான். அப்பொழுது தூரத்தில் கூனனும் தன் மனைவியும் கூடிக் குலாவும் அவர்தம் மோகம் கண்டு சினம் கொண்டு சென்று கூனனைப் பற்றி எடுத்துத் தூக்கி அவள்மேல் எறிந்தான். அப்பொழுது அவளுடைய நடுமார்பகம் மறைந்தது.

728. கூனன் கூனும் நிமிர்ந்திட்ட
தாதலாலிக் குவலயத்தில்
ஆன தெய்வ வருளுண்டேல்
யாவும் நலமாம் என்றதற்பின்
நீநின் னகருக் கேகுங்கால்
நெறிக்குத் துணையோ டேகெனமுன்
போன துணையிற் பயன்கொள்கதை
புகலு வான்சக் கரதரனே. (117)

(இ.ள்) அதே சமயம் கூனனின் வளைந்த முதுகும் நிமிர்ந்தது. எனவே இந்த உலகத்தில் தெய்வத்தின் அருள் இருந்தால் எல்லாம் நலமாக முடியும் என்று கூறி மேலும் சக்கரத்தலையன் சுவர்ணசித்தியிடம், நீ உன் நகரத்திற்குத் திரும்பிச் செல்லும் பொழுது உற்ற துணையுடன் செல்வாயாக என்று கூறி முன் தக்க துணையுடன் சென்றவன் பெற்ற பயனைக் கூறும் கதையைச் சொன்னான்.

நண்டின் வழித்துணையாற் பிழைத்த கதை
வேறு

729. நாசிக தேயந் தன்னில்
நண்ணிய தத்த னென்பான்
தேசிகன் கருமம் முற்றச்
செல்வனோர் ஊர்க்கென் றோத
ஏசுறா வன்னை நீநற்
றுணையொடு மேகு கென்றாள்
பேசுறுந் துணைபின் றென்னப்
பின்னுமவ் வன்னை எண்ணி. (118)

(இ.ள்) நாசிகம் என்னும் நாட்டில் தத்தன் எனும் தேசிகன் ஒருவன் இருந்தான். ஒரு சமயம் அவன் பணி நிமித்தமாக வெளியூர் செல்வதாகக் கூறினான். அவனுடைய தாய் தக்க துணையுடன் செல் என்று கூறினாள். தக்க துணை என்பது என்னவென்று அவன் கேட்க, அவள் சிந்தித்துப் பார்த்து...

730. அலவினைக் கலசத் துட்பெய்
தவன்கையி லளிக்கக் கொண்டு
செலும்பொழு திளைப்பாய் ஆங்கோர்
செழுந்தரு நிழலிற் றூங்க
நலிதர விவனைத் தீண்ட
நல்லர வொன்று எண்ணிக்
கலசமுள் தலையை நீட்டக்
கர்க்கட கந்தான் கண்டே. (119)

(இ.ள்) ஒரு நண்டைப் பிடித்து ஒரு கலசத்தில் போட்டு மூடி அவன் கையில் கொடுத்தாள். அதை அவன் எடுத்துக் கொண்டு செல்லும் வழியில் களைப்புற்று ஒரு மர நிழலில் துங்கினான். அப்பொழுது ஒரு பாம்பு இவனைத் தீண்டும் எண்ணத்துடன் வந்தது. அது கலசத்துள் தலையை நீட்ட அதைப் பார்த்தது நண்டு.

731. காரர வெனநி னைந்து
கடுங்கொடுக் காலிடுக்கி
மாரணஞ் செய்யப் பின்னர்
மறையவன் விழித்துப் பார்த்துப்
பேரர வதனைக் கொன்ற
தாரெனப் பெரிது மெண்ணித்
தேருறு பொழுது நண்டால்
செத்ததீ தெனத்தெ ரிந்தான். (120)

(இ.ள்) பாம்பு என்று உணர்ந்த தன்னுடைய வலிமையான கொடுக்கால் இருக்கி கொன்றது. பின்னர் கண்விழித்த மறையவன் இதைப் பார்த்து இந்தப் பெரிய பாம்பினைக் கொன்றது யார் என பெரிதும் சிந்துத்துப் பார்த்து பாம்பு நண்டால்தான் இறந்தது எனத் தெரிந்து கொண்டான்.

732. மாதுறு வாக்கி யத்தை
மன்னுமென் சிரத்திற் கொண்டு
போத லால்பி ழைத்தேன்
என்றவன் புகுந்தா னென்று
தீதுளா னோதக் கேட்டுச்
சுவர்ணசித் தியும வன்பால்
ஆதர வாகப் பேசித்
தன்னக ரடைந்து வாழ்ந்தான். (121)

(இ.ள்) தாயின் சொல்லைச் சிரமேற் கொண்டு செயல் பட்டதால் பிழைத்தேன் என்று அவன் கூறிக்கொண்டு சென்றான் என்று சக்கரத்தலையன் கூறக்கேட்டுச் சுவர்ணசித்தியும் அவன்பால் ஆதரவாகப் பேசித் தன் நகர் அடைந்து வாழ்ந்திருந்தான்.

கீரியைக் கொன்ற பார்பனன் கதை - தொடர்ச்சி

733. என்றிவை பலவும் பன்னி
இரங்கலுந் தனது பன்னி
நன்றென இஇமறையோன் கேட்டு
நாமறி யாம லந்தோ

நின்றுவந் துளத்த பாவம்
ஞானமறை முறையின் ஆய்ந்து
நின்றைநற் கழுவா யாற்றிப்
பீழைதீர்ந் திருந்தா ரன்றே. (122)

(இ.ள்) இப்படியாகப் பலவும் கூறிப் புலம்பும் யாகசேனியின் புலம்பலைக் கேட்ட மறையவன் நம்மையறியாமலே இந்தப் பாவம் நம்மை வந்து சேர்ந்தது என்று வருந்திப் பல நூல்களையும் முறையாக ஆராய்ந்து, தன் பாவத்திற்குரிய பரிகாரங்களைச் செய்து, துன்பம் நீங்கி அவர்கள் வாழ்ந்திருந்தனர்.

734. கூறினான் சோம சன்மா
கோவிளங் காளை மைந்தர்
தேறினா ருபாய நீதித்
திறமெலாம் அறிந்து மற்றும்
வேறுள கதையும் தேர்ந்தார்
வேந்தனும் மைந்தர் மீதில்
மாறுகொண் டதுவும் நீங்கி
மனமகிழ்ந் திருந்து வாழ்ந்தான். (123)

(இ.ள்) இவ்வாறு பல கதைகளையும் சோமசன்மா கூறக் கேட்ட அரசிளங் குமரர்கள் நல்லுபாயங்களையும் நீதிகளையும் கேட்டு அத்தன்மைகளை எல்லாம் அறிந்து கொண்டதோடு வேறு பல கதைகளையும் கேட்டுத் தேர்ந்தனர். அரசனும் தன் மக்கள் மேல் கொண்ட மனவேறுபாட்டை மறந்து மகிழ்ச்சியோடு அவரைச் சேர்த்துக்கொண்டு வாழ்ந்திருந்தான்.

அவையடக்கம்

735. ஐவகைத் தந்தி ரத்தின்
அடைவையான் தமிழி னாலே
இவ்வகை யறிந்த வாறிங்
கியம்பினன் புலமை மிக்கோர்

செவ்வியேதன் றுவப்பர் தங்கள்
சிறுவர்சொல் பழுதா னாலும்
அவ்வவர் இகழார் நந்தம்
அகமகிழ்ந் துவபா ரன்றே.

(இ.ள்) ஐவகைத் தந்திரத்தின் தன்மையினை நான் தமிழில் நானறிந்தவாறு கூறினேன். பலமைமிக்க சான்றோர்கள் இதனை நன்று எனக் கூறி மகிழ்வர். ஏனெனில் தங்கள் குழந்தைகள் பேச்சில் குற்றம் காணப்படினும் அவர்கள் அதை இகழ்ந்துரைக்க மாட்டார்கள். மாறாக அதற்கு நாளும் மனமகிழ்ந்து இருப்பரன்றோ.

(இப்பாடல் நூலைத் தமிழாக்கம் செய்த வித்துவான் தாண்டவராய முதலியார் அவையடக்கமாகப் பாடிச்சேர்த்தது)

ஐந்தாம் தந்திரம் அசம்பிரேட்சியகாரித்தும் முற்றும்

பஞ்சதந்திரச் செய்யுள் முற்றும்

பாடல் எண். 670 முதல் 733 வரையான பாடல்கள் ஓலைச்சுவடியில் காணப்படவில்லை. 735ஆம் பாடல் அச்சுப்பிரதியில் இல்லை. சுவடியில் மட்டும் உள்ளது. 734ஆம் பாடல் கீழ்க்காணுமாறு உள்ளது.

பா. பே.: பாடல் 735

கூறினான் சோம சன்மா கொற்றவ னருளு மைந்தர்
தேறினார் உபாய நீதித் திறமெலா மறிந்து கொண்டே
வீறினா ரரசன் முன்போய் விவேகத்தின் மாட்சி காட்டி
ஈறிலா வரசு பெற்றிவ் விருநிலம் புரந்து வாழ்ந்தார்.

அருஞ்சொற்பொருள் அகரவரிசை

அ

அகடு	பொல்லாங்கு
அங்குரம்	முளை
அசதி	பக்கல்
அசேதன்	அறிவற்றவன்
அடவி	காடு
அதனம்	மிகுதி
அயின்று	அருந்தி, உண்டு
அரி	சிங்கம்
அலவன்	நண்டு
அவகடம்	வஞ்சகம்
அவனி	உலகம்
அவுஷதம்	மருந்து
அளறு	சேறு, நரகம்
அளன்று	சினந்து

ஆ

ஆடு	பெருச்சாளி
ஆரணியம்	காடு
ஆலின்வீழ்	ஆலமர விழுது
ஆழி	சக்கரம்

இ

இந்து	நிலா
இந்து சேகரர்	சிவபெருமான்
இரட்சை	பாதுகாப்பு
இழுக்கம்	குற்றம், தாழ்வு

உ

உகுவை	அழிவாய்
உடுக்கள்	விண்மீன்கள்
உரம்	வலிமை
உலூகம்	ஆந்தை
உவணம்	கருடன்

உவளகம்	அந்தப்புரம், மதில், பக்கம்.
உவளு நெஞ்சம்	அஞ்சியநெஞ்சம், நடுங்கிய நெஞ்சம்
உழை	மான்

எ

எல்வை	நேரம்,பொழுது
என்பு	எலும்பு

ஓ

ஓசிநோக்கு	சாய்ந்த பார்வை
ஓகை	உவகை
ஓரி	நரி

க

கங்குல்	இரவு
கடம்	யானை
கண்டீரவம்	சிங்கம்
கபோதம்	புறா
கம்பித்து	அசைத்து
கமடம்	ஆமை
கயம்	யானை
கயயூதம்	யானைக்கூட்டம்
கரத்தல்	மறைத்தல்
கரந்தான்	மறைந்தான்
கரா	முதலை
கரும்பொன்	இரும்பு
கலாம்	மாறுபாடு
கலி	துன்பம்
கவுள்	கன்னம்
கற்கடகம்	நண்டு
கனகம்	பொன்

கி

கிடா	ஆடு

கு

குச்சிதம்	இழிவு

குடிஞை	ஆந்தை
குரவன்	ஆசிரியன்
குருளை	குட்டி
குலாலன்	குயவன்
குவடு	மேடு

கூ

கூகை	ஆந்தை
கூபம்	கிணறு

கே

கேண்மை	நட்பு

கொ

கொடி	காகம்
கொடிக்குலம்	காக்கை இனம்

கோ

கோட்டான்	ஆந்தை
கோடு	கிளை
கோதம்	சினம்
கோது	குற்றம்

ச

சகாயர்	நண்பர்
சசன்	ஆண்முயல்
சசி	நிலவு
சத்துரு	பகைவன்
சந்ததம்	தொடர்ந்து, எப்பொழுதும்
சம்பு	நரி
சம்புகன்	நரி
சரம்	அம்பு
சலக்கிரீடை	நீர்விளையாட்டு
சலம்	நீர்
சவி	வலிமை, அழகு
சவுசாதிகள்	தூய்மை செய்தல் முதலிய

சி

சிங்கவேறு	ஆண்சிங்கம்

சீ

சீயம்	சிங்கம்

சு

சுபாஷிசம்	நற்சொற்கள்
சுரத நலம்	புணர்ச்சி நலம்
	இனிமை நலம்
சுவாணம்	பொன்
சுவல்	தோள், முதுகு, பிடரி

சே

சேடம்	எச்சம், மீதி

சோ

சோடம்	தூக்கம்
சோரன்	திருடன், கள்ளக்காதலன்

த

தந்தி	யானை
தடம்	குளம்
தரு	மரம்
தவசு	தவம்
தளம்	உப்பரிகை, படை

தி

திரை	தோல் சுருக்கம்

து

துங்கர்	தூயவர்
துங்கவாள்	வெற்றியை உடைய வாள்
துத்தி	பாம்பின் கூட்டம்
தும்பி	யானை
துரவு	கிணறு
துலங்கும்	விளங்கி நிற்கும்
துவளுதல்	துடித்தல், வருந்துதல்
துளக்கம்	கலக்கம்
துறுபகை	நெருங்கிய பகை

தூ

தூர்த்தன்	காமுகன், கொடியோன்

தூறு	தீங்கு

தொ

தொம்பை	நெற்குதிர்

தோ

தோகையர்	மகளிர்
தோட்டி	அங்குசம், கதவு

ந

நந்திய	எண்ணிய
நரபதி	அரசன்
நவ்வி	மான்

நா

நாகம்	குரங்கு
நாரியர்	பெண்கள்

நி

நிருபன்	அரசன்
நிரையம்	நரகம்

நீ

நீடிய	தீய

நே

நேமி	சக்கரம்

நௌ

நௌவி	மான்

ப

பகம்	கொக்கு
பகராசன்	கொக்கு அரசன்
பங்கம்	சேறு
பணி	பாம்பு
பரவை	கடல்
பரிசனங்கள்	பரிவாரம்
பலம்	பவம்
பலாதி	பழம் முதலியன
பழுதை	கயிறு
பன்னகம்	பாம்பு

பா

பாங்கன்	தோழன்
பாசம்	கட்டு, கயிறு
பாத்து	சோறு
பார்ப்பு	குஞ்சு
பாலம்	பூமி, தரைப்பகு1தி

பி

பிதிர்தல்	உடைதல்
பிணை	உத்திரவாதம், பொறுப்பு

பீ

பீறல்	கிழித்தல்

பு

புங்கம்	உயர்ச்சி
புடவி	பூமி, நிலம்
புணரி	கடல்
புணை	படகு
புயன்	காற்று
புயன் மைந்தன்	வாயு மகன், பீமன்
புலந்து	ஊடி
புல்லர்	இழிந்தவர்

பூ

பூசுரன்	அந்தணன்
பூவை	மைனா, நாகனவாய்ப்புள்

பே

பேரி	பேரிகை

பை

பையுள்	துன்பம்

பொ

பொதி	துணிமூட்டை
பொதும்பை	மரப்பொந்து, சோலை

ம

மஞ்சன்	மைந்தன்
மட்டு	மணம்
மட்டுலாங் கோதை	மணம் வீசும் கூந்தல்

மடையன்	சமையல்காரன்
மந்திரவிசாரம்	ஆலோசனை
மயித்திரன்	நண்பன்
மறுகு	தெரு

மா

மார்ச்சாலம்	பூனை
மாரீசம்	வஞ்சகம்

மோ

மோனர்	மௌனமாய் இருப்பவர்

மை

மைத்திரன்	நண்பன்

மி

மிண்டான்	அறிவிலி

மு

முகுடு	மூட்டைப்பூச்சி
முட்டர்	மூடர், முரடர்
முழை	குகை
முழைஞ்சு	குகை

மூ

மூங்கை	ஊமை
மூடிகம்	எலி, பெருச்சாளி

யூ

யூதம்	விலங்கின் கூட்டம்

வ

வங்கணம்	நட்பு
வடம்	ஆல்
வடமரம்	ஆலமரம்
வல்லயம்	ஈட்டி
வல்லியம்	புலி
வனசரன்	வேடன்

வா

வாசி	குதிரை
வாசியாக்கு	குணப்படுத்து

வாணி	சொல், ஒலி
வாமம்	அழகு
வாயசம்	காகம்
வாய்மதம்	வாய்ச்செருக்கு வாய்க்கொழுப்பு
வாவி	குளம்
வானரம்	குரங்கு

வி

விகடம்	வஞ்சகம்
விசித்த	கட்டிய
விண்வாணி	ஆகாயச்சொல், அசரீரி
விதிர்ப்பு	நடுக்கம்
வியக்கரம்	புலி
விரகு	உபாயம், தந்திரம், சாமர்த்தியம்

வெ

வெய்யவன்	சூரியன், அரசன்
வேசரி	கழுதை
வேதன்	பிரமன்
வேழம்	ஆண் யானை

பாட்டு முதல் குறிப்பு அகராதி

(எண்கள் : தொடர் எண்ணைக் குறிக்கும்)

அ

அக்கணமே 201
அக்கதை தெரிய 413
அக்கதை யாதோ 519
அக்குளந் தன்னில் 709
அங்கவ் வேதியானை 581
அங்கவர்கள் துன்மார்க்கம் 425
அங்கவன் சபையில் 7
அங்கவன் தேவிதன்னை 306
அங்கவன் மீண்டு 651
அங்கவை இரண்டுஞ் 399
அங்குரத்தினில் 48
அங்கொரு குரங்கு 29
அஞ்சியே மிகவும் 146
அடியினீரம் 723
அடுக்கவோர் மலை 351
அத்தகு கருமஞ் 714
அதிதி யெவன்பாலெய்தி 263
அதைச் சிறுபார்ப்பெலாங் 257
அந்தண விந்தக் காப்பை 232
அந்தணன் சுகிரில்லாபத் 347
அந்தநாள் தன்னில் 288
அந்தப் பழிகாரர் 99
அந்த மன்னன் குமாரர்க்கு 329
அந்த மன்னனை 51
அந்த மின்னை 481
அந்தமொழி கேட்ட 41
அந்தமொழி கேட்டலுமே 454
அந்தவரசன் 25
அந்த வேதியன் 66
அந்தவேளை யிரணியன் 340
அந்தவோரி யுந்தன் 548
அப்படி இருக்கும் நாளில் 624
அப்படிச் சொலப்புறா 235
அப்படித்தானே மூவர் 645
அப்படி நீயுமென்னை 562
அப்படிப் போல நாமும் 395
அப்படியாகவென்றே 711
அப்படியே வைதுகொண்டு 197
அப்பதியிலிருந்துலகை 458
அப்பா நான் பிழைத்தேன் 476
அப்பொழுது காக்கையினால் 478
அப்பொழுது சாலபதன் 509
அபயம் வாங்கி 176
அய்யகோ விசாரியாமல் 636
அரக்கனாங் குதிரை 717
அரசரை இகழ்ந்து 112
அரசன் வெம்பசி 178
அரசனார் குமாரர் 614
அரசனின் சொலும் 157
அரசனுமங் கவன் 477
அரிந்து முன்விழுந்த 77
அரைசு சிங்கம் 168
அல்லது வெறுங்கை 536
அல்லவே உமக்கிங் 544
அலவன் றசைதனை 101
அலவனைக் கலசத்துட் 730
அவ்வகை யெண்ணினாலும் 107
அவ்வொலி கேட்டவன் 460

அவன் மணிக்கூட்டிடை 470
அவன் மனது வர 487
அழிந்தன காகசேனை 355
அறம்விடுத் திட்டெனை 262
அறிவிலார் தமதாண்மை 186
அன்பினால் நம் 467
அன்றிரவுடன் 393
அன்றிரவு முதலாக 439
அன்றுதொட் டின்று 409
அன்றுமுத லிருவோரும் 447
அன்னது கேட்டகாகம் 277
அன்ன நாளில் 188
அன்னவன் சொல்படி 210
அன்னவன் றன்னை 299
அன்னவன் றனைப்பணிந்து 64
அன்ன வோரிதான் 54
அன்னியு ரேனுந் 119
அன்னையு மைந்தன் கூடி 664

ஆ

ஆக்கமிகுங் கமுரேசன் 260
ஆகு வேந்தனம் 336
ஆகையால் புல்லியோரை 408
ஆகையினால் கவடு 218
ஆகையினால் யோனிதனை 486
ஆகையினால் வினைப் 501
ஆகையினா லரசர்களும் 513
ஆங்கது கபோத 236
ஆங்கது கேட்ட 412
ஆண்டொருநாள் 497
ஆதலால் காணுமுன்னே 629
ஆதலால் கீழானோர் 600
ஆதலால் தருமத்தோட 18
ஆதலாற் பகைவரென 472
ஆதலாற்றன திடத்தினில் 611
ஆதலானல் லவர் 345
ஆதலின் மன்னவர் 156
ஆதி தந்திரங்கள் 517
ஆயதினந்தினில் 269
ஆயிரம் பொன் 209
ஆயிரம் மகவை 5
ஆயிழை போனபின்பு 650
ஆயினிவ்வாறு 127
ஆயினென்னை 180
ஆர்க்கும்பே ராசை 671
ஆரணனறிந்து 307
ஆரய்யா நீங்கள் 402
ஆன வேமடங்குந் 161
ஆணிளஞ் சிங்கமே 90
ஆனை பசிகொளினும் 34
ஆனையும் நடுங்கி 394
ஆனையை வெல்லுமாறு 382

இ

இக்கதை யாது 131
இங்கிதன் பெருமை 291
இங்கிதை யறிந்திலம் 24
இங்கிவை யனைத்தும் 391
இசைநில வெறிக்கும் 385
இடுக்கண் வந்துற்ற 238
இது கபடமென்று 214
இதையு நாமெய்தோமாகில் 303
இந்தக்குளம் 98
இந்த மாதுதனை 725
இந்தமொழி சம்மத 479
இந்தவகை தமனக 35
இந்தவிடம் விட்டு 195
இந்தவென் னிடத்தை 696
இந்தவேளை போல் 68
இந்து சேகரராம் 516

இப்படி இருக்கும் நாளில் 521
இப்படி இவர்கள் செத்தார்639
இப்படி யனேக நாளங் 523
இப்படியே சிலபகலில் 426
இப்படியே நரிசொல்லும் 203
இப்பழி இறையிடத்தே 705
இரக்கமொடு வேடுவனும்468
இரணியன் கண்டு கூட்டம்241
இரணியன் தன்னை 315
இருந்துநாம் பணமுங் 625
இருபுறமுந் தாம் 193
இருமீன் களையுந் 688
இருவராய் நாமே கூடி 557
இருவரும் போனார் 401
இருவரும் மொரு 65
இருள்விடி வளவின் 356
இருளை நீத்த 160
இரைதேடு மொரு 474
இவ்வகை சொல்ல 83
இவ்வாறு தினம் தினமும் 511
இவர் மூவர் கருத்தும் 448
இவள் கருத்தை 579
இவன்றான் மிக்க 684
இவனை நாம் கொல்ல 532
இவனை நாம் கொல்வோ653
இவைகணீ சொல்ல 144
இழிந்திடு குயவன் 566
இழைத்தநாள் வராமை 640
இளம்பிறை அரவு நங்கை346
இற்றை நாள் காறும் 473
இற்றை நாள் வரை 47
இற்றைநாள் வரையும் நன்றாய் 290
இற்றைநாள் வரையும் நாமும் 381
இறந்தது நிகழ்வதும்பின் 242
இறந்த யானையை 602
இன்னநல் நீதி 246
இனமுமக் கறிவிலையே 430
இன்னவை போலும் 124
இன்னபலவு பாயம் 105
இன்னன பலவும் 19
இன்னனவும் நீதிகள் 40
இன்றுனைக்கண்டு 253

ஈ

ஈதுநாமறியுமுன்னே 230
ஈதுநான் கொன்ற 603
ஈரில்வரை மேலொரு 39

உ

உதிட்டிர னெனுமொரு 563
உரிமைமந்திரி 50
உரைசெய் யக்கதை 164
உரைசெய வதனை 280
உரைத்திடு கதையேதென்ன 620
உள்ளது கொண்டு 304
உள்ளதுதானே துட்டர் 283
உற்றநான் கிலவ் 170
உறுமுண வளித்து 570
உன்னிடமேது நீயும் 293
உன்னுடைபேச்சை 554
உன்னுரை தனக்கு 583
உனக்குமன மென்மேலே 453

ஊ

ஊக வேந்தனை 524

எ

எண்ணிய குளத்தின் 706
எண்ணிய விரதம் 405
எத்தனை விதம் 126
எரிதழல் அவதரித்தே 494
எலிக்குமோர் விரதம் 298

எலியரசன் தனையும் 485
எவ்வள வாகிலுந்தான் 518
எவ்வள விந்தநீரில் 707
எவ்வனம் செல்வம் 6
எவ்விடத் தெக்காலத்தில் 243
எழுப்பினார் பின்பது 686
எவ்வளவு மவன்மீதில் 437
எறிதிரைப் பரவை 279
என்பன சொல்ல 130
என்றலுங் கரடகன் 46
என்றலு முபாத்தியாயன் 301
என்றனன் சிஞ்சுமாரன் 525
என்றிசைப்பக் கழுதை 264
என்றிடக் குரங்கு 588
என்றிவை பலவும் 733
என்றுகாக மியம்ப 177
என்று கூறலும் 337
என்றுகூறி இரங்க 332
என்று சஞ்சீவகன் 150
என்று சந்தீபிதன் 361
என்று சொல்லக் கேளாமல் 693
என்று சொல்ல நன்று 198
என்று சொல்லி முன் 605
என்று சொலச் சேவல் 200
என்றுசொலப் பிரகார 456
என்று தமனகனும் 221
என்றுதான் கபோதம் 244
என்றுதின் மனத்தில் 384
என்றுதன் மனதிலெண்ணி 631
என்று பஞ்சவர் 175
என்று புத்திசொல்லி 204
என்றுமொரு பட்டணத்தில் 215
என்றுரைத்தான் தூதனும் 508
என்றே பகராசன் 100
என்றொரு கதையும் 134
என்னைக் கவலையுடன் 678
என்ன காரணத்தினாலே 370
என்ன காரணமதற் 304
என்ன காரணமோ 331
என்ன நான்சொல்வது 659
என்ன பீதியுனக் 327
என்னபுத்தி நீ 191
என்னலும் போய்வா 529
என்னலுமந் நரியது 268
என்னலு மவன் 76
என்னவக் கதையே தென்றார் இருள்குடி 349
என்னவக் கதையேதென்றார் எழில்பெறு 615
என்னவக் கதையேதென்று 397
என்னவப் படிசெய் 592
என்னவெப்படி 45
என்னவே எலியும் 289
என்னவே கலங்கி 654
என்னினும் நீயும் 145
என்னுடைப்பேர் 424
என்னுடை முன்னே 111
என்னென்றுரை 97
என்னைநீ காட்டி 72
எனத்தம னகனுஞ் 140
எனத்திரஞ் சீவி 371
எனதுபெயர் நெடுஞ்செவி 258
எனவிடை கூற 141
எனவே தமனகனோதிட 104

ஏ

ஏகமா யிருக்கும் 85
ஏகியே தமனகன் 138

ஏகினபுறாக்கள் 247
ஏகினான் சாலபத 510
ஏகினான் சோமசன்மா 657

ஐ

ஐயநின் பசிவேளைக்கு 93
ஐயநின் பழையசேனை 109
ஐயவோபாதகா 75
ஐயையோ பாவம் 555
ஐயையோ விவன் 158
ஐவகை தந்திரத்தில் 613
ஐவகை தந்திரத்தின் 735

ஒ

ஒட்டகம் வழி 165
ஒருகணமதான 38
ஒரு குரங்கது கேட்டு 701
ஒருமையிலாமல் தரும 207
ஒருவர் மேலே 211
ஒருவனைக் கெடுத்து 174
ஒன்றுதான் போது 535

ஓ

ஓதினான் கலைகள் 652
ஓதுமத் தீபிதன் 363
ஓரியைக் காவல் 559

க

கட்டிலின் கீழ் 452
கடலின்மே லோடும் 281
கடன்படிற் கொடுத்த 129
கடுங் கழுகு 266
கண்டது கழுதை 551
கண்டவப் புறாவின 229
கண்டவன் கோப 71
கண்டவன்நீ யாரென 442
கண்டவுடன் மேக 489
கண்டனன் நாவிதன் 646
கண்டுநீயார் உன்மேல் 677
கண்டு வேடன் 342
கண்ணார அவனியற்றுங் 455
கண்ணினால் காணா 669
கணக்கிலாப் பாவம் 553
கணவனே தெய்வமென 459
கதனகனிதைக்கண்டு 181
கதிரவ னிலையேல் 312
கதிரவனெழுந்தால் 353
கரடகனமக்கிதென 26
கரடகனை நோக்கி 31
கரந்து பார்த்திருக்க 237
கருடனுமங் கதை 202
கருதிய யமுனை யாற்றின் 400
கருதியே சிங்க வேற்றின் 92
கல்வியும் குலத்தை 4
கலங்கினான் பிரமச்சாரி 628
கள்ளமாப் பிள்ளை 196
கள்ளமாய் இகலை 421
கள்ளனுமங் குளமகிழ்ந்து 438
களிப்புற வேந்திதை 575
கழுதைதன் வாக்கினாலே 375
கழுதையார் தம்மை 558
கழுதையும் நல்லதென்ன 550
கற்றவித்தையால் 685
கன்றிய போரின்முன் 565

கா

காக்கை சென்றெதிர் 324
காகமது மித்திரனை 173
காகமப் படியே 88
காகமுங் கூடி 240
காகமொன் றெலியும் 224
கங்குலிற் புலித்தோலாலே 372
காட்டிலே தனித்திருந்த 60

காணுமுன் கேட்குமுன்னே619
கார்வளங் குன்றியே 564
காரணத் தாலே வேந்தன் 149
காரர வென நினைந்து 731
காரிய மலாதவொரு 30
காரிய முயற்சி 366
கால்வேறுந் தலை 427
கான வேடனை 317

கி

கிட்டநீர் வந்து 406
கிடைத்ததை யழிய 12
கிருத்தியத்தினடவா 220

கு

குகைய தனை 475
குட்டிகளி ரண்டுடை 569
குதிரையும் வெருவி 718
குருவுப தேசம் 128
குறிய தங்குட்டிகள் 571
குறுமுயல் சிங்கந் 89

கூ

கூகைமன் னவனும் 423
கூடி மூன்றுங் 325
கூடுவதொன்றுங்கூடி 365
கூனன் கூனும் 728
கூறவே கழுதை 547
கூறினான் சோமகன்மா 734
கூறிய நீதியான 410

கே

கேட்டலுந் தந்து 70

கை

கைகள் காலிருந்தும் 599
கையினிலெடுத்த 79

கொ

கொடியரோடெவர் 183
கொண்டுபோய்த்தனது 531
கொழிபுகழ் வேந்தே 713
கொள்ளிவாயடி 132
கொற்றவர் காரியத்தில் 113

கோ

கோடுறு கிளையில் 86
கோதில் சுனையிற் 23
கோலமா ரெலி 338

ச

சக்கர தரனிவ்வாறு 699
சண்ட கருமன் 721
சத்துருவான பேர்கள் 348
சத்துருவையொருவேளை502
சத்துருவெனுமிக் காரை 359
சத்துவம் புத்தி 310
சந்தத் திரு 63
சந்தன மரங்களை 155
சந்திர சரசு தண்ணீர் 380
சந்திர சரசென்று 386
சந்திவிக் கிரகத்தாலே 411
சம்புதான் எவளைப்பார்த்து 589
சம்புவும் புலி 168
சற்றிடங் கிட்டவந்து 403
சற்றே கலங்கிப்பின் 682
சன்னி யாசியோர் 62

சா

சாபத்தினாலெனது 507
சாமபேதநற் றான 607
சாமமும் பேதந் 367
சாலபதன னென்கின்ற 507
சாலையுமெரிய வாசி 703

சி

சிங்கம் நீவிர் 169
சிங்கநா மல்லால் 94

சிங்க மன்னனும் 58
சிங்க மன்னனை 42
சிங்கமும் கழுதையீரல் 561
சிங்கமும் சந்தி பண்ணி 560
சிங்க மென்னி 182
சிங்கமொன் றிடப 14
சிங்கமோ விலங்கை 549
சித்திரக் கிரீவனை 278
சித்திரங்கன் திகைத்து 323
சிறகுகள் ஒடிந்திரத்தம் 422
சிறிதுநாட் சென்ற 609

சீ

சீட்டிது விலைசொல் 662
சீட்டைமுன் போல 666
சீய ராசேந்திரனே 137

சு

சுகமடைவா னரசனென்று 462
சுதியிலார் பாட்டும் 311
சுருதியந் தத்துத் 612

செ

செட்டியார் கதை 648
செட்டியு மீரைந்தாண்டு 663
செத்த காகங்கள் 358
செத்ததென்று போட்டு 431
செப்பரிய தம்பியரும் 491
செல்வமும் செல்வமல்ல 139
சென்றொருவண்ணான் 546

சே

சேயனை அபூர்வங் 650
சேவலது கேட்க 194
சொல்லி யந்தமேக 515
செல்வத்தி லாசை 120
சென்று நானதை 56
சோரனும் நீ 443

சோ

சோரனை நம்பியே 594

சொ

சொல்லலுங் கமட 292
சொன்னவம் முதலை 576

த

தங்கு மதன் மேலிருந்த 465
தங்குமிம் மரச் 55
தங்குற்றோன் நீமிக 261
தங்கையிவன் என 580
தச்சன்றன் தேவியையும் 449
தஞ்சமென்றடைந்த பேர்க்கு 117
தண்டினா லடித்துக் 633
தண்ணுறுஞ் சுனை 387
தத்துநீர் கரை 339
தந்தியின் அரசு 392
தந்துவாயன் 74
தந்தைதாய் தமர் 320
தந்தை யுரைத்தது 213
தருமநூற் பலதெரிந்து 265
தருவார் நீர்சோறார் 680
தவமிகு மயோத்தி 700
தவளை யன்னது 543
தழுவுறு மொரு பூனைக்குச் 255
தறிமரம் முறிதலாலே 695
தன் குடும்பத்தினோடு 702
தன்பிரிவிலிறந்தாள் 587
தன்மமேயாதி நான்கு 2
தன்மமே விரும்புவாரை 404
தன்னகரந்தனை 463
தன்னிலே வருஞ்செல்வத்தை 556
தன்னிடத் திருக்கும் 360
தன்னுடல் பலத்தினாலே 389

தன்னுயிர்ப் பாங்கனான 87
தன்னுரு நிழலை 95
தன்னை மற்றத்தவளை 540
தனக்குரி யாரைவிட்டு 122
தனிமுய லொன்று 91

தா

தாவியந்த வலை 328
திகழுமுத் தீபிதன் 350
திரவியந் தானே 309
திருடவந்த கள்ளனுக்கு 435
திருவளர் கமலவாவி 1
திரைகெழு கங்காதீர 256
திலத்தை யாய்ந்து 305
தின்னிரை நானும் 249
தினமொரு நீதிப்பாட்டு 658

தீ

தீங்கெனக் கெய்தும் 250
தீத்தாட்சன் தனை 433
தீதுறு நின்குலம் 567
தீமை வேடன் 333
தீரவு மில்லை யென்ன 526
தீரவே விசாரியாமல் 647

து

துங்க நளனரசிழந்து 498
துச்சன ருடனே 142
துட்டபுத்தி என்பவன் 208
துட்டபுத்தி தன்னுடைய 212
துட்டர் நண்பு 163
துட்டர்பால் நன்றியே 152
துட்டனை நோக்கி 415
துடுக்குநான் செய்கிலேன் 133
துரத்திய சூடர் கன்னன் 297
துளசா புரத்தில் 683
துன்னரு மடவி 379
துன்னிய காடொன்று 545
துன்னிய மான்பாற் 252

தூ

தூதி சொற்கேட்டு 527
தூது சொல்வார் 388
தூரக் கண்டு நீ 159

தெ

தெள்ளிய மகிழாரூப்பியம் 275
தெள்ளுகதையேதென 441

தே

தேடியபொருள் 69
தேடி வருங்காற் 681
தேவசன் மாவினாலே 82
தேவநின தருளாலே 496
தேவியும் முழுகிவந்து 635
தேவியும் வணிகன் 649

தை

தையலுஞ் சீட்டை 660

ந

நகுலனு மங்கவன் 493
நகைத்துடன் கொல்வர் 383
நச்சுமா மரத்தை 123
நஞ்சொடு கலந்த 115
நடத்திய நாளில் 20
நண்ணியவப் பயிர்க்கதிபன் 275
நண்ணியோர் கரிதனை 572
நண்புகொண்ட நரி 276
நந்திய காரியத்தை 84
நம்மால்வரு பிழை 102
நம்மினும் வலியோன் 716
நரிபெறு குட்டியும் 573

நரியது கேட்டின் றைக்கு 272
நரியென் றெய்திய 53
நல்ல சூழ்ச்சி 341
நல்லதுதானே யென்று 134
நல்லதுன்பெயர் 319
நல்லவர் கண்டபோதே 285
நல்லவறிவசேதனற்கு 153
நல்லறிவமைச்சர் 121
நல்லிடம்நல்ல 143
நல்வினை புரிந்துயர் 36
நலங்கொள் மன்னவர் 49
நலந்திகழ் தெற்கு 15
நற்பொருளறத்தை 17
நன்றுநாமின 321
நன்றெனமகிழ்ந்து 354
நன்றென மறையோன் 234
நன்றென விரணியன் 287

நா

நாகங்கேட்டு 541
நாகராசன்நான் 506
நாசிக தேயந் 729
நாடியே மறையோன் 417
நாமதை விரும்பி 118
நாரியர் விருத்தசீலர் 282
நாவிதன் எழுந்து 78
நாவிதன் கதையே 637
நாவிதன் தன்னை 81
நான்கு மிப்படி 322

நி

நிந்தையால் சுவர்ண 694
நிலையிற் பெயர 689
நின்குலம் போரினில் 568
நின்பகையொடு போர் 601
நின்னுடை யறிவு 286
நினது கட்டளை 57

நீ

நீடுறு குரங்குவஞ்ச 719
நீயெனக்குரைத்து 668
நீயே கொள்க 676
நீயொரு சம்புவின் 574
நீரினுள் மூழ்கி 530
நீவிரிமய மலைநோக்கி 673

நெ

நெடும்பொழுதங்கு 712
நெருக்குண்டற 103

ப

பக்குவஞ்செய்து 606
பகலெலாங் காகங் 352
பகற்கெலாங் குருட்டு 377
பகற் பொழுதில் 429
பகனெனு மந்திரி 440
பஞ்ச தந்திரமென்று 10
பட்டினால் சூழ்ந்து கட்டி 665
படுகளஞ் சோதித்தார்கள் 428
பயந்துதான் வணிகனந்த 638
பயப்பயநடந்திம் மாற்றம்528
பயிரிட்டோ னிதுகண்டு 270
பரவையை யளவிட் 147
பரிசனங் களும்மந்திரி 59
பரிதிதா னிவ்வாறு 691
பரிவுடன் நிலத்தில் 584
பருந்து பிள்ளைதனை 217
பருந்தெடுத்த பெண்ணொலி480
பலபல சாதியான 376
பவனிவரும் வேளையிலே505
பழுதறு மறையோனந்த 416
பறந்தன காகமெல்லாம் 227
பன்னிரண் டாட்டை 623

பன்னு மதுரை வாழ்வோன் 715
பன்னூ லாய்ந்து 724

பா

பாடலிபுரத்து மன்னன் 3
பாண்டவர் சூதாடினதும் 499
பாதமுனக்கு மெல்லிய 722
பாதி பிளவாகி 28
பாவி நீயிவ்வரச 461
பாவியர் மோனர் 396

பி

பிரித்திடுதல் பிரியாமற் 206
பிழைத்த காகங்கள் 357
பின்னுமவ் வேதியனை 670
பின்னையும் ஓரி 552
பின்னை வேண்டின 326

பு

புகையுடனே தீச்சூழ 488
புசபலத்தால் உவமையிலா 492
புத்தியினாலும் மனதிற் 514
புத்திர வாஞ்சை 616
புரவலன் றன்மனை 471
புல்லிமுகத் தோடுமுகம் 490
புல்லினான் மோந்து 667
புலம்பிய பிங்கலன் 219
புலிமிகப் பசித்ததேனும் 373
புலியது கேட்டு நானோ 233
புள்ளுகளக் கழுகிருக்கும் 267

பூ

பூவையங் கொன்று 398

பெ

பெட்டை தனக்கும் 690
பெண்டிழந் திடுமோர் 590
பெரியமுளையேது 27
பெரியவன் பேரை 378
பெருமையொடு 39
பெருவளைக்குள் 294
பெலத்தவர்தம்மை 369

பே

பேடிபோவென்ன 190
பேதமாஞ் சாதியினால் 259
பேதைநீ இங்கிருவென்று 578
பேதையே நாம்புகழ்ந்தால் 655
பேரிரதக் காரனென்னும் 450

பொ

பொங்குகதிர் திங்களொளி 22
பொரு கடற்கரை 189
பொருகிடா விரண்டு 67
பொருங்களர் நிலத்திலே 154
பொருந்திய வவனுந் 296
பொருந ரோடு 185
பொருளிலார்க் கின்பம் 16
பொருளைமாத் திரந்தான் 591
பொன்னலந் திகழுந் 222
பொன்னாக வெச்சமிடும் 469
பொன்னிழந்து நாடிழந்து 500
பொன்னின் மேலிருந்து 314

போ

போடுமவ் விரண்டிலொன்று 622
போயினன் பட்டணத்தில் 661
போரில் ஆவியை 184
போனபின் எருதுக்கின்னம் 21

ம

மடங்கலு நகைத்தீதென்ன 110
மதியமாம் வேளைதன்னில் 643
மதுவூர் தனக்கு 720
மந்தரன் மீன்கள் 316

மந்தவிட னாருமவர் 512
மந்திர விசாரத் தாலே 108
மந்திரி பண்டிதர் 151
மந்திரி யரசனேநீர் 585
மரத்தினை யடுக்கங் 538
மருத்துவன் குரங்கு 704
மலையரையன்தனை 484
மழை முழக்கி 330
மற்றுமோர் கொம்பிற் 520
மற்றைநாள் வலை 199
மற்றொரு நகர்க்கு 621
மற்றோர் நாட்டில் 726
மறுவின் மகதேயத்து 687
மறையவனே உன்னுயிரை 446
மன்னவன் குணம் 44
மன்னனான மதோற்கடன் 166
மன்னனே யவ்வனத்தில் 179
மன்னனே யிவ் 171
மன்னவன் அவையில் 80
மன்னுமமரா வதி 672
மனமிரங்கியரசன் 432
மனையவள் யாகசேனி 617
மனைவியோ டிதை 697

மா

மாதர்களுடனே 586
மாதவனுரைக்கும் 13
மாதுறு வாக்கியத்தை 732
மாந்தருக்கெல்லாம் 284
மாரனும் ரதியும் போலே 626
மாலையங் குழலாள் 698
மாலையம் பொழுதே 419
மாலையைக் கழுத்தில் 708
மானின் மேல்மனம் 335
மானைவேடன் குறுக 343

மி

மிக்கதாரா வனத்தின் 577
மிக்க மறையோனும் 445
மிக்கவர்கள்சீவனும் 32
மித்திரபேதம் நட்பை 11
மித்திரபேத மார்க்கம் 223
மித்திர மானே நின்பால் 254
மின்னனார் தங்கள் 148

மீ

மீனமுந் தப்பித் தந்த 593
மீனொன்றையுமே 96

மு

முகுடனா ரொளித்து 135
முதலையக் கதையென் 582
முழக்கிற் கேற்பதாய் 52
முன்பு தங்களாற் 61
முன்வினையாலிது 466
முன்னமேன் ஆசை 539
முன்னமோர் கானந் 300

மூ

மூடருக் குபகார ந்தான் 114
மூப்படை புலிதானொன்று 231
மூவர் தமக்குங் காட்டி 674
மூவரில் முதல்வரான 390
மூவணை யேருங் கட்டி 624
மூவிரு குணமுமங்கே 368

மெ

மெய்கள் போல் சொன்ன 407

மே

மேகத்தை யழைத்திவளை 482
மேகவண்ணன் சலிப்பாற்ற 495
மேக வண்ணனும 418
மேவு மொருநாள் 692

மை

மைந்தனு மையாஉன்னை656

யா

யாதுசஞ் சீவக 116

யாதுநீ கருமம் 106

யாதுநுங் கருத்து 172

யானொரு காகமென் 248

வ

வஞ்சகர் மூவர் 414

வண்டுபூ மது 162

வத்திர கபோதனெனும் 434

வந்தது காக்கை 420

வந்தபின் னவ்வூரிடை 610

வந்தவிருவோ ருமவன் 444

வந்த வேடன் 334

வந்துநா னந்தசேற்றில் 295

வந்துநீ சொன்ன 542

வயதொரு நூறிருப்பன் 618

வருந்திப் பிள்ளையார் 679

வருமுன்னே சேயை 632

வழுத்துகதையேதென 503

வளமுறுமகத நாட்டில் 251

வளர்ந்தனன் செட்டிபாலன்641

வறுமையாலே யாசிக்க 313

வன்பினொடு நரி 271

வன்மையாய் முதலை 596

வனமொன்றில் ஒரு 464

வா

வாயசம்மது 173

வாயிலுமடித்துக் 634

வாயுவையு மழைத்து 483

வானர வரசன் 522

வானர வீரலங்கே 534

வானுறு சுடர்கள் 245

வி

விகடகங் கடமென்னும் 192

விஞ்சுமா மறையோன் 8

விடியுமுன் எழுந்திருந்து 642

விடையதே தக்கதை 187

விண்டுவன்மன் 457

விண்ணதிர மண்ணதிர 205

வித்தொடு நல்ல 364

விருந்து சமைத்தார்கள் 216

விரைந்துபோய்க் 537

விரைவொடு கழுதை 374

விழித்தனன் தந்துவாயன் 73

விழித்தன னவரை 644

வீ

வீட்டினுள் மனையாள் 533

வீடுடையவனை வீட்டை 597

வெ

வெங்கதிர் பகலில் 362

வெஞ்சமன் புரை 318

வெண்ணரையன் திரை 436

வெம்பசிகொள் சிங்கம் 33

வெள்ளிதனைக் கண்ட 675

வே

வேகும்பாம்பின் ஆவி 727

வேடனு மதிசயித்து 239

வேடனோடி விடாய் 344

வேடுவ னொருவன் 302

வேந்தருங்கொடு 43

வேந்தனுக்குறும் 125

வேறொரு வளையாற் 308

வேறொருவன் தோணசை 451

வை

வைகறை யெழுத்து 226

வைத்தவன் மறைந்திருக்கும் 228



சரசுவதி மகால் நூலக அச்சகம்